Y 592
N 14.1
16305

ஸ்ரீ

ஸ்ரீ ஓம் :

ஸ்ரீ காமாக்ஷியம்மன் [illegible]

[illegible]பாகசக்ஷத்திரிய குல[illegible] [illegible]காசிகை.

# [illegible] முதற் பா[illegible]ம்.

[illegible]இஃது

கோயமுத்தூர் கட்டேபு[illegible] [illegible]

கா-ள-ஸ-ஸ்ரீ [illegible] பசவைய செட்[illegible] [illegible] குமாரரும்

பரமபாகவத[illegible]

[illegible]காளிந்திதாஸ் சுவாமிகள் ச[illegible] [illegible]ருமாகிய.

பாகசக்ஷத்திரிய குல[illegible]

[illegible] வெங்கிட்டராம[illegible] செட்டியார்

அவர்களால் இ[illegible] [illegible]டு

[illegible] [illegible] [illegible] அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1914–ஆம் வருஷம்

[illegible] விலை

163055

# முகவுரை. B

பரதகண்ட[illegible] இந்தியா தேசத்தில் பண்டைக்காலந் தொடர்ந்து ஜாதிப் [illegible] ஏற்பட்டு ஒவ்வொரு ஜாதியாருக்கும் உரிய தருமங்கள் இவ்வகை[illegible] பலநூல்களின் வாயிலாக வெளிவந்திருப்பது யாரு மறிந்த விஷயமே. [illegible]யில் நம்நாடு அடைந்த பல[illegible] ஒவ்வொரு மரபினரும் தத்தம் ஒழுக்கசாம தருமங்[illegible] நழுவவேண்டியதாயிற்று. ஆயினும் [illegible] வளர்[illegible] ஆங்கில [illegible]சாங்கமுள்ள இந்நாளில் ஒவ்வொரு வகு[illegible]தவரும் [illegible] சரித்திரங்களை வேதாகம புராணேதிகாசங்களினின்றும், செப்[illegible] சிலாசாசனங்களாலும், நமது நாட்டவரும் அந்நிய நாட்டுப் பண்டித மேதாவிகளும் எழுதியுள்ள தேச சரித்திரங்களினின்றும் பல மேற்கோள்களும் அநேக ஆதாரங்களும் எடுத்துக்காட்டி உதகரித்து வருகின்றனர். ஸ்ரீ யாகக்ஷத்திரிய குலப் பிரகாசிகை என்ற இந்நூலில் தெலுங்குசெட்டியார் என்பார் மரபின் பூர்வோத்திரத்தைக் கூறிவருகின்றது. கூறுவதுடன் போதப் பிரயோஜனங்களுமுண்டு.

பிரிதி வீச்சுரன் காசியை யடைந்தான் என்ற விடத்து அக்காசியின் க்ஷேத்ர விசேடம், மூர்த்தி விசேடம், முத்தி விசேடம், ஆராதனை விசேடம், முதலியனவும் ஏனைய சிறப்புக்களையும் எடுத்துரைத்துள்ளார். இவைபோலவே ஒவ்வொரு புண்ணிய க்ஷேத்திரங்களைக்கூறு மிடங்களில் அவ்வவற்றின் மகிமையையும், பக்தி, ஞானம், என்பவற்றையும், ஏனைய விஷயங்களையும் கூறிப்போந்துளார். ஆயினும் ஜாதியின் சரிதம் கூறிவரும் புஸ்தகத்துள் ஏனைய விஷயங்களைக் கூறுவது மிகைபடக்கூறல் எனினும் பண்டித பாமர சாதாரண சர்வ ஜனங்களும் லௌகீக வைதீக வொழுக்கங்களைத் தெள்ளிதில் உணர்ந்து கொள்ளவேண்டுமென்பதுதான் இக்கிரந்த கர்த்தாவின் முக்கியமான கருத்து. ஆதலின் இப்புத்தகம் உண்மையிலேயே பல [illegible] தத் தரத்தக்கதாகும். இப்புத்தகத்தை யாக்கியோர், சொப்பியமார் கோத்திரம், எனது நண்பராகிய ஸ்ரீமான் வே ப வெங்கிட்டராமன் செட்டியாரவர்களுக்குத் தமது மூதாதையரின் பூர்வோத்திரத்தை வெளியிடவேண்டுமென்ற அவா வெகுநாளாகக் குடிகொண்டிருந்தது. இப்புஸ்தகத்தை அச்சியற்றி இவ்வளவு சீக்கிரத்தில் உலாவச் செய்ததையும், அப்புஸ்தகங்களுக்குக் குறைந்த விலை யேற்படுத்தி யிருப்பதையும் உத்தேசிக்குங்கால் அவர் நம்மினத்தவர் மேற்கொண்டிருக்கும் அளவிறந்த துலாபிமானத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோற் சந்தேகமற விளக்குகிறது. ஆகவே இந்நூலாசிரியருக்கு அவரது மரபினர் பெரிதும் வந்தனஞ்செய்யக் கடமைப்பட்டவராவர். தமிழில் இந்நூலை வெளியிட்டிருப்பது அவர் நந்தமிழ் பேரிற்கொண்டிருக்கும் மதிப்பையு மன்பையுங் காட்டுவதால் தமிழ் நாட்டாரனைவரும் மேற்படி செட்டியாரவர்கட்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவரே யாவர். பரோபகாரார்த்தமாக இந்நூலை வெளிப்படுத்தினவர்க்கு நானும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலைச் செய்கிறேன். ஓம் தத் சத்.

இப்படிக்கு,

கோயமுத்தூர் அக்நிகுல க்ஷத்திரிய

ஜில்லாசங்க காரியதரிசி.

R. பூபதி பழனியப்ப நாயகன்.

## இந்நூலாசிரியர் ஜெனன ஜாதகம்.

கலியுக சகாப்தம் ௫௯௭௫ - இங்கிலீஷ் 1874 க்குச் சரியான பவவருஷம் உத்தராயணம் வசந்தருது சித்திரைமீ 8வ ஞாயிற்றுக்கிழமை சுக்கிலபக்ஷம் திரிதிகை ௰௬-௰௪, கார்த்திகை நக்ஷத்திரம் ௫-அ, உபரி ரோகணி நக்ஷத்திரம் சௌபாக்கிய நாமயோகம் ௰-௰௨, கரசைவாகரணம், ௰௬-௰௪, இராத்திரி, ௰௨-௪௪, தியாஜ்யம் இந்த சுப லக்கினத்தில் உதயாதி ௪௰ நாழிகைக்கு தனுசு லக்கினத்தில், புதாலவோரை தாமதவேளையில் கோயமுத்தூர் செட்டிமை வெ. பசுவைய செட்டியாருக்கு ஸ்ரீ காமாக்ஷியம்மன் அருளினுலுற்பவித்த வெ ப. வேங்கிட்டராமன் செட்டியார் ஜெனன ஜாதகம்.

---

திருப்பரங்குன்றம் யாகக்ஷத்திரியர் மடாலயத்தின் கமிட்டி மெம்பர்
விருதுபட்டி கோபாலன் செட்டியார் மகன்
ம-ா-ா-ஸ்ரீ கந்தசு செட்டியார் அனுப்பிய
ஜெனன ஜாதகக்கவி.

கன்னைமதி யாதவனிந்த பாமுனூர்தன்
கருணையினு லவதரித்தகண்மணிக்கு
மங்களஞ்சேர் பவவருடம் மேடமாதம்
வானுலவு பானுதின மிருநால்தேதி

இங்கிதஞ்சேரு ரோகணிநா டனுவிலக்னம்
இன்பமுற லக்கோளி னியல்பை நோக்கில்
பொங்கமிகுந் திரிகோண கேந்திர லாபம்
பொருந்திடிற்கப் [illegible]வன்றன் வீதியுந் தீர்க்கம். (1)

அந்தணன் பத்திநான்கி லம்புத [illegible]னத்தில் ராகுஞ்
அந்தரப் புகரும் வெய்யோன் சோம[illegible]வாயாறில்
மந்தனு மிரண்டிற் கேது மன்னுபன் [illegible] னிற்க
[illegible]டு லக்கினத்தில் மாந்தியு மமைந்த [illegible] (2)

ஓம் சச்சிதானந்தம் ஹரி.



| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் சுக்கிரன் ராகு | செவ்வாய் சந்திரன் | ● |
| ● | | | ● |
| சனி | | | ● |
| லக் குளிகன் | ● | கேது | வியாழன் |




ராசி சக்கரம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ல | ● | சனி | சூ, ச | ● | வு-ரா | செ-வி சனி | ● |
| கே | அமிசை சக்கரம். | மா | ● | திரேக் காரணம். | | | பு |
| வி. செ. | | ரா | ● | | | | சு |
| ● | புதன் | ● | சு | சூ | ● | கே | ச |

# சிறப்புப்பாயிரம்

இஃது

புரவிபாளையம் சமஸ்தான வித்வானும்,
கோயமுத்தூர் காலேஜ் பிரதம தமிழ்ப் பண்டிதருமாயிருந்த
கும்பகோணம்.

## ம-ள-ள-ஸ்ரீ R. சபாபதி பிள்ளையவர்களியற்றிய

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

வெண்பாற் கடலைக் கடைந் தமுதம் விண்ணோர்க்களித்த திருமால்போன்
மண்பாலார்க்கு யாகக்ஷத் திரியப் பிரகாசிகை யென்னும்
பண்பார் நூலைச் செய்தளித்தான் பன்னுகாளிந் திப்பெரிய
நண்பா னன்பின் றோன்றியவேங் கடராமச்சீர் நாவலனே.

திண்டுக்கல்

## ஸ்ரீலஸ்ரீ சரபம். உ. அ. முத்துசாமிக் கவிராயர்

அவர்களாலியற்றப்பட்ட
எ௱சீர்க்கழி நெடில்அடி ஆசிரிய விருத்தம்

மேலுலவு மிருபத்து நாலுமனை யார்களென
மெய்க்கீர்த்தி பெற்ற மக்கள்
விஞ்சைத் தெலுங்கர்தே சாதிபர் செழுங்கச்சி
மேவுகா மாக்ஷி யம்மை
சாரும்வா மருள்யாக க்ஷத்திரிய குலத்தராய்ச்
சாதிக்க நின்ற சரிதர்
தகுபிரிதி வீசவங் கிசமுறைமை தெரியத்
தனிப்படங் காட்டி யச்சின்
பாலுதவும் நூலருமை பத்திக்க ளஞ்சியம்
பாக்யமாய்க் கண்ட புதையல்
பரமகல் யாணதம் பதிகளா னந்தமே
பசுருமில் லறவொ ழுக்கங்
காலுதவு தூண்புகழ்க் காண்ப வேங்கடராம
சண்யநற் புண்ய னித்தக்
காரிய நமக்குமுன் கோரியவி ருப்பமெமக்
காலமும் பேர் வளருமே.



கோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப்பிரதம பண்டிதர்
பிரம்ம ஸ்ரீ பாலபாரதி பந்து

## S. வெங்கட்டரமணைய ரவர்களியற்றிய

ஆசிரிய விருத்தம்.

சீர்பூத்த செழுங்காஞ்சி நகரிலுறை காமாக்ஷி யருளைப்பெற்ற
ஏர்பூத்த இருபத்து நான்மனையர் சரிதமதை யெழுதினனால்
பார்பூத்த சொப்பியவார் கோத்திரத்து பசுவையன் பெற்ற மைந்தன்
பேர்பூத்த வெங்கட்ட ராமனெனு பிரபலமா கவிஞன் மாதோ.

## ஸ்ரீலஸ்ரீ பரமபாகவதர் சுப்ளிந்திதாஸ் சுவாமிக ளியற்றிய

நேரிசை யாசிரியப்பா

அலைகட லுடுத்த அம்புவி மீது
நிலையுள மநுவின் நீதி வழாது
அரசியல் புரிந்த அருண்மிகு புனிதர்
வரிசையார் குலத்தில் வந்தவர் தங்களில்
தராதலம் புகழுவி சாலா வதியின்
நராதிப னென்னு நாமமு முடையோன்
நான்முகன் மகத்தில் மேன்மையா யுதித்தோன்
தேன்மலி பங்கபத் திருவருள் பெற்றோன்
பிரிதிவீச் சுரனெனும் பெயரினைப் பூண்டோன்
பரிதிமுன் பனியெனப் பவமெலா நீங்கற்
கரக்கர்தங் குலத்தை யழித்தா சாண்டோன்
மரபதில் வந்த மன்னர்தஞ் சரிதையைப்
பிரபல மாகப் பேரவா வுடனே
நன்னெறி யாரும் நன்குணர்ந் துய்ய
சொன்னய முடனே சுருதிகள் கூட்டி
இந்நிலத் தவர்க்கு எழுதினி லீந்தான்
பாங்குட னுலகின் றீங்குக டொலைக்கும்
வேங்கட ராமன் மெய்ப்பெயர் தரித்தோன்
திருமலைதாதா சாரியர் சேவடி
மருமலர் கொண்டு வாழ்த்தி வணங்கி
பெருமித முடனே பேற்றினை யடைந்தோன்
தருமசிந் தையனெனத் தக்கோர் மதிக்கும்
பசுவையன் றவத்திற் பயந்த
வசையிலாச் சாது வம்ஸாபி மானி

உடுமலைப்பேட்டை திரிமூர்த்திக் கவிராஜ
ஞானபண்டிதர் குமாரர்
இரங்கசாமிக் கவிராய ரவர்களாலியற்றப்பட்டது

இரட்டையடி யாசிரியப்பா,

மணிகொண்ட கடல்சூழ்ந்த புடவியிடை காஞ்சியெனு
மாநகரில் வீற்றிருந்து
மாட்சிபெறு மிருபத்து நான்மனையர் நீடூழி
வாழ்ந்திடக் கிருபை யோங்கும்
பணிகொண்ட யேகாம்ப ரென்னுநம் மீசனிரு
பதுமபா தம்பணிகு வோன்
பாக்யமிகு கோயநகர் பசுவைய சிலாக்யனுற்
பண்ணுநற் றவவிசேடந்
திணிகொண்ட வேங்கிட்ட ராமவேளாங் கவித்
திவாகரன் றீவிரமதாய்த்
தெள்ளுதமிழ் நூற்கள்பல வாராய்ந்த தேர்ச்சியுந்
தெய்வானு கூலமோங்க
அணிகொண் டலங்கிருத யாகக்ஷேத் திரியர்நா
லச்சிட் டாங்கேற்றினன்
அகமிகவு மகிழவுஞ் சுகமகிமை மிகவேதரு
மதிசயமி ததிசயமிதே.

---

இதுவும் ஷை யாராலியற்றப்பட்ட
(அறுசீர்க்கழிநெடி லாசிரியப்பா)

பொன்மகடன் நாயகனைத் துணைகொளுங்கச் சிக்கிறைவி
பூந்தாட் கன்ப
ரென்னுமிரு பதுநான்கு மனையவர்தஞ் சரிதமெலா
மியல்கொண் டாராய்ந்
தின்னிலமேற் றமிழ்பெயர்த்த வேங்கட்ட ராமகவிக்
கிணையொப் பாராய்
உன்னியுன்னிப் பார்த்திடினு மொருவரையு மீடுரைக்க
வொப்பா காதே

---



இஃது
வித்வான் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை யவர்களின் மாணாக்கரும்
வித்வான் கந்தசாமி முதலியாரவர்கள் குமாரரும்,
கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டு வக்கீலுமான
ம-ா ா-ஸ்ரீ C. K. சுப்பிரமணிய முதலியார் B. A.
அவர்களால் இயற்றப்பட்டது.

கோச்சகக் கலிப்பா

திருவாரும் யாகக்ஷேத் திரியர்தல வரலாற்றின்
ஒருபாகம் அதையாரும் உணர்ந்திடவே உரைத்தனனால்
மருவாரும் காளிந்தி தாஸனவன் பின்வந்தோன்
உருவாரும் வேங்கடரா மப்பெயர்கோள் உரவோனே

---

கோயமுத்தூர் ரிஜிஸ்தரா ராபீஸ் கிளர்க்கு
வெ. பொன்னஞ்செட்டியார் குமாரர்,
ம-ா-ா-ஸ்ரீ P. வெங்கட்டசாமி செட்டியாரவர்க ளியற்றிய
பன்னிரு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தேனமர்ந்திடுசோலை வளமலியு காஞ்சியிற்
சீர்பெற்ற சாதுவம்ஸர்
திடமுடைய முப்புரிபுனைந்தரசு புரிந்திந்த
திவ்யதேசத்தை யாண்டு
வானவர்கள் புகழ்சதாசாரமதை நன்கரிய
வண்மையா யனுஷ்டித்துமே
மானமுட னபிமான முடைய துஷ்டரைவென்று
வல்லாரி துவஜநாட்டி
ஞானமொடு வைராக்கிய முந்தருங் காமாக்ஷி
நற்கிருபை பெற்றசரிதை
தானமொடு தவயாக சீலமுட னுலகுய்ய
தனவேங்க டேசநாமன்
சற்சனர்ம திக்கவே தந்தனன் றயவாகத்
தகுந்தகுமி தென்னமாதோ

---

இஃது

சென்னை பெரம்பூர் பாரக்ஸ்

"வன்னிகுலமித்திரன்" பத்திராதிபர்

ம-ா-ா-ஸ்ரீ ஆ சுப்பிரமணிய நாயகர் அவர்களின்

அபிப்பிராயம்.

ஸ்ரீ யாகக்ஷத்திரிய குலப்பிரகாசிகை யென்னும் இந்நூலை முழு
தும் வாசித்துப் பார்த்தேன். இஃது ஐந்து அத்தியாயங்களை
யுடையது. முதலிரண்டு அத்தியாயங்களில் பிரம்மாவினது யாகத்தி
லுற்பவித்த பிரிதிவீச்சுரன் அக்காலத்தில் தேவர்களுக்கு இடுக்கண்
புரிந்த அந்தகாசுரனைச் சம்மரித்து, தேவர்களாஞ்ஞைபா லிப்பூமண்
டலத்திற் காசியை யாண்டு வந்ததும், அவரது சந்ததியார்களில்
வைடங்கன் முதலினர் இருடி சிரேஷ்டர்களிடஞ் சென்று தாங்கள்
புத்திரப் பேறடையும் வழியைக் கேட்டுக்கொண்டதும், மூன்று
நான்கு அத்தியாயங்களிற் பூப்பிரதக்ஷணம்செய்து பலஸ்தலங்களிற்
றீர்த்தம் மூர்த்திகளைச் சேவித்தும் வசித்தும் கடைசியில் காஞ்சிமா
க்ஷேத்திரத்தில் காமாக்ஷியம்மை யருளினாற் புத்திரப்பேறடைந்து
இருபத்து நான் கரண்மனையாரானதுப், ஐந்தாமத்யாயத்தில் அவர்
களில் முதன்மையோனை மும்முடி யரசனென்பவன் றனது வணி
கர்களை வியாபாரவிஷயமா யனுப்பியதும், திருக்கோட்டையில்
இறைவரி விஷயம் சோராஜனுக்கும் மும்முடியரசனுக்கும் உண்
டான யுத்தத்தில் மும்முடியரசன் ஜெயித்தது முதலியனவுங் கூறப்
பட்டிருக்கின்றன.

இருபத்து நான் காண்மனையார், தேசாதிபதிகள், சாதுவம்
ஸஸ்தர், (தெலுங்கசெட்டி ஜாதியார், ஆந்திரர், யாகக்ஷத்திரியர்,
முதலாய பெயர்களால் வேறுபட்டிருக்கின்றனரே யல்லது குலத்தி
லொன்றே யென்பது நூலாசிரியர் கருத்தாகும். இந்நூலில் ஸ்ரீகாசி,
காஞ்சி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களின் பிரபாவங்களையும்,
மகிமைகளையும் விளக்கியிருப்பது படிப்போருக் கின்பத்தை விளை
விக்கும். அன்றியும் பல உபயோகமுள்ள பொது விஷயங்களும்
பொதிந்திருக்கின்றன. இக்கிரந்தத்தை இயற்றிய மகா-ா-ா-ஸ்ரீ,
வெ—ப—வெங்கிட்டராமன் செட்டியாரவர்களுக்கு அவரது வம்ஸத்
தவர்கள் தங்களது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்தக்
கடமைப்பட்டிருப்பதுடன் இரண்டாம்பாகம் வெளியிடுவதில் அவ
ருக்கு அதிகம் உதவிபுரிய வேண்டுவது அவஸ்யம் என்பதை வற்
புறுத்திச் சொல்கிறேன்.



பள்ள பாளையம்

மாணவர் தமிழ்ச் சங்க காரியதரிசி பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ, N. வையாபுரிபிள்ளை யவர்களியற்றிய

அறுசீரடி நெடில் ஆசிரிய விருத்தம்.

யாகச்சத்திரிய மரபோங்க வுரைசெழுமொருநூல் யாணர்மேவு
மாகச்சத்திர வுலகிலறிஞர் பலர்புகழ் திடமா நலத்திறைற்றி
மாகச்சி தத்தினச்சு வாகனத்தி னேற்றிமிக மாண்பினீந்தான்
மாகச்சி மாதவனுக் கடியன் வேங்கடராமன் மகிழ்ந்து மாதோ.

கோயமுத்தூர்

லண்டன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ, C. S. சொக்கலிங்கம்பிள்ளை யவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

அலைகடல் குழுமிவ் வய்புவி யதனிற்
குலவிய குலங்களிற் கொளுமுயர் வென்னப்
பலபல வாதாரம் பண்புடன் காட்டிக்
கலைவல யாருங் களிப்புட னேற்க
நலமிகு மொருநூல் நன்கினி தாக்கிப்
பாகம் முதிரும் யாக க்ஷத்திரிய
குலப்ரகா சிகையெனச் சொலப்படு மோர்பெயர்
சூட்டி யச்சிற் கூட்டித் தந்தான்
அன்னவன் யாரெனிற் பன்னுவன் கேண்மோ
சொல்லிய தொல்குலம் புல்லிய மேலோன்
பசுவை யனுக்குச் சிசுவென உற்றோன்
நேசப் பான்மையி னிகரில்கா னிந்தி
தாசன் றனக்குறு மாசைச் சோதரன்
மாசனர் யாரும் மகிழ்வுட னேவிசு
வாசங் கொள்ளும் மாண்புறு தூயன்
நாங்க ளெனிநவில் வேங்கடராமன்
நல்லவர் கூட்டம் நாளும்
புல்லிய சீர்சா லொல்லொழுக் கினனே.

திருச்சிற்றம்பலம்.

உ

ஸ்ரீ யாகக்ஷத்திரிய குலப்பிரகாசிகையின்

# விஷய அட்டவணை.

## பொதுப்பாயிரம்.


| விபரம். | பக்கம். |
|---|---|
| ஆங்கிலேய அரசாக்ஷி ... | 1 |
| குலாபிமானிகள் அறிவது ... | 3 |
| ஒற்றுமை ... | 5 |
| கல்வி ... | 7 |
| ஆசாரம் ... | 12 |
| குலாபிமானம் ... | 13 |
| உதாரணத்துக்குகந்தவர்கள் ... | 16 |
| பாபிர்மஸ்துதி ... | 17 |
| ஸ்ரீ மகாவிஷ்ணுஸ்துதி ... | 20 |
| பிரம்மஸ்துதி ... | 22 |
| ருத்ரமூர்த்தி ஸ்துதி ... | 26 |
| விநாயகர்காப்பு ... | 30 |
| அவையடக்கம் ... | 31 |


## முதல் அத்தியாயம்,


| விபரம். | பக்கம். |
|---|---|
| ரிஷீஸ்வரர்கள் கோஷ்டி ... | 32 |
| தேவர்கள் முறையிடல் ... | 33 |
| பிரதிவீச்சுரன் உற்பத்தி ... | 34 |
| பிரதிவீச்சுரன் வரம்பெற்றது | 35 |
| தேவசைன்யம் ... | 36 |
| அசுரசயின்யம் ... | 37 |
| அந்தகாசுரன்யுத்தம் ... | ,, |
| பிரிதிவீச்சுரன்யுத்தம் ... | 38 |
| அந்தகாசுரன் ஹதமானது ... | 39 |
| பாத்துவத்தையளவிடல் ... | 40 |
| பொன்னுலககாக்ஷி ... | 41 |
| பிரிதிவீச்சுரன் விவாகம் ... | 42 |
| ஸ்ரீ காசியினியல்பு ... | 43 |
| மணிகர்ணிகை கட்டம் ... | 44 |
| கங்கையின் மகிமை ... | 45 |
| பிரிதிவீச்சுரனுக்கு முடி சூட்டல் ... | 46 |
| ஈஸ்வர அனுக்கிரகம்பெற்றது ... | 47 |
| விடங்கன்முதல் நால்வர் பிறப்பு | 49 |
| விடங்கன் அரசாக்ஷி ... | 50 |
| ராக்ஷஸசம்ஹாரம் ... | 51 |
| வைடங்கன்முதல் எண்மர் ... | 52 |
| பதின்மருக்கு கல்யாணம் ... | 52 |
| வைடங்கன் அரசாக்ஷி ... | 53 |


## 2-வது அத்தியாயம்.


| விபரம். | பக்கம். |
|---|---|
| பூலோகத்தின் பிரபாவம் ... | 58 |
| புஷ்கரத்தீவு ... | 59 |
| சாகத்தீவு ... | ,, |
| கிரௌஞ்சத்தீவு ... | ,, |
| குசைத்தீவு ... | 60 |
| சான்மலித்தீவு ... | ,, |
| பிலட்சத்தீவு ... | ,, |
| ஜம்புத்தீவு ... | 61 |
| மகாமேருபருவதம் ... | ,, |
| நவகண்டங்கள் ... | 63 |
| பரீதகண்டம் ... | 64 |
| ஆக்கினேயகண்டம் ... | 66 |
| தொண்டமண்டலம் ... | 69 |
| நாட்டுவளம் ... | 71 |
| குறிஞ்சிநிலம் ... | 72 |
| விருட்சங்கள் பிரபாவம் ... | 73 |
| புள்ளினங்கள் பிரபாவம் ... | 74 |
| மூலிகைகள் பிரபாமம் ... | ,, |
| விலங்கினங்கள் பிரபாவம் ... | 75 |
| பாலைநிலம் ... | 76 |
| நெய்தனிலம் ... | 78 |
| முல்லைநிலம் ... | 80 |
| மருதநிலம் ... | 81 |
| திணைமயக்கம் ... | 85 |
| சோலைவளம் ... | 86 |
| தாமரையின் பிரபாவம் ... | 87 |
| நகரச்சிறப்பு ... | 88 |
| நால்வகைச்சேனைகள் ... | 90 |
| காஞ்சியின் அற்புதங்கள் ... | ,, |
| நால்வகை வருணத்தார் ... | 94 |
| பிர்மகுலம் ... | 96 |
| க்ஷத்திரியகுலம் ... | 98 |
| வைசியகுலம் ... | 99 |
| சூத்திரியகுலம் ... | 101 |
| கோக்களின் லட்சணம் ... | 103 |
| பூர்விகளின் லட்சணம் ... | 104 |
| கஜங்களி னியல்பு ... | 106 |
| காமாக்ஷிதேவி ஆவிர்ப்பவம் | 108 |
| அம்பாள் திரு உருவம் ... | 109 |


## 3-வது அத்தியாயம்.


| விபரம். | பக்கம். |
|---|---|
| தீர்த்தயாத்திரை ... | 113 |
| கணேசரைத் துதித்தல் ... | 114 |
| விஸ்வேசரைத் துதித்தல் ... | 115 |
| விசாலாக்ஷியைத் துதித்தல் ... | 116 |
| கோலாகலகிரி பிரதக்ஷணம் ... | 117 |
| ஸரயுநதி ஸ்நானம் ... | 118 |
| ஹரிதுவார சேர்வை ... | ,, |
| கேதார சேர்வை ... | ,, |
| அவந்திகை சேர்வை ... | 119 |
| சிந்துநதி ஸ்நானம் ... | ,, |
| மதுரா சேர்வை ... | ,, |
| யமுனா ஸ்நானம் ... | 120 |
| பிருந்தாவன சேர்வை ... | ,, |
| நாதத்துவார சேர்வை ... | 122 |
| கோவர்த்தனகிரி பிரதக்ஷணம் | ,, |
| துங்கபத்திரா ஸ்நானம் ... | 123 |
| வேணுகொண்டா பிரதக்ஷணம் | 123 |
| பத்ராசல சேர்வை ... | ,, |
| சாமந்தக பஞ்சகம் ... | 124 |
| பஞ்சவடி சேர்வை ... | 125 |
| கோகர்ண சேர்வை ... | ,, |
| ஸரவணப்பொய்கை ... | 126 |
| சேது ஸ்நானம் ... | ,, |
| ஸ்நான விதி ... | 127 |
| சிரார்த்த விதி ... | 128 |
| சிரார்த்தத் துக்குடையது ... | 129 |
| சிரார்த்தத் துக்குநீக்குவது ... | ,, |
| கந்தமாதனகிரி பிரதக்ஷணம் | 130 |
| இராமேச்சுர சேர்வை ... | ,, |
| தர்ப்பசயன சேர்வை ... | 131 |
| பொதிகைமலை பிரதக்ஷணம் | ,, |
| பொற்றாமரைத் தீர்த்தம் ... | ,, |
| ரங்கஸ்தல சேர்வை ... | 132 |
| திருக்குடந்தை தரிசனம் ... | 133 |
| தில்லை தரிசனம் ... | 134 |
| திருச்செங்காட்டங்குடி ... | 135 |
| திருக்கழுக்குன்றம் ... | ,, |
| காளத்தி தரிசனம் ... | 136 |
| விரிஞ்சிபுர தரிசனம் ... | 137 |
| பாபநாச தீர்த்த ஸ்நானம் ... | ,, |
| திருவண்ணாமலை தரிசனம் ... | 138 |
| திருவொற்றியூர் தரிசனம் ... | ,, |
| திருமயிலை க்ஷேத்திரம் ... | 139 |
| திருவல்லிக்கேணி தரிசனம் | 140 |
| துண்டீர மண்டலம் ... | 141 |
| தபோவனம் ... | ,, |
| பிரம்ம சாலை ... | 142 |
| க்ஷீரநதிப் பிரபாவம் ... | ,, |
| காஞ்சி ஸ்தலம் ... | ,, |
| விஷ்ணு சாலை ... | 143 |
| உருத்திர சாலை ... | 145 |
| காமகோட்டம் ... | 147 |


## 4-வது அத்தியாயம்.


| விபரம். | பக்கம். |
|---|---|
| மகாதிரிபுர சுந்தரிவர்ணனை | 150 |
| கதிரவன் மறைந்தது ... | 151 |
| சந்திரனுதயமானது ... | 152 |
| நித்திரை கொள்ளாதார் ... | 153 |
| அம்மன் அனுக்கிரகம் ... | ,, |
| வைடங்கன் கட்டளை ... | 154 |
| புசுண்டயோகி ஆச்சிரமம் ... | ,, |
| ஞானமார்க்க சம்பாஷணை ... | 155 |
| கலைக்கோட்டார் வந்தது ... | 160 |
| பொன்னுலகோர் வந்தது ... | ,, |
| யாகசாலையின் பிரபாவம் ... | 162 |
| தேவி யாகசாலைக்குவந்தது ... | 164 |
| அம்பாள் கட்டளை ... | 166 |
| கர்ப்பந்தரித்தது ... | 167 |
| 24 அரண்மனையார் உற்பத்தி | 168 |
| நாமகரணம் ... | ,, |
| தர்மம் 32 என்பது ... | 169 |

| | | பக்கம். |
|---|---|---|
| கோத்திரம்வைத்தல் | ... | 170 |
| வித்தையப்பியாசம் | ... | 171 |
| சுகாலங்காரம் | ... | 172 |
| 24-ல் வருக்கும் கல்யாணம் | ... | ,, |
| வம்சாவளி | ... | 174 |
| மகுடாபிஷேகம் | ... | 177 |
| விருதுகள் பெற்றது | ... | 178 |
| இராஜநீதியுரைத்தது | ... | 179 |
| அரசர்க்குரியலட்சணம் | ... | 180 |
| சதாசாரதருமம் | ... | 181 |
| திருநீற்றின் மகிமை | ... | 183 |
| புஷ்பங்களின் மகிமை | ... | 184 |
| குற்றமுள்ள புஷ்பங்கள் | ... | 185 |
| ருத்ராக்ஷப்பிரபாவம் | ... | 186 |
| மகாசிவராத்திரி விரதம் | ... | 188 |
| திருமண்காப்பின் பிரபாவம் | ... | 190 |
| ஏகாதசியின் விரதம் | ... | 192 |
| திருக்கோவிலில் செய்யாக் குற்றம் | ... | 193 |


## 5-வது அத்தியாயம்.


| | | |
|---|---|---|
| வாணிபஞ்செய்விக்க யோசித்தல் | .... | 195 |
| வாணிகஞ்செய்வது | ... | 196 |
| நவரத்தினங்கள் கொள்ளுதல் | | ,, |
| முத்துக்கள் கொள்ளுதல் | ... | 198 |
| பலதினுசு சரக்குகள்கொள்வது | | ,, |
| சரக்குகளை விற்கிரயஞ்செய்வது | | 199 |
| சேரதேசவளம் | ... | 200 |
| காவலருக்கும் வணிகருக்கும் தர்க்கம் | ... | 203 |
| சுங்கர் தமதரசனுக்குத் தெரிவித்தல் | ... | 204 |
| கச்சியர் திருமுகமெழுதுவது | | ,, |
| சேரன் மறுமொழிநிருபம் | ... | 205 |
| கச்சியர் ஆலோசனை | ... | ,, |
| கச்சியர் கூடநாடுசேர்ந்தது | ... | 207 |
| சோனுக்கும் மும்முடியனுக்கும் தர்க்கம் | ... | 208 |
| சிரோமணி சாமுத்திரிகம் | ... | 210 |
| சிரோமணிக்கும் கச்சியனுக்கும் தர்க்கம் | ... | 212 |
| பராசத்தியென்பது | ... | 213 |
| | | பக்கம். |
| ஒன்றென்பது | ... | 216 |
| இரண்டென்பவை | ... | ,, |
| மூன்றென்பவை | ... | ,, |
| நான்கென்பவை | ... | 218 |
| ஐந்தென்பவை | ... | 219 |
| ஆறென்பவை | ... | 220 |
| ஏழென்பவை | ... | ,, |
| எட்டென்பவை | ... | 221 |
| ஒன்பதென்பவை | ... | 223 |
| பத்தென்பவை | ... | ,, |
| 12 முதல் 16 வரைக்கும் | ... | 224 |
| 18 முதல் 24 வரைக்கும் | ... | ,, |
| நட்சத்திரங்கள் ஜாதிபிரிவு | ... | ,, |
| ஆகமங்கள் 28 | ... | 225 |
| உபநிஷத்துக்கள் 32 | ... | ,, |
| கலைக்யானம் 64 | ... | ,, |
| தத்துவம் 96 | ... | 226 |
| உடற்கூறு | ... | ,, |
| மானிடர்வயது | ... | 228 |
| மலையரசனுக்கும் சிரோமணிக்கும் தர்க்கம் | ... | 231 |
| சேரன்புதல்விக்கு புத்தி கூறல் | ... | 232 |
| சிரோமணி தந்தைக்கு இதமுரைத்தல் | ... | 233 |
| சிரோமணிக்குத்தண்டனை | ... | 234 |
| ஆயுதங்களால் வதைத்தல் | ... | 235 |
| கழுவிலேற்றுதல் | ... | 236 |
| வாட்கூண்டிலுருட்டல் | ... | 238 |
| அம்மனைத்துதித்தல் | ... | ,, |
| சேரன் மந்திரிகளை யோசனை கேட்பது | ... | 239 |
| மந்திரிகள் வாக்கை மறுப்பது | | 240 |
| மந்திரிகளுக்கும் சிரோமணிக்கும் தர்க்கம் | ... | 241 |
| மந்திரிகள் சிரோமணிக்கு மதியுரைத்தல் | ... | ,, |
| சிரோமணி மறுமொழியுரைத்தல் | ... | 243 |
| சேரனுடன் யுத்தம் | ... | 248 |
| சிரோமணிக்கு முடிசூட்டல் | | 250 |
| மங்களம் | ... | 251 |
| விளம்பரம் | ... | 252 |


(முற்றிற்று)

## ஸ்ரீயாகக்ஷத்திரிய குலப்பிரகாசிகையில் வரும் நூற்களின் பெயர்கள்:

அருணாசல புராணம்
அரிச்சந்திர புராணம்
அப்பர் சுவாமிகள் பாடியது
அழுகணிசித்தர் பாடல்
அருண்மொழித்தேவர் பாடல்
அதிபத்தநாயனார் புராணம்
அறப்பளீசர் சதகம்
ஆனாயநாயனார்
ஆளுடைய சுவாமிகள்
ஆக்கினேய புராணம்
ஆத்திசூடி வெண்பா
இலக்கணநூல் பாட்டியல்
இராமதேவர் பூஜாவிதி
இராமசாமிக் கவிராயர்
இராஜமணி மாலை
இரத்தினச் சுருக்கம்
ஈட்டியெழுபது
உருத்திராக்கவிசிட்டம்
உடலறி விளக்கம்
உபதேச காண்டம்
உரோமரிஷி ஞானம்
ஏகாதசி விரதமகாத்மியம்
ஏர் எழுபது
ஏலாதி
ஒப்பிலாமணிப் புலவர்
ஔவை பாடல்
கச்சிமாலை
கம்பர் பாடியது
கம்பராமாயணம்
கச்சப்பால ஐயரவர்
கட்டளைக் கலித்துறை
கல்லாடம்
கண்ணப்பநாயனார்
கடம்பவன புராணம்
கபிலர் அகவல்
கந்தப்புராணம்
காசிகாண்டம்
காளமேகப்புலவர்
காஞ்சிபுராணம்
குகைநமசிவாயர்
குலசேகராழ்வார் திருமாலை
கூர்மபுராணம்
கைவல்லிய நவநீதம்
கோகுல சதகம்
கோயிற்புராணம்
கோவிந்த சதகம்
சரஸ்வதி யந்தாதி
சாந்தலிங்கசுவாமிகள்
சிவஞான முனிவர்
சிலையெழுபது
சிந்நேந்திரமாலை
சிலப்பதிகாரம்
சிவப்பிரகாசசுவாமிகள்
சிவவாக்கியர் பாடல்
சிவராத்திரி கற்பகம்
சிவராத்திரி புராணம்
சிவபுராணம்
சிவாநந்தபோதம்
சீராப்புராணம்
சுலோகம்
சுப்பிரமணியர் ஞானம்
சூடாமணி
சென்னப்புலவர்
செம்பொற்சிலையெழுபது
சேக்கிழார் நாயனார்
சைவசமயநெறி திருக்குறள்
சொக்கநாதப்புலவர் அம்மானை
ஞானக்கும்மி
நம்மாழ்வார் பாசுரம்
நந்தீஸ்வரர் பூஜாவிதி
நல்வழி
நாலடியார்
நீதிநெறி விளக்கம்
நீதிநூல்

நெஞ்சறி விளக்கம்
நேரிசை வெண்பா
நைடதம்
தனிப்பாடற்றிரட்டு
தத்துவ தீபிகை
தத்துவராய சுவாமிகள்
திருக்குறள்
திருமங்கையாழ்வார்
திருக்கழுக்குன்ற புராணம்
திவாகரம்
திருவேங்கட வெண்பா
திருவிளையாடற் புராணம்
திருப்பதிக்கோவை
திருக்கைவளம்
திருத்தொண்டர் புராணம்
திருஞானசம்பந்தர்
திருவள்ளுவர் ஞானம்
தொண்டமண்டல சதகம்
தொல்காப்பியம்
பராபரக்கண்ணி
பகவற்கீதை
பனிரண்டாவது நிகண்டு
பஃறொடை வெண்பா
பஞ்சபக்ஷிசாஸ்திரம்
பன்னிருபாட்டியல்
பட்டணத்தார் திருவிசைப்பா
பழையகாஞ்சிபுராணம்
பரமாநந்ததீபம்
பாகவதம்
பாண்டியன்
பிங்கலம்
பிரபுலிங்கலீலை
பிரகஸ்பதிஸ்மிருதி
புஷ்பவதிசெய்யுள்
புருஷசூக்தம்
புகழேந்தி இரத்தினச்சுருக்கம்
பெருந்தேவனார் பாரதம்
பெரியாழ்வார்
பேரூர்புராணம்
போஜராஜன் சரித்திரம்
மச்சப்புராணம்
மனுஸ்மிருதி
மணிமேகலைப்பதிகம்
யஜுர்வேதம்
வடமொழி சுலோகம்
வல்லாளராஜன் சருக்கம்
வன்னிகுலோத் கர்ஷதீபிகை }
வாலைக்கும்மி }
வால்மீகர்ஞானம்
வில்லிபுத்தூரார் பாரதம்
விவேகசிந்தாமணி
வீரசிங்காதன புராணம்
வீரநாராயணர் விஜயம்
வெற்றிவேற்கை
வெண்காட்டடிகள்
வைசிய புராணம்
ஜாதிபேத விளக்கம்
ஜீவகசிந்தாமணி
ராமதாஸ் சரித்திரம்
ரிவரண்டு உல்லியம் டெய்லர் எழுதியபாண்டியசரித்திரம்
A. அடையாளமுள்ள செய்யுள்கள் தேசாதிபதிகள் காடகத்திலுள்ளது
B. "அடையாளமுள்ள செய்யுள்கள் இந்நூலாசிரியன் தமையனார் காளிந்திதாசர் பாடியது

முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷியம்மன் துணை.

# பொதுப் பாயிரம்.

## ஆங்கிலேய அரசாக்ஷி.

நெடிய கடல்சூழ்ந்த பூவுலகில் ஜம்புத்தீவின்கண் ஓர்பிரிவாகிய வனப்புவாய்ந்த குறிஞ்சி நிலமும், வயல்களாற் சூழப்பெற்ற மருத நிலமும், அலையெறி கடலாற் சூழப்பெற்ற நெய்தல் நிலமும், தரை விளங்கிய பாலைநிலமும், பூமியிற்சிறந்து ஓங்கும் ஐந்திணை வளப் பங்களமையப்பெற்று, நீர்வளம், நிலவளம், ஆறுகள் பர்வதங்களி லுண்டாகும் சீத உஷ்ணபேதத்தால் விளையும் பலவித தானியங் கள், பலவகைப் பழவர்க்கங்கள், பலவகை ரத்தினங்கள், முதலிய வற்றில் மேன்மை கொண்டும், கல்வி நாகரீகங்களில் விளங்கியும், தெய்வபக்தி, தர்மபரிபாலனம், ஞானமார்க்கம், கலைக்யானம், யோகமார்க்கம் முதலியவைகளில் சீரும் சிறப்பும் பெற்றதும், முத்தி நெறிகளாகிய வருணாச்சிரம தருமங்களை யனுசரித்து ஒழு கும் மாணவர் வாசஞ் செய்யும்படியான பதினைந்து லட்சம் சதுர மைல் சுற்றளவுள்ளதும் முப்பத்தைந்து கோடி ஜனத்தொகை யுங் கொண்டதுமாகிய ஆரியவர்த்தமென்று (இந்து தேசமென்று) வழங்கிவரும் * பரதகண்டம்.

இப்பரதகண்டத்தை அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அனந்தம் சக்கிரவர்த்திகளும், அரசர்களும், சிற்றரசர்களும், அரசு புரிந்து வந்தார்களென்று இதிகாச புராணங்களாலும், செப்பேடு சிலா சாஸனங்களாலும், கூறப்படுகின்றன. தவிரவும் அவ்வவ்வரசர்கள் ஆளுகைமேலேற்பட்ட ஆலயங்களும், அதுகளில் தீட்டியிருக்கும் சித்திரங்களும், மலைகளிலும், மலைகளின் குகை களிலும் செய்யப்பட்டிருக்கும் வேலைகளின் அற்புதங்களையும்

* பரதகண்டத்தைப்பற்றி இப்புத்தகத்தில் இரண்டாவது அத்தியாயத் தில் விரிவாய்க் கூறப்படுகின்றது.

அணைக்கட்டுகள், நீர் ஓடைகள், அக்காலத்தில் விளங்கிய நாணயங்கள் முதலாக யாவையும் இக்காலத்திலும் காண்கிறோம்

ஆயினும் நமது காருண்ய ஆங்கிலேய அரசாக்ஷியார் நடாத்தும் நீதிமார்க்கமாயுள்ள ஒழுக்கங்களைப்போல் இதற்கு முற்பட்ட அரசர்களும் நடத்தியிராரகளென்று நாம் நம்பும்படியான திருஷ்டாந்தங்கள் பலவுண்டாம். அவைகளில் சிலது யாதெனில், ஒவ்வொரு வகுப்பினர்களுக்கும் அவரவர்களின் ஜாதியின் ஆசாரம்போல் சட்டம் ஏற்படுத்தி அவ்வரிய ஒழுக்கத்தினின்று வழுவாது நடந்துகொள்ளும்படி பாதுகாத்தலும், கல்வியை விர்த்திசெய்வித்தலும், சக்தியற்றவர்களுக்கும் அங்க ஈனர்களுக்கும் அன்னவஸ்திரம் கொடுத்துக் காப்பாற்றலும், பிணியால் வருந்துவோருக்கு வைத்தியசாலைகள் ஏற்படுத்தியிருப்பதும், ஒருவர் பொருளை மற்றவர்கள் அபகரிக்காவண்ணம் நீதிசாலைகளை யேற்படுத்தியிருப்பதும், ஒருவர்க்கொருவர் சண்டை சச்சரவு செய்துக்கொள்ளாதிருக்க போலீஸ் உத்தியோக ராணுவங்களை நியமித்திருப்பதும், தூரதேசத்துக்கு எளிதில் போக்குவரத்துக் குண்டான நீராவியந்திரங்களின் ரதங்களும் மரக்கலங்களும், ஆயிரமைலுக் கப்புறமிருக்கும் சங்கதிகளை ஐந்து நிமிஷத்திலறியும்படியான மின்சார யந்திரங்களும், இன்னம் முக்கியமாயுள்ளது யாதெனில் மதப்பேதம் பாராது க்ஷீரணித்துக்கிடக்கும் ஆலயங்களைப் புதுப்பித்து உற்சவாதி கைங்கரியங்களைநடத்திவருவதும், இவ்விதமாயுள்ள இன்னம் அனந்தம் நன்மைக்குண்டான காரியங்களைச் செய்து ஆண்டுவருவதும் தவிர இன்னம்அன்னவர்களின் மேதாவிகளால் யூகித்துச் செய்யக்கூடிய ஒவ்வொரு விந்தையையும் ஆராய்ச்சிசெய்யில் இக்கலியுகத்திற்கு "கண்" காண காட்சிதரவந்த கடவுள் என்றே நம் ராஜ வம்சஸ்தர்களைக்கண்டால் வலது கரத்தால் வந்தனம் செய்கிறோம். (அம்மேதாவிகளால் நடத்திவரும் மின் சாரங்களாலுண்டான பலவித காரியங்களும், நீராவியாலுண்டான அனந்தம் யந்திரங்களும் பல நன்மைகளைத் தரக்கூடிய பொதுஜனப் பிரயோஜனமாம்.)

இவ்வரிய ஒழுக்கங்கள் யாவையும் கையாண்டு அரசு செலுத்தும் நம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் இக்காலத்தில் மதராஸ் கோரென்றும், ஆரிய சித்தாந்தப்படி அக்காலத்தில் ஆக்கினேய கண்டமென்றும் சொல்லக்கூடிய இத்தென்னாட்டை நான்கு மண்

டலங்களாகப்பிரித்து மிகச்சிறப்புடன் ஆண்டு வந்தார்களாம். அன்னவர்கள் யாரெனில்,

யானைகளாற் சிறப்புற்ற சேரமண்டலத்தை பிருகு, வம்ஸஸ்தர்களாகிய பனைக்கொடியை யுடைய ஹக்நிகுலக்ஷத்திரியரும், அரிசியால் சிறப்புற்ற சோழமண்டலத்தை இக்ஷுவாகு வம்ஸஸ்தர்களாகிய புலிக்கொடியை யுடைய சூரியகுல க்ஷத்திரியரும், முத்தினாற் சிறப்புற்ற பாண்டிய மண்டலத்தை புரூரவன் வம்ஸஸ்தர்களாகிய மீனக்கொடியை யுடைய சந்திரகுல க்ஷத்திரியரும், அறிவுடைய மகான்களாற் சிறந்த * தொண்டமண்டலத்தை பிரிதிவீசுர வம்ஸஸ்தர்களாகிய சிங்கக்கொடியை யுடைய யாக க்ஷத்திரியரும் ஒருங்கே ஆண்டு வந்தார்களாம். இதற்கு ஔவை கூறியுள்ளதாவது:—

### நேரிசை வெண்பா.

வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூமியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்வயற் றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

## குலாபிமானிகள் அறியவேண்டியவை.

சிறப்புற்ற இத்தொண்டை நாட்டை பிரிதிவீசுரவம்ஸஸ்தர்களாகிய இருபத்து நான்கரண் மனையார், விஜயநகரம், சந்திரகிரி, காஞ்சிபுரம், இவைகளை ராஜதானியாகக்கொண்டு † அரசு புரிந்தார்களென்றும் இவர்கள் அரசாளும் காலத்தில் சம்புகுலபல்லவர்களும், வன்னியகுல சோழர்களும், சிற்றரசர்களாய் இருந்தார்களென்றும், சோழதேசத்தைப் படிப்படியாய் ஜெயித்தார்களென்றும், பல்லவதேசத்தை ஜெயித்து அரசு புரிந்தார்களென்றும், தெற்கே தாம்பிரபரணிவரை தமது வெற்றிக்கொடியை நாட்டின

* இத்தொண்டை நாட்டை பரத்துவாஜ கோத்திர பல்லவச்சோழர்களாகிய ஹக்நிகுல க்ஷத்திரியரும், மாபலிபுரம், மயிலை, காஞ்சி, இதுகளை ராஜதானியாகக்கொண்டு ஆண்டார்களென்று மற்றோர்பக்கம் இப்புத்தகத்தில் கூறுகின்றது.

† அரசுபுரிந்தார்களென்பதைப்பற்றி இப்புத்தகம் ஒன்பதாவது அத்தியாயத்தில் திருஷ்டாந்தங்கள் கூறினும் இப்புஸ்தகம் முடிவுவரையில் [illegible] காங்கு அரசாக்ஷி செய்ததைப்பற்றியே கூறுமாம்.

றென்றும், காஞ்சியிலும் மற்ற நாடுகளிலும் ஆலய விமானங்களும் நீரோடைகளும், மண்டபங்களும், புதுப்பித்தார்களென்றும் செப்பேடு சிலா சாஸனங்களாலும் பல பிரமாணங்களாலும் கூறப்படுகிறது மற்ற மூன்று மண்டலங்களைவிட இது சிறப்புற்றதென்பதற்கு.

**கம்பர்.**

**வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்கும்**
**சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்**
**திறந்தாங்குந் தாங்குஞ் ஜெகமுழுதுந் தாங்கும்**
**அறந்தாங்குந் தொண்டை யரசு.**

எனக் கூறியபடி இவ்வளவு சிறப்புடன் ஆண்டுவந்த அரசாக்ஷியானது நாளுக்குநாள் க்ஷீணதிசையடைந்து கோல்கொண்ட மகமதியருக்கு தேசத்தை விட்டுவிட்டு பல தேசங்களிலும் குடியேறினார்கள். இப்போதோவெனில் "தேசங்கள்தோறும்பாஷைகள் வேறு" என்று கூறியதை யொத்து அந்தந்த தேசங்களின் வளப்பங்களின் படிக்கு பாஷைகளும், திருமங்கிலியங்களும், நடையுடை பாவனைகளும், வேறுபட்டிருப்பினும், இருபத்துநான்கரண்மனையார் என்பதும், தேசாதிபதிகள் என்பதும், சாதுவம்சஸ்தர் என்பதும், கலைக்கோட்டு மகாரிஷி கோத்திரர் என்பதும், மும்முடி கோத்திரர் என்பதும், **தெலுங்க செட்டி ஜாதியார்** என்பதும், **யாகக்ஷத்திரியர்** என்பதும், ராயர் என்பதும், ஆந்தரர்களென்பதும், யாவும் காரணப் பெயர்களால் வேறுபட்டிருப்பினும் ஆதியில் ஒரு குலத்தவர்களே யென விளங்குகின்றது.

இவ்வம்சஸ்தர்கள் பல தேசங்களிலும் ஏராளமான ஜனத்தொகையுடன் இருக்கிறார்களெனினும் அன்னவர்களின் முன்னோர்களால் நடைபெற்று வரலான அரிய ஒழுக்கங்களில் முக்கியமாயுள்ளது மதுமாம்ச மருந்தாததும், அன்னிய வகுப்பினரிடம் சம்பந்தம் செய்யாததும், அவ்விருபத்துநான்கு வம்ஸத்தினர்க்குள்ளேயேமுறை மாறுபாடாக சம்பந்தம் செய்யாதிருத்தலும், புத்ரகாமேஷ்டி யாகத்தைக் கலைக்கோட்டு முனிவரால் நிறைவேறச்செய்த **காமாக்ஷியம்மனைப்** பூசிப்பதும் (அன்னவர்களின் முன்னோர் இளங்குமாரரால் வனத்தில் மாதர்களல்லாது. தேவதேவியை பூசிப்பதும்) தேவதாயெக்யம் செய்து தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுப்பதும், இக்காலத்திலும் ஆங்காங்கு சிதறிப்போய்



குடியேறியிருக்கும் அன்னவர்கள் யாவரும் இவ்வரிய ஒழுக்கங்களை கைவிடாது காப்பாற்றி வருகின்றனராம். இவ்வித ஒழுக்கங்களிலிருந்து தவறி நடந்தவர்களை ஜாதி பிரஷ்டத்துவம் செய்து நீக்கப்படுகிறார்கள்.

இவ்வமிச ஆதி புருஷனால் நடைபெற்று வழங்கிவந்த தெலுங்கு பாஷையை அகலவிட்டு தமது ராஜாங்கம் சோர்வடையுங்காலத்தில் முறிபட்டுப் போய் பல தேசங்களிலும் குடியேறின இக்குலத்தவர்கள் அந்தந்த தேச பாஷைகளைக் கையாண்டு வருகிறார்களே தவிர தமது **ஆந்தர பாஷையை** முற்றும் துறந்தார்கள்.

இத்தென்னாட்டில் இக்காலத்தில் தங்கள் தங்கள் மரபைச் சீர்திருத்தி வரும் நம் நேயர்களான இதர ஜாதிகளில் நம்முன் கண்காக்ஷியாய்க் காண்பது **ஹக்நிகுல க்ஷத்திரியரேயாம்.** இன்னவர்களின் சங்கங்களிலும் மற்ற ஏனைய சங்கங்களிலும் சபாநாயகர்களால் பிரசுரிக்கப்பட்ட உபன்னியாசங்களிலே ஜாதி அனைவரும் ஒற்றுமையாய் இருத்தல், தொழில் முயற்சியில் சுறுசுறுப்பாய் இருத்தல், கல்விகற்றல். நாகரீகமாய் இருத்தல், முதலான பல நற்கருமங்களைப் பற்றி கூறுகிறதெல்லாம் **குலாபிமானிகளாய்** இருத்தல் வேண்டுமென்பது நன்கு விளங்குகின்றது.

எறும்பு கரையான் செல் முதலான ஜெந்துக்கள் பார்வைக்கு அற்பமாகத் தோன்றினும் அவைகள் ஒற்றுமையாய் இருந்து செய்யக்கூடிய காரியங்கள் வியக்கத் தக்கதா யிருக்கின்றன. அற்பப்பிராணிகளின் செயல் இத்தன்மையானால் பகுத்தறிவும் பராக்கிரமமும் திடச்சித்தமும் பெற்ற மனிதர்களின் செயல் எவ்வாறு இருத்தல் வேண்டும். செல்வர் முதல் வறியர் ஈறாக உள்ளவர்கள் பேதம் பாராட்டாமல் **ஒற்றுமையாக** ஒருங்கு சேர்ந்து நற்கருமங்களை தொடங்குவார்களாயின் இக்குலம் நன்கு விளங்கி நாகரீகமும் கல்வியும் சிறப்புற்று அதனால் ஐசுவரியவந்தர்களாய் வாழ்வார்களென்பது திண்ணம். இது யாவரும் அறியக்கூடிய கடமையாம்.

## ஒற்றுமை.

இவ்வம்சஸ்தர்கள் அனைவரும் அறியவேண்டிய விஷயமொன்றுளது. யாதெனில் தமக்குள்ள அனுபவத்தை யொட்டிப் பார்க்குமிடத்தும் ஓர் எறும்பு எம்மாத்திரமுள்ளது அவை பல கூடினால் அவற்றின் இயற்கை சக்திக்கு எட்டாத காரியங்களைச்

செய்கின்றன. தம்மிலும் நூறுபங்கு அதிகமான பண்டங்களையும் வெகுலேசில் இழுத்துச் செல்லுகின்றன. சிதல்கள் பல கூடினால் வைரம்பெற்ற தூண் தூலங்களையும் மாடமாளிகைகளையும் துகள் துகளாய் அழித்து விடுகின்றன. கரையான்களும் பல கூடினால் அணுவணுவாக மட்களைக் குவித்து மேரு போன்ற புற்றுகளையும் செய்கின்றன. இந்த அற்பத்திலு மற்பமான பிராணிகள் அரிதான பெரிய காரியங்களைச் செய்ய எதனால் ஆயது? கூட்டுறவா லன்றோ, இந்த அற்ப பிராணிகளே கூட்டுறவால் மூவறிவொடு, பிரதக்கரண சக்தியும், புஜபல பராக்கிரமமும், ஆறறிவுமுடைய மனிதராலும் செய்யக்கூடாத அருமையான செய்கைகள் செய்கின்றன வென்றால், அஷ்ட ஐசுவரியமும் பகுத்தறிவும் அகாத சக்தியுமுடைய மனிதரே பலர் கூடி முயன்றால் எக்காரியம் தான் செய்ய முடியாது. ஆகையால் கூட்டுறவாகிய ஒற்றுமையைப் பற்றி நீதி நூல்களும் தர்ம சாஸ்திரங்களும் கூறுவது யாதெனில்.

அறப்பளீசர் சதகம்.

செத்தைபலகூடி யொரு கயிறாயினது கொண்டு
திண்கரியையுங் கட்டலாம்
திகந்தபல துளிகூடி யாறாயின் வாவியொடு
திரலேரி நிறைவிக்கலாம்
ஒத்ததூற் பஞ்சுபல சேர்ந்து நூலாயிடி
னுடுத்திடுங் கலையாக்கலாம்
ஓங்கிவருஞ் சோலுடன் சீலையுங் கூடினு
லுயர்கவிகை யாக்கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலத்தோடு தவிடுமி கூடின்
மல்கிமுளை விளைவிக்கலாம்
மனமொத்த நேயமொடு கூடியொருவர்க் கொருவர்
வாழின்வெகு வெற்றிபெறலாம்
அற்றகணியைப் பொறுத்தரி பிரமர் தேடரிய
வமலனேயறுமை மதவே
வனுதினமு மணதிகினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே.

என பிரமாணங்கள் கூறுவதுபோல் யாவரும் திரிகரணசுத்தியாய் ஓர் கருமம் புரியின். அது சிதையாமல் சித்தி பெறுதற்குத் தடையுமிராதென்பதே துணிபாம். ஆகையால் அன்பார்ந்த



ஆப்தர்காள் பிரப்பிரதான்யமாகிய (கூட்டுறவோடு) ஒற்றுமையோடு பயிலத்தக்கதும் தங்கள் தங்கள் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பயிற்றுவிக்கத் தக்கதும் ஒப்புயர்வற்ற கல்வியேயாம் இதற்கு

சீருபுராணம்.

போசமுந்தரும நேர்ந்த புத்தியும் புகழின் பேரும்
வேதமுங் கலையும் ஞான விளக்கமு மனுவினாலுங்
காதலிற் பயந்தமைந்தர் கருத்தினிற் சிறப்பச் செய்தல்
தாதையர்க் கடனே யன்றி கரப்பது தகைமைத்தன்றே.

கல்வி.

மணிகடற் சுலவிய மாநில வரைப்பில் மன்பதாய்ப் பிறந்தார்க்கு இன்றியமையாப் பெருஞ் செல்வம் கல்வியே யன்றி வேறு பொருளென்பது அத்துணைச் சிறப்பாகா? அற்பவாழ் நாட்களையுடைய மக்கட்கு உற்றதுணை கல்வியே, மனவிருளை யொழித்து புத்தியை ஒளிபெறச் செய்யும் விளக்காம். தேக உற்பவத்தோடு உதித்த புறக்கண்ணால் பள்ளம் படுகுழி முள் முரடுகளை யுணர்ந்து விலகி நடத்தல் போல,

திருக்குறள்

" எண்ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"
" கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்றுரைத்தபடி கல்வியாகிய அகக்கண் விதிவிலக்குகளையும், நியாய நியமங்களையும், ஐயந்திரிபு அறியாமை முதலிய முக்குற்றங்களையும் உணர்த்தி நடத்துவதற்கு பிரதானமாகிய நேர் வழி காட்டியாம். ஆதலால் முன்னோர்களும் முதியோர்களும் கல்வியின் சிறப்பை பலவாற்றாலும் புகழ்ந்துள்ளார். எவ்விதமெனில்,

ஆன்றோர் வாக்கியம்.

கல்வியே யாவர்க்கு மொளிகண்ட வடிவமாங்
கல்வியே புதையலாகும்
கல்வியே திசைகொண்ட கனகீர்த்தியைத் தருங்
கல்வியே பெருமை யாகும்
கல்வியே வேண்டுமற் போகங்களைத் தருங்
கல்வியே செல்வ மாகும்

கல்வியே யரசராற் பூசை செய்விக்குமக்
 கல்வியே கடவுளாகும்
கல்விக்கு நிகரான பொருளொன்று மிம்மையிற்
 கருதிடி லுமில்லை யில்லை
கல்லாளெனத் தொன்று மில்லாநடக்கு மிரு
 காற்பசுவ தென்பர் மாதோ

என ஆன்றோர்கள் கூறியபடி இத்தகைய சிறப்பெய்திய கல்வியைக் கற்கவேண்டியது மாந்தராய்ப் பிறந்தாற்குரிய முக்கிய கடமையாகும். 'கற்கைநன்றே கற்கைநன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே' எனக் கூறியபடி கல்வியைக் கற்றலும் "கற்கக் கசடறக் கற்பவை கற்றபினிற்க வதற்குத்தக" வென்றபடி நிற்றல் பெரிதுங் கடமையே. பெரியோர்கள் கற்றவரிடத்துள்ள வறுமை நோயைக் கல்லாத புன்மையோரிடத்துள்ள செல்வத்தைச் சமமென வொப்பிட்டிருப்பதன்றி கல்வியறிவில்லாத எழுச்சியும் அழகும் பாவையின் எழுச்சியும் அழகும் போலுமாமென்றும் இழித்து வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்கள். இதற்கு,

விவேக சிந்தாமணி

கருதிய நூல் கல்லாதான் மூடனாகுங் கணக்கறிந்து
 பேசாதான் கசடனாகும்
ஒரு தொழிலு மில்லாதான் முகடியாகு மொன்றுக்கு
 முதவாதான் சோம்பனாகும்
பெரியோர்கள் முன்னின்று மரத்தைப் போலும்
 பேசாமலிருப்பவனே பேயனாகும்
பரிவு சொலித்தழுவினவன் பசப்பனாகும் பசிப்பவருக்
 கிட்டுண்ணான் பாவியாமே.

இவ்வம்ஸ முன்னோர்களால் சிறப்புற்ற இவ்வரச சந்ததியானது அரசுரிமை முதலிய பாத்தியங்களை கால கதியினாற் றுறந்தாலும், அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைவதற்கு முக்கிய சாதனமாகிய கல்வியெனுங்கற்பகத்தை கைசோர விட்டபடியால் இவ்வளவு கேவலஸ்திதிக்கு வர நேரிட்டது. ஆனதுபற்றி இனி யெந்த முகாந்திரங்களைக்கொண்டு, நாகரீகம், நன்னடக்கை, நற்ஜனசகவாசம், முதலான மேன்மை பெற்ற அந்தஸ்துக்குவரலாமென ஆவலுள்ள நண்பர்கள் அறிவது கல்வியைக் கையாண்டு வருதலாம். இதற்கு,



நீதிநெறி விளக்கம்.

அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூஉங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை.

என்று கூறியபடி இத்தகைய சிறப்பினையுடையதும் மறுமைக்கு உய்க்கும் வழிகளைக் காட்டும் வித்தாயுள்ளதும் கல்வியேயாம், ஆரசர்குலமாகிய யாகத்தால் தோன்றிய இவ்வம்ஸஸ்தர்கள் கற்க வேண்டிய தவசியமே. உயர்குலத்திடை தோன்றியும் அறிய வேண்டிய நூல்களளப் பிலவாய்ப் பல கிடந்தும், அன்பர்களிருந்தும் சிலர் ஆசாரத்தைக் கைநழுவவிட்டுத் தங்கள் தங்களது செல்வக் குமாரர்களை பள்ளியில்வைத்து படிக்கவைப்பதை விடுத்து, ஆடுமாடுகள் மேய்க்கவும், படிவேலைகள் செய்வதுமாகிய இன்னம் இழிவான தொழில்களைச் செய்ய விடுத்து அதனால் வரும் சந்தாவைப்பெற்று உஜ்ஜீவிக்கிறார்கள். இக்காரியங்கள் செய்வதெல்லாம்அறியாமையைப் பற்றியேயாம், கல்வியெப்போதும் குறையாத செல்வ மென்பதற்கு

ஏலாதி.

வெள்ளத்தாலழியாது வெந்தணலால் வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலு நிறைவன்றிக் குறைவுறாது
கள்ளர்க்கோபயமில்லை காவலுக்கு மிகவெளிது கல்வியென்னு
முள்ளபொரு ளுள்ளிருக்கப் புறம்பாகப் பொருள்தேடி யுழல்கின்றாரே.

எனக்கல்வியைப்பலவாறு புகழ்ந்திருப்பதால் இத்தகையசிறப்பு வாய்ந்த கல்வியின் திறத்தை சிற்றறிவுடைய அடியனாற் புகழ்ந்து பேசப்போமோ,, கல்லா ஒருவன் குலநலம்பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும்மே" எனக்கூறியபடி இத்தகைய கல்வியை நீங்களும் கூடியமட்டில் பயின்று உங்களது சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் இளமையிலேயே பயிற்றுவித்தல் வேண்டும். எவ்விதமெனில் "கண்டிலே வளையாதது தடியிலே வளையாதது போல்" இளமையிலேயே கல்வியைப் பயிற்றுவித்தல் நலமாம். இளமையில் கற்காவிடில் முதுமையில் அவற்றைப் பயிலுதல் கஷ்டமாய் முடியும். இதற்கு,

ஆன்றோர் வாக்கியம்.

வளை இளமரத்தினை நிமிர்த்தல் வாய்க்கும் பொன்
னிலகிய பொழுதினி லியற்றலாகு நல்
வளமுறு கேள்வி நூன் மாண்பு நற்குண
மிளமையினன்றி மூப்பெய்தி னெய்துமோ

எனக்கூறியபடி "இளமையிற் கல்" என ஆன்றோர் வாக்கியம் போல் கற்றால் செல்வப் பொருளுக்கும் கல்விப்பொருள் மேலென்று பல சுருதிகளும் கூறுகின்றன. அதெப்படி யெனில் கற்றவன் மேன்மை பெற்றவனென்றும், கல்லாதவன் கசடனென்றும் கூறியிருக்கின்றனர்கள்.

### வெற்றிவேற்கை

நாற்பாற் குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே
எக்குடிபிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்.

என வற்புறுத்திக் கூறியுளார். ஆகையால் மாதா பிதாக்கள் தேடிவைக்கவேண்டியது கல்வியேயாம் அவ்விதம் கற்றவர்க்கு சகலவித சிறப்பும் வாய்க்கு மென்பதற்கு,

### ஔவை.

மன்னனும் மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேயமல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு.

ஆகையால் அரசரைவிட கற்றவர்கள்புகழும்கீர்த்தியும் அடைந்தவர்களென்பதும்தவிர, கல்விகைவந்த விடத்து அக்கல்வியோடு உடன் நிகழ்வதாகிய முத்திஞானமும் அதற்குச் சாதனங்களும் தானே உதிக்கும் அறிவுடைமை உதித்தபோது செல்வமும் வந்தடையும். இதற்கு "அறி வுடையாரெல்லா முடையார் அறிவிலார் என்னுடைய ரேனுமிலர்" என்பது போல் மானிடர்க்கு உடைபணி யாவையும் அணியும் அழகைவிட கல்விபயில்வதே சகலவித அழகும் அடங்கினது, இதற்கு,

### நாலடியார்.

குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வியழகே யழகு.

எனக்கூறியபடி கல்வியும் அதற்குத்தக்க அறிவும் உதிக்கப் பெறின், அவ்வறிவினால் விசாரித்து ஆழ்ந்து தெளிதற் பாலதாகிய ஒழுக்கமும் மிகவெளிதில் வந்தடையும். இந்தக்கல்வி யறிவொழுக்கம்



என்னப்பட்ட இலக்ஷணங்களும் எய்தப்பெற்றவர் யாரோ அவரே உலகினரால் மதிக்கப்படும் பாத்திரராவர். அவரே உயர் குலத்தரென்று உலகத்தார் எண்ணுவார்கள். இந்த உண்மையைக் கபிலாதி ரிஷிகளும் கூறியுளார்.

### ஆன்றோர் வாக்கியம்.

வடதிசைப்பார்ப்பான் தென்றிசைக் கேகி
னடையது கோணிப் புலையனாவன்
தென்றிசைப்புலையன் வடதிசைக் கேகி
பழுதற வோதிப் பார்ப்பானாவன்.

ஆகையால் குலமணிகளே யாவரும் தம் தம் புதல்வருக்கும் புத்திரிகளுக்கும் கல்வி கற்பிப்பது எவ்விதமெனில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதுபோல் தாய்க்குச் சமானமாயுள்ள சுயபாஷையாகிய ஆந்தர பாஷையையும், பிதாவுக்குச் சமானமாகிய நம்மவர்கள் தென்னாட்டில் குடியேறிய தேசபாஷையாகிய தமிழ்ப் பாஷையையும், தெய்வத்துக்குச் சமானமாகிய காருண்ய சக்கரவர்த்தியாரது சுபபாஷையாகிய ஆங்கிலேய பாஷையையும், கற்பிக்கவேண்டியது. "காலத்துக்குத் தக்க கோலமென்பது போல்" தமிழும் இங்கிலீஷும் இவ்விரண்டு பாஷைகளைக் கற்றாலே ஆயிரம்கணக்காய்ப்பென்ஷன் வாங்க யோக்கியதையுள்ள பாஷைகளை இரண்டாவது மூன்றாவது என்றும் எதற்கும் பயனற்ற தெலுங்கு பாஷையை முதலில் கூறியுளதைப்பற்றி சில பிரபுக்கள் சந்தேகிக்கக் கூடும்.

அதன் தாற்பரியம் யாதெனில் "தெலுங்கும் மலையாளமும் தேறக்கற்றால்—தமிழும் இங்கிலீஷும் தானேவரும்" என்பது இயற்கையாய் யாவருமறிந்த விஷயமே. அதெப்படி யெனில் தெலுங்கு அல்லது மலையாளம் கற்ற ஒருவர் ஒரு வருஷமேனும் வாசிக்கக் [illegible]ந மற்ற இரண்டு பாஷைகளை ஒரு மாதத்தில் வாசிக்கக்கூடும், [illegible]து தமிழும் இங்கிலீஷும் கற்ற ஒருவர் ஒருமாதத்தில் வாசிக்[illegible]டிய மற்ற இரண்டு பாஷைகளை ஒரு வருஷமானாலும் வாசிக்க [illegible]வாம். இதை யுணர்ந்தே தெலுங்கை தாய்பாஷை யென்று கூறலாயிற்று. ஆகையால் முதலில் சுயபாஷையையும், இரண்டாவது தேசபாஷையையும், மூன்றாவது ராஜபாஷையையும் கற்பித்துவிட்டால், ஒற்றுமை, நாகரீகம், ஒழுக்கம், ஆசாரம், முதலியவையாவும்

தானே வந்துவிடும். அவ்விதம் அடைந்து விட்டார்களானால் அன்னவர்கள் பெருமை பெற்றவர்களென்பது நன்குவிளங்கும். இதற்கு,

விவேகசிந்தாமணி.

“ அறிவுளோர் தமக்கு நாளுமரசருந் தொழுதுவாழ்வார்
நிறையொடு புவியிலுள்ளோர் நேசமாய் வணக்கஞ்செய்வார் ”

## ஆசாரம்.

பணிகடல் சூழும்மானிலமீது மகிழ்வுற்று வாழுமன்பர்களாகிய இக்குலத்திலகர்கள் முக்கியமாய் கவனிக்க வேண்டியது யாதெனில் ஆசாரமென்பதேயாம். இவைகளை யனுசரித்து தங்கள் வருணாசிரமத்துக்கு தக்கவாறு ஸ்மிருதிகளில் கூறியவண்ணம் நடத்தலாம் இத்துணிபு கொண்டே கருணையுடைத்து இல்லறவியலை நன்கு நடத்திக்காட்டி அனுபோகமூலமாய் பல சாதனவழிகளை நாயனார் கூறியுளார்,

திருக்குறள்.

“ ஒழுக்கம் விழுப்பந்தரலா லொழுக்க
முயிரினு மோம்பப்படும். ”

என்று கூறியபடி இச்சீலமே நற்றுணை யென்னப்படும். இதன்படி நின்றொழுகும் அன்புடையார் குலம் தான் நற்குல மெனப்படும். வினைக்குத்தக்கவாறுபல கஷ்டங்கள்ஏற்படினும் ஆசாரத்தைக் கைப்பற்றிய பின்னர் நழுகவிடுதல் கூடாவாம். மேற்கூறிய ஒழுக்கங்கள் யாவர் கையாண்டு வருகின்றனரோ அன்னவர்கள் கிரகங்களில் தனலட்சுமியும் தான்ய லட்சுமியும் சதாவாஸம் செய்துகொண்டிருப்பரென்பது யாவரு மறிந்த விஷயம்.

ஆகையால் ஒழுக்காசாரங்கள் உயிரைப்பார்க்கினும் மிகமேலாக நம்பற்பாலன வாகின்றன, இத்தகைய ஒழுக்காசாரங்கள் பல இன்றியமையாத ஏதுக்களால் தவறினதாலன்றோ நற்குலமாகிய இப்பிரிதிவீச்சுர வம்ஸம் நெருப்பென மதிக்கப்படாமல் அந்நெருப்பின்மேல் பூத்த நீறெனவே சாதாரணர்களால் மதிக்கப்படுகின்றது. ஆகையால் அன்னவர்கள் ஒழுக்காசாரங்களில் சிறிதுங் குறைவுபடாமல் ஒழுகுதல் அவசியமேயாம். இதற்கு,

டராபரக் கண்ணி

“ அன்பர்பணி செய்ய வெனையாளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானேவந் தெய்தும் பராபரமே ”



## குலாபிமானம்

என தாயுமானவர் திருவாய் மலர்ந்தருளினாற் போல் தங்கள் இளங்குமாரர்களுக்கு கல்வி கற்பித்ததனால் சகல சீரும் சிறப்பும் பெற்று தாங்கள் முன்னிருந்த நாகரீகத்துக்கு வந்து விடலாம். தங்கள் பெருங் கீர்த்தியும் நன்கு விளங்கும், இக்குலத்தவர்கள் சீர்படடைவதற்கு முக்கியமாய் பின் வரும் விஷயங்களைக் கவனித்தல் வேண்டும்,

1. தங்கள் தங்கள் வீடுவாசல்களைச் சுத்தமாய் வைத்திருத்தல்.
2. பிரதி தினமும் ஸ்நானங்கள் செய்து சமையல் செய்தல்.
3. கிரமப்படி நைவேத்தியங்கள் செய்து சாப்பிடுதல்.
4. அதிதிகளுக்கு அன்னமிட்டு சுசீகரமாயுள்ள உணவுகளைப்புசித்தல்.
5. இழிவான தொழில்களை நிக்கிரகஞ் செய்தல்.
6. தமக்கு மேம்பட்ட பிராமணர் குலத்திலும் இனத்தார் வீடுகளிலும் மாத்திரம் புசித்தல்.
7. சுபாசுபதினங்களில் பிராமண புரோகிதர்களை வரவழைத்து தங்கள் குலாசாரப்படிக்குள்ள தர்மங்களை நடப்பித்தல்.
8. தாங்கள்செய்துவரும் மேம்பாடுள்ள தொழில்களில் விடாமுயற்சியாய் இருத்தல்.
9. நமது காருண்ய கவர்னர்மெண்டார்சட்டத்துக்கு கிஞ்சிற்றேனும் மாறுபாடில்லாது நடந்து கொள்ளல்.
10. நம் நேயர்களாகிய பலவர்ணத்தார்களின் நட்புபாராட்டல்.
11. நம் குலத்தார்களில் தேசநாகரீக நடையுடை திருமங்கிலியபாவனைகள் பேதப்பட்டிருப்பினும் ஒன்றென மதித்தல்.
12. ஒவ்வொரு குலாபிமானிகளும் தமது குலம் சீர் தழைக்கும் கைங்கரியங்களை திரிகரணபிரயாசை யெடுத்துக்கொண்டு அறிவிலாதார்க்கு ஆசாரம் பயிற்றுவித்தல்வேண்டும். அவ்விதமுழைப்பது எப்படி இருக்குமென்றால்,

ஆன்றோர் வாக்கியம்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்.
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி

யருமையும் பாராவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணுயினர்.

என்று கூறியபடி குலம் விளங்குமாறு யாவரும் குலாபிமானிகளாய் இருந்து, தெய்வத்தாலாகு மெனினும் முயற்சி மெய் வருந்தக் கூலிதரும் என்பது போல் யாவரும் கவனிக்க வேண்டியது யாதெனில் நாள்பட்ட ஆலமரம் கெடாத படிக்கு அதன் சுற்றிலுமுள்ள விழுதுகள் தாங்கினாற்போல், ஓர்காலத்து ஓங்கி நின்ற இக்குல மானது கெட்டு தீச்சொல் பிறவா படி பாது காத்தல் கடமையாகும். அதாவது.

## ஜீவக சிந்தாமணி

தூங்கு சிறை வாவலுறை தொன்மரங்களன்ன
ஓங்கு குலனையவதனுட் பிறந்த வீரர்
தாங்கல் கடனாகுந் தலைசாய்ப்ப வருதீச்சொ
னீங்க மடவார்கள் கடனென் றெழுந்து போந்தான்.

என்றபடி குலமென்றால், ஜாதி, இனம், மரபு, வகுப்பு, வகை, வருணம், வம்ஸம், என்பதில் தனக்கு வேறு தன் இனத்துக்கு வேறு என்று நினையாமலும், சொல்லாமலும், தம்போலவேயாவரும் விர்த்தியடைய வேண்டுமென வெண்ணுவதே * குலதர்மமாம். இவ்வித எண்ணங்கொண்ட உத்தம புருஷர்தாம் நற்குல திலகரெனவானவர்களாலும் மதிக்கப்படுவார்கள்.

ஈதன்றி இக்குலத்தை விர்த்திக்குக் கொண்டுவர வேண்டுமென அனந்தம் கனதனவான்கள் முயற்சி செய்தும் இருக்கலாம். ஆனால் அது பயனற்றதாகியும் இடையில் நழுவிப்போனது முண்டு. பல முறையு மிவ்வாறு ஏற்படக்காரண மேதெனில் அன்னவர்களின்சிரமமின்மையேயாம். (அக்கரையற்ற முயற்சியேயாம்) அணுவணுவாய் செய்தாலுமாகாத தொன்றுமில்லை யென்பதை யோசித்து "முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்" எனும் நீதிக் கிணங்க விடா முயற்சியாய் இருந்திருப்பார்களே யானால் இக்குலம் முன்னமே நெற்றியிலிட்ட திலதம்போல் பிரகாசித்திருக்கும். ஆகையால் ஒவ்வொரு நண்பரும் ஒற்றுமையுடனிருந்து தன் குலத்துக்கு வந்தது தனக்கென்று எண்ணி நடக்கவேண்டியது கடமையேயாம். அது எவ்வாறெனில்

* தர்ம மென்பது முப்பத்திரண்டு வகையாம். இவையாவும் ஒன்றாய்க் கூடினும் குலதர்மமென்பதற்கு ஈடு காணுவாம்.



## ஆன்றோர் வாக்கியம்

தன்மானங் குலமானந் தன்னை வந்தடைந்த
உயிர்த் தங்கண் மானம்
என் மானமாகி லென்ன வெல்லவருஞ்சரி
யெனவே யெண்ணம் போந்து
நன்மானம் வைத்தெண்ணு மவர்
தங்களுக்கு நன்மை செய்வோர்
மன்மானி யடைந்தோரைக் காக்கின்ற
வள்ளலென வழுத்தலாமே

எனக்கூறியபடி நடக்கிறவர்கள் தான் நற்குல திலகர் எனப்படுவர். ஆனது பற்றி இக்குலாபிமானிகளாகிய நேயர்கள் யாவரும் மேற்கண்ட விதம், (நகரவாசிகளும் கிராம வாசிகளும்) ஒருங்கு சேர்ந்து குலத்தைச் சீர்தூக்கி நன்னடக்கைக்குக் கொண்டு வருவீர்களாயின் ஆங்காங்கு ஜாதி ஆசார சங்கங்கள் ஏற்படுத்தி, பல தேயங்களின் வளப்பமும் நாகரீகமும். நம் நேயர்களான பல வர்ணத்தார்களின் நற்றொழிலும், கல்வித்திறமும், காருண்ய சக்கரவர்த்தியார் ஆக்டுகளும், எளிதில் உணர வோர் வழியுண்டு. அதாவது இந்நாட்டு இராஜதானியாகிய மதராசிலும் மற்ற ஏனைய நாடுகளிலும் பிரசுரஞ் செய்து வெளியூர்களில் (ஜில்லா-தாலூக்கா கிராமங்களில்) வாசம் செய்யும் பண்டித பாமரனை வரையும் சீர்திருத்தும் * பத்திரிகைகளேயாம்.

ஒவ்வொருவரும் ஷை பத்திரிகைகளை (பேப்பர்களை) தருவித்து ஆராய்ச்சி செய்யில், பதினாயிர மைலுக்கப்பாலுள்ள மேனாட்டுகளின் வர்த்தமானங்களும், குடியேற்ற நாடுகளின் வர்த்தமானங்களும், உள் நாட்டுகளின் வர்த்தமானங்களும், அப்போதைக்கப்போது நாம் நேரில் பார்த்தல் போலுந் தோன்றுமெனில் அதன் பெருமை அனுபவித்தவர்க்கே விளங்கும். இன்னம் பொது ஜனப் பிரயோஜனத்திற்காகப் பல மேதாவிகள் கூடி பிரசங்கஞ் செய்யும் சீர்திருத்த சபைகளுக்கும், ராஜ நீதி சபைகளுக்கும், ஜாதி ஆசார சீர்திருத்த சபைகளுக்கும், பொது அம்பல சபைகளுக்கும் பிரசங்கஞ் செய்து அதன் நடவடிக்கைகளைக் கவனிப்போமே யானால் மேற் கூறியுள்ள

* இத்தென்னாட்டில் நடைபெற்று வரலான பத்திரிகைகளில் தமிழில் "மெயில்பேப்பருக்குச் சமதியாயுள்ளதும்" தினப்பதிப்புடையதும் இங்கிலீஷ் "மெயில்பேப்பருக்குச் சமதியாயுள்ளதும்" தேசாபிமானமுமுடைய "சுதேசமித்திரன்" என பெயர் பெற்ற பத்திரிகையேயாம்.

ஆசார ஒழுக்கங்கள் யாவற்றிலும் சித்தி பெறலாம். இவ்வித நடவடிக்கைகளைக் கையாண்டு வந்து கீர்த்தி யடைந்த வம்சஸ்தர்களை இதற்கு திருஷ்டாந்தமாகக் கூறுவோம்.

## உதாரணத்துக் குகந்த வகுப்பார்

இக்காலத்தில் தேச நாகரிகங்களை யொத்து ஒவ்வொரு வகுப்பைச் சார்ந்தவர்களும் தங்கள் தங்கள் ஜாதியாருக்குள் ஒற்றுமை யுணர்ச்சி, உண்டாக்கவும், அவர்களுக்கு வித்தியாஞானங்கள் முதலியன உணர வைக்கவும், அவர்களிடம் காணக் கூடியவன வாயிருக்கும் குற்றங் குறைகளை நீக்கி யொழிக்கவும், மற்ற ஜாதியாருக்கும் தங்களுக்கும் சண்டை சச்சரவு முதலியது உண்டாகாது தடுக்கப் பாடுபடுகின்றவர்களாயு மிருக்கின்றவர்கள் யாரெனில், வன்னியகுல மென்றும், சம்புகுல மென்றும் ஹக்நி குல மென்றும் சொல்லக் கூடிய மரபினர்களேயாம்.

அன்னவர்கள் சோம சூரியக்நி யென்றும் பெயர் பெற்றுப் பண்டை காலம் தொட்டு இத்தென்னாட்டை அரசுபுரிந்த க்ஷத்திரியராயிருந்தும். பலதேசங்களிலும் ஏராளமான ஜனத் தொகையுடன் ஜாதி ஆச்சார கைங்கரியங்களை யுணரா திருப்பதைத் தெரிந்தநகரவாசிகளாகிய சில கனதனவான்கள் ஆங்காங்கு சங்கங்கள் நியமித்து, ராஜாங்கத்துக்கும் அன்னிய வகுப்பினர்களுக்கும் எள்ளளவேனும் வித்தியாச மின்றி தம் குலவிர்த்திக்குண்டான பிரசங்கங்களால் நாளுக்கு நாள் இக்குலத்தை விர்த்திக்குக் கொண்டு வந்தும் அவ்வம்சஸ்தர்களில் ஏள்மைஸ்திதியிலுள்ள பாலியர்களுக்கு கல்வி கற்பிக்கச் செய்துமிருக்கின்றனர். அவ்வம்சத்தர்கள் எங்கிருக்கினும் ஜாதி ஒற்றுமையால் சங்கங்கள் ஏற்பட்ட பின் அன்னவர்களின் கிரகங்களில் "வெண்டாமரையாளும் விவேகக் கலைமகளும்" வாஸஞ் செய்கிறார்கள், என்றாலோ, அன்னவர்கள் மரபை க்ஷீணதிசையிலிருந்து சீர் தூக்க முயற்சி யெடுத்து சங்கமேற் படுத்திய நண்பர்களும், அன்னவர்களின் அவாவெறுப்புறாதபடி மற்றயேனைய நகரங்களில் அம்மகாசங்கத்தை யொத்தே உபசங்கங்களை ஸ்தாபித்தவர்கள் யாவரும் ஹக்நி குலக்ஷத்திரியரேயாம். தவிர, அன்னவர்கள் மற்றவேனைய வகுப்பினர்களையும் சீர் திருத்தல் செய்ய வழிகாட்டிகளாயும் அமையப் பெற்றதால் அன்னவர்களின் சங்கம் நீடூழி காலம் வாழ்க வாழ்க.

(முற்றிற்று.)

ஸ்ரீ ஹரி ஓம்:



ஸ்ரீ நம்மாள்வார் பாசுரம்.

உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யெவனவன்
மயர்வற மதிநல மருளின னெவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

## பரப்பிரம ஸ்துதி.

ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய ஸ்ரீமந்நாராயணன் பரமபதம் (பேரின்பம்) என்னும் நித்திய விபூதியை தனக்கு காணியாட்சியாகவும் அங்குள்ள முக்குணங்களைக் கடந்த நிர்க்குண மென்னும் சுத்தசத்துவ குணமும் அப் பிராகிர்த திவ்ய தேஜோன்மய திருமேனிகளோடு விளங்கும் நித்திய சூரிகளைத் தமக்கு பிரஜைகளாகக் கொண்டும் அகால கால்யமான நலமந்தமில்லாதோர் நாட்டில் ஆவரண சத்தியை சங்கபாசவும் விக்ஷேபசத்தியை சக்கரமாகவும் பரமாகாய ரூபமான சாமள வர்ணமான திவ்ய திருமேனியோடும் (காலசத்தியை) ஆதிசேஷனாகிய பிரபலவிஞ் ஞானமயன சிம்மாசனமாகவும், கர்மம் பக்தி ஞானம் என்னும் மூன்று வேதமயனான விகங்கபூபதி யென்னப்பட்ட கருடாழ்வாரை வாகனமாக வுடையவராய் ஜெகத்ரக்ஷக தீக்ஷித அவாப்த சமஸ்தகாமராய் விளங்கி, லீலாவிபூதியாகிய தோன்றியழியும் பிரமாண்டங்களை விளையாட்டுக்காகப் படைத்து, அவைகளில் காலசக்தியாலங்கீகரிக்கப்பட்ட மாயாசக்தியைக் கொண்டு முக்குணங்களை யுண்டாக்கி அமைத்து, சங்கர்ஷண, பிரத்தியும்ந அநிருத்த ரென்னும் மும்மூர்த்திகளுக்கு சங்கர்ஷண, பிரத்தியும்ந அநிருத்த ரென்னும் மும்மூர்த்திகளாகத் தாமே வாசுதேவனாகிய நாயகராக விளங்கி, பல்லாயிர கோடி பிரம்மாண்டங்களையும் படைத்து, அந்த முத்தொழில் நடத்தும் மூர்த்திகளுடைய அம்ஸர்களாகிய சங்கா பிரம்மா, விஷ்ணு

முதலிய லோகேஸ்வரர்களுக்கும் ஈசுரனுகிய பரமேசுரனும் நித்திய விபூதி " லீலாவிபூதி யென்னும் உபய விபூதிகளுக்கும் நாயகனுமாகிய பிரணவ சொரூபியை நமஸ்கரிக்கின்றேன்.

(பேரின்பம்) அல்லது நித்தியவிபூதி.

இதற்கு ஸ்ரீமந்நாராயணன் மகா வைகுண்டமென்ற பரம பதத்தில் அப்ராகிர்த திவ்ய மங்கள விலக்ஷண விக்கிரயுஜ்வல தேஜோன்மயமான சாமள வர்ணமும் சதுர்புஜங்களும், சங்குசக்கிர அபயவரம் கைகளில் விளங்க கிரீடகுண்டல ஆரகேயூர கடககங்கண கவின்துவாதி யாபரணங்களோடு பராசத்தி சமேதராய், அஷ்ட சத்திகளாகிய பிரவிர்த்தி, நிவர்த்தி, இச்சா, கிரியா, ஞான, தயா, க்ஷமா, ஆநந்தமென்னும் எண்மர் ஏவல்செய்ய அக்ஷயகாலம் ஆநந்தமுள்ள நித்திய முத்தர்க்கு போக போக்கியனு யிருப்பதுந் தவிர, சகலலோக மாதாவாகிய மகாலக்ஷ்மிக்கு பிர்மமென்றும் அந்த பிர்மத்திற்கதிபதியாதலால் பரப்பிரம்மமென்றும் அவர்க்குக் காரணப் பெயர் உண்டாயிற்று.

(சிற்றின்பம்) அல்லது லீலாவிபூதி.

ஜீவர்களது குணங்களை யொட்டா திருத்தலால் அகடித கடனு சமர்த்தனென்போன் மாயா சத்தியைத் தன் கைவசங் கொண்டு அந்த பரமேசுரனே விளையாட்டிற்காகத் தோன்றி யழியும் பிரமாண்டங்களை கால சத்தியால் ஆக்கியழித்தலால் மாய னென்றும் ஒவ்வொரு ஜீவரிடத்திலும் அறிவுக்கறிவாய் விளங்குவதால் ஆத்மா வென்றும் அறிவுமயமாகிய ஜீவர்களாய் விளங்கி தேகங்களை நடத்துவதால்புத்தியென்றும்மனோமயமாகியமுக்குணங்களாலேற்பட்ட இருபத்துநாலு தத்துவக்கூட்ட மடங்கிய தேகமானதால் மனமென்றும் இந்த ஆத்ம புத்தி மனசுக்கள் சேர்ந்து ஒருருவாகிய அண்டபிண்ட படிவானதால் பிரணவ சொரூபி யென்றும பல்லாயிரங்கோடி பிரமாண்டங்களிலும் உள்ளும் புறமும் ஆகாயரூபமாய் வியாபித்திருத்தலால் பரமாகாய வடிவனென்றும், எங்கும் தானாய் விளங்கலால், விஷ்ணு வென்றும் இவ்வுலகங்க ளிவராலேற்பட்ட படியால் வாசுதேவ குடும்பமெனப் பெயருண்டாயிற்று.

ஆறு குணங்களையுடைய வாசுதேவர் சக்கிரவர்த்தி
பல பிரமாண்டங்களும் மாயா சத்தியம்ஸம்.
இவருக்கு மந்திரிகள் திருமூர்த்திகள்.



| பிரம்மா: | விஷ்ணு. | ருத்திரன் |
|---|---|---|
| பிரத்தியும்நர் | அனிருத்தர் | சங்காஷணர் |
| பூதேவி—சத்தி | ஸ்ரீதேவி—சத்தி | நீளாதேவி—சத்தி |
| ஐஸ்வரியம்-வீரியம் | சத்தியகீர்த்தி | ஞானம் வைராக்கியம் |
| இரண்டு குணங்கள் | இரண்டு குணங்கள் | இரண்டு குணங்கள் |
| சிருஷ்டி | இரக்ஷகத்வம் | தெண்டனை |
| விக்ஷேபசத்தி | சத்துவகுணம் | ஆவரண சக்தி |
| முக்கிய இராஜசகுணம் | முக்கியம் | தாமஸ குணம் |
| பகல்காலம் சிருஷ்டி | பிரமாண்டம் | கற்பகால - தெண்டனை |
| பிரம்மா | விஷ்ணு | ருத்திரன் |
| சரஸ்வதி சகாயம் | இலக்ஷ்மிசகாயம் | பார்வதி சகாயம் |
| மந்திரித்வம் | சக்கிரவர்த்தி | மந்திரித்வம் |
| சத்தியலோகம் | முத்தி க்ஷேத்திரம் | கைலாசம் |
| சித்திகள் உண்டு | காருண்யம் | சித்திகள் உண்டு |
| பரதந்திரம் | சுதந்தரம் | பரதந்திரம் |

இவையாவையும் படைத்த பரபிரமத்தை அந்தர் முகமாய் நோக்குகையில் அருவ உருவங்க ளற்றவரென்றும், பகிர்முகமாய் நோக்குகையில் ரூபமுடையவ ரென்றுஞ் சொல்லத் தகுமாம். அதெவ்வாறெனில், உலகத்தில் காணும் சிருஷ்டிகள் யாவும் அவரல்லாமல் இல்லையாகையால் அவைகள் அவரே யென்றும், அந்த சிருஷ்டி கர்த்தாவை ரூபில் காண நமக்குத் திடமில்லை யாகையால் அரூபி யென்றுஞ் சொல்லலாயிற்று. இப்பிரமம், ஆதி யந்தமும் அருவ உருவங்களும், குணங் குறிகளும் இல்லாதவராய் நிராமய நிஷ்கள வஸ்துவாயிருக்கின்றன ரென்பதற்கு,

யஜுர்வேதம் மூன்றுவது உபநிஷத்தில்


தஸ்யமத்யே வந்ஹிசிகா அணியோர்த் வாவ்ய வஸ்தித
ஓம் இத்தியே காக்ஷரம் ப்ரம் ஹவியா ஹாரங்:

இவ்விதமாயுள்ள பரப்பிரமமானது, ராஜச, தாமச, சாத்விக குணங்களினால் ஆதி மூர்த்தியும், இந்த ஏக மூர்த்தியினால், திரிமூர்த்திகளும் தோன்றின ரென்பதற்கு,

மச்ச புராணம்

குணேப்ய க்ஷோப்ய மாணேப்ய த்ரயோ தேவாபிஜக்ஞிரே
ஏக மூர்த்தித்ரயோ பாகா ப்ரம்மா விஷ்ணு மஹேஸ்வர:

## ஸ்ரீமகா விஷ்ணு ஸ்துதி.



ஆதி தேவனை ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் பிரபஞ்ச சிருஷ்டியின் பொருட்டுத் திருவுளத்திற் கருதிய மாத்திரத்தில் அந்த சங்கல்பத்தால் வேதத்தின் உறுப்புகள் செய்யுள் வடிவமாய்ச் சொற்றொடர் அமைந்தவையுமான சந்தசுக்கள் அவரது திருவாய் மலரினின்று வெளி வந்தன வென்பது இதன் கருத்து. வடமொழிப் பாஷையிலுள்ள வியாஸ பாரதத்தின் முதலில் "நாராயணம் நமஸ் கிருத்திய" என்று திருமாலின் திரு நாமம் கூறப்பட்டுள்ளமையும், அப் புருஷோத்தமனைப்பற்றி, "அப்பிரமே யாத்மா" என்றும். "ஆத்யம் புருஷம்" என்றும் ஸ்துதிக்கப் பட்டமையும், ஆதி முதல் மாயன் என்பதற்கும் திரு மூர்த்திகளுக்கும் மற்ற சிறு மூர்த்திகளுக்கும் முதல்வரானவர் திருமாலென்பதற்கு 'முதலாவார் மூவரே அம்மூவருள்ளும் முதலாவான் மூரி நீர் வண்ணன்' என்றும் கூறியுள்ளன மனுஸ்மிருதியிலும் நாராயணன் பரப் பிரம்மம் என்றும் அந்த ஸ்ரீயப்பதியையே முதன்மையாகக் கூறுவதுடன் சகல வேதாந்தங்களாகிய உபநிஷத்துக்களும் ஆதியந்தங்களில் ஹரி ஓம் என்றே ரட்டித்துப் பிரமாணப்படுத்தி உரைக்கின்றன. ஆதலின் இரக்ஷக ர்த்தாவாகிய மகா விஷ்ணு வென்பவர் சகல லோகாதிகாரணப் மும் ர்த்தி சொரூபமாய் தேவதா சக்கர வர்த்தியாய் பஞ்ச கிர்த்திபத்



தாணுவாய் சகலாண்ட கோடிகளையும் தமது கிருபா கடாக்ஷத்தால் பெத்தாத்மாக்களுக்கு உஜ்ஜீவிக்க வேண்டி தனுகரணபுவன போகங்களைக் கொடுத்து இரக்ஷிப்பவராய் வைகுந்த லோக வாசியாய் அவாப்த சமஸ்தகாமராய் ஜகத்ரக்ஷண தீக்ஷிதராய் அப்ராகிர்த திவ்ய மங்கள விக்ரக விலக்ஷண குணசாகரராய் மகா வைகுண்டமாகிய பரமபதத்தில் வீற்றிருப்பது போலவே சாமளவர்ணமுகம் சதுர்புஜம் பஞ்சாயுதம் ஆதிசேஷகருட விஸ்வக் சேனாதிபதியர்கள் புடைசூழ வேதங்கள் தேவ ரூபங்களெடுத்துத் துதிக்க ஆயிரம் பண மகுடங்களையுடைய ஆதிசேடன் தன் படத்தால் குடைகவிக்க சுத்த சத்துவப்பாயிலே விரித்து அவ் வநந்தாள் வாணுகிய சிம்மாஸனத்தில் வீற்றிருந்து ஸ்ரீபூ நீளாதேவிகள் சமேதராயரசு செலுத்துவர். அவ்வைகுண்டமானது முப்பத்திரண்டு லக்ஷம் யோசனை விஸ்தார முடையதும் சுத்த சத்துவகுண முடையதும் ஆகிய க்ஷீராப்தியின்கண் வடவாலிலையில் யோக நித்திரையும் செய்வார். கற்பாந்த காலத்தில் பிரளய ஜலத்தில் அண்ட சராசரங்களை யெல்லாம் தமது குட்சியில் அடக்கிக் காப்பவராய் சங்குசக்கரமேந்தி பீதாம்பரந் தரித்து துளவமும் கவுஸ்துவாபரணாதிகளும்தரித்து இலக்ஷுமி சமேதராய் உலகசிருஷ்டியாகிய யோகநித்திரையும் செய்வார் இவர் தமது உருவைச் சிறு குளவி போலாக்கிக்கொண்டு வலது காற் பெரு விரலைத் தமது திருவாயில் வைத்துக்கொண்டு பிரணவமாகிய ஓங்காரா க்ஷரரூபியாய் விளங்குவர் இவர் அநிருத்த திருமூர்த்தியி னமிஸம் பெற்று சத்தியம் கீர்த்தி இரண்டு திவ்ய குணங்களோடு விளங்குவர். இந்தப் பிரம்மாண்டத்திற்கு முத்திதரும் மூர்த்தி இவரே. இதற்கு,

திருமங்கையாழ்வார்

சேமம்குருகையோ செய்யதிருப்பாற் கடலோ
நாமம்பராங்குசனோ நாரணனோ—தாமம்
துளவோவகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெருமானுனக்கு.

இந்த வைகுண்டத்திற் சென்றவர்கள் மறுபடி பிரமாண்டத்திற் திரும்பி வந்து பிறப்பதில்லை யென்பதாம். இதற்கு,

பகவத்கீதை

செய்யார் முன் சார்ந்தவினை தீர்ந்த போதே
திசைமுகனுடைடைந் தோருந் திரும்பி மீள்வார்

மெய்யாக வெனெய்டையும் யோகிகண்டாய்
மீளாதநெறிபடைந்தான் வேறு கூறில்
ஐயாகேள் சதுர்யுகமீ ரைஞ்ஞூற்றுக் கோர் பகலா
மாண்டொருநூறு மவர்க்குமுள்ள
தெய்யாத விவருக்கோர் பகலிற்றேன்றி யிராவிறக்குந்
தன்மைத்தா மியோனி யெல்லாம்.

## பிரம்மஸ்துதி.



ஸ்ரீ மகாவிஷ்ணுவின் உந்திக் கமலத்திலுதித்தவராயும் சத்திய
லாகத்தில் வெண்டாமரை மலரில் வாசனுகியும் விளங்கும் பதும
பன் வீற்றிருக்கும் சபையானது சீதளம் உஷ்ணம் பசிதாகம்
த்திரை இவை யாவும் வேண்டுமானல் நினைத்தபோதே உண்டென
ம் வேண்டாதவர்க்கில்லை யெனும்படியாய்க் காட்டுகின்ற அம்மண்
மானது வஜ்ஜிரத்தூண்களாற் றங்கப்பட்டதுபோலிருந்தும் ஒன்
லும் தட்டுப்படாமல் நிற்கிறது. தவிர வேளைக்குவேளை பற்பல
ங்களாக மாறி விளங்கும் திறமுடையது. மனே வாக்குக் கெட்
த அச்சபையிலிருக்கிற நான்முகக் கடவுளானவர் அண்ட
வதசம் சராயுஜம் உத்பீஜம் மந்திராஜம் என்னும் ஐந்துவித சிருஷ்
ளை ஜீவர்களது கருமங்களுக்கேற்றபடி எழுவகைத் தோற்றம்
ன்பத்து நான்கு லக்ஷம் யோனி பேதங்களில் சிருஷ்டித்து சபஸ்



வதி சமேதராய் பிரத்தியும்நர் அமிஸம் பெற்று ஐஸ்வர்யம் வீரியம் இரண்டு திவ்ய குணங்களோடும் விளங்குவர்.

இன்னம் அப்பிரமசபையில் தக்ஷர் பிராசேதர் புலகர் மரீஷி காசி பர் பிருகு அத்திரி வசிஷ்டர் கௌதமர் பிரகலாதனர் கர்த்தமர் ஆங் கிரசு புலஸ்தியர் கிருது என்னப்பட்ட உபப்பிரம்மாக்களும் அதர் வாங்கிரசுக்கள் வாலகில்லியர் மகரிஷிகளும் மனம் அந்தரிக்ஷம் வித் தைகள் வாயு தேயு பூமி முதலானவைகளும் சத்தம் ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்கிற விடயங்களும் பிரகிருதியென்கிற காரணப் பொருள்களும், அகஸ்தியர் மார்க்கண்டேயர் ஜமதக்கினி சம்வர்த் தகர் சியவர் கலைக்கோட்டார் ஜனகர் ஜனந்தர் ஜனர்க் குமாரர் ஜனச்சுஜாதகர் முதலிய யோகிகளும், வியாசர் அசிதர் தேவலர் அயக்கிரீவர் இருக்குமியர் ஜிதசத்துருமணியென்கிற தபசி களும் இருப்பார்கள். இதன்றி பிரம்மாவின் முகத்தில் பிராம் மணர்களும், புஜத்தில் க்ஷத்திரியரும், தொடையில் வைசியரும், பாதத்தில் சூத்திரரும் பிறந்தார்கள். என்பதற்கு

### புருஷ சூக்தம்.

ப்ராம்மணோஸ்ய மு மாஸீத் பாஹூராஜன்ய : க்ருத:
ஊரு ததஸ்யயத்வைச்ய: பதப்யாக்ம் சூத்ரோ அஜாயத

இதன்றி எட்டங்கமாய் விளங்கும் ஆயுள்வேதமென்ற சங்கீத நூலும், தனுர் வேதமென்ற ஆயுத சாஸ்திரமும் அர்த்த தந்திர மென்ற நீதிநூலும், நான்கு வேதங்களும் வேதாகமங்களும் பதி னெண் புராணங்களும், தர்ம சாஸ்திரங்களும், இவையாவும் தேவ ரூபங் கொண்டவையாகவும், சூரியன் முதலிய நவக்கிரகங்களும், அசு வனி முதலிய நட்சத்திரங்களும் பிதுர்க்கணங்களும், மூர்த்திகரங் ளாகிய யாகங்களும் இரவு பகல் பக்ஷம் மாதம் அயனம் வருஷ யுகம் முதலான மூர்த்திகரங்களான காலங்களும் காலசக்கரம் தர் சக்கரம் தேவநாள் அசுரநாள் நாகநாள் முதலாக இவைகளின் மாச வருஷம் யுகங்களும் சகல லோக பாலர்களும் மநு முதலிய ராஜா களு மிருப்பார்கள். பிரம்மா வானவர் உலகவிருத்தியின் பொருட் முகம் புஜம் தொடை பாதம் இவைகளினின்று பிரம்ம க்ஷத்திரி வைசிய சூத்திரரென்னும் நான்கு வருணத்தாரை யுண்டுபண்ணினு ... யவைகளையும் உண்டுபண்ணினர். பின் மந்த லோகத்தில் கந்தர்வர்கள் அசுரர்கள் வித்தியாதரர்கள் கின்ன

கிம்புருடர்களும் பூமியில் மகாவிரதத்துடனே வேதமோதியவர்களும் மகா தேஜஸ் பொருந்திய அச்சபையில் சூழ்ந்திருக்க சந்தியை சாவித்திரி காயத்திரி சரஸ்வதி யென்கிற தேவிமாருடனே திவ்ய சிங்காசனத்தில் வேதகோஷங்கள் முழங்க தேஜோமயமாய் வெண்டாமரை மலர் வாசனாகிய சிருஷ்டிகர்த்தா வென்னும் நான்முகன் தண்டமும் பாசமும் பெற்று இந்தப் பிரம்மதண்டத்தைக் காத்தி லேத்தி எது நினைத்தாலும் உடனே சிருஷ்டிக்கும் படியாக அதிகாரம் பெற்றிருக்கிறார்.

பதினேழு லக்ஷத்து இருபத்தெட்டாயிரம் வருஷங்கள் கொண்டது கிரேதாயுகம், பன்னிரண்டு லக்ஷத்து தொண்ணூற்றாறாயிரம் வருஷங்கள் கொண்டது திரேதாயுகம், எட்டுலக்ஷத்து அறுபத்தி நாலாயிரம் வருஷங்கள் கொண்டது துவாபரயுகம், நாலு லக்ஷத்து முப்பத்திரண்டாயிரம் வருஷங்கள் கொண்டது கலியுகம். இந்நான்கு யுகங்களும் சேர்ந்தது மகாயுகம். இவ்வண்ணம் ஆயிரம் சதுர்யுகங்கள் கொண்டது பிரம்மாவுக்கு ஒரு பகற்காலம். இப்பகற்காலத்துக்குள் நால்வகை யோனி யெழுவகைத் தோற்றம் எண்பத்துநான்கு லக்ஷம் ஜீவபேதங்களும், பிரிதிவி முதலிய பஞ்சபூதங்களைக் கொண்டு படைப்பார். தவிர இந்தக் காலத்துக்குள் பதினான்கு தேவராஜாக்களுடைய வாழ்நாளும் அதிகாரமும் சம்பூர்ணமாம். அவருடைய மந்திரங்களும் சம்பூர்ணமாம். இவ்வளவு காலம் கூடியது ஓர் இரவு. இப்படி இரண்டாயிரம் சதுர்யுகங்கள் கொண்டது ஒரு நாள். இப்படி நூறுவருஷமானால் பிரம்மாவின் ஆயுள் முடியும். பிரமாண்டமும் அழியும், பிரம்மனுக்கு ஒரு நாளாகிய இரவில் நைமித்திய பிரளயமுண்டாம் இதற்கு.

## வீரசிங்காசன புராணம்.


[illegible]ருவத்தி லூழிவெள்ளப் புனல்பெருகப் பல்லுயிரும் பொன்றுமென்ற
[illegible]ாரணத்தான் மாயைமட்க் கடமொன்று செய்ததினன் காயதோற்றத்
[illegible]ாருமெழு விதத்தெண்பத்து நான்குநூறாயிரம் பேதத்தவாகிச்
[illegible]ாருமுயிர் தொகைகளமிழ்ந்திட வயனுன்மே ருச்சிதனில் வைப்பித்தேதம்.

அதனால் திரிலோகங்களும் தகிக்கப்பட்டு மறுதினம் முன்பால் சிருஷ்டிக்கப்படும். [illegible] பன்னிரண்டு மாதங்கொண்டது பிரம்மாவுக் கொருமாதம். இவ்விதம் [illegible] சதுர்யுகங்கள் கொண்டது. அல்லது ஏழுலக்ஷத் திருபதினாயிரம் சதுர்யுகங்கள் கொண்டது ஒருவருஷம் இப்படி நூறு வருஷங்கள் அல்லது ஏழுகோடியே இருபது லட்சம் சதுர்யுகங்கள் அல்லது ஐந்துலக்ஷத்து நாலாயிரம் தேவராஜாக்களும் மனுக்களினுடைய அதிகாரங்களும் ஆயுளும் முடிவானால் பிரம்மாவுக்கு நூறு வருஷம் சம்பூர்ணம். இவ்விதமாயுள்ள பிரம்ம கல்பமானது விஷ்ணுவுக்கு ஒரு நிமைப்பொழுதாம் * இப்போதுள்ள பிரம்மாவுக்கு ஐம்பது வருஷங்கள் முடிந்தபடியால் இன்னம் ஐம்பது வருஷங்கள் கழிந்த பின் இவரது பட்டத்துக்கு தற்போது தயாராயிருக்கும் ஆஞ்சநேயர் வருவார். இப்போது பிரம்மாவுக்கு பகலில் மத்தியான காலம் அதாவது காலை முதற்கொண்டு மத்திய பகலாகிய இதுவரை (1) வது சுவாயம்பு மனு, (2) ஸ்வாரோஷி மனு, (3) உத்தம மனு, (4) தாமசமனு, (5) ரைவதமனு (6) சாக்ஷூமனு (7) வதாகிய இப்போது நடக்கும் வைவஸ்மத மனுவந்தரம்; இதில் 28 சதுர்யுகங்கள் சென்றன. இன்னமும் 43 சதுர்யுகங்கள் சென்றால் இம்மனுவந்தரம் முடிவுபெறும். இனி நடக்கப்போகும் மனுக்களாவார் 8-வது சாவர்ணிமனு, (9) தக்ஷசாவர்ணி மனு (10) பிரம்மசாவர்ணிமனு, (11) தர்மசாவர்ணிமனு, (12) ருத்திரசாவர்ணி மனு, (13) ரவுச்சிய மனு (14) பவுமன்மனு இவ்விதமாகவே ஒவ்வொரு மனுவின் காலம் எழுபத்தொரு மகாயுகங்களாகும். ஒவ்வொரு மனுவந்திரத்திலும் வெவ்வேறு வேதவியாசர்கள் தோன்றி வேதங்களை விரிப்பார்கள். மனுக்கள் ஸ்மிருதிகளை யேற்படுத்துவார்களாம்.



## பிரம்மாண்டப் பகுதி.

| | | |
|---|---|---|
| மானசிக லோகங்கள் | 3 · 4 | (புத்தி லோகங்கள்) |
| சுவர்க்கம் | | சத்திய லோகம் |
| புவன லோகம் | | தபோலோகம் |
| பூலோகம் | | மகாலோகம் |
| | | ஜனோலோகம் |



திருக்கைலாய கிரியில் பன்மணிகளும் சமைந்த பொற்சபா
ண்டபத்தில் அரதனமய சிங்காசனத்தில் புலித்தோலுடையும்
ானைத் தோற் போர்வையும் கொன்றை மாலையும் முப்புரி நூலும்
நேக பிரம்மர்களது கபாலங்களை மாலையாகத்தரித்தும் தாருகாவன
ஷிகள் விட்ட மழுமான் முதலியவற்றை ஆயுதங்களாகவும் திரி
லத்தைத் தனக்கு முக்கியமான சஸ்திரமாகக் கைக் கொண்டும்
ரு கையிலுடுக்கையும் ஒரு கையில் கண்ட கோடாலியும் ஒரு
கையில் ஜெபமாலையு[illegible] ரு நீறணிந்த திருமேனியும்
பந்த வர்ணமும் பொன்னிறச் சடை முடியும்
சர்ப்பா பரணங்களும் பூண்டவராய் சோம சூரியாக்கினி யென்



னும் முக்கண்ணுடையவராய் ஐந்து முகங்களும் எட்டுக் கைகளும்
வீரகண்டாமணி தரித்த பாதமும் பாத நாட்டியமாடும் சிலம் பணிந்த
பாதங்களும் வாம பாகத்தில் பர்வதராஜகுமாரியாகிய பார்வதிதேவி
சமேதராய் வீற்றிருக்கவும் நந்திகேசுரர் கட்டியங் கூற நாரதர் தும்
புரு பிருங்கி வியாக்கிரம பாதர் முதலிய சிவ கணங்கள் தோத்தி
ரம் புரிய மார்க்கண்டர் முதலிய ரிஷிகணங்கள் மங்களாசா சனம்
சொல்ல கால வைரவர் முதலிய பதினொரு கோடி ருத்திர கணங்கள்
புடை சூழவும் யானை முகக்கடவுள் அறுமுகக் கடவுள் இரு மருங்
கிலுமிருந்து பல்லாண்டு கூறவும் சங்கக் குழைகள் துதையவும்
இரு செவிகளிலும் குண்டலங்கள் பிரகாசிக்கவும், திரு நீலகண்டஞ்
செரியிருள் பரப்பவும் உபவீதம் இடையிற்றுன்னவும் செழுமறை
கள் கோஷிக்கவும் வெண்பட்டும் அரைஞாணி லங்கவும் துஷ்ட சம்
மார கர்த்தாவாய் அதிகார முத்திரை தரித்து ஞான வைராக்கியங்
களாகிய இரண்டு திவ்ய குணங்களோடு வீற்றிருப்பர்: இதற்கு
சுருதி,

கச்சிமாலை

கூவிள மாலையுங் கொன்றையுந் தும்பையுங் கூருகு
மாவ லொடு மெடுத்தங்கங் குழைந்து மான் பெயரா
நாவினிற் ருேத்திரஞ் சொல்லி நலந்தெரி ஞானிகளுக்
கேவல் செய்தாலன்றி முத்திகொடான் கச்சியேகம்பனே

சிவ பெருமானுக்குச் சோம சூரியாக்னி யென்னும் திரிநே
திரங்களுடைமையைப் பற்றி "கண்களே வொன்று காலையி
காணும், மாலையிலொன்று வயங்கித்தோனும், பழிப்பினென்.
விழிப்பி னெரியும்" எனச் சிவப்பிரகாச ஸ்வாமிகள் கூறியுள
போல காலகண்டன், சங்கரன், சம்பு, சதாசிவன், திரி நயன
திரிபுரதகனன், திரியம்பகன், திருக்கோவணன், திரி சூலபாண
திகம்பரன், நதிமதி சூடி, அம்பலத்தாடி யெனப் பற்பல காரண
பெயர்கள் பெற்று அஷ்ட மூர்த்தமாய் விளங்கும் உமாமகேஸ்
ரானவர் கங்கையைச் சடையிற்றரித்தும், தக்ஷனற் சாபம் பெ
சந்திரனைச் சடையிற் சூடியும் [illegible] பத்தினிமாரைப்
[illegible] மசயந்தவரும் பிரம்மாவினுடைய ஐந்து சிரங்களிலொன்
நகத்தாற் கிள்ளியவருமாகிய பரமேட்டியானவர் புலித்தோலு
யும் யானைத் தோற் போர்வையும் மானும் மழுவுமேந்திய கரங்

டன் பூத கணங்களும் சிவ கணங்களும் சூழ நந்தி வாயில் காக்க வீற்றிருப்பா ரென்பதற்கு)

### சிவவாக்கியர் பாடல்

இடது கண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூல மான் மழு
எடுத்த பாதம் நீண்முடி எண்டிசைக்குமப்புறம்
உடல் கடந்து நின்ற மாயம் யாவர்காண வல்லரோ

இஃதன்றி கபாலமேந்தி மான்றோலைப் போர்த்தும் திருப்பாற் கடலில் மந்தர கிரியை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும், சந்தி ரனை அடை தூணாகவும் சேர்த்து தேவர்கள் ஒரு புறமும் அசுரர் மறுபுறமும் இருந்து அமுதங்கடையும் போது அது அளவுக்கு மிஞ்சினதால் வாசுகி விஷத்தைக் கக்கவே அமுதமும் விஷமாக மாறிட அதை யுண்டு நீலகண்டனென்றும், பிரம்மனது சிரத்தைக் கொய்த படியாற் பிரம்மஹத்தி பிடித்து அந்த பிரம்ம கபாலங்கையி லொட்டிக் கொள்ளவும் அதையே பாத்திரமாக வேந்தியும், மாணிக் கம் விற்கச் செட்டியாகவும், வைகையடைக்க ஒட்டனாகவும், எல்லாம் வல்ல சித்தனாகவும், கௌரி யென்பவளுக்கு விருத்தவேதியரா யும், விறகு சுமந்து வில்லியர் போலும், மாமனாக வந்து தவசி போலும், அரசாள மன்னனாகவும், சிரகிரியில் மருத்து வச்சிபோலும், ன்றிக் குட்டிகளுக்குத் தாய்போலும், தமிழ்ச்சங்கத்தில் புலவர் போலும் பிரம்மா—விஷ்ணு இவர்களுக்கு மலையாகவும், சிறுத் தொண்டருக்கும் வல்லாளருக்கும் ஜங்கமராகவும், தாருகாவனத் வதியையப் போலும், இலிங்க சொரூபியாகவும், மார்க்கண்ட முனிவருக்காக எமனை உதைத்தவருமான கால காலன் இவர்சங் ஷண மூர்த்தியினன்சம் பெற்று பெத்தாத்மாக்களைப் பாவங்களுக் க் தக்கவாறு தெண்டிப்பார்.

### திரிபுரதகனம்

ஆதியில் தாருகாசுரன் தனயர்களாகிய தாரகாட்சன், கமலாட் ர, வித்தியுன் மாலி என்பவர்கள் பூமியிலிருப்புமதிலும் அந்தரத் தி வெள்ளிமதிலும், சுவர்க்கத்திற் பொன்மதிலும் சிருஷ்டித்து முப் மெனப்பெயர் கொடுத்து சகல லோகங்களிலும் [illegible] க்கண்புரிந்துவர மூர்த்திகள் யோசனை செய்து துஷ்ட சம்மாரத் காகச் சங்கரரை தேவ அவர் தேவர்களுடையவும் உலகங்களுடை




யவும் சமஸ்தமான பலத்தையும் ஒன்றாகக் கூட்டிச் சண்டைக்கு ஏற்பாடு செய்தால் மாத்திரம் வெற்றி பெறத் தடையிராதென்று யோசனை சொல்லவும், விஷ்ணு சதுர்முகன் இந்திராதி லோகேசர்கள் சம்மதித்து பிரம்மதேவரைக் கொண்டு இரதம் நிர்மாணம் செய்ய வேற்படுத்தவும் அவர் மந்திர கேசரிமலையை அச்சாகவும், சந்திர சூரியர்கள் சக்கரங்களாகவும், இருதுக்கள் சந்திகளாகவும், நட்சத் திரங்கள் விதானமாகவும், பதினான்கு லோகங்கள் பதினான்கு தட்டு களாகவும், நதிகள் கொடியாகவும், மோக்ஷலோகம் மேல் விரிவாக வும், மரங்கள் சட்டங்களாகவும், அஷ்டபர்வதங்கள் தூண்களாக வும், திக்கஜங்கள் இடைபிற்றாங்கவும், சத்தசாகரங்கள் திரைச்சீலை களாகவும், புராணங்கள் சாஸ்திரங்கள், வேதாங்கங்கள் இவைகள் மணிகளாகவும், நான்கு வேதங்கள் நான்கு புரவிகளாகவும், வேதன் சாரதியாகவும், மேருமலை வில்லாகவும் வாசுகி நாணியாகவும் விஷ்ணு அம்பாகவும், சரஸ்வதி அவ்வம்பிற்கட்டிய மணியாகவம் அக்கினிதேவன் அம்புக்குக் கூராகவும், வாய்வுதேவன் அம்பில் கட் டிய இறகுபோலும் இவ்விதமாய் ஏற்படுத்தி சங்கரபகவான் அதி லிருந்து யுத்தம் செய்து முப்புரங்களை யெரித்தா ரென்பதற்கு,

### இராமசாமி கவிராயர்

தன்மனை இரதமாகித் தன்மகன் வலவனாகித்
தன்மகன் பேரனோடு தனக்குமைத்துனர் களாக்கித்
தன்னனை நாரியாக்கித் தானுமோ ரம்புமாதுன்
தன்மன மிடங்கொண்டுய்த்த சங்கரன் றனக்குமாயன்.

முற்றிற்று.

ஸ்ரீ காமாக்ஷியம்மன் துணை



# நூல்.

## யாக க்ஷத்திரிய குலப்பிரகாசிகை.

### விநாயகர் காப்பு.

நீராருங் கங்கைபுனை நிமலரருள் மைந்தனை
சீராருங் குஞ்சரத்தின் திருமுகத்தாட்—பேராரும்
மகத்துதித்த மன்னவர்கள் வன் புகழை நன் றுரைத்து
இகத்து சித்தி முத்தி யெனக்கீ.



### இலக்ஷ்மி ஸ்துதி

காரணனார் தம்மூரத்தில் பூரணமாய் வீற்றிருக்கும்
ஆரணனை யீன்றெடுத்த அன்னையரே—தாரணியில்
சாது குலமன்னரது தம்புகழை யோதுவித்து
பாதுகை தந்தாட் கொளவே பார்.

### சரஸ்வதி ஸ்துதி

சத்தியமுங் கீர்த்தி சதாசார முடை யாக
சத்திரியர் தம்பெருமை சாற்றுவித்து—நித்தியமும்
நாமகளே என்றனது நாவிலிருந் தன்பாக
தீவினைகள் தீர்க்க வருட் செய்

### காமாக்ஷியம்மன் ஸ்துதி

தூமாட்சி யுடையவராய்த் தொண்டைநாடாண்ட மன்னர்
தேமாட்சி நிறைசோலைக் காஞ்சிக் காமாக்ஷீ
நின்னருளால் மும்முடியும் கோகப் பெற்றன்றோ
இன்னிசையுங் கொண்ட வியல்பே

### மூர்த்திகள் ஸ்துதி

விருத்தம்.

சீர்நிறைந்திடு செல்வி கலை வாணிநீமுறு
தெய்வ காமாக்ஷி யருளால்
சார்புனைந்திடு தெலுங்கராசரது சரிதையைத்
தமிழினு லோதுதற்குப்
பேர்சிறந்திடுமாலு மயனாரனு மமரரும்
திவ்யகுண கணநாதரும்
நேர்மையா யெனது பங்கிலிருந்திந் நூலை
நிலைபெறச் செய்யமாதோ.

### ஸ்ரீ சடகோபமுனீந்திரர் ஸ்துதி.

மருக்கமழுங் கமலையருள் மாநிலத்தோர் வாய்ந்துய்ய
உருக்கமுடை யிந்நூலை யோதுதற்குத்—திருக்குருகூ
ராழ்வாரடியா ரவரடியார் தம்மடியைத்
தாழ்வார் சரணென் றலை.

### அவையடக்கம்.

அருமறையின் பொருடெரியும் ஆன்றோரே யிந்நூலில்
உரிமையிலாச் சில பிழைகளுண்டாகிற்—பெருமிதமாய்
குணங்களையே கொண்டதற்குட் கூறு பொருணன்குணர
வணங்குகிறேன் மாணடியை மகிழ்ந்து.

# முதல் அத்தியாயம்.

## ரிஷீஸ்வரர்கள் கோஷ்டிப்பிரபாவம்

ஸ்ரீ ஆரியமுனிவர் நித்தியப்படி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தமது மான்தோலாசனத்தில் * பதுமாசனமிட்டு அமர்ந்திருக்கையில் அவரைப் புடைசூழ மின்னலைப்பழிக்கும்பொன்னொளி விளங்க தண்டு கமண்டலம் காவி காவாம்பர மணிந்திகாநின்ற ரிஷி சிரேஷ்டர்களும், எழுந்தருளி யிருக்கையில் அக்கோஷ்டியிலிரா னின்ற திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவர் எழுந்து தண்டஞ் சமர்ப்பித்து திருவடிகளில் வணங்கிநின்று, பெருமையுங் கிருபையும் பொருந்திய ஆரியமுனிவரே, இதுகாறும் மகத்துவம் தங்கிய ஆசார சீலங்களும் சகல வேதங்களும் சகல வேதாகமங்களும் சிருஷ்டி கிரமம் முதல்கொண்டு எல்லா மனுவந்தரங்களிலும் அரசாண்ட க்ஷத்திரிய வம்ஸங்கள் யாவற்றையு மருளிச்செய்தீர். அவையாவும்

* பதுமாசனம்போல் இன்னும்பலவித ஆசனங்களிருக்கின்றன. அவற்றில் வலத்தொடையுள் இடப்புறங் காலை வைப்பது வீராதன மென்பதாம். "இதற்கு, அன்றியே வீராதனமும் பாங்காயிடக்கா—லென்றொடை மேலொன்றைச் செறி" என சைவ சமயநெறித் திருக்குறளிலும் கூறியிருக்கின்றன. இன்னம் பதுமாசனம் ஜெபத்துக்கு விசேஷமெனக் கூறுகின்றன. அவையாதெனில்

### காசி காண்டம்

வலக்குறங்கதனி லிடப்பதமேற்றி வலப்பதமிடக்குறங் கேற்றல்
சொலத்தகுங் கமலவாசனமதனிற் பின்னதாய்த் துணைக்காமாற்றி
கலத்தகுதாளிற் பெருவிரல்பிடித்தல் பெற்றபத்மாசன மவிலி
லுலப்பிலாசனங்களுள வற்றியைந்த வாசனத்திருத்தலே யுரித்தாம்

### உருத்திராக்க விசிட்டம்

இருக்குமிதுதன்னை வீராதன மென்றே
யுரைக்குமிய லிவ்வாதனத்தூற்—றுருச்சிக்க
வாதியடி தன்னைச் செபிப்பது மாதனமு
நீதியெனவே நினையாய் நீ.



கர்ணாமிர்தமாகக் கேட்டு ஆனந்தமடைந்தோம். பிரிதிவீச்சுரனென்னும் ஓர்க்ஷத்திரிய வம்ஸம் உண்டென்று முன்னங்கூறினீரே, அதை விரித்துக்கேட்க ஆவலுற்றோமென நாரதர் கூறவே, சந்தோஷத்துடன் அவ்வாரியமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

கேளும், சர்வக்யானியாகிய நாரதமுனிவரே ! இங்குற்ற யாவரும் அவாமேற்கொண்டு அன்னவர்கள் அனுமதியால் நீர் வினவிய யாக க்ஷத்திரிய வம்ஸம் பூர்ணமாய்ச் சொல்லப்புகின் நீண்டு விரிவாகும். அன்றி இதைச்சிவர்கள் அறிந்துய்யும் பொருட்டேசொல்லுவதாகும். ஆனதுபற்றி ஒருவாறாகச் சொல்வதைக் கவனித்துக் கேட்பீர்களென்று கூறலாயினர்.

### A. பிரம்மா சபை

விருத்தம்.

சகல உலகும் பல்லாயிரக் கோடியண்டமெலாஞ்
சமைத்தவற்றுள்
மிகவுரு மசராசர உயிர் வர்க்க முதல்வனும்
வேதா ஓர்நாள்
தகவுரு வெண்மரை மலர் வாழ் சரஸ்வதியோடா விந்தா
தனத்தின் மீதிற்
புகலுமன மகிழ்வொ டெழுந்தருளினன் சதுர்வேதப்
பொருளினனே

### தேவர்கள் முறையிடல்.

கேளும் நாரத முனிவரே சத்தியலோகன் தனது தேவி யாகிய சரஸ்வதியுடன் சபா மண்டபத்தில் சிம்மாஸனத்தில் வீற்றிருக்கையில் இந்திரன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும் அசுரர்களால் உபத்திரவத்தை யடைந்து அவ்வசுரரை ஜெயிக்கத்தங்களால் இயன்ற மட்டும் முயற்சி செய்தும் தினேதினே கஷ்டம் அதிகரித்து சகிக்கச் சக்தியற்றவர்களாய் அதை நிவர்த்தி செய்துக் கொள்ளும் பொருட்டு யாவரும் ஒருங்கு கூடி சத்திய லோகம்போய்ச் சதுர்முகனுடைய உபய பாதங்களில் தாழ்ந்து வணங்கி தமது குறைகளைப் பலவாறு விரித்துக் கூறி, தற்சமயம் தேவரீர் எங்களை ஆதரிக்காவிடில் எமதுலகமும் பெருமையும் அரசும் நாமதேயமும் இன்றோடழிந்து போமென்று இரண்டு கண்களிலும் நீர் தாரை தாரையாய்ப் பெருக, சிரமேற் கரங் கூப்பி மனமுருகி ஸ்தௌத்யம் செய்கையில்

இரணியகர்ப்பன் இவ்வாறு தாபத்திரயம் படும் தேவர்களை நோக்கி யாம் யாவர்களும் ஈஸ்வரரிடம் ஆலோசிப்போமென்று கைலாசம் சென்றார்கள்.

இவ்விதமாய் பிரமனுடன் தேவர்கள் யாவரும் போய்த்தங்களது குறைகள்யாவையும் கூறவே இவையாவையும் தெரிந்த அரனார் இரணிய கர்ப்பனை நோக்கி கேளும் பிரமதேவனே அக்கொடியவசுரர்களை ஜெயித்து தேவர்களின் துயர் தீரச் செய்விக்க வேண்டிய காரிய முளது. யாதெனில் ஓர்யாகம் செய்வீரானால் அந்தயாகத்தில் நாம் நம் அமிசத்தால் ஓர் மகா புருஷனை உற்பவிப்போமென்றும், அன்னவனால் தேவர்கள் துயர் தீருமென்றுங் கூறினர். பின்னர் யாவரும் சத்திய லோகம்போய் பிரமனால் வேதாகம விதிப்படி ஓர் யாகம் இயற்றினார் என்று ஆரிய முனிவர் கூறினார்.

A. விருத்தம்.—

தருமனெனுஞ் சுவாயம்பு மனுக்காலத்தில்
சகத்திவந்தகா சூரனாற் றுன்பமுற்ற
இருடிகள் வானவ ரயன் பாலபயங்கூற
வீஸ்வரன் பாலயன் முதலோர் சென்றியம்பப்
பிரமநீ கங்கையின் மகமொன்றியற்றில் யாமும்
பிரிதிவிம்பிப் போமென்ன வயனவ்வாறே
திரமுடனோர் மகம் புரியவரனவற்றிற்
சிறந்திட்டா னொருமனுவாய்ப் பிறந்திட்டானே.

## பிரிதி வீச்சுரன் உற்பத்தி.

கேட்பீர் நாரத முனிவரே இவ்வாறு கமலாசனன் (தீர க்ஷத்திரிய) யாகமொன்று விதிப்படி செய்யவே அந்த யாகாக்கினியினின்றும் அதி வீரதீரகாத்திரத்துடன் விகாரமில்லாதவனாய், சுத்தனாய் எப்போதும் மாறாத சுபாவமுள்ள திவ்ய மங்கள விக்கிரஜோதிமயமாயுள்ள ஓர் மகாபுருடன் ஈஸ்வர அமிசத்தால் ஆறுமுகக் கடவுளுக்கிணையாக, அசுரர்களுக்குக்காலனையும், தேவர்களுக்கு மித்திரனையும், மானிடர்க்கு அரசனையும் உற்பவித்தான். அவ்வீரன்பிரமனை வணங்கித்தோத்திரம் செய்து அடியேனுக்குத் தேவரீர் திருப்பணி கட்டளையிட்டருள வேண்டுமென்று நிற்கவே, அதற்கு நான் முகனார் கூறுவார். ஓ தேவர்களே இதோ இவ்வக்னியினுற்பவித்த இம் மகா புருஷன் சகல உலகங்களையும் இரக்ஷிக்கும் வல்லமையுள்ள



இறைவனானதால் இன்னவனுக்கு, பிரிதி வீச்சுரனென்னும் நாமதேயத்தைச் சாதித்தோம். இனி உங்களுடைய கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைவீர்களென்று கூறினார்.

பின்னும் யாகத்திலுதித்த மகா புருடனைப் பார்த்து, பிரிதி வீச்சுரனே இம்மூவுலகையும் வருத்துகின்ற இரணிபாக்கன் புதல்வன். அந்தகாசூரனையும் அவனது சேனைகளையும் அதம் செய்யும் வண்ணமே யும்மை உற்பவிக்கச் செய்தோம். அன்னவன் சுக்ராச்சாரியாரனுக்கிரகத்தால் அருந்தவம் செய்து ஈசனால் பெற்ற வரத்தினால் தனக்கு மரண முண்டாக வேணுமென்றால் தேவர், அசுரர், நாகர், மானிடர் மற்ற யாவராயிருக்கினும், மது மாம்சமருந்தாத சதாசார வம்சஸ்தர்களால் தனதுயிர் நீங்க வேண்டுமேயொழிய மற்றவர்களால் தனக்கு ஒரு தீங்கும் நேரிடாதபடிக்கு வரம் பெற்றிருந்தனையால் உம்முடைய வமிசம் உலகில் விளங்கவும் அவ்வரக்கனை அதம் செய்யவும் உம்மை உற்பவிக்கச் செய்தோம். உமது வமிசம் பரம்பரையாய் விளங்க அவ்வரக்கனை வதஞ்செய்து கீர்த்தியடைவீரென்று வரங்கொடுத்து ஆசீர்வதித்தார்.



பிரிதிவீச்சுரன் வரம்பெற்றது.

இவை யாவும் முற்றுங் கேட்ட இம்மஹானுபாவன் சுவாமி தேவரீர் கிருபை அடியேன்பேரில் பூர்ணமாய் இருக்கும்பட்சத்தில் இதோ ஒரு நொடியில் அவ்வசுரனையும் அவனைச் சார்ந்தவர்களையும்

அகம் செய்து இவர்கள் துயர் நீக்குகிறேனென்று திசைமுகன் பாதத்தில் தீர்க்க தெண்டன் சமர்ப்பித்து அவரால், கொடுக்கப்பட்ட வில், அம்பு, வேல், வாள், முதலிய முப்பத்திரண்டு ஆயுதங்களும் அம்புறாத்தூணியும், விருதுகளும் பெற்றுக்கொண்டு யுத்தசன்னத்தராய் தேவர்களுடன் கூடி பதுமநாபனிடம் விடை பெற்றுக்கொண்டு செல்ல ஆரம்பித்தான்.

A. சந்த விருத்தம்.

வந்தபுருடன் அயன்முனின் றெனையழைத்ததை
　　வரைந்தருளு கென்ற பொழுதே
இந்திரர் வயிரவர்கள் சதுரங்க தளமும்படைகள்
　　யாவுமீந்திக் கணஞ்செசன்
றந்தகனெனும் நிருதன் நைந்துவிழ வென்றுலகர்
　　தந்துய ரகற்றிடுகென
அந்தரநடுங்க விவன்வந்தவ் வசுரனோ
　　டடர்ந்தமர் தொடங்கினனரோ.

## தேவசைன்யம்.

இம்மகாபுருஷன் தேவர் சைன்னியங்களுடன் மாதலியால்நடாத்தும் இந்திரனுடைய நவரத்னகஜிதமான ரதத்திலாரோகணித்து வெற்றிச் சங்கம் பூரித்து பூலோகத்தினிடமாய் அந்தகாசூரனைக் கொல்ல நாடிவருகையில் அவனைச் சூழ்ந்து வரும் தேவசைன்னியத்தைப்பார்த்தால் எவ்விதம் விளங்கினதெனில் சூரிய குல வமிசத்தில் இக்ஷுவாகு ராஜன் பேரனை புரஞ்சையன் தேவராஜனையே வாகனமாகக்கொண்டு தேவசைன்னியங்களாகிய நால்வகைச் சேனைகளும் தன்னைப் புடைசூழப்புறப்பட்டுப்போய் அசுரனை யுத்தத்தில் ஜெயித்ததை யொத்திருந்ததாம் (அந்தகனென்னும் சூரனை வதைக்கப் புறப்பட்டது) இதற்கு.

### கம்பராமாயணம்

தான்றனக்கு வெலற் கரிய தானவரைத் தலைதுமித்தென்
வான் நகரைக்காக்கவென்று குறை யிரப்ப வரங் கொடுத்தாங்
கேன்றெடுத்த சிலையினனுயிகல் புரிந்த விஙர் குலத்தோர்
தோன்றலைப் புண்டிந்திரன் காண்விடை யேறாய்ச் சுமந்தானும்



## அசுர சைன்யம்.

இவ்விதமாய் தேவர்கள் பட்சமாய் இருந்து அசுரரை ஜெயித்தவர்சர்கள் அனந்தமிருக்கினும் அன்னவர்களில் ஒருவராகிய முசுகுந்தச்சக்கரவர்த்தியை ஓர்சமயம் தேவர்கள் வேண்டி ஆறுமுகக்கடவுள் தேவசேனாதிபதியாய் வருமளவும் அசுரரைத் தடுத்துப் பொன்னுலகைக் காப்பாற்றினர். அவைபோல்,

இம்மகாபுருஷன் தேவசைன்னியங்களுடன் [illegible] ளுதிகள் அந்தகாசூரனிடம் பிரிதிவீச்சுரன் தேவசைன்னியங்களுடன் யுத்தத்துக்கு வருகிறானென்று கூறவே இவையாவும் கேட்ட சூரன் புன்சிரிப்புக் கொண்டவனாய் ஓ அமைச்சர்களே பார்த்தீர்களா நேற்றையதினம் பிரமன் உய்த்துணராமற் செய்த யாகத்தில் பிறந்த ஓர் பையலானவன் நம்முடைய தீரபராக்ரமத்தையும் சேனைசைன்னியங்களையும் கிஞ்சிற்றும் யோசியாமல் விவேகசூன்யரான தேவர்களுடைய தௌத்திய வேண்டுகோளுக்கிணங்கி சேர்வங்கொண்டு நம்மிடம் இன்றைக்கு யுத்தத்துக்குவரலாயினன். ஆகையால் இச்சங்கதியாவுங் கேள்வியுற்றும் அவன் வருமளவும் நாம் தாமதித்திங்கிருப்போமானால் கீர்த்திக்கும் வீரத்திற்கும் பழிப்பாமன்றோ? ஆனதுபற்றி நாம் முன்னமே எதிரில் செல்ல வேண்டியதாகையால் நம் சேனைகளைச் சீக்கிரம் சித்தப்படுத்தென்று அதிக கோபாவேசனாய் இடியிடித்ததுபோல் கட்டளை யிட்டான்.

இவை கேட்ட யாவரும் மறுமொழி கூறாமல் யுத்தசன்னத்தர்களாய்ப் புறப்பட அந்தகாசூரன் ஐயாயிரவெள்ளம் சேனைசைன்னியங்களும் புடைசூழ யுத்தகோலத்துடன் தான்வருந்தித் தவத்தாற்பெற்ற அஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு, மேருவையொத்த ஒரு பெரிய வில்லைக் கரத்திலேந்தி மூவுலகங்களும் திடுக்கிட சிங்கங்கள் பூட்டிய தமதுரதத்திலாரோகணித்து எழுகடலும் ஒருங்குகூடி வந்தது போல் யுத்தவாத்திய கோஷ்டியுடன் தேவர்சைன்னியங்களுக்கெதிராக வந்து சேர்ந்தான்.

## அந்தகாசுரன் யுத்தம்.

கேட்பீர் நாரதமுனிவரே இவ்வசுர சேனைகளைக் கண்ட தேவர்கள் மெய்மறந்து காப்புலர்ந்து நடுநடுங்கி ஓடோடியும் வந்து தமதிறைவனிடத்தில்முறையிடுகிறார்கள். ஓ தேவனே கொடியனாகிய அந்த

காசுரன் நாம் போவதற்கு முன்னமே கங்கு கரை காணாத சேனைகளுடன் நம்மை நாடி வந்திருக்கிறான். தேவரீர் இதுசமயம் இவனைத் தொலைத்து எங்களை யிரட்சிக்க வேண்டுமென்றார்கள். இப்படிக் கூறுவதன் முன்னமே, பிரதிவீச்சுரன் சிங்கநாதஞ் செய்து பிர்மாண்டகாரமான தனது வில்லை யெடுத்து நிறுத்தி வளைத்து நாணிபூட்டி அண்டங் குலைய ஆகாணபரியந்த மிழுத்து எண்ணிறந்த பாணங்களைப் பிரயோகம் செய்து அசுர சேனைகளைச் சின்னபின்னப் படுத்தினான்.

இது தெரிந்த அந்தகாசூரனானவன் தனது தேரை நடாத்திக் கொண்டு வந்து பிரிதிவீச்சுரன் முன் நிறுத்திக் கூறுகிறான். அடா சிறுபயலே? கையிலாகாத சிலரைக் கொன்று விட்டோமென்று வீணே துள்ளுகிறாய், உன்னுடைய கர்வத்தை இதோ ஒரு நொடியில் பங்கப்படுத்துகிறேன், வில்லில் அம்பு பூட்டினேன், இந்தப் பேதையாகியதேவர்களின் வார்த்தையைக் கேட்டு உன்வாணாளை வீணே இழக்கப் போகிறாய், என்று கண்களில் அக்நிப் பொறிகள் பறக்க, அடா சரம் தொடுத்தேன் உன்மேல் விடுத்தேனென்று அளவிறந்தநாராச பாணங்களைக் கரவேக சரவேகத்துடன், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம், லட்சம், பத்துலட்சம். கோடி, பத்து கோடி, நூறுகோடி அற்புதம், நிற்புதம், கெர்வம், மகாகெர்வம், குரோணி, மகா குரோணி, சங்கம், மகாசங்கம், சோபம், மகா சோபம், சாகரம், மகாசாகரம், என்னும்எண்ணிக்கையற்ற பாணங்களைப் பிரதிவீச்சுரனுடைய தேகத்திலும் ஏறிவந்தரதத்தின் பேரிலும் சாரதி மாதலிபேரிலும் சைன்னியங்கள் பேரிலும் விடுத்து அந்தரம் பூமியெனத்தெரியாமல் எங்கும் புகைப்படலமாக்கினான்.

இதைக்கண்ட தேவர்கூட்டங்கள் யாவரும் அந்தோ இதுவென்ன யுகாந்தகாலமாய் இருக்கின்றது. நாம் பிழைத்தோடிப் போகலாமென்றாலும் வழியில்லையே; நமது விதிப்பயன் இப்படியாக வந்து நேர்ந்தது, இந்தக் கொடியனாகிய சூரனை பிரிதிவீச்சுரனாவது ஜெயிக்கிறதாவது என்றுஅல்லோலகல்லோலமாய்எல்லோரும்தப்பிப் பிழைக்கலாமென்று ஒருவர் போனவழி ஒருவர் போகாமல் தட்டித் தடுமாறி ஓர் அண்டமுபரம் ஓடி மறைந்தார்கள்.

## பிரிதிவீச்சுரன் யுத்தம்.

அப்போது பிரிதிவீச்சுரன் கிஞ்சிற்றும் சாஞ்சல்யமில்லாதவனாய் சாரதியைப்பார்த்து ஓ மாதலி அந்த துன்மார்க்கனுடைய கெர்



வத்தை அரை நொடியிலடக்குகிறேன் பார், நீ சீக்கிரம் தேரை நடத்தெனஎச்சரிக்கவே, மாதலியானவன் அந்தகனருகில் தேரை நடத்தினான். இதைக்கண்ட சூரனானவன் அடா சிறுபயலே இதுகாறும் உன்னுடைய விற்றொழிலைக் காணும்பொருட்டு யாம் சாந்தமாக யுத்தம் செய்தோம். இனியோவெனில் உன்னை அம்மாதிரி நினைக்கில் மிகுதியுள்ள சேனைகளையும் தீர்க்க வகைபார்ப்பாய், ஆனதுபற்றி உன்னை எமலோகம் அனுப்பும் வழிபார்க்கிறேன் என்று கூறவே, அதுகேட்ட பிரிதிவீச்சுரனானவன் சொல்லுகிறான், அடா கொடிய துஷ்டப்பயலே உன்னோடு கூடவந்த சேனாசைன்னியங்களை நீயும் பார்த்திருக்க ஒரு நொடிப் பொழுதில் எமனுலகம் குடி யேற்றினேன், அவர்களங்கு அரசனில்லாமல தவிக்கிறது நியாயமல்ல. ஆதலால் உன்னை அவர்களிருக்கு மிடத்துக்கு அதிசீக்கிரமாய் அனுப்புவதே மேலென எண்ணியிருக்கிறேனென்று சொல்லி அநேகம் பாணங்கலால் அவனது வீரத்தன்மையை மழுக்கித் தனது சூரத்தன்மையைத் துலக்கி அவனேறிவந்த ரதத்தையும் அதிற் பூட்டிய சிங்கங்களையும் சாரதியையும் வீழ்த்தினான். இப்படித் தனது தேரும் சாரதியும் அழிந்து போகவே சண்டனானவன் வேறொரு தேரிலேறி வந்து மாயா விசித்திர ஜாலங்களாலும், யுத்தம் செய்தான்.

## அந்தகாசுரன் அதமானது.

இவ்வித ஜாலங்களினால் யுத்தம்செய்யும்போது, பிரிதிவீச்சுரன் ஆ, ஆ. இவ்வசுரனானவன் மகாசூரனெனமதித்து இடைவிடாமல் அவனது மாயங்களை யறிந்து யுத்தம் செய்தனன். இவ்விதமாய் இருவரும் ஏழுநாள் இராப்பகல் இடைவிடாமல்தொடர்ந்த யுத்தம் முதலானவைகள் செய்தும், அஞ்சாத சூரன்மேல் பிரிதிவீச்சுரன் சினமடைந்து இரண்டு அர்த்த சந்திரபாணங்களைத் தொடுத்தான்.

இப்படித் தொடுத்த பாணங்களில் ஒன்று அவனது வில்லைத் துண்டித்தது, மற்றோர் பாணம் அவனது மார்பில் தாக்கி முதுகிலுருவிப்போயிற்று. இதனால் அவன் மார்புபிளந்து இரத்த வெள்ளம் பெருகி யோடவும், அவ்வசுரன் இதோ இவன் சிரசைக் கண்டிக்கிறேனென்று கண்களில் நெருப்புப் பொறியறக்க ஓர் சந்திராயுதத்தை யெடுத்து சிலம்பச் சம்பக்கிணையோடு விடுக்க ஓடி வருகையில், அதுகண்ட மகாபுருஷனானவன் இதுதான் சமயமென நினைந்து பிரமாஸ்திரத்தை யெடுத்து வில்லில் பூட்டி ஆகர்ண பரியந்தம் இழுத்து

அனுசந்தானம் செய்யவே அதுவும் கோடி சூரியப் பிரகாசம் போல் தகாத்காரமாய் விளங்கி மகிமையுடனே வந்து அசுரன் மேல் ருக்கி, அவனது சிரசைக்கரகர வென்றறுத்துப் பூமியிற்றள்ளி ஆகாச கங்கையில் ஸ்நானம் செய்து அம்புருத்தூணி வந்தடைந்தது.

## மகாபுருஷன்.

பரத்துவத்தை யளவிட்டாராய்தல்

[illegible] — A. விருத்தம்

நிலைகலங்கா நிருதனை இவ்வணமாய்க் கொன்று
நீர்த்த முனிவராமரர் துயரந் தீர்த்தோன்
நலநினை வொன்றுளத் தமைத்தவ் வசுரன் றால
நடுவெலும்பு தோல் நரம்பு கயிறுமுன்கை
தலையுரு முன்தட்டுகள் கபாலமாகத்
தாசியற்றிப் பரத்துவ நிலைதெரிவோ மென்று
தொலைவரு தேவர்கள் முதலொவ்வொருவராகத்
தூக்குவானந் நிலையை நோக்கு வானே

திபதை இராகம், தன்யாசி ஆதிதாளம்

[illegible] — A. கண்ணிகள்

மகத் திலுதித்த திவ்ய மகத்துவன் பரத்துவ
வலியை யறிய மனங்குறித்தானே—யார்க்கும்
மிகுத்த தேவர்க்குள் மிகுந்த தேவன் ஆரென்று
வெவ்வேறு வொவ்வொன்றாக நிறுத்தானே (1)

காமதேனு கற்பக மாம் விருக்ஷங்களிரு
கால் பல மென்றறிந்து விதித்தானே
சோமன் முக்கால் பலமு ஷீமராக்ஷதகுரு
சுக்கிரனிரு பலமாய் மதித்தானே. (2)

நாயகன் கணபதி தூயபல மூன்றக்னி
நாயக னிரண்டுபலம் ஆனார்கள் பின்பு
வியாழ னைந்து பலம் சேய்னாறுபலம்
வீரபத்ர ரேழுபல மானார்கள்.

அட்ட வசுக்கள் தன்னை எட்டுபலமதாக
அளவிட் டினிமையுடன் தெரிந்தானே
திரகிரகங்கள் மட்டொன்பதும் பிரமன்
சேர்பத்து பலமென்று பரிந்தானே. (4)



வித்தை லட்சுமி பதினைந்து பலமுந்திகழ்
வெண்டாமரையாள் சோடச மாச்சே
இந்திரன் பதினேழும் பிந்தி யுபேந்திரன்
ஈரொன்பது பலமும் தானாச்சே. (5)

பார்பதி பத்தொன்பதும் சீர்பெறு மாயாசக்தி
பலந்தானிருபதெனக் கண்டானே கொன்றைத்
தார்புனை சதாசிவன் ஓர்நாற்பது பலமாத்
தானுள்ளத்தினிற் கொண்டானே. (6)

ஏகபரப் பிர்மமாம் (நாராயணன்) சர்வ
ஈஸ்பரகர்த்தவ்ய மென்றுணர்ந்தானே—உணர்ந்து
யோகானுபவமான தியானமிர்தங் கொண்
டுண்மையான நிஷ்டை யுணர்ந்தானே. (7)

## பொன்னுலகக் காட்சி.

கேட்பீரே நாரத முனிவரே இம்மகானுபாவர் இவையாவும் தெரிந்து ஈஸ்பரத்தியானம் மறவாதவராய்ப் பொன்னுலகில் சில காலம் அங்குற்ற யாவரும் கொண்டாடத் தக்கதாய், (சூரியர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், அசுவனி தேவதைகளாகிய மருத்துக்களிருவர் ஆக முப்பத்துமூன்றுக்கும் ஒவ்வொன்றுக்கும், கோடிக் கணக்காக) முப்பத்து முக்கோடி தேவர்களால் பூசிக்கப்பட்டும், சுரர்குருவாகிய பிரகஸ்பதியால் ஆசீர்வதிக்கப் பெற்றும், சிங்கநிதி, பதுமநிதி, காமதேனு, ஐராவதம், சிந்தாமணி, யென்னும், ரத்னகடகாச முதலியவை பவங்களையும், அரிச்சந்தனம், கற்பகம், மந்தாரம், சந்தானம், பாரிஜாதம், முதலாகிய பஞ்சதருக்களையும், ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமை, முதலாகிய தேவகணிகையர்கள் நிருத்தன காயன முதலிய பாதநாட்டிய சங்கீதங்களையும் கண்டுகளித்து ஆனந்த சந்தோஷத்துடன் சிலநாள் அங்கு தேவசுகங்களை யனுபவித்துக்கொண்டிருந்தார். பொன்னுலகத்தைப் பற்றிக் கூறியுளதாவது.

பன்னிரண்டாவது நிகண்டு

கரியயிராவதம்பூங் கற்பகக்காவே சோலை
உரியவெம்பரியின் பேரே யுச்சையிச்சிரவமாகும்
மருவும்மண்டபஞ் சுதன்மை மாளிகை வசந்தமென்ப
பெருகிய உருவுமற்றைப் பெருங்கொடி புரந்தரர்க்காம்.



## பிரிதிவீச்சுரன் விவாகம்.

இவ்வண்ணமாய் மகாநுபாவர் சகல வைபவங்களுடன் பொன்னுலகில் வாஸம் செய்து கொண்டிருக்கும்நாளில் சகல தேவர்களால் காந்தர்வத்தலைவனை சுரதஸிந்துவின் குமாரத்தி அதிகுணமும் தேஜஸும் பொருந்திய சுனைபு யெனும் பெண்மணியைப் பாணிக்கிரகணம் செய்யப்பெற்று, தேவர்கள் வேண்டுகோளி னிமித்தம் பூலோகத்தினிடமாய் வசிக்கும் மன்னுயிர்கள் ஆசார சீலங்கள் நீதிமார்க்கம் முதலியவை அறியும் நிமித்தமாகவும், வேதாகமப்பொருளைப் பலரும் அறிந்துய்யவும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யவும், இப்பிருதிவியில் அரசனாய் இருந்து அரசாளத்தக்க க்ஷேத்திரம் யாதென்று நாடி, சப்த தீவுகளுக்குள் நடுநாயகமாய் விளங்கும் நாவலந்தீவு என்றும், அத்தீவிலுள்ள நவகண்டங்களில் பரதகண்டம் தான் புண்ணிய பூமியென்றும், இக்கண்டத்துக்குச் சற்றேறக்குறைய மத்தியஸ்தலமாகிய * ஸ்ரீகாசி யென்று சொல்லக்கூடிய விசாலாவதியே தகுந்த ஸ்தலமென்றும் நிச்சயித்துக் கொண்டனர்.

இக்காசியைப் பற்றிக் கூறுவதாவது.

* காசியென்றும், வாரணாசியென்றும், அவிமுக்தமென்றும், ஆனந்தவனமென்றும், உருத்திராவாசமென்றும் விளங்கக்கூடிய விசாலாவதியானது, பூர்வம் தேவர்கள் பட்சமாய் இருந்து அசுரர்களை வென்று தேவர்களுக்கு ஓர்காலம் பிதாவாய் விளங்கின ஆயுவென்பவர் புத்திரரான ரஜியென்பவர் ஆண்டஸ்தலமாம்.



### அருணசலப் புராணம்

காசியெனு மொருதலமிக் கைலையிலுஞ்சிறப்புளது கங்கைத்தீர்த்தத்துறை
வீசுதிரைக் கொழுந்தோட்டம் பாதகத்துவேரோட்டும் விபத்துமுத்தின்
மாசினுடலதிலிருந்தான் மரமேனும் விலங்கேனும் மனிதரேனும்
ஈசனருளுபதேசஞ் செவிப்புகலா லிறைவனென விருக்கலாமே.

## ஸ்ரீகாசியி னியல்பு.

உலகின் வாழும் மனஉணர்வுடைய மக்களுட் சிறந்தார்க்கு, ஜன்ம நாசம்பிறந்து வீடடைவதற்கு முக்கிய சாதனமென விளங்கும் * காசியானது ஓர் புண்ணிய க்ஷேத்திரம். அந்த க்ஷேத்திரத்தில் இறக்கும் மனிதருக்கு அந்திமத்தில் † ராமதாரகமந்திரம் சிவபெருமானால் காதில் உபதேசிக்கப்படுகிறது. இதனால் புனிதராகி பரமபதப் பிராப்தி யடைகிறார்கள். தவிரவும் அது திரிசூலத்தின் முனையிலிருக்கின்றனவாதலால் அழிவில்லாதது. ஈதன்றி மத்திமேசுர முதல் தேகாளி விநாயகர் பரியந்தம் நாலு திக்கிலுஞ் சக்கராகிருதியாய் சூத்திரம் பிடித்தாலதிலுண்டாகிய இரேகையினடுவிடமாம். இதிலிருந்து நாலுதிக்கிலும் ஆறேகால் ஆறேகால் மைல் தூரம் எல்லையாம், இன்னம் இதனுட்பகுதியாய் வாரணாசி யென்றும், அவிமுக்தமென்றும், அந்தர்க்கிரகம் என்றும், தலாபரிமாண எல்லைகள் மூன்றுண்டாம்.

அவற்றுள் (வாரணாசி) கிழமேல் ஆறேகால் மைலும், தென்வடல் மூன்றேமுக்கால் மைலும், கிழக்கில் கங்கையும், வடக்கில் வருணையும், என நான்கெல்லைகளை யுடையதாம்.

(அவிமுக்தம்) கிழக்கில் அட்டகாசமும், தெற்கில் பூதநாதிரீசமும், மேற்கில் கோகர்ணேசமும், வடக்கில் கண்டகர்ணேசமும்

* ருத்ரமூர்த்தியானவர் பிரமன்சிரசில் ஒன்றைக் கொய்ததால் பிர்மஹத்தி பிடித்து இக்காசி க்ஷேத்திரத்தில் பிட்சைக்குச் சென்ற காலத்தில் அப்பாவமானது எல்லைக்கு வெளியே நின்றுவிடவும், புனிதராய் லக்ஷ்மியிடம், கா— என்னைக்காக்க, சி—ஸ்ரீதேவியாகிய அம்மணி கடமை யுன்னுடைய தென்பது தான், காசி, யெனபதின்பொருள். அதன்பின் அம்மன், பாபத்தை தத்தம்வாங்கிக்கொண்டு அந்தக்ஷேத்திரத்திலேயே அமரும்படி அனுக்கிரகம் செய்ததால் பூர்வம் விஷ்ணு க்ஷேத்திரமாம்.

† ராமதாரக மந்திரமாவது "ரா" என்றால் பாவம் போகிறது "மா" என்றால் அப்பாவம் உள்ளே வராமல் தடுக்கிறது.

ஆகிய நான்கெல்லைகளை யுடையதாய் விசுவேசருக்கு நான்கு திக்கி
லும் முக்கால் மைல் தூரம் அளவாம்.

(அந்தர்க்கிரகம்) கிழக்கில் மணி கர்ணேசுரமும், தெற்கில் பிர
மேசுரமும், மேற்கில் கோகர்ணேசுரமும், வடக்கில் பாரபூதேசுர
மும், ஆகிய நான்கெல்லைகளை யுடையதாம்.

இன்னம் காசி க்ஷேத்திரத்தின் கீழ்ப்பாகத்தில் கங்கை உத்தர
வாகினியாய் க்ஷேத்திர மத்தியத்தில் வருதலால், அவிமுத்தம், அந்
தர்க்கிரகமெனு மிரண்டிற்கும், கங்காமத்தியமளவு எல்லைகளுண்
டென்றும், அவிமுக்தத்திற்கு மத்திமேசுரமுதல் நாலு திக்கிலும்
பத்துமைல் சதுரத்தில் அதாவது ஒவ்வொருபக்கமும், இரண்டரை
இரண்டரை மைல் எல்லை யுண்டென்றும், காசிக்குள் வாரணாசியும்,
அதற்குள் அவிமுக்தமு மிருத்தலால் மணிகர்ணிகாவிசிட்டகங்கையி
னுடைய கிழக்குமத்தியப் பிரதேசத்தில், அவிமுக்த ஸ்தானத்தில்
அந்தர்க்கிரக வெல்லை இருக்கின்றனவென்றும் அங்கு க்ஷேத்திர
சதுட்டய மாணப் பிரயோசனமும் உண்டாம்.

சுலோகம்

கங்காதரங்க கமநீய ஜடாகலாபம்
கௌரீ நிரந்தர விபூஷித வாமபாகம்
நாராயண ப்ரியமதங்க மதாபஹாரம்
வாராணஸீ புரபதிகம் பஜ விச்வநாதம்:

## மணிகர்ணிகை கட்டம்

இவ்வண்ணமாய் எல்லைகளையுடைய க்ஷேத்திரத்தில் முற்காலத்
தில் திருமால் தனது சக்கரத்தாலாக்கினமையின், சக்கர தீர்த்த
மென்றும், வெயர்நீரால் நிரப்பப்பட்டதாதலின் பிரமத்திரமென்றும்,
பின்பு அவ்வாவிக்கரையில் விசுவேசர் சிரக்கம்பஞ் செய்ய தமது
குண்டலத்தினின்றும் நழுவி நாகரத்னம் விழுந்தமையால் மணிகர்
ணிகை யென்றும் பெயர் உடையதாயிற்று.

அதனுடன் கங்கை உத்தரவாகினியாய் வந்து சேர்ந்தது முதல்
அதிவிசேஷ முடையதாகிக் கிழக்கே கங்கையினடுவும், தெற்கே
கங்கேசுரமும், மேற்கே சுவர்க்கத்துவாரேசுரமும் வடக்கே அரிச்
சந்திரேசுரமும், எல்லைபாகக்கொண்டு சகலபாவங்களையும் பலர்க்கும்
போக்கிச் சாம்பூநத நிறமுடையதாய் விளங்கும். வைரவன் அத்



[illegible] மரித்தவர்களைத் தமது சூலத்தேற்றிப் பாவங்களைப்
போக்கி முத்தியளிப்பார். இதற்கு,

வீரசிங்காதனப் புராணம்

காசியென்றொரு புண்ணியப் பதியது கழறி
ஞசிலா மணிகர்ணிகை விளங்கிடு மதன்கண்
மாசிலா வயிரவனவண் மரித்தவர் பவத்தை
வீசியேதிரி சூலம் வைத்தளிப்பன் மெய்ம்முத்தி.

## கங்கையின் மகிமை.

ஸ்ரீ கங்கையானது சத்திய லோகத்தினின்றும், அறுபதினா
யிரம் மக்களையுடைய சகரச் சக்கரவர்த்தியின் வமிசத்திலுதித்த
திலீப புத்திரனாகிய பகீரதன் பொருட்டு இப்பிரிதிவியில் இமய
மலையில் கங்கோத்திரியினிடமாய் விஜயம் செய்து பூமாக்களின்
பாவம் தொலைக்க, ஆயிரத்து ஐஞ்ஞூற்று அன்பது மைல் தென் கிழக்
காக ஓடி கீழ்க்கடலில் சங்கமமாகின்றது. இப்புண்ணிய நதியில் ஸ்நா
னங்கள் செய்யும்போது மற்ற எந்த நதியையாவது நினைக்கில்
பாவம். மற்ற நதிகளில் ஸ்நானம் செய்யும்போது இக்கங்கையை
நினைப்பார்களே யானால் அத்தீர்த்தம் புனிதமாம்.

அன்றி இதில் ஸ்நானம் செய்ய வேண்டி புண்ணிய தேச
மல்லாது மற்ற எந்த தேசத்திலிருந்து வருபவனானாலும், எக்குலத்
தில் பிறந்தவனானாலும், எண்ணற்கரிதான பாவங்களைச்
செய்தவனானாலும், எக்காரணத்தாலாகிலும் அவன் இறந்தபின்
அவனுடைய அங்கத்தில் ஒரு ஹஸ்தியாவது இக்கங்கையிற் சேரு
மானால் அவன் சுவர்க்கத்தை யடைகிறானெனில், யாதாம் ஒருவன்
அக்கங்கையிலேயே ஸ்நானம் செய்வானாகில் அவனது ஏழுதலைமுறை
யிலுள்ள பிதுர்க்களும் சுவர்க்கமடைகிறார் களென்பதற் கையமு
முண்டோ ?

தவிர இக்கங்கையில் மூன்று லோகத்திலிருக்கின்ற தீர்த்தங்க
ளும், வேதங்களும், சூக்ஷுமரூபமாய் வசித்திருக்கின்றன. இதில்
நின்று பூசித்தவர்கள் சகல தேவதைகளையும் பூசித்த பலனை யடை
கிறார்கள். உற்பத்திமுதல் சாகர பரியந்த மிருக்கிற கங்கை குரு
க்ஷேத்திரத்தோ டொப்பெனப்படும். அதிலும் விந்தியத்தைச்
சேர்ந்து வருகிற கங்கை நூறுபங்கு விசேஷமுடையது. இதைப்
பார்க்கிலும் பச்சிமவாகினியாய் வருங்கங்கை நூறுபங்கு விசேஷ

முடையது. அதிலும் காசியில் க்ஷேத்திரமத்தியில் உத்தரவாகினியாய் வருங்கங்கை ஆயிரம் பங்கு விசேஷமுடையது.

(குருக்ஷேத்திரத்தில் சரஸ்வதி நதியிருத்தலின் அதனைக் கங்கை ஒப்பெனப்பட்டது,) வடமேற்கில் நின்று கிழக்கு முகமாய் வரப்பட்ட கங்கை, நேர் மேற்கில் நின்று கிழக்குமுகமாய் வரும் யமுனையோடு சேருங்கால் தென்மேற்காய்த் திரும்பி சங்கம மாதலின் திரிவேணி பச்சிமவாகினி யென்று பெயர்பெறும். இதற்கு,

பஞ்சமஸ்கந்தம்

சொர்ண மேருவைச் சூழ்ந்த நாற்றிக்கிலும்
வர்ண கங்கை வரவு மிளாவிரத
வருடத் தருத்திரனுற் செய்வடிவுசங்
கர்ஷண விகோபாசனமுங் கழறுவாம்.

## பிரிதி வீச்சுரனுக்கு திருமுடி சூட்டியது.

பிரிதிவீச்சுரன் முதலினோர் இப்பூவுலகிலுள்ள க்ஷேத்திரங்களில் ‡ காசியே முதன்மையுற்றதென்றும், தீர்த்தங்களில், (கங்கையே) புண்ணிய தீர்த்தமென்றும், சமஸ்த தேவர்களில் (ஜகதீசனே) விசேஷமென்றும், இம்மூன்றும் ஒருங்கு கூடிய ஸ்தலம் விசலாவதியே யென்று எண்ணினவர்களாய் அக்காசி ஸ்தலத்தை (மயனால்) தேவ சிற்பியால் திருந்தச்செய்வித்து, தேவ கோஷ்டியுடன் அமரருலகத்திலிருந்து அந்த க்ஷேத்திரத்திற்கு விஜயஞ் செய்து அமர்ந்திருந்தார்கள்.

‡ காசி யென்பது இந்து க்ஷேத்திரங்களுக் கெல்லாம் பெருமை பெற்றதெனச் சொல்லுவதைப்போல், உலகில், காசியெனும் நாணயம் தான் புகழ் பெற்றது. ஆனால் இப்புத்தகத்தின் பாயிரத்தில் "செல்வப் பொருளுக்கும் கல்விப் பொருள் மேலென்று" கூறியது இதற்கு மாறுபாடாகாது? ஏனெனில் கல்விப் பொருளடைவதற்குக் காரணமும் காசியெனும் பொருளே, உலகில், பார்லிமெண்டுமெம்பர்களாகவும், போர்ட்டு மெம்பர்களாகவும், டெலிகேட்டுகளாகவும், கமிட்டி மெம்பர்களாகவும், புகழ் பெறச் செய்து வைப்பதும் காசி யெனும் பொருள்தானே, அரசர்களுக்குத் தேசங்களை நீடித்த நாளாய் நிலை நிற்கச் செய்வதும் காசி யென்றால் அதன் பெருமை சொல்லப் போமோ, அது கொண்டே ஆன்றோர் "பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை — அருளில்லார்க் கவ்வுலக மில்லை" எனக்கூறியிருக்கின்றனர்கள். ஆனதி பற்றி." இகத்திற்கு, நாணயக் காசியையும் — பரத்துக்கு க்ஷேத்திரக் காசியையும் யாவரும் அடைவது மேலாம்.



அச்சமயம் பொன்னுலகோர் யாவரும் ஒருங்குகூடி நவரத்தின கஜிதமான ரத்னமுடியைச் சேகரித்து ரிஷீஸ்வரர் ஆசிகூற பிராமண கோஷ்டியுடன் முப்பத்திரண்டு தர்மமும் வழங்க தேவதுந்துபி குழங்க (பிரிதி வீச்சுரனுக்கு பிரகஸ்பதியால் திருமுடி சூட்டுவித்த பிறகு) வியாழபகவானுடன் அவரவர்கள் தம் தம் பதிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ரிஷீஸ்வரர்களும் தங்கள் தங்கள் ஆச்சிரமங்களுக்குப் போயினர். பின்பு, இவ்வரசனானவன் பட்டத்தரசியுடன் தன்னுயிர்போல் மன்னுயிரையுங் காத்து மனுநீதி தவறாமல் செங்கோல் நடாத்தி வருவதால் வானம் மாதமும்மாரி தவறாமல் பெய்ய, செந்நெல் விளைந்து பிரஜைகள் யாவரும் சுகித்து வாழ்ந்திருந்தார்கள்.

## ஈஸ்வர அனுக்கிரகம் பெற்றது.

கேட்பீர் நாரதமுனிவரே பிரிதிவீச்சுரனும் தனது பத்தினி சுனைபையும் (இருவரும்) ஈஸ்வரகாக்ஷி பெறவேணு மென்ற எண்ணத்துடன், திரிகரண சுத்தியாய் மணிகர்ணிகா ஸ்நானஞ்செய்தும், ஞானவாவி முதலான இன்னம் பல புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானங்கள் செய்தும், துண்டிவிநாயகர், தண்டபாணி, காலபயிரவர், அன்னபூரணி, முதலான ஆலயங்களில் முறையே ஐதீகப்படி பூசை செய்துகொண்டு பின்னும், நாற்பத்திரண்டு லிங்கங்களையும் பூசித்துப் பின் ஜோதி லிங்கங்களுக்கெல்லாம் மேலான விஸ்வலிங்கத்தைத் தம்பதிகளும் பூசித்து காக்ஷி தந்தருள வேணுமென்று துதித்தார்கள். இதற்கு,

இணையிசைத் தேவாரம்

தேசுலவுந் திருவடிகள் சிரமிசையே சூடியுளந்
தாசையினாற் பாடுமவர்க் ககம்புறமு மமர்ந்தோனே
வீசுபுகழ் கீர்த்தியுடன் மெய்ம்மையருள் விஸ்வேசா
மாசகற்றும் மழுப்படையாய் மானேந்துங் கரமுடையாய்.


மணிநீல—அ

மயிலனையா ளொருபாகா வலிவிடையா ஜெபயாசா
குயின்மொழியாள் காளியுடன் கூத்தாடும் பலத்யாகா
அயில்விழியார் மையலிலே அலையாநண் மதியுதவாய்
ஜெயமுடனுள் திறமுதவாய் தேவாநின் னடைக்கலமே.

சீமானே—ஏ

நீறணியும் மேனியனே நியமமிலாக் கயவேனே
வேறுசெய்யும் வினையகற்றி மெய்ப்பொருளைச் சேருகற்கு
மாறுபடா வார்வமதை மனமகிழ்ந்தே யுதவிடுவீர்
கோறமெமன் றனையுதைத்துக் கோகர்னத் தமர்வானே.

இவ்விதமாய் சதிபதிகள் துதிக்கவே அவர்களுக்கு விஸ்வநாதரும் விசாலாட்சியும் ரிஷபவாகனரூடராய் புலித்தோலுடையராய் திங்களும் கங்கையும் முடியில் துலங்க வெண்ணீறணிந்து முப்புரிநூல் துலங்க கையில் மான்மழுவேந்தினவராய் எழுந்தருளிவந்து காக்ஷிதந்தார். ஜெதீசனைக் கண்டதும் பேரின்பமுற்று முக்கால் வலம்வந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துத் துதிப்பார்கள்.



காவடி சிந்து மெட்டு முகாரி—அடதாளம்.

கங்கை கொன்றைமதி தங்கும் பொற்சடைவி சாலனே
திரிசூலனே—காலகாலனே—ஒளிர்
செங்கை மான் மழுவு மேந்து சாந்தலிங்க சீலனே—வ
தேவி லோலனே

ஆலகாலமுண்ட நீலகண்ட திரிநேத்திரா—ஆ
திவ்ய க்ஷேத்திரா—கரபாத்திரா—தூய
வக்குமாலைபணி நக்கனுனகரு ணையா—ஆ
ஜெபமாலையா



சீர்மிகுந்த திரு நீறணிந்திடு செம் மேனியா—ஆ
பவஹானியா—அமானியா—சித்த
சுத்தியோடு தீரன் முத்தர் போற்றும் மகா திண்ணியா
பெரும் புண்ணியா (3)

அஷ்டசித்திதரும் இஷ்டலிங்கமத வாரணா ஆ
பரிபூரணா—ஜெகத்காரணா—அப
யஸ்தந்தந்து காறு முபயபாதந்தஞ்ச மையனே எ
மோகனத்துய்யனே.. (4)

இவ்விதமாய் நமஸ்கரித்து நிற்கும் சதிபதிகளின் மனசஞ்சலமறிந்தவராய் ஈஸ்வரன் அவர்களை நோக்கி உனது பத்தினியுடன் சுகமேவாழ்ந்து புத்திரப்பேறடைந்து அந்தியத்தில் இருவிரும்நமது பாதாரவிந்த மடைவீர்கள். தவிரவும் இராணிபகர்ப்பன் செய்தயாகத்தில் பிறந்ததாலும் இப்பிரிதிவியில் அரசனாக இருந்து செங்கோல் செலுத்துகிறதாலும் உம்முடைய வமிசத்தினர் பரம்பரையாக க்ஷத்திரியரென விளங்கி சத்புருஷாளாய்த் தோன்றி குலவிர்த்தியாகி பாகதி யடைவார்களென்று ஆசீர்வதித்து மறைந்து போயினர்கள்.

A. சந்த விருத்தம்.

வந்தபரமேஸ்வரனுகந்தயன் மகன்றனை
மலர்த்திருமை கொண்டு தழுவி
மண்ணுலகர் விண்ணுலகர் நண்ணுதயரங்களைய
வந்தபிரிதீஸ் வரனேகேள்
சொந்தமொடெம் வேள்விவரும் மங்கையை மணஞ்செய்தேயும்
சுகமாக வாழ்கவென்று
சொல்லியேசெல்லவும் நல்லெழில் சுனைபையின்
சுகபோகமே துய்த்திட.

விடங்கன் முதல் நால்வர் உற்பத்தி.

இவ்விதமாய் பிரிதிவீஸ்பரனும் சுனைபையும் மதனும் ரதியும் போல் சகல போகங்களையுமனுபவித்துக் கொண்டு வரும் நாளில் சுனைபை யெனும் பெண்மணி கர்ப்பவதியாயினள். அக்காலத்தில் தேவர்கள் யாவரும் இக்கர்ப்பத்திலுதிக்கும் பாலகர்கள் அசுரர்களை ஹதம் செய்யும் சாமர்த்திய முடையவர்களாய் ஜனிக்கக் கடவர்களென்று ஆசி கூறினர்கள். சுனைபையோ பூர்ண கர்ப்பமாய் பத்துமாதமும் தீர்ந்து ஒரு சுதனைப்பெற்றாள். பின்னும் முறையே மூன்

குமாரர்களைப் பெற்றாள். இவ்விதமாய் ஜனித்த அன்னார்க்கு புத்திரர்களுக்கும், விடங்கன், சுரூபன், மணிக்கிரீவன், சுனச்சேனன், என நாமகரணங்களிட்டும் குருவால் ஜாதகர்மம் முதலான ஆறு சமுஸ்காரங்களும் நடப்பித்து வேதோப நிஷத்தார்த்த சாஸ்திரங்களைக் கற்பித்தும் தனுசாஸ்திர விதங்களைப் பழக்கியும் வைத்து, அவ்வவர்ன பருவகாலத்தில் அங்கார காக்கியனென்னும் கெந்தர்வத் தலைவனுடைய புத்திரிகளாகிய,

(1) மாலினி யென்பவளை—விடங்கனுக்கும்

(2) சம்பூர்ண திலகி யென்பவளை—சுரூபனுக்கும்

(3) சந்திர லேகை யென்பவளை—மணிக்கிரீவனுக்கும்

(4) விசித்திர லோசனை யென்பவளை—சுனச் சேனனுக்கும்

முறையே நால்வருக்கும் விவாகம் செய்வித்து, ஜேஷ்ட புத்திரனாகிய விடங்கனுக்கு விசாலாவதியை மகுடாபிஷேகம் செய்வித்த பிறகு சிலகாலம் சென்று, பிரிதிவீச்சுரன், பத்தினியுடன் ஜெகதீசனது (பாதாரவிந்த பதமாகிய) கைலாய பதவியை யடைந்தான்.

## விடங்கன் அரசாட்சி.

கேட்பீர் நாரத முனிவரே விடங்க மகாராஜன் தந்தை தாய்க்குச் செய்யவேண்டிய உத்தர கிரியையைத் தனது சகோதரருடன் ஐதிகப்படி செய்து முடித்துப் பின் சகல தேசவாசர்களும் தன்னரசுக் கடங்கி வாழ மனு நீதிப்படி தனது தம்பியருடன் ராஜ்ய பரிபாலனம் செய்து வரும் நாளில், கிரவுஞ்சத்தீவில் (கோரனென்றும், தீரனென்றும், வீரனென்றும்,) மூன்றசுரர்கள் கொடுங்கோல் செலுத்தி மூவுலகையும் வருத்திக்கொண்டு வந்தார்கள். அதனால் தேவர்கள் வருத்த முற்று யாவரும் ஒருங்கு கூடி விடங்கனிடமடைந்து சில வசனங்கள் கூறினார்கள்.

ஓ பிரிதிவீச்சுர புத்திர சிகாமணியே உமது தந்தையார் ஆதியில் அந்தகாசுரனைச் சம்ஹரித்து திரிலோக வாசிகளுக்குண்டான இம்சைகளைத் தீர்த்தார். நீவிர் அவருடைய புத்திரராகையால் அவரினுமதிக தீரமும் வீரமும் கீர்த்தியும் தேஜஸும் பெற்றிருக்கிறீர். ஆகையால் தற்காலம் கிரவுஞ்சத்தீவில் கோர, தீர, வீரனென மூன்றரக்கர்கள் தோன்றி சகல லோகங்களையும் நிர்ப்பந்தம் செய்து



கொடுங்கோலர்களாய் எமதுலகத்தை வருத்தி இம்சிக்க ஆரம்பித்தனர்கள் என்று முறையிட்டார்கள்.

இவையாவும் கேட்ட விடங்கனானவன் தேவர்காள் நீங்கள் யாவரும் விளம்பிய காரியமானது அடியேனாலாகுமென்று எதனால் நம்பி நாடிவந்தீர்கள். வானுலகோராகிய நீங்கள் நிறைவேற்றாத அரிதான காரியத்தை யான் முடிக்க வல்லனோவென்றார். இவ்வாறு விளம்பிய விடங்கனைப்பார்த்து தேவர்கள் கூறுகிறார்கள். கேளும்பூபதியே நீர்கொண்ட சந்தேகத்தை நிவர்த்திசெய்யக் கூறுகின்றனம். யாம் வானவராய் இருப்பினும், தானவரை ஜெயிக்கப்படாத காரணம் பலவுண்டாம். அவை யாதெனில் சுக்கிரபகவானுடைய ஞானோபதேசத்தால் அவர்கள் அகோரமாகிய தவங்களைச்செய்து ருத்திரரால் பெற்ற காத்திர திரேகமும், பவிசும், பலமும், தைரியமும், ஆயுத அஸ்திரங்களும், மாயாவிசித்திர ஜாலங்களும் பெற்றதும் தவிர, நெடுநாளாய் நாங்கள் அசுரருக்குப் பயந்துவந்த காரணத்தால் எங்களுக்கு ஜெயமற்றுப் போனதேயாம். நீரோ அவ்விதமன்று! உமதுபிதா ஸங்கர அமிஸம், யாககுண்டத்தில் உற்பவித்தவர், ஐயாயிர வெள்ளம் அரக்கர்படையை வென்றவர், அவர்வமிஸத்தில் நீர் பிறந்தவராதலாலும் உம்மைப்போலொத்த மற்ற மூன்று சகோதரர்களும் உமக்கு உயிர்த்துணையாய் இருப்பதாலும், அரக்கரை ஜெயிப்பீரென்று கூறினோமென்றார்கள். இவை யாவும் கேட்ட விடங்கன் தேவர்களை வந்தனை வழிபாடுடன் அந்தணருலகுக்கு அனுப்பிவிட்டு யுத்தத்துக்கு ஜாக்கிரதையாய் இருந்தார்.

## கோர-வீர-தீர-ராக்ஷஸ சம்ஹாரம்

கேட்பீர் நாரத முனிவரே சிங்கக்கொடியனாகிய விடங்கனானவன் பிறகு தம்பி மாருடனும் அமைச்சருடனும் யோசனை செய்து யுத்தத்துக்கு வேண்டிய முஸ்தீப்புடன், அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர், முதலான சேனாதிபதிகளும், சாம பேத தான தண்டமெனும் சதுர்வித உபாயங்களைக் கொண்டு யுத்தம் செய்யும் அணித்தலைவர்களும், ரதகஜ துரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளும் தம் தம்முடைய சகலவித ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, யூகத்தலைவர், அணித்தலைவர், படைத்தலைவர், புடை சூழ, பேரிகை பூரி எக்காளம் முதலிய வாத்தியத்துடன் அத்தீவை யடைந்து துஷ்ட அரக்கர் மூவரையும் எதிர்த்துக் கொடிய யுத்தம் செய்து

அன்னவர்கள் சிரசைக்கொய்து அவர்களது சேனைசைன்னியங்களையு மதமாக்கி, ஜெயஸ்தம்பம் நாட்டி, ஏழுலகங்களும் தமது கீர்த்தியைக் கொண்டாட தமது சேனைசைன்னியங்களுடன் விசாலாவதி வந்து சேர்ந்தான்.

## வைடங்கன் முதல் எண்மர் உற்பத்தி.

இவ்விதமாய் ராக்ஷச சம்ஹாரம் செய்து தேவர்கள் துயரை நீக்கித் தமது விசாலாவதியில் மனுநீதி வழாது முப்பத்திரண்டு தர்மங்களும் விளங்கச் செங்கோல் செலுத்திவரும் நாளில், விடங்கன் மனைவி மாலினி வயிற்றில், வைடங்கன், இந்திரசேனன், எனுமிரு புத்திரர்களும், சித்தரவல்லி, சுந்தரவல்லி, என இருபுதல்விகளும் பிறந்தார்கள், சுனுபனுடைய மனைவி சம்பூரணதிலகியின் வயிற்றில், சுநாபிகன், பூரணன், என இரு குமாரர்களும் பிறந்தார்கள், மணிக்கிரீவனுடைய பெண்சாதி சந்திரகலைகையின் வயிற்றில், மணிக்கிரீபு, சோபதன் என இரு குமாரர்களும் பிறந்தார்கள். சுனச்சேனனுடைய பெண்சாதி விசித்திரலோசனை வயிற்றில், சௌனஸ்யன், அந்தரீக்ஷனென இரு குமாரர்களும் பிறந்தார்கள்.

இவ்விதமாய் ஜனித்த குழந்தைகள் சுக்கிலபட்சத்துச் சந்திரனைப்போல் விர்த்தியாகி யதிபால்யராய் வளர்ந்து கல்வி கேள்வியுடையவர்களாய், தனுசாஸ்திர பண்டிதர்களாய் எவ்வுலகங்களையும் ஜெயிக்கும் வல்லமையுடன் யௌவன முடையவரா யிருக்கும் நாளில், பெற்றோர் கண்டானந்தம் கொண்டு நால்வரும் ஒருங்குகூடி தம்புத்திரரெண்மருக்கும் புதல்விக ளிருவருக்கும் யௌவனதிசையானதாலிவர்களுக்கு விவாகம் செய்ய யோசித்தார்கள்.

## பதின்மருக்கும் திருக்கல்யாணம்

கேட்பீர் நாரதமுனிவரே யென்று ஆரிய முனிவர் கூறுவார். இவ்வித சுபகாரியங்களைப்பற்றி யோசித்துச் சகல தேவர்களுக்கும் தூதனுப்பி வேண்டுகோள் விண்ணப்பம் செய்ய யாவரும் வந்து சேர்ந்தபின், முகூர்த்தம் நியமித்து நகரலங்கிர்தம் செய்வித்து எங்கு பார்க்கினும் அன்னதான சாலைகளமைத்தும், தர்மசாலைகளமைத்தும் யாவர் வந்து எதுகேட்கினும் இல்லையெனாக் கூறாது தானங்கள் செய்தும், விண்ணுலக தேவர்களும், மண்ணுலக மன்னரும், வனவாசிகளான ரிஷீஸ்வரர்களும், பிராமணர் முதலானவர்களும், ஊர்த்



தகத்தலைவர்களும், மற்றுமுண்டான அனந்தம் பிரஜைகள் கூடியிருக்கும் சதசில் ஊகூ வென்னும் கந்தர்வத் தலைவனுடைய புத்திரிகளில்

(1) மஞ்சுவாணி யென்பவளை—வைடங்கனுக்கும்
(2) சுனந்தாபி யென்பவளை—இந்திரசேனனுக்கும்
(3) மாயாவதி யென்பவளை—சுநாபிகனுக்கும்
(4) ஜெயகாமினி யென்பவளை—பூரணனுக்கும்
(5) சுவர்ணரேகை யென்பவளை—மணிக்கிரீவனுக்கும்
(6) சந்திரவதனி யென்பவளை—சோபதனுக்கும்
(7) சுந்தரசுரபி யென்பவளை—சௌனஸ்யனுக்கும்
(8) விசித்திரகாமினி யென்பவளை—அந்தரீக்ஷனுக்கும்

இவ்வெண்மருக்கும் முறையே விவாகம் செய்து மகிழ்ந்திருந்தார்கள். பின்னும் தமது புத்திரிக ளிருவரையும் கந்தர்வ அங்காரகாக்கியன் புத்திரனாகிய வீரசேனனுடைய குமாரர்கள்

(1) சித்திரவாகனுக்கு—சித்திரவல்லியையும்
(2) சித்திராதேவனுக்கு—சுந்தரவல்லியையும்

பாணிக்கிரகணம் செய்து மகிழ்ச்சியுற்றனர்கள். இங்ஙனம் தா
கள் புத்திரர் எண்மருக்கும் புத்திரிக ளிருவருக்கும் விவாக
செய்து நெடுநாள் அரசாட்சி செய்து மகிழ்ந்து வருங்காலத்தில் இ
வெண்மரில் ஜேஷ்டனாகிய வைடங்கனுக்கு மகுடாபிஷேகம்நடாத்
தாங்கள் நால்வரும் தமது பத்தினிகளுடன், தபோவேடம் பூண்
ஸாளிக்கிராம க்ஷேத்திரத்திற்குச் சென்று வானப்பிரஸ்தாச்சிரமத்
திருந்து அந்தியத்தில் விஷ்ணு சாரூப்ய மடைந்தார்கள்.

## வைடங்கன் அரசாட்சி.

இப்பால் வைடங்க ராஜன் முதலிய எண்மரும், பலவரசர்கள் தமதடிவணங்க தன்னருமைச் சகோதரர் தன்னிழல்போற்றுதித் அருகுசூழ மைத்துனர்களிருவரும் சேனாதிபதிகளாகவும் மதியு வமைச்சர்களுடனும் மனுநீதி தவறாமல் துஷ்டநிக்கிரக சிஷ்ட பாலனம் செய்து அரசாட்சிபுரிந்து வருகையில் தன்து மைத்து கள் தங்களுக்கு எவ்விதமாய் ஒற்றுமையுடையவர்களாய் இருந்தா ளெனின்

| | | | |
|---|---|---|---|
| கன்றுக்கு ... | கபிலை ,, | உயிருக்கு ... | உடல் |
| கற்புக்கு .... | காந்தை ,, | சிசுவுக்கு .... | தாய் |
| விருக்ஷத்துக்கு ... | ஜலம் ,, | பக்தர்க்கு ... | தெய்வம் |
| ஜீவர்களுக்கு .... | குணம் ,, | பிரஜைகளுக்கு .... | ராஜன் |
| தரித்திரருக்கு .. | பிரபு ,, | பகலுக்கு .... | சூரியன் |
| இரவுக்கு .... | சந்திரன் ,, | தருமத்துக்கு ... | சாந்தம் |
| வீரனுக்கு ... | தைரியம் ,, | வேந்தனுக்கு ... | படைகள் |
| சதிக்கு ... | பதி ,, | பதிக்கு ... | சதி |
| தவத்துக்கு | வைராக்கியம் ,, | திடத்துக்கு ... | சிரவணம் |
| ஜென்மபாசத்துக்கு | நிராசை ,, | ஸ்திரீகளுக்கு ... | கற்பு |
| புருஷருக்கு ... | கல்வி ,, | கல்விக்கு | ஜீவகாருண்யம் |
| மந்திரிக்கு ... | யுக்தி ,, | வியாபாரிக்கு ... | திரவியம் |
| உலகந்துக்கு ... | மழை ,, | மழைக்கு ... | கார்மேகம் |
| முமுட்சுவுக்கு ... | சாதனம் ,, | மோக்ஷத்துக்கு ... | நிராசை |

இவைகள் ஒன்றுக் கொன்று துணை வேண்டுவது போல் வைடங் கன் முதலினோர் தனது மைத்துனர்களைத் துணையாக கொண்டு நெடு நாள் நவரத்தின கசித சிம்மாசனத்தில் ஆரகேயூர மகுடாதியணிகள் சூரியன்போல் ஒளி வீச விஷ்ணுவின் அமிசம்பெற்றவர்களாய், புலி யும் பசுவும் ஒரு துறையில் நீர் அருந்தவும், கீரியும் சர்ப்பமும் சேர்ந்துவிளையாடவும், ஓநாயும் ஆடும் ஓடிவிளையாடவும், செந்நாயும் மானும் சேர்ந்துவிளையாடவும், அரியும் யானையும் அன்புடனிருக் கவும், எலியும் பூனையும் ஏகமாய் இருக்கவும், "பிரஜைகள் யாவரும் ஓர் தாய் மக்கள்போல் ஒற்றுமையாய் வாழ, மாதமும் மாரி மாறாது பெய்ய, பூமியிற் பயிர்கள் பொங்கென விளைய, விளைவு மிகுதியால் வினைகள் நீங்க, விலங்கினங்களின்பயம் இலங்கிடாதோய நடத்துவ ரெசன" ஆன்றோர்வாக்கியம்போல் மனுநீதிமாறாமல் அரசாட்சி செய்துவந்தார். இதற்கு,

இராஜமணிமாலை

மானும் புலியுடன் பசுக் கூட்டங்கள்
வனத்திலிருக்கின்ற யானை சிங்கம்
தானும் மனம்போ லொரு துறையிற்
றண்ணீர் தானுண்டு தாகந்தீரும்"



இவ்வித வைபவத்துடன் நெடுநாளாக அரசியற்றிவருபவர்களா யும், திரிலோகங்களிலேயும் புகழ்பெற்றவர்களாயும், அன்னவர்களின் அன்பும் அனுக்கிரகமு மடைந்தவர்களாயும், ஆழ்ந்த கருத்துடன் சகல சாஸ்திரங்களையும், ஆராய்ச்சிசெய்து வருபவர்களாயும், நீதி தவ றாமல் ராஜ்ஜியபரிபாலனஞ் செய்துவந்தும், பிராரத்வகன்ம வசத்தால் புத்திரோற்பத்தி யில்லாதவர்களாய் விட்டபடியால் மனம்நொந்து மந்திரிமார் பெரியோர் முதலானவர்களை வினவி அவர்களாஞ்ஞைப் படி முப்பத்திரண்டு தர்மங்களைச் செய்தும் சந்ததியில்லாமல் போகவே மனம் நொந்தார்கள். இதற்கு,

[illegible] — A. விருத்தம்.

இந்திரனை நேர்தனையர் நால்வரவரவர்களுக்
கிருநால்வரிரு புத்திரிகள்
இடலொடு பிறந்திடுமவர் விசாலாவதியி
லினிதாக வரசாளவாள்
சந்ததியிலாது வெகு சிந்தனையதாகிமதி
தனையுதவு மந்திரிகளுடன்
தங்கள் மனதனிலுறுகின்ற திவையாவையெனச்
சாற்றுவர் தேற்றுவாரே.

இவ்விதமாய் புத்திராபேட்சையாய் இருக்கும் எண்மரும் இனி யாம் தவமியற்றுவதே மேலென நினைத்தவர்களாய் வனத்தைச் சார்ந்து தபோதனர்களை யடைந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து துக்காக்கிராந்தர்களாய் நின்று எண்மரும் தம்குறைகளை விளம்பினார் கள். எவ்வாறெனில்,

திருக்குறள்.

"எழுபிறப்புந் தீயவை தீண்டாப் பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்—"
மக்கண் மெய் தீண்டலுடற்கின்ப மற்றவர்
சொற் கேட்டலின்பஞ் செவிக்கு

என்பதைப் போல் வாழையடி வாழையாய் எங்கும் தழைக்க வும், இரௌரவம், சூகரம், ரோதம், தாலம், விலசனம், மகாச் சுவாலம், தப்தகும்பம், லவணம், விலோசிதம், ருதிராம்பம், வைதரணி, கிருமிசம், கிருமிபோசனம், அசிபத்திரம், கிருஷ்ணம், லாலாபட்சம், பூபவகம், அக்நி சுவாலம், அதச்சிரம், சந்தமிசம், கிருஷ்ண சூத்திரம், தமசு, அவீசு, சுவபோசனம், அப்ரதிஷ்டம், எனச் சொல்லக் கூடிய நரகங்களில் வீழாவண்ணம் பரகதியடையு

மாறு செய்யும் மகப்பேறில்லாக் குறைவைப்பற்றி மிக்க வியஸனத் துடனுரைத்தார்கள்.

இவை யாவையும் கேட்ட முனிசிரேஷ்டர்கள் கிருபா நோக்கம் வைத்து, கேளுங்கள் பிரிதிவீச்சுர வம்ஸஸ்தர்களே புத்திராபேட்சை கொண்ட உங்களது குறை நீங்க இங்கு வந்தீராயினும் யாம் வினவிய படி பூபிரதக்ஷிணம் செய்தும், ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங் களில் மூழ்கியும், க்ஷேத்திரவாஸம் செய்தும், மூர்த்திகளைத் தரிசித் தும், அர்ச்சனைகள் செய்தும், சாதுக்களைச் சேவித்துபசரித்தும், விரதங்களை யனுஷ்டித்தும், முடிவில் (திருக்காஞ்சி க்ஷேத்திரத்தின் கணுள்ள கம்பாநதி தீரத்தில் மாவடி யேகாம்பரரைக் குறித்துத் தவஞ்செய்த சுவர்ணகாமாக்ஷி) யெனத் திருநாமமுற்று காமகோடி பீடத்தி லிரானின்ற அம்பிகை சன்னிதியடைந்து தவஞ்செய்து தேவியால் அனுக்கிரகம் பெறுவீர்களாகில் உங்கட்கு சந்ததிக ளுண்டாகிச் சுகம் பெறுவீர்கள்.

மேலும் இயம நியமங்களால் மனோஜெயத்தையும், பிராணா யாமத்தாற் சுவாச ஜெபத்தையும் உடையவராய் பிரணவாட்சரத்தை உச்சரிப்பதால் வாத, பித்த, சிலேட்டுமங்களைச் சமப்படுத்தியும், கும்பக மார்க்கத்தாற் குண்டலினி சத்தியை மூலாதாரத்தில் பிராண னோடு அபான வாயுவையுஞ் சேர்த்து மேலெழுப்பி புருவமத்தியில் அக்குண்டலியை யிருத்தி, மனோலயமடைந்து ஜீவசொரூப சாக்ஷாத் காரமடைந்து தனது புருவமத்தியத்துக்கு மேலே பன்னிரண்டங் குலத்துக் கப்பால் தேவியின் திருவுருவை யிருத்தி ஓங்காரத்தோடு அம்மனது திருமந்திரத்தைச் சேர்த்துத் தியானிக்கிற் பிரசன்ன மாவாள். இதற்கு

## இராமதேவர் பூஜாவிதி

ஆதியென்ற மணிவிளக்கை யறியவேணும்
அகண்டபரி பூரணத்தைக் காணவேணுஞ்
சோதியென்ற தூயவெளி மார்க்க மெல்லாஞ்
சுகம்பெறவே மனோன்மணி யென்னுத்தாடன்னை
நீதியென்ற பரஞ்சோதி யாயிபாதம்
நிர்க்குணத்தி னின்றநிலை யாருங்காணார்
வீதியென்ற வேதாந்தத் துள்ளே நின்று
விளங்குவது பூசையிது வீண்போகாதே



இவ்வணங்கூறிய முனிச்சிரேஷ்டருக்கு இவ்வெண்மருந்தெண்ட னிட்டு; சுவாமின்! தாம் கூறிய வண்ணம் யாம் செய்யச் சித்தமாயிருக் கிறோம். அக்காமகோடி பீடம் எத்திசையி லெவ்வித மிருக்கிற தென்று விளங்கவுரைக்க வேண்டுமென்று வினவிய வைடங்கன் முத லெண்மருக்கும் முனிச்சிரேஷ்டர்கள் கிருபையோ டுரைக்கின்றனர்.

முதலத்தியாயம்

முற்றும்.

ஓம் தத் சத்

ஸ்ரீ காமாக்ஷியம்மன் துணை

# இரண்டாவது அத்தியாயம்

## பூலோகத்தின் பிரபாவம்.

ஸ்ரீ ஆரியமுனிவர் நித்யப்படி அனுஷ்டானங்களை முடித்துத் தமதாச்சிரமத்திலிருந்துகொண்டு சொல்வார். கேளும்சகலமுமறிந்த நாரதமுனிவரே வனத்திற் பிரிதிவீச்சுர சந்ததியாராகிய வைடங்கன் முதலிய எண்மருங் கேட்டுக்கொண்டதற்கு ரிஷிகள் கூறியதை விளம்புவோமெனப் புகலலாயினர்.

கேளுங்களரசர்களே மத்தியலோகமாகிய சக்கரவாளகிரியை வீணுதண்டாகக்கொண்டு, பத்தொன்பதுகோடியே எழுபதுலக்ஷம் மைல் விஸ்தீரணமுடையதும், சாகரங்களுட்பட பஞ்ச தசகோடி விஸ்தீரண முடையதுமான இப்பூமண்டலம் பிரமனது வலது புயத்தினுதித்த சுவாயம்பு மநுவால் அரசாளப்பட்டு பிறகு அவரது புத்திரர்களாகிய அங்கதீரன், மேதாதி, வபுட்டு யந்தி, புரதிட்டு, துதிமன், அவ்வியன் என்னும் ஏழு புத்திரருக்கும் ஏழுபாகமாக ஜம்புத்தீவு, பிலக்ஷத்தீவு, சான்மலித்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சாகத்தீவு, புஷ்க்காத்தீவு என ஏழுதீபங்களாக வகுத்துக் கொடுக்கப்பட்டது. அவரவர்கள் அரசு புரியுங்காலத்தில் ஜம்புத்தீவையாண்ட அங்கதீரன் தனது புத்திரரொன்பது பேருக்கும் ஒன்பது பாகமாக்கி பரதன், இரவி, அனலன், கிம்புருடன், கேதுமாலோன், பத்திவை, சுத்தினி, பராவிரதன், இரணியன், குருஎன்பவர்களுக்கு நவகண்டங்களாக பகுத்துக்கொடுக்க அவரவர்கள் ஆண்டுவந்தனர்கள். அதில் இப்பூமியைப்பரதன் ஆண்டதால் இதற்குப் பரதகண்டம் எனப் பெயராயிற்று. சத்த தீவுகளுக்கும் சத்த சாகரங்களுக்கும்.

பனிரெண்டாவது நிகண்டு.

இவர்தரு நாவலோடே பிலவியே குசைகிரவுஞ்சம்
புவிபுனை கமுகுதெங்கு புஷ்க்கரந் தீவேழின்பேர்
உவர்கரும் பின்சாறோடே யொன்பது நெய்சிறந்த
நவமதாந் தயிர்பாலப்பு காட்டிய கடலேழின்பேர்



## புஷ்க்கரத் தீவு

மனுவின் குமாரன் அவ்வியன் ஆண்டுவந்த புஷ்க்கரத்தீவானது ஒருகோடி யிருபத்தெட்டு லட்சயோசனை விஸ்தாரமுடையது. குமுதவரை என்னும் மலையானது சூழ்ந்துகொண் டிருக்கிறது. அம்மலைக்குப்புறத்தில் அறுபத்து நான்கிலட்சம் யோசனை விஸ்தீரண முடைய நன்னீர்க்கடல் சூழ்ந்திருக்கும். அங்கு சர்வதோபத்திரம் மிகுதியானது. மானதசரசு என்னும் ஆயிரயோசனை விஸ்தாரமுடைய தடாகமும் உண்டு. அதில் தாமரை மலர்கள் ஐந்து யோசனையுயர்ந்து விளங்கும். கடலுக்குப் புறம்பே உலகங்களுமில்லை. ஆனற் பொன்னிறமான பூமி. அதற்கிரட்டிப்பு விரிவாகவும் ஆயிரம் யோசனையுயர்ந்தும் இருக்கும்.

## சாகத்தீவு.

மனுவின் குமாரன் துதிமன் ஆண்ட இந்த சாகத்தீவானது அறுபத்து நான்கு லட்சயோசனை அகல நீளமுள்ளது. இத்தீவை மந்திரகிரி என்னும் மலையானது சூழ்ந்துகொண்டிருக்கும். அம்மலைக் குட்புறத்தில் 32 யோசனை யகல நீளமுள்ள பால் சமுத்திரம் சூழ்ந்திருக்கிறது. கீரைத்தண்டுகள் அதிகமாக முளைத்திருக்கும். இதில் உதயகிரி, ஜலதாரம், பரேத், சாமம், அஸ்தகிரி, அம்பிகாகிரி, கேசரியென்னும் ஏழுபர்வதங்களும், சுகுமாரி, குமாரி, நளினு, வேணுமா, இட்சு, ரேணுகா, கபஸ்தி என ஏழு நதிகளுமுள்ளன. அங்குற்றவர்கள் தருமவான்களா யிருப்பதுடன் சூரியனையும் பூசிப்பார்கள்.

## கிரௌஞ்சத்தீவு.

மனுவின் குமாரன் புரதிட்டு என்பவன் ஆண்ட இந்தக் கிரௌஞ்சத்தீவானது முப்பத்திரண்டு லட்சயோசனை அகல நீளமுள்ளது. கிரௌஞ்சம் என்னும் மலையானது சூழ்ந்திருக்கிறது. இம்மலைக்குப்புறத்தில் 16 லட்சம் யோசனை யுடைய தயிர்க்கடல் சூழ்ந்துகொண் டிருக்கிறது., அன்றில் பக்ஷிகள் மிகுந்திருக்கின்றன. கிரௌஞ்சம், வாமனம், அந்தகாரணம், தியாவிருத்தியம், புண்டரீகம், துந்துமி, சுமனசு என்னும் ஏழு பருவதங்களும், கௌரி, குமுதவதி, சந்தியா, ராத்திரி, மனோ, ஜவாகியாதி, புண்டரீகா என்னும் ஏழு மலைகளுமுண்டு.

## குசைத்திவு.

மனுவின் குமாரன் யந்தி என்பவன் ஆண்டுவந்த இத்தீவானது 16 லட்சயோசனை யகல நீளமுள்ளது. இதை நீளுகம் என்னும் மலை சூழ்ந்திருக்கும். இதற்குட்புறத்தில் 8 லட்சயோசனை அகலநீளமுள்ள நெய்க்கடல் சூழ்ந்திருக்கிறது. இவ்விடத்துள்ள மலைகளில் கோமேதகம் அதிகமானதால் இதில் அசுரரும் தேவர்களும் கந்திருவர்களும் வசிப்பார்கள். குசேசயம், ஹரி, ஜரதிமான், புஷ்பவான், மணிதருமம், மகாசைலம், மந்திராக்ஷலம், எனஏழுமலைகளும், துதிபாவை, சிவை, பவித்திரை, சம்மதி, வித்யை, கம்பா, பஹீ என்னும்ஏழு நதிகளுமுள்ளன. தர்ப்பைப்புல்மிகுதியாக விருக்கும். இவ்விடத் துள்ளவர்கள் ஆச்சாரானுஷ்டானங்கள் தவிரமாட்டார்கள். நான்கு வருணத்தாருமுளர்.

## சான்மலித்திவு.

மனுவின் குமாரன் வபுட்டு ஆண்ட இத்தீவானது 8 லட்ச யோசனை யகல நீளமுள்ளது. மேருமந்திரம் என்னும் வரைசூழ்ந்திருக்கிறது. இதற்குப்புறத்தில் நான்கு லட்சம் அகல நீளமுடைய தேன் கடல் சூழ்ந்துகொண் டிருக்கிறது. மரங்கள் அதிகமாயிருக்கும். ஸ்வேதம், ஹரிதம், ஜீமுகம், ரோகதம், வைத்யுதம், மானவம், சுப்பிரபம், என ஏழுவருஷ பர்வதங்களுண்டு. சுக்லா, ரக்தா, ஹிரண்யா, சந்த்ரா, சக்ரா, விமோசனு, நிவர்த்தி, என ஏழு நதிகளுமுண்டு. இதில் நான்கு வருணத்தாருமுண்டு. எக்ய முதலியவற்றால் விஷ்ணுவை வணங்குவார்கள்.

## பிலட்சத்திவு.

மனுவின் குமாரன் மேதாதி ஆண்டுவந்த இந்த பிலட்சத்தீவானது நான்கு லட்சம் அகல நீளமுடையது. அதற்குப் புறத்தில் இரண்டு லட்ச அகல நீளமுடைய கருப்பஞ்சாற்றுக் கடல்சூழ்ந்து கொண்டிருக்கிறது. தர்ப்பைப்புல் அதிகமுள்ளது. அதில் கோமேதகம், சந்தரம், நாரதம், துந்துமி, சோமகம், சுவனஸ், விட்பிராஸம், என ஏழு வருஷங்களுமுண்டு. அங்குள்ள பர்வதங்களில் தேவர் கந்தர்வர்கள் வசிப்பார்கள். ஏழு நதிகளுமுண்டு. அங்குள்ளோருக்கு மனோவியாதி தேகபீடை கிடையாது.



## ஜம்புத்தீவு.

மனுவின் குமாரன் அங்கதீரன் ஆண்டுவந்த இந்த ஜம்புத்தீவானது எல்லாத் தீவுகளுக்கும் மத்தியிலுள்ளது. இரண்டு லட்சம் யோசனை விஸ்தீரணமான இந்தத் தீவை, லட்சம் யோசனை விஸ்தீரணமுடைய உவர்நீர்க் கடல்சூழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தத் தீவானது ஒரு தாமரை மலரைப்போலவும், இதன் மத்தியிலிருக்கும் மேரு மலையானது அதன் மொட்டுப்போலவும் விளங்கும். இது எல்லாத் தீபங்களையும் விட புண்ணிய தீபமென்று வழங்கும். இதில் வருணாச்சிரம தருமங்கள் கிரமமாய் நடந்து வருகிறபடியால் முத்திக் கேதுவாகிறது. இதற்கு,

வீரசிங்காதன புராணம்

> செம்பொன்மால் வரைத்தக்கிண நாவலந்தீவி
> லும்பர் போற்றிடு முயர்பதி பலபலவுள வா
> நம்புவோர்க்கு வல்வினையலா நவையற வொழிக்கும்
> வம்பதன்று பல்லூழிநாட் டெல்லையின் மருவும்

## மகாமேரு பருவதம்

இவ்விதமாய்க் கூறிய ஜம்புத்தீவில் காலஅளவாகிய நான்கு யுகங்களுமுண்டு. தவிர இதற்கு நடுநாயகமாய் விளங்கக்கூடிய * மகாமேரு பர்வதமானது பூமியிற் பதினாறாயிரம் யோசனை வேரூன்றி

* வசிஷ்டமுனிவரது பவுத்திரரும் பாராசருக்கு சத்தியவதியிடம் பிறந்த புத்திரருமாகிய வியாசர் வேதங்களை வகுத்து வரையறுத்ததின்பின் பாண்டவ சரித்திரத்தைத் தான் சொல்ல, தனது கொம்பிலொன்றை எழுத்தாணியாகக் கொண்டு கணநாதர் பாரதம் எழுத ஏடாகஅமைந்தது மேருவாம். இதற்கு "சீதப்பணிக்கோட்டு மால்வரை மேற் பாரதப்போர் தீட்டுந்—தனிக்கோட்டு வாரணம்" என பெருந்தேவனார் பாரதத்திலும், இன்னம் "சிராகவாழுஞ் சிவன்மைந்தனுமாயின்—கூராகக் கொம்பொடிந்த குற்றமே னம்மானே—ஒடிந்தல்லோ பாரதமு முண்டாச்சு வம்மானே" என சொக்கநாதப் புலவர் அம்மானையிலும், இன்னம் "மருக்கோலம் பாரதத்தை மருவுமுணவையுமாற்ற மருவியுண்ணத்—தெருக்கோலம் பாரதத்தைப் பொருவவைத்தான்—விநாயகனுஞ் சீர்மையோனே "என கச்சப்பால ஐயரவர்களும், இன்னம் "நீடாழியுலகத்து மறைநாலோடைந்தென்று நிலைநிற்கவே—வாடாத தவவாய்மை தவிராத முனிராஜன் மாபாரதஞ் சொன்னநா—ளேடாக வடமேருவெற்பாகவெண் கூரெழுத்தாணி தன்—கோடாகவெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ" என வில்லிபுத்தூரார் பாரதத்திலும் கூறியுள்ளன.

யும், எண்பத்து நான்காயிரம் யோசனை உயரமும் அதன் சிகரம் முப்பத்திரண்டாயிரம் யோசனையகலமு முடையது. தென்புறம் காணப்பட்ட மேருவை, வடவாமுகமென்றும், வடபுறம் காணப்பட்ட மேருவை சுமேருவென்றும், அச்சுமேருவின்புறம் தேவபாகமென்றும், வடவாமுகத்தின்புறம் அசுரபாகமென்றும் கூறப்படும். அப்மேருவின் நுனியில் மூன்று சிகரங்களுண்டு. அதில் திருமூர்த்திகளும் வாசம்செய்வார்கள். ஹிமாசலம், ஏமகூடம், நிஷதம், என மேருவின் தென் திசையிலும், நீலம், சுவேதம், சிருங்கி, என மேருவின் வட திசையிலும், ஆறு பர்வதங்களு மிருக்கின்றன.

இதல்லாமல் ஏழுநதிகளும், நாலு நந்தனவனங்களும், நாலுமடுக்களும், நாலு ஓடைகளு முண்டு. இந்த மேருவின் மேற்கில் விபலபர்வதமும், அப்பர்வதத்தில் ஆயிரம் யோசனை விஸ்தீரணமுடைய அரசமரமும், வடக்கில் சுபார்ஸ்பர்வதமும், அப்பர்வதத்தில் ஆயிரம் யோசனை விஸ்தீரணமுடைய ஆலமாமும், கிழக்கில் மந்தரகிரியெனும் பர்வதமும், அப்பர்வதத்தில் ஆயிரம் யோசனை விஸ்தீரணமுடைய கடப்பமரமும், தெற்கில் கந்தமாதன பர்வதமும், அப்பர்வதத்தில் இரண்டாயிரம் யோசனை விஸ்தீரணமுடைய (நாவல்) ஜம்புவிருக்ஷமு மிருக்கின்றது. இம்மாத்தினால் தான் ஜம்புத் தீபமென்று காரணப்பெயர் உண்டாயிற்று. இத்தீவில் இருக்கும் மேருவைப்பற்றி.

பஞ்சமஸ்கந்தம்

சகல தீவுகள் மத்தியிற் றங்கிடும்
மகமேரு வின்றன் மாட்சியும் பூமியாம்
முகட்டுத் தாமரை பூவின் மொக்கினது
பகட்டும் வர்ணிக்கப் படுகின்ற தாமரோ

மேற்கூறியபடி ஐந்தாம் வேதமாகிய பாரதத்தை எழுத ஏடாகவமைந்த மேருமலையை மத்தியில் இருத்தியிருக்கும் இத்தீவை அங்கதீரன் ஆண்டுவந்து தனது புத்திரர்களாகிய பிராதன், கிம்புருடன், கேதுமாலோன், பத்திவைசுத்தினி, பாராவிரதன், இரவி, அனலன், இரணியன், குரு, என ஒன்பதுபேருக்கும் நவகண்டங்களாகப் பிரித்துக்கொடுத்து இந்த ஒன்பதுபேரும் இன்னுவலந்தீவை யாண்டு வந்தார்கள். இதன் நாலுதிக்கிலும் யவகோடி, இலங்கை, ரோமகம், சித்தபுரி என நான்குபட்டணங்கள் தேவரால் உண்டாக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஆயிரத்து நூற்று அறுபத்தைந்து யோசனை



விஸ்தாரமாய் இருக்கின்றது. இப்பாதகண்டத்தைப் பரதன் ஆண்டுவந்தனன். ஜம்புத்தீவே பூவுலகில் சிலாக்கிய மென்பதற்கு,

கச்சிமாலை

விண்ணுக்குநாயகஞ் செங்கதிரோனென்பர் வேதமுன்னை
பண்ணுக்கு நாயக மூன்றுமறையென்பர் பற்பலவா
மண்ணுக்குநாயக நாவலந்தீ வென்பர் மண்பதைதங்
கண்ணுக்கு நாயகனே கவிகச்சி யேகம்பனே.

நவகண்டங்கள.

2 அங்கதீரன் மகனாகிய கிம்புருடன் ஆண்டுவந்த கண்டத்திற்கு கிம்புருட கண்டமென்று பெயர். இது தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரணமும் மேருமலைக்குத் தக்ஷண திசையிலு மிருக்கிறது. இங்கு ஆஞ்சநேயர் பிரம பட்டத்துக்கு வேண்டி ராமபஜனை செய்து கொண்டிருக்கிறார்.

3 அங்கதீரன் மகனாகிய கேதுமாலோன் ஆண்டுவந்தகேதுமால கண்டமானது ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரண முடையதும், ரோமகபட்டணத்தை யுடையதுமான கண்டமாகும்.

4 அங்கதீரன் மகனாகிய பத்திவைசுத்தினி ஆண்டுவந்த பத்திராசுவ கண்டமானது ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரண முடையதும் யவகோடி பட்டணத்தை யுடையதுமாம்.

5 அங்கதீரன் மகனாகிய இளாவிரதன் ஆண்டுவந்த இளாவிரத கண்டமானது ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரண முடையது. இதில் மேருமலையானது மத்தியில் தாமரை மொக்குபோல் விளங்கும்.

6 அங்கதீரன் மகனாகிய இரவியன் ஆண்டுவந்த இரவிய கண்டமானது ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரண முடையது.

7 அங்கதீரன் மகன் அனிலன் ஆண்டுவந்த அரிவருட கண்டமானது ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரண முடையது.

8 அங்கதீரன் மகனாகிய இரணியன் ஆண்டுவந்த இரணியகண்டமானது ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரணமுடையது. இவன் ஸ்ரீ மகாவிஷ்ணுவால் மாணமடைந்தவன்.

9 அங்கதீரன் மகன் குரு வென்பவன் ஆண்டுவந்த குரு கண்டமானது ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தீரண முடையது. சஞ்சீவி மலைகள் மிருந்ததும் வடக்கே சித்தபுரி பட்டணத்தையு முடையது.

## பரதகண்டம்.

1 அங்கதீரன் முதல் புத்திரன் பரதன் ஆண்டுவந்த கண்டத்துக்குப் பரத கண்டமென்று பெயர் இந்தக் கண்டமானது ஒன்பதினாயிரம்யோசனை விஸ்தீரண முடையது. இதன் தெற்கில் லங்காபுரி பட்டணமிருக்கிறது. இந்தப் * பட்டணமானது எழுநூறு யோசனை விஸ்தீரண முடையது. பல ஜாதிவிருக்ஷ[illegible] அழகை அளவறியக்கூடாத அசோகவனமு மிருந்தது. அசுரர்கள் அரசாக்ஷி செய்த இடம். இந்தக் கண்டத்திற் கிது தெற்கெல்லையாம்.

வடக்கெல்லையாகிய இமயமலையானது நூற்றெழுபத்தைந்து காதவாரம் தென்கிழக்கிலும், இருபத்தொன்பதினாயிரமடி உயரத்திலு முள்ளது. சிந்து நதியானது இந்தமலைக்கு வடக்கில் இருக்கப்பட்ட கைலாசமலையில் உற்பத்தியாகி இமயத்தின் மேற்கோடியைச் சுற்றிக்கொண்டு பஞ்சாப்பு, சிந்து முதலான தேசங்களில் விஜயஞ்செய்து தென்மேற்காய் நூற்றெண்பது காதம் ஓடி மேற்கடலில் சங்கமமாகின்றது. இந்நதியின் உபநதிகளானவை மேற்கிலிருந்து வந்து சேரும், காபூல் நதியும், இமயத்தின் தென்சாரலில் உற்பத்தியாகி மேற்கு முகமாய்வந்து சேரு[illegible] நான்கு உபநதிகளுமேயாம். இப்படி பஞ்சநதிகளை யுடையது சிந்துநதி யெனப்படும்.

† இமயமலையின் வடக்கில் உற்பத்தியாகி கிழக்கே சென்று இம்மலையின் கீழ்கோடியைச் சுற்றிக்கொண்டு தென்மேற்காயும் பின் தெற்காயும் நூற்றுப்பத்து காதம் ஓடி கீழ் சமுத்திரத்தில் சங்கமமாகும் பிரம்மபுத்திரா எனும் நதி.

* இலங்கையானது ஆதியிற் குபேரன் ஆண்டு அதன்பின் அசுராளர் சாட்சி செய்த இடம். இக்காலத்தில் கொளம்பு (சிலோன்) தேசமெனத் தெரிகிறது. இதில் பல மூர்த்தி ஸ்தலங்களிருப்பினும் முக்கியமாய் ஜோதி பெற்றது சிவனடிபாதம் என்னும் திவ்ய க்ஷேத்திரம். இம்மலையிலிருந்து காலையில் சூரியனைத் தரிசிக்கில் சத்தமா பூட்டிய பொற்றையாழியின் இந்திராசல ரத்தினது சாயல் தோற்றும். இந்த லங்கையை கருணாகரத் தொண்ட சோழன் ஆண்டதாயும் தெரியவருகின்றது. அதாவது "இலங்கை யெறிந்த கருணாகரன்ற னிகல்வின் சிலையின் வலி கேட்பீர் — கலிங்க மெறிந்த கருணாகரன்றன் களப்போர் பாடத்திறமினே" எனக்கூறியபடி கலிங்கத்துப் பரணியாற் றெரியவருகிறது.

† இமயமலையில் கங்கை யுற்பத்தியாகிறது. இதன் பிரபாவம் முதலத்தியாயத்திற் கூறியிருக்கிறது.



இந்தக் கண்டத்தின் மத்தியிலுள்ளவை விந்தியமலையும், ஸாத்பூராமலையும். இதில் கிழமேல் அறுபது காத நீளமுள்ள ஸாத்பூராமலைக்குக் கிழக்கே நருமதை நதியானது உற்பத்தியாகி இவ்விரண்டு மலைகளுக்கும் மத்தியில் எண்பது காத மேற்கு முகமாயோடி மேல் சமுத்திரத்தில் சங்கமமாகின்றது.

இந்த ஸாத்பூராமலையின் கீழ்கோடி மாகாணங்களில் உற்பத்தியாகிற தபதிநதியானது இந்த மலைக்குத் தட்சண பாரிசமாய் நாற்பத்தைந்து காதம் மேற்கு முகமாயோடி மேற் சமுத்திரத்தில் சங்கமமாகின்றது.

மத்திய மாகாணங்களில் மகாநதியானது உற்பத்தியாகி கிழக்கு முகமாய் ஐம்பத்திரண்டு காதம் ஓடி ஜெகந்நாதம் வழியாய் கீழ்க்கடலில் சங்கமமாகின்றது.

1 விந்திய மலையானது கிழமேல் முப்பத்தைந்துகாதம் நீளமும் நாலாயிரத்து ஐந்நூறு அடி உயரமுமுடைய இந்தமலையில் கோதாவரி நதியானது உற்பத்தியாகி தென் கிழக்காயும் பின் கிழக்காயும் ஓடி கீழ்க் கடலில் சங்கமமாகின்றது. இதற்கு உபநதிகள் பலவுண்டு. அவைகளில் வடகரையிலிருந்து வாலான இந்திராவதியெனும் நதியாம். ஈதன்றி இம்மலையில் பீமாநதியும் உற்பத்தியாகின்றது.

2. சகியமெனும் மகாபலேஸ்வரத்தில் உற்பத்தியாகும் கிருஷ்ணாநதியானது தென் கிழக்காயும் பின் கிழக்காயும் எண்பதுகாதம் ஓடி கீழ் சமுத்திரத்தில் சங்கமமாகின்றது. இதற்கு உபநதிகளாகிய வடகரையில் பீமாநதியும் தென் கரையில் துங்கபத்திராவும் சேருகின்றன.

3 பாரியாத்திர மெனும் பர்வதத்தில் நர்மதா, சுரஸா, எனும் நதிகள் உற்பத்தியாகின்றன. தவிரவும், யமுனா, பிரயாகை, சரஸ்வதி முதலான நதிகளும் இக்கண்டத்தின் வடபாரிசத்தி லிருக்கின்றன.

4 * நந்தி துர்க்கத்தில் உற்பத்தியாகின்ற பினாகினி யெனும் (வடபெண்ணை) நதியானது முப்பத்தைந்து காதம் ஓடி கீழ்க் கடலில் சங்கமமாகின்றது, இதற்கு உபநதிகள் சித்திராவதி, செய்யாறு, பாப்பாக்னியாம்.

* நந்தி துர்க்கத்தில் பாலாறு (க்ஷீரநதி) உற்பத்தியும் அதன் பிரபாவமும் மூன்றாவது அத்தியாயத்தில் நன்கு விளங்கும்.

5 † குடகுமலையில் (பிரமகிரியில்) உற்பத்தியாகி தென் கிழக்காய் விஜயம் செய்து கிழக் கடலில் சங்கமமாகின்ற காவேரி நதிக்கு உபநதிகள் தட்சண வெள்ளியங்கிரியில் உற்பத்தியாகி கிழக்கு முகமாய் ஓடிச்சேரும் பவானியாறு, நொய்யலாறு இவைகளும், பூனாச்சி மலையில் உற்பத்தியாகி கிழக்குமுகமாய் ஓடிச் சேரும், அமராவதியுமாம்.

6 மகேந்திர மெனும் மலையில் திரியாமா, ரிஷிகுல்யா, எனும் நதிகள் உற்பத்தியாகின்றன. மலயமெனும் மலையில் கிருதமாலா, தாம்பிரபரணி, யென்னும் நதிகள் உற்பத்தியாகின்றன. சர்க்கிமா யெனும் மலையில் குமரி எனும் நதி உற்பத்தியாகின்றது. ரிக்ஷண மெனு மலையில் வேதஸ்மிருதி உற்பத்தியாகின்றது. இந்நதிகளியாவும் புண்ணிய முடையதென விளங்க ஈஸ்வரன் ஜடாபாரத்திலிருக்கும் கங்கைக்கு ஒப்பிடலா மென்பதற்கு.

வீரசிங்காதன புராணம்.

ஆதியிற்கங்கை கோதாவரிநருமதை காவேரி
மேதகுயமுனையே தாம்பிரணி வாணிசிந்து
தீதில்வேகவதி யென்னத்திகழ்நவ கன்னிமார்க்குச்
சாதகம்புரிந்த விச்சுவேசர் சந்நிதியிலுற்றான்

## ஆக்கினேய கண்டம்.

இக்கண்டத்தி லுள்ளவர்களில் புண்ணியஞ் செய்தோர் புண்ணிய லோகத்தையும், பாபம் செய்தோர் நரகத்தையும், ஞானவான்கள் மோக்ஷத்தையு மடைகிறார்கள். இப்பாதகண்டமானது மூன்று பிரிவுள்ள தென்று ஆக்கேயபுராணம் 135-வது அத்தியாயத்தில் வட பெண்ணை முதல், குமரி இலங்கையாகிய தென்கோடி வரையில் ஆக்கிநேய (ஹக்நி) கண்டமென்றும், பெண்ணையினின்று விந்திய பர்வதம் வரையில் சௌர (சூரிய) கண்டமென்றும், விந்திய பர்வதத்தினின்று இமயகிரி வரையில் சௌமிய (சந்திர) கண்டமென்றும் பகுத்திருப்பதில் ஆக்கினேய கண்டத்திலுள்ள முக்கியஸ்தலங்களாவன,

---

† குடகுமலையில் உற்பத்தியாகும் காவேரி நதியைப்பற்றி ஏழாவது அத்தியாயத்தில் நன்கு விளங்கும்.



கட்டளைக்கலித்துறை.

ஈழநாட்டிரண்டு மலைநாட்டிலொன்று கொங்கேழுவைவை
வாணாட்டீரேழ் நடுநாட்டிலெழுமூன்றொன்றைந் தாம்வடக்கிற்
சோணாட்டொரு நூற்றுத்தொண்ணூறென்றோர்வர் துளுவத்திலொன்று
நாணாட்டிய தொண்டை நன்னாட்டி லாறைந்திருநகரே.

இதன் பொருளாவது

ஈழநாட்டிலுள்ள ஸ்தலங்கள்—2.

திருக்கோணமலை,—திருக்காதீச்சுரம்

மலைநாட்டில், திருவஞ்சைக்களம்—1.

கொங்குநாட்டில் 7.

அவிநாசி, முருகன்பூண்டி, திருநணாக்கொடி, செங்குன்றூர், வெஞ்சமாக்கூடல், பாண்டிக் கொடிமுடி, கருவூர்.

பாண்டியநாட்டில்—14.

மதுரை, ஆப்பனூர், திருப்பரங்குன்று, திருவேடகம், கொடுங்குன்றம், புத்தூர், குணவாயில், இராமேச்சுரம், ஆடானை, கானப்பேர், பூவணம், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருநெல்வேலி.

நடுநாட்டில்—22.

அறத்துறை, தூங்கானைமாடம், கூடலையாற்றூர், எருக்கத்தம்புலியூர், திணைநகர், சோபுரம், திருவதிகை, திருநாவலூர், முருக்குன்றம், நெல்வெண்ணெய் நல்லூர், அரையணி, நல்லூர், இடையாறு, திருவெண்ணெய் நல்லூர், துறையூர், வடுகூர், திருமாணிக்குழி, பாதிரிப்புலியூர், முண்டீச்சுரம், புரவார் பனங்காட்டூர், ஆமாத்தூர், திருவண்ணாமலை.

வடநாட்டில் 5.

திருப்பருப்பதம், அநேகதங்காவதம், திருக்கேதாரம், கொடுத்தான்மலை, கைலாசமலை.

துளுவம் 1

கோகர்ணம்

சோழநாட்டில் 190

காவேரிக்கு வடகரையிலுள்ள ஸ்தலங்கள்:—சிதம்பரம், திருவேட்களம், நெல்வாயில், கழிப்பாலை, பெருமணம், மயேந்திரப்

பள்ளி, திருமுல்லைவாயில், கலிக்காமூர், சாய்க்காடு, பல்லவனீச்சுரம், திருவெண்காடு, திருக்காட்டுப்பள்ளி, குருகாவூர், சீர்காழி, கோலக்கா, புள்ளிருக்கும் வேளூர், கண்ணார் கோயில், கடைமுடி, நின்றியூர், திருப்புன்கூர், நீடூர், அன்னியூர், வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, மணஞ்சேரி, திருக்கொறுக்கை, கருப்பரியலூர், குரக்குக்கா, வாளொளிபுற்றூர், மண்ணிப்படிக்கரை, ஓமாம்புலியூர், கானாட்டு முள்ளூர், திருநாரையூர், கடம்பூர், பந்தணநல்லூர், கஞ்சனூர், கோடிகா, மங்கலக்குடி, திருப்பனந்தாள், ஆப்பாடி, திருச்சேஞ்ஞலூர், தேவன்குடி, வியலூர், கொட்டையூர், இன்னம்பர், புறம்பயம், விசயமங்கை, வைகாவூர், வடகுறங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, நெய்த்தானம், பெரும்புலியூர், திருமழபாடி, திருப்பழூர், திருக்கானூர், அன்பிலாலந்துறை, மாந்துறை, பாற்றுறை, திருவானைக்காவல், திருப்பைஞ்ஞீலி, பாச்சிலாச்சிராமம், ஈங்கோய் மலை, ஆக ௬௩.

காவேரிக்குத் தென்கரையிலுள்ள ஸ்தலங்கள்:—வாட்போக்கி, கடம்பந்துறை, பராய்த்துறை, கள்குடி, மூக்கீச்சுரம், திருச்சிராப்பள்ளி, எறும்பியூர், நெடுங்களம், மேலைக்காட்டுப்பள்ளி, ஆலம்பொழில், பூந்துருத்தி, கண்டியூர், சோற்றுத்துறை, வேதிகுடி, தென்குடித்திட்டை, புள்ளமங்கை, சக்காப்பள்ளி, கருகாவூர், பாலத்துறை, நல்லூர், ஆவூர், பசுபதீச்சுரம், சத்திமுற்றம், பட்டீச்சுரம், பழையாறை, வடதளி, வலஞ்சுழி, கும்பகோணம் குடந்தைக் கீட்கோட்டம், குடந்தைக்காரோணம், திருநாகேச்சுரம், திருவிடைமருதூர், தென்குறங்காடு துறை, நீலக்குடி, வைகன்மாடக்கோயில், நல்லம், கோழம்பம், திருவாவடு துறை, துருத்தி, திருவழுந்தூர், மாயூரம், விபநகர், பறியலூர், செம்பொன்பள்ளி, நனிபள்ளி, பலம்புரம், தலைச்சங்காடு, ஆக்கூர், தான் தோன்றிமடம், திருக்கடவூர், திருக்கடவூர் மயானம், வேட்டக்குடி, தெளிச்சேரி, தருமபுரம், திருநள்ளாறு, கோட்டாறு, அம்பர்பெருந்திருக்கோயில் அம்பர்மாகாளம், மீயச்சூரிளங் கோயில், திலதைப்பதி, பாம்புரம், சிறுகுடி, திருவீழிமிழலை, வன்னியூர், கருவிலி, பேணு பெருந்துறை, நரையூர்ச்சித் தீச்சுரம், அரிசிற்கரைப்புத்தூர், சிவபுரம், கபநல்லூர், கருக்குடி, வாஞ்சியம், நல்லினத்துப்பெருங்கோயில், கொண்டீச்சுரம், பனையூர், விற்குடி, திருப்புகலூர், வர்த்தமானீச்சுரம், இராவணதீச்சுரம், பயற்றூர், செங்காட்டங்குடி, மருகல், சாத்த



மங்கை, நாகைக்காரோணம், சிக்கல், கீழ்வேளூர், தேவூர், பள்ளியின் முக்கூடல், திருவாரூர் மூலத்தானம், திருவாரூராநெறி, திருவாரூர்ப்பறவையுண் மண்டளி, விளமருகவீரம், தெருவேளூர், தலையாலங்காடு, குடவாயில், சேரை, நாலூர் மயானம், நடுவாய்க்கரைப் புத்தூர், இரும்பூழை, அரதைப்பெரும்பாளி, அவனிவணல்லூர், பருதிநியமம், வெண்ணி, பூவனூர், பாதாளீச்சுரம், திருக்களர், சிற்றேமம், உசாத்தானம், இடும்பாவனம், கடிக்குழன், தண்டலைநீணெறி, கோட்டூர், வெண்டுறை, கொள்ளம்பூதூர், பேரெயில், கொள்ளிக்காடு, தென்கூர், நெல்லிக்கா, நாட்டியத்தான்குடி, காறால், கன்றாப்பூர், வலிவலம், கச்சினம், கோளிலி, வாய்மூர், வேதாரண்யம், அகத்தியான் பள்ளி, கோடிக்குழகர் ஆக ௱௨௭.

### தொண்டநாட்டில் 32

கச்சியேகம்பம், கச்சிமேற்றளி, கச்சியோண காந்தன்றளி, கச்சியனேகதங்காவதம், கச்சிநெறிக்காரைக் காடு, குறங்கணி முத்தம், மாகறல், ஒத்தூர், வண்பாத்தான், பனங்காட்டூர், வல்லம், வாட்பேறு, ஊறல், இலம்பையங்கோட்டூர், விற்கோலம், திருவாலங்காடு, பாசூர், வெண்பாக்கம், கன்னில், திருக்காளத்தி, திருவொற்றியூர், வலிதாயம், வடமுல்லைவாயில், வேற்காடு, மயிலாப்பூர், வான்மியூர், கச்சூராலக்கோயில், இடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், திருவக்கரை, அரசிலி, இரும்பைமாகாளம்.

## தொண்டைமண்டலம்.

அழகிய ஆலயங்களையே ஆபரணங்களாக அமைக்கப்பெற்ற ஆக்னேய கண்டத்தில், பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, கொங்குநாடு, தொண்டை, நாடு, என்னு மின்னம்பல நாடுகளாகப் பிரித்து வழங்குவதுடன், தேசபாஷைகள் முக்கியமாய் தமிழ், தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம், முதலிய பாஷைகளாய் வழங்கப்பட்டுள்ளது. இவைகளில் தொண்டைநாட்டுக்கு,

### திருக்கழுக்குன்ற புராணம்

வண்டரமலர்த்தேன் மாந்து பெண்ணையின் வடபால்வேழங்
கண்டரவங்கண்டார்க்குங் காளத்திவரையின் தென்பாற்
றண்டரப்புணரிமேல் பாற் பவழமாசைலக் கீழ்பாற்
றெண்டிரத் திருநாடென்னு மதன்வளந்தொகுத்துச் சொல்வாம்.

### ஔவை வெண்பா

மேற்குப் பவழமலை வெங்கட நேர்வடக்காம்
ஆர்க்குமுவரி யணிகிழக்குச்—சீர்க்குறையர்
தெற்குப்பிணாகை திகழிருபதின் காத
நற் றொண்டைநாட் டெல்லைநாடு.

கேட்பீர் பிரித்வீச்சுர வம்ஸஸ்தர்களே! நீங்கள் வினவிய காம கோடி யெனும் அம்பிகையின் சந்நிதி, இப்பூலகில் உங்களுக்கு இது காறும் கூறி வந்த சப்த தீவுகளிலு மொன்றாகிய நாவலந்தீவி லுள்ள, நவ கண்டங்களிலு மொன்றாகிய பரதகண்டத்தில் மூன்று பிரிவில் ஒன்றாகிய ஆக்நேய கண்டத்திலுள்ள, தொண்ட நாட்டில் சப்த புரிகளிலு மொன்றாகிய, காஞ்சிமா க்ஷேத்திரத்தில் கம்பா நதி தீரத்தில் மாவடி ஏகாம்பரரை நோக்கித் தவம்புரிந்த பராசக்தியின் மூலஸ்தானமாகிய காமகோடி யெனும் ஸ்தலமே யாகையால் நீங்கள் ஆங்கு சென்று அம்பிகையைப் பூசிப்பீர்களேயா மாயின், உங்களது மனக்குறை தீருமென்று கூறிய முனிச் சிரேஷ்டர்களைப் பார்த்து எண் மரும், சுவாமிகாள்! நீங்கள் கூறிய க்ஷேத்திரமாகிய காஞ்சி மிகச் சிறந்ததாய் இருக்கவேண்டும், ஆனதுபற்றி அந்நாட்டின் வளப்பம் விரித் துரைக்க வேண்டுமென வேண்டிக்கொள்ளவே அதற்கு ரிஷி புங்கவர்கள் கூறுவார்கள். தொண்டை நாட்டைப் பற்றி,

### காஞ்சி புராணம்

பவம் விளைத்திடாப் பெரும்பதியென விசைபோய
சிவம் விளைத்திடு நகரங்க ளேழினுஞ் சிறந்து
தவம் விளைத்திடு காஞ்சியைத் தன்னிடத்திருத்தி
நவம் விளைத்திடு பெருமை பூண்டது தொண்டநாடு

### சேக்கிழார் நயனார்

ஆயநானிலத் தமைதியிற்றத் தமக்கடுத்த
மேயசெய் தொழில் வேறு பல் குலங்களின் விளங்கித்
தீயவென்பன கனவிலு நினை விலாச் சிந்தைத்
தூயமாந்தர் வாழ் தொண்ட நாட்டியல்பு சொல்வரைத்தோ

### தொண்டமண்டல சதகம்

சீரும் பாடல் பன்னீராயிரமுஞ் செழுந் தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையிலேற்றிய வித்தகனார்
பாரதம் பாடும் பெருந் தேவர் வாழும் பழம் பதிகாண்
மாருதம் பூவின் மணம் வீசிடுந் தொண்ட மண்டலமே



## நாட்டு வளம்

கேளுங்க ளரசர்களே நீங்கள் கேட்ட நாடாகிய தென்னாட்டில் ஆக்நேய கண்டத்தில் ஓர்பிரிவாகிய தொண்டநாடானது பண்டைக் காலத்திலே அனந்தம் தபசிகளும் ரிஷிகளும் தவம் புரிந்து சித்தி முத்திகளையும் பெற்றதாக புராணேதிகாசங்கள் விளக்கு கின்றன. இத்தகைய மலைத்தொடர்களும், நதிகளும் கடல்களு முள்ள இம் மண்டலத்தில் தாது மூல ஜீவப்பொருள்களி னின்று, மலைபடு திரவியம், காடுபடு திரவியம், கடற்படு திரவியம், நாடுபடு திரவியம், நகர்படு திரவியங்களாகிய, அகில், சந்தனம், மிளகு, தேன், அரக்கு மயிற்பீலி, செந்நெல், வாழை, கமுகு, கன்னல், தந்தம், கண்ணாடி, முத்து, பவழம், சங்கு, உப்பு, முதலியனவும் இன்னம் பல வகைத் திரவியங்களும் உற்பத்தியாகின்றன. இவ்வண்ணம், நீர்வளம் நில வளம், குளடிவம், பொருந்திய தொண்டைநாடே, இதற்கு.

### தொல் காப்பியம்

மாயோன் மேய காடுறையுலகமுஞ்
சேயோன் மேய மைவரையுலகமும்
வேந்தன் மேய தீம்புனலுலகமும்
வருணன் மேய பெருமணலுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

இவ்வண்ணமாய்க் கூறிய தல்லாமலும் இன்னம் முல்லை நிலம் காடும், நெய்தல் நிலம் கடலும் கழியும், குறிஞ்சி நிலம் மலையும், மருதநிலம் நாடு சேர்ந்த கழனிகளும், பாலை நிலம் வெப்பந்தரத்தக்க வெளியாம். இவ் வைந்து நிலங்களுக்கும் தெய்வங்கள், முல்லைக் குத்திருமாலும், நெய்தலுக்கு வருணனும், குறிஞ்சிக்கு முருகக் கடவுளும், மருதத்திற்கு இந்திரனும், பாலைக்கு துர்க்கையுமாம். இவ் வகை நிலங்களில் வசிக்கும் குடிகள், முல்லையில் இடையரும், நெய் தலில் பட்டினவரும், குறிஞ்சியில் குறவரும், மருதத்தில் உழவரும், பாலையில் வேடரும் நிலமாக்களாம். இதற்கு,

### புகழேந்தி இரத்தினச் சுருக்கம்

காடாகு முல்லைக் கழிநெய்தலாகுங் கல்லாங்குறிஞ்சி
நாடாமருத நடலை வெம்பாலையி யிந்நாட்டிற் றெய்வம்
காடோர்கரன் வருணன் குகனிந்திரன் கூறு துர்க்கை
மாடாயர் மீன்புல்வர் குன்றவர் கானவர் மள்ளருமே

## குறிஞ்சி நிலம்.

### பிங்கலந் சூடாமணி

நிலத்தூரின் பெயர்:—குறும் பொறை சீறூர் சிறுகுடி குறிஞ்சியூர்

நிலப்பறையின் பெயர்:—தொண்டக முகியந்துடியந் நிலப்பறை.

நிலமாக்களின் பெயர்:—கானவர் குறவ ரந்நிலமாக்கள்.

நிலப்பெண்களின் பெயர்:—குறத்திபர் கொடிச்சியர் மறத்திப் பெண்டிர்.

நிலத்தலைமகன் பெயர்:—பொருநன் சிலம்பன் வெற்பன் றலைமகன்.

நிலக்கடவுளின் பெயர்:—கந்த னந்நிலக் கடவுளாகும்.

### திவாகரம்.

கானகநாடன் பொருப்பன் பொருநன்
ஆனமலையன் வெற்பன் சிலம்பன்
சிறந்த நண்ப னென் றிவைமுதலாகக்
குறிஞ்சிக் கிறைவன் பெயரெனக் கூறுவர்.

பெருஞ் செல்வத்தைக் கைவிட்டு ஊர்கள்தோறுஞ் சென்று பிறரிடம் பலியை விரும்பியேற்கும் ஒப்பில்லாத துறவற வாழ்க்கையை யுடையோராகிய மலையில் வசிக்குங் குறவர்கள் முருகக்கடவுளுக்கு முகவாசத்தை யோம்பப் புறத்தில் உலர்ந்த அகிற்கட்டையையுஞ் சந்தனக்கட்டையையும் நிறமமைந்த நிறைந்த தீயிற்போட்டுப் புல்லிய தினை முதலிய பயிர்களை விளைவித்து வருவார்கள். இதற்கு,

### காஞ்சிபுராணம்

முருகவேட்கிடு தூபமோம்புற முளியகில்சந்
தருவ வாரழற்பெய்து புன்பயிர் விளைத்துவப்பார்
பெருவளந் துறந்தூர் தொறுமிடு பலிபேணும்
பொருவில் வாழக்கையர் தஞ்செயல் போன் மெனப்பொருப்பர்.

இன்னம் உடுக்கையொத்த இடையினையுடைய குறப்பெண்கள் நதியில் ஸ்நானஞ்செய்ய ஏலச்செடிகளை அவர் பக்கலில் பரப்பிச் சுழன்று உராய்ந்து வெற்றிக் கொடிபுனைந்த குறிஞ்சி நிலக்கடவுளாகிய வேலவரை ஸ்மரித்து பூங்கொடிகளும் புஷ்பங்களுங் கொண்டு குறிஞ்சி நிலத்தை அந்நதி தாண்டியதுபோலுமாம். இதற்கு,



### அரிச்சந்திரபுராணம்

துடிமருங்கிற் கொடிச்சியர் தோயவே
துடிமருங்கிற் பரப்பிச் சுழித்தராய்க்
கொடிபுனைந்த குகன் கழருழ்ந்துபூங்
கொடிபுனைந்த குறிஞ்சி கடந்ததே.

குறிஞ்சியில் வாஸம் செய்யும் குறவர்கள் வானத்தில் செல்லுகின்ற துலா ராசியினிடத்திலே பிரகாசிக்கின்ற ரத்தினங்களை வைத்து நிறுத்து அளவு அறிதற்கிடமான வேங்கடமே, ஆதிமூல மென்றழைத்த மேருமலைபோலொத்த யானையைக் காத்தவருமாகிய திருமால், உயிர்களைப் பாதுகாக்க வீற்றிருந்த ஸ்தலமாம். இதற்கு,

### திருவேங்கட வெண்பா

மன்னு குடிக்குறவர் வானோர் துலாத்திடையே
மின்னு மணிநிறுக்கும் வேங்கடமே—என்னு
மாரவிந்தப் போதகத்தா னன்பாலழைத்த
சரவிந்தப் போதகத்தான் காப்பு.

## விருட்சங்களின் பிரபாவம்.

இன்னமும் கேளுங்கள் சாதுவம்ஸஸ்தர்களே வனப்புவாய்ந்த இந்தக் குறிஞ்சி நிலத்தில், புன்னை, அசோகு, அகில், சந்தனம், பூகம், வாவை, குன்னி, வன்னி, மருதம், கொன்றை, மன்னி, கொடும்பை, உடுக்கை, நன்னி, முன்னை, பொன்னுரி, ஞாழல், தேக்கு, * கருங்காலி, வேங்கை, வேம்பு, அரசு, புங்கு, புளி, நெல்லி, மா, கூம்பு, வள்ளுகில், மந்தாரம், கடம்பு, மாதுளை, இலுப்பை, முந்திரி, பலா, சேம்பு, ஊஞ்சல், தொளுமிச்சை, எலுமிச்சை, அத்தி, முருக்கத்தி, கருநொச்சி, வெள்நொச்சி, மத்தி, நன்னுரி, ஈச்சு, பேரீச்சு, விந்தை, பாட்டம், பாதிரி, கோட்டம், குறிஞ்சி,

* கருங்காலி மரமானது மற்றெல்லா மரங்களைவிட உறுதியுள்ளதெனக் கருதியே ஔவை இம்மரத்துக்குத் தன்னை ஈடுகாட்டியும் பயனற்ற கதலி மரத்துக்குக் காள மேகனை ஈடுகாட்டியும் ஓர் வெண்பா இயற்றியதால் அம்மரம் உறுதியுள்ளதென விளங்குகின்றது, அதாவது.

கருங்காலிக் கட்டைக்கு நாணுக்கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்குநான் தோற்றற்
கீரிரவுதுஞ்சா தென்கண்.

இலந்தை, சண்பகம், நாரத்தை, இலவு, இச்சி, கல்லிச்சி, கருவேல், வெவ்வேல், நருவிலி, காட்டொலிவம், சிற்சொறி, சோர்கிள்ளி, இருப்பூட்டு, சுனக்கு, செங்குமிழம், குங்கிலியம், சதைகூடி, தனக்கு, சற்பாறை, நாவல், தும்பி, கொய்யா, வில்லை, கருமரம், பெருமரம், மகிழாஞ்சி, சொற்கோட்டி, அத்தி, பூவத்தி, பூவரசு, மூங்கில் முதலான இன்னம் பல விருக்ஷங்களையுடைய நிலமாம். இன்னம்

தொல்காப்பியம்.

குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடுகூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ளெயிற்ற
ளிளையளாயினு மாரணங்கினளே.

## புள்ளினங்களின் பிரபாவம்.

மேற்கூறிய விருக்ஷங்களினின்று ஜீவிக்கும் பலகோடி புள்ளினங்களாகிய, ராசாளி, நூறு வயதுடைய கருடன், பருந்து, கழுகு, இம்மூன்றும், இன்னம் காகம், மாடப்புறா, மணிப்புறா, செம்போத்து, மரங்கொத்தி, சிட்டுக்குருவி, ஆந்தை, முன்னூறு வயதுடைய அன்னம் முதலானதும், மயில், குயில், கூகை, கோட்டான், கொக்கு, கிளி, நாரை முதலான இன்னமுண்டான பறவையினங்கள் அந்நாட்டில் குறமக்கள் செய்திருக்கும் தினை முதலாகிய பயிர்களை கொல்லைகளிற் போய் மேய அதைக்கண்டம்மாதர்கள் அந்நிலத்தில் சிந்தியிருக்கும் மாணிக்கங்களைச் சிருகற்களாகப் பாவித்துக் கவணினால் வீசிப்பறவைகளை வெருட்டி மகிழ்ந்திருப்பார்கள்.

இதன்றி திருமாலுக்குகந்தமலையும் அம்மலைவாசிகளாகிய கானவர் கோபாலனைக்குறித்து குறிஞ்சி நிலவிராகங்களினால் பாடவும் நடனஞ்செய்யவு மமைந்த சோலை யென்பதற்கு,

பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலை

மாவலிதன்னுடைய மகன்வாணன் மகளிருந்த
காவலைக்கட்டழித்த தனிக்காளை கருதுமலை
கோவலர் கோவிந்தனைக் குறமாதர்கள் பண்குறிஞ்சிப்
பாவொலிபாடி நடம்பயின் மாலிருஞ்சோலையதே

## மூலிகைகளின் பிரபாவம்.

இன்னம் கேட்பீர்களரசரே! பொன்முகலிநதி சூழும் காளத்தி, திருத்தணி, திருவேங்கடம், திருக்கழுக்குன்றம், முதலான மலை



களிலுள்ள பதினெட்டுவகை சித்துக்கு ஆதாரமாயுள்ளதும், மாநில மாந்தர்க்குப் பிணிதீர்க்கும் ஔஷதங்களுக் குபயோகமுள்ளதுமான மூலிகைகளாகிய பொன்னுரை, தசைமூலி, திசைப்பூடு, பொற்பாலை; ஐஷிரலி, நன்னாரி, உள்கருங்கி? வெண்குரி, நாயுருவி, பிரசுருங்கி, பொன்னாங்காணி, கொடிவேலி, காந்தள், பொன்னூமத்தை, தேகமூலி, பொன்னளினம், தவசிமூலி, சீந்தி, பொற்கலப்பை, வசியமூலி, பொற்றுளசி, அனுரேகி, பூனைக்காலி, பொடுதலை, சிறுநங்கை, ஆத்தி, சிறுவேலி, சென்னுடி, காஞ்சோரி, கோரை, பாசி, வெட்சி, ஆனை நெருஞ்சி, கருடநெருஞ்சி, கொம்மட்டி, முள்ளி, நொச்சி, சின்னி, வேளை, ஆரிவு, ஆவரை, தலைவணங்கி, செவியம், தொழுகண்ணி, முல்லை, சோதிபிணி, மயக்கி, கள்ளி, மலைதாங்கி, கீழ்நெல்லி, கருமுருக்கை, காவளை, கண்டங்கத்திரி, காந்தி, பூனைமயக்கி, பின்னை, சுண்டை, வெள்ளறுகு, டாடம், ரத்தவல்லி, பேய்ப்புடல், நிலவேம்பு, கொளுஞ்சி, நாகவல்லி, மொசுக்கை, கொடுப்பை, வல்லாரை, கையாந்தகரை, நல்லாரை, மிளகரணை, நற்பாலை, சிறுகீரை, ஆதண்டை, தருத்தி, வெட்பாலை, வன்னி, கல்லி, காந்தை, குன்றி, கரிப்பான், சஞ்சீவி, முதலான நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளையுடைய மலைகளுண்டாம், இன்னம் இந்நிலமாக்களாகிய குறவர்களைப்பற்றி,

கல்லாடம்

புட்குலஞ்சூழ்ந்த பொருப்புடைக் குறவர்தம்
பெருந்தேன் கவருஞ் சிறுகுடிமகளே
நீயேயாய மோடார்ப்ப வரிகிணைமுழக்கி
மாயாநல்லறம் வளர் நாட்டினையே.

## விலங்கினங்களின் பிரபாவம்.

ஈதல்லாமல் இம்மலைகளின் சாரலிலும் குகைகளிலும் வாசஞ்செய்துகொண்டிருக்கும், பல கோடி விலங்கினங்களாகிய, 70 வயதுடைய சிங்கம், 400 வயதுடைய யானை, 20 வயதுடைய கரடி, இன்னம், புலி வேங்கை, 14 வயதுடைய நரி, ஆளி, கவுரிமான், 100 வயதுடைய கலைமான், கடமான், காட்டெருமை, 20 வயதுடைய பன்றி, முள்ளம்பன்றி, மான், குள்ளநரி, செந்நாய், சிறுத்தை, சிம்மம், 7 வயதுடைய முயல், 20 வயதுடைய ஓநாய், 100 வயதுடைய ஒட்டகம், 7 வயதுடைய அணில், 15 வயதுடைய

பூனை, முதலாகிய இன்னம் பலஜாதி மிருகங்கள் அங்குள்ள வாவி கூவல்களில் நீருந்தி வாசம் செய்யவும், 1000 வயதுடைய சர்ப்பங்கள் முதலான ஊர்வன ஜெந்துக்கள் வசிக்கவும், அந்நிலமாக்களாகிய நம்பிராஜன் வம்சத்தார் தேனும் தினைமாவும் புசித்து சிற்றாறுகளில் நீருந்தி சோலைகளில் குடிசை கட்டிக்கொண்டு ஆறுமுகக்கடவுளை நித்தியம் ஆராதித்துக்கொண்டு வாசம் செய்யும்படியான பெருமைபொருந்திய குறிஞ்சி நிலம் அமைந்த நாடாம் அத்தொண்டைநாடு,

## பாலைநிலம்.

பிங்கலம் கூறியபடி

நிலத்தூரின் பெயர்:—முனையிடங் குறும்பு முதுபாலை நிலத்தூர்.

நிலத்திணையின் பெயர்:—மறுபுலஞ் செம்புலம் வன்பால் பாலை

நிலப்பறையின் பெயர்:—அந்நிலப்பறை துடிபாகுமென்ப

நிலமாக்களின் பெயர்:—மறவ ரெயினர் சவரர் கிராதர்—கானவர் குறவர் புளினர் வேடர்

நிலப்பெண்கள் பெயர்:—எயிற்றியர் பேதையர் மறத்தியர் பெண்டிர்

நிலத்தலைமகன் பெயர்:—விடலையுங் காளையு மீளியுந் தலைமகன்

நிலக்கடவுள் பெயர்:— பாலைக்கடவுள் துர்க்கையென்ப.

### திவாகரம்.

கொலைஞ ரெயினர் வனசரர் சவரர்
சிலவர் கானவர் மாகுலவர் கிராதர்
புளினர் மறவர் வேட ரென்றுங்,
கனையவர் பொதுப் பெயராதல் வேண்டும்

உடுப்பூரில் வாழும் வேடர்களுடைய நாயானது குரைக்கும், விளாமரத்தின் கிளையில் வலையானது தொங்க, பன்றி, புலி, கரடி, காட்டுப்பசு, மான், இவைகள் பார்ப்பதுமின்றி கற்பாறையாகிய முற்றத்தில் மலையில் விளைந்த நெல் முதலாகிய தானியங்கள் உலருபாம். இதற்கு,



### பெரிய புராணம்.

கண்ணப்பநாயனார்சரித்திரம்

குன்றவர்தனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலியார்த்த
வன்றிறல் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியுமெண்குங் கடமையுமானின் பார்வை
அன்றியும் பாறை முன்றிலை வனமுணங்கு மெங்கும்.

இன்னம் மஞ்சள் பூசிய பெண்களுடன் ஆயர்பாடியில் சிற்றில் விளையாட்டைக் கெடுத்து தீங்குசெய்து திரியாமல் பொய்நிறைந்த வேடர்கள் சஞ்சரிக்கும் பாலைவனத்தில் கன்றின்பின் என் பிள்ளையை அனுப்பினேன். இது என்ன பாவம் என்று யசோதை கூறினதாக, இதற்கு

### நாலாயிரப்பிரபந்தம்.

பெரியாழ்வார்

பற்று மஞ்சட்பூசிப் பாவைமாரொடு பாடியில்
சிற்றில் சிதைத்தெங்கும் தீமைசெய்து திரியாமே
கற்றுத் தூளியுடை வேடர் கானிடைக் கன்றின்பின்
எற்றுக் கென்பிள்ளையைப் போக்கினே னெல்லே பாவமே.

இன்னம் தெளியும் வழியரியாத கோபத்தையுடைய வேடர்கள் கானலையும் ஜலத்தையும் பகுத்தறியக்கூடாத பாலை நிலத்திலுள்ள வேடச்சேரியையும் வேடப்பெண்களையும் தள்ளிக்கொண்டு மான்மீதேறி நடத்துகின்ற அந்நிலத்துக் குரிய துர்க்கையினது பாதத்தை வணங்கி நதியானது போயிற்று என்பதாம். இதற்கு,

### அரிச்சந்திரபுராணம்.

தேருமா றுணராச் சின வேடர் பேய்த்
தேருமாறு முட்டே றரும் பாலையில்
ஊருமா தரியாளையு முந்தி மான்
ஊருமா தரிதா டொழு தற்றதே.

இதன்றி இந்நிலத்தின் ஒருபக்கம் குராமரம் என்பவன் பெற்ற இளங்குராப்பெண்ணை, கோங்குமரமெனு மொருவன், மலராகிய பொன்னைக்கொடுத்துப் பெரிய அடியையுடைய பாதிரி மாமெனும் பூப்பந்தலில் கல்யாணம் செய்ய வெண்கடப்ப மரங்களில் இறகுலர்த்தும் வண்டுகளாகிய பாடகர்கள் சங்கீதம்பாட வலிய முருங்கை மரங்களாகிய சுற்றத்தார் சேர்ந்து வெண்மலராகிய பொரி

களை இறைக்கும் அதிசயமுடையது, வேடப்பெண்களுடைய அழகுக் குத்தோற்று ஓடி அயலிலுள்ள சோலையில் பிரவேசித்து மலரும் குராப்பிள்ளையைத் தூதுணம் புறாக்கள் கண்டு அவ்வேடப்பெண்கள் தாங்குவித்த பிள்ளையெனப்படும். இதற்கு

12–வது நிகண்டு.

எடவிழ்மகிழ் சுவைக்க வெழிற்பாலை நன்புகூடப்
பாடல நிந்திக்கத் தேம் படி முல்லை நகைக்கப் புன்னை
ஆடநீள் குராவணைக்க வசோகு தைத்திட வாசந்தி
பாடமாப்பார்க்க வார்சண் பகநிழல் படத்தளிர்க்கும்.

## நெய்தனிலம்.

பிங்கலம் கூறியபடி.

நிலத்தூரின் பேர்:—பாக்கம் பட்டின நெய்தனிலத்தூரே.

நிலப்பறையின் பேர்:—சாபறை, மீன்கோட்பறை நெய்தற்பறை.

நிலமாக்களின் பேர்:—கடலர் திமிலர் சலவர் நுளையர் பரதர் வலைய ரந்நிலமாக்கள்.

நிலப்பெண்களின் பேர்:—பரத்தியர் நுளைச்சிய ரந்நிலப்பெண்கள்.

நிலத்தலைமகன் பெயர்:—மெல்லம் புலம்பன் றண் கடற்சேர்ப்பன் றுறைவன் கொண்க னெய்தற் றலைமகன்.

நிலக்கடவுளின் பேர்:—அந்நிலக்கடவுள் வருணனாகும்.

தாவுகின்ற சேலின் பிறழ்ச்சியைப்போலும் பிறழ்ச்சியையுடைய கண்களமைந்த நெய்தனிலப் பெண்கள் சுறுமீன் உண்ண நசைகொண்ட மதுவுக்கு மாறவும் புளியங்காய்க்கும், தினைக்கும், அவரைக்குங் கொள்ளுக்கும் பிரதியாகவும் கிழங்குக்கும் தேனுக்கும் மிக்க சுவையையுடைய கரும்புக்கும் எள்ளுக்கும் பிரதியாகவு மளக்கும் பொருள்கள் இடைக்கிடை முத்துகளே யாம். இதற்கு,

திருவிளையாடற் புராணம்

துள்ளுசேல்விழி நுளைச்சியர் சுறவோடு மருந்தக்
கள்ளுமாறவுங் கூனலங் காய்தினையவரை
கொள்ளுமாறவுங் கிழங்குதேன் கொழுஞ் சுவைக்கன்ன
லெள்ளுமாறவு மளப்பன விடைக்கிடை முத்தம்.



இஃதன்றி நுளையர் ஊரில் அமர்ந்து மனைவளப்ப முடைய பரதவர் குலத்தில் வந்தவர் பரம சிவத்துக்குத் தொண்டு புரியும் அதிபத்தர் என்னும் பெயருடைய நாயனாராம். இதற்கு,

அதிபத்த நாயனார் புராணம்

அனையதாகிய வந்நுளைப் பாடியி லமர்ந்து
மனைவளம்பொலி நுளையர் தங் குலத்தினில் வந்தார்
புனையிளம் பிறை முடியவரடித் தொண்டு புரியும்
வினை விளங்கிய வதிபத்தரெனு மிகழ்மேலோர்

நாலடியார்

தோணியியக்குவா னொல்லை வருணத்து
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்-காணு
யவன் றுணை யாவாறு போயற்றே நூல்கற்ற
மகன் றுணை யாநல்ல கொளல்

இஃதன்றி காமநூலை யளவுசெய்து பார்க்கிற கரிய கண்களையுடைய வலைச்சியர்கள் இழிகுலைத்துடனே அளவு செய்து விற்கிற மதுவுக்குச் சமமாக விலைக்கு அளவுசெய்து கொடுப்பவை வெளிரிய முத்துக்களே யாம். தரும நிலையை அளவு செய்திருக்கிற வலைஞர்களுடைய நெய்த நிலமாம், இதற்கு.

அரிச்சந்திர புராணம்

கலையளக்குங் கருங்க ணுளைச்சியர்
புலையளக்கு நறைக்கும் பொருந்திய
விலையளப்பன வெண் முத்த மேயற
னிலையளக்கும் பரதர் நெய்தலே

இந்நிலத் தலைவன் பரிமள காந்தியை வளர்த்து வந்ததே யன்றி தம் குலமல்ல வென்றும் கூறி சந்திர குல க்ஷத்திரிய சந்தனுவுக்கு விவாகம் செய்து கொடுத்ததாம். இதற்கு,

மகாபாரதம்

அம்புவியரசன் மாமனு மரச
னடிபணிந்த வயவத்தழகா
னம்பரும் வியக்குங் கினிய முன்னிறுத்தி
பொடுங்கினன் வாய் புதைத்துரைத்தா
னெம்பெருமானீ கேட்டரு ளுனக்கே
யிசைந்த மெய்த்தவம் புரியிவளை
வம்பவிழ் மலர்மா தென்பதே யன்றி
வலைஞர் மா மகளெனக் கருதேல்.

## முல்லை நிலம்.

பிங்கலம் கூறியபடி

நிலத்தூரின் பெயர்:—அந்நிலத்தூர் பெயர் பாடியென்ப
நிலப்பறையின் பேர்:—அந்நிலப்பறை யேறுகோள் பம்பை
நிலமாக்களின் பேர்:—இடையரண்டர் பொதுவர் கோபாலர் குடவ
ரமுதர் கோவல ராயர் முல்லைநில மாக்கள்
நிலப்பெண்கள் பேர்:—இடைச்சியர் தொகுத்தியர் பொதுவியர் கூத்
தியர்
நிலத்தலைவன் பேர்:—கானக நாடன் குறும்பொறை நாடன்தோன்ற
லண்ணன் முல்லைத் தலைவன்
நிலக்கடவுள் பெயர்:—திருமாலந்நிலக்கடவுள் பெயரே.

திவாகரம்

முல்லையாளர் கோவல ரிடையர்
சொல்லிபவண்டர் பொது வரான் வல்லோர்
குடவர் பாலர் தொறுவர் கோவிந்தர்
அண்டர் கோபால ராய ரமுதர்
ஒன்றிய முல்லை நிலத்தவர் பெயரே

பெண்களுக் குரிய இலட்சண மிகுந்த இடைக்குலத்தில் தோன்றிய பெண் யானை போலும் நடையையுடைய ஆச்சியர் விண்ணுலகினுள்ள அழகு மிக்க அரம்பையரைத் தமது அழகால் வெற்றிகொண்டு பண்ணின் சுவை கனிந்த கண்டத்தையுடைய அவ்வரம்பையாது பருத்த மூக்கினை யரிந்து நிலவுலகில் எவ்விடத்துந் தொங்கவைத்துப் பார்த்தாற் போல குமிழமலர் மலரா நிற்கும். இதற்கு

காஞ்சி புராணம்

பெண்ணலங்கனி யிடைக்குலப்பிடி நடைமடவார்
விண்ணலங்கனி மாதரை யெழிலினால் வென்று
பண்ணலங்கனி மிடற்றவர் பணைத்த மூக்கரிந்து
மண்ணிலெங்கணுந் தூக்கி வைத்தெனக் குமிழ்மலரும்

இன்னம், மயக்கத்தைக்கொண்டு அலைகின்ற நில உலகத்தாருடைய பிறப்பாகிய கடலுக்கு ஓர் மரக்கலம் போன்ற திரு[illegible]கடத்தின் பூஞ்சோலையிலுள்ள பாரிஜாத விருக்ஷத்தைப் பெய[illegible] பூமியிற் கொண்டுவந்து நாட்டினவனும் நீர்வளத்தால் குளிர்[illegible]



யான முல்லை நிலத்தில் வசிக்கின்ற இடையர் பெற்ற பெண்களை விரும்பிக் கூடியவனுமாகிய திருமாலே என்பதற்கு,

திருவேங்கட வெண்பா

மாலைக்கோலித்திரியும் வையகத்தோர் தம்பிறவி
வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே—சோலைத்
தருமா தரை நட்டான்றண் முல்லையாயர்
தருமா தரை நட்டான் சார்பு.

பஞ்ச நிலங்களில் ஒன்றாகிய முல்லையில் வளமையுடைய, ஊர், கான்யாறு, மயில், பசுக்கூட்டம், குருந்தமரம், புல்லாங்குழல், ஓசை, தேன் முதலிய வளப்பங்களில் முல்லை நிலத்துக்குத் தலைவர்களை கோகுலத்தலைவர்களென்று சொல்லப்படும். இதற்கு,

கோகுலச் சதகம்.

மண்டலந்தன்னினிலனைத்து கூறதில் வண்மைபெறுந்
தண்டலை நன்னதிசார் மயிலானிரைதார்குருந்து
விண்டலத்தோர் மகிழ்வேய்க்குழலோசை விளங்குபைந்தேன்
கொண்டவளந்தரு முல்லைத்தலைவர்கள் கோகுலரே.

இதல்லாமல் காலில் மிதியடியும், கையில் தடியும், புல்லாங்குழலும் விளங்கத்தன் ஊழியராகிய மாடுகளைக் காக்கின்ற இடையரும் கன்றுகளையுடைய பசுக்களும் தன்னைச்சூழ இடையர்களுக்குத் தலைவரான ஆனாய நயனார் பசுக்களை மேய்த்து ரட்சிக்கும் பொருட்டு முல்லை நிலமாகிய காட்டுக்குச் சென்றார். என்பதற்கு,

ஆனாயநாயனார் சரித்திரம்

சேவடியிற் றொடுதோலுஞ் செங்கையினில் வெண்கோலு
மேவுமிசை வேய்ங்குழலு மிகவிளங்க வினைசெய்யுங்
காவல்புரிவல்லாயர் கன்றுடையா னிரை சூழப்
பூவலத்தார் கோவலனார் நிரைகாக்கப்புறம் போந்தார்

அதன்றி இன்னம் சேதுபுரத்தில் யதுவம்ஸத்திலுதித்த தனது பிதாவின் சகோதரியைப் பார்ப்பதற்கு அவ்வம்ஸஸ்தரான பலராமனும் கிருஷ்ணனுமிருவரும் சென்றார்களென்பதற்கு,

வியாசபாரதம்

ததச்சேதி புரேப்ராப் தௌஸங்கர்ஷண ஜனார்த்தனௌ
யாதவௌபாத வீம்ஸ்ரேஷ்டும் ஸ்வஸாரம் தௌபிதுஸ்ததா.

ஈதன்றி தேவாதி தேவனாகிய சிவபிரான் ப்ரத்யட்சமாய்க் காக்ஷி கொடுத்தருளும் சிறப்புவாய்ந்த திருமுல்லைவாயில் முதலான பல ஸ்தலங்களைத் தன்னிடத்தில் சூழ்ந்திருக்கப் பெற்றதுமாகிய செழித்த நிலத்தையுடைய நீலநிறமாய் மலர்ந்து பூத்திருக்கும் காயாஞ் செடிகளினழகும், பொன்னிறமாய்ப் பூத்திருக்கும் கொன்றை மரங்களினழகும், மழையினால் இந்நிலத்தைச் செழிக்கவமையப் பெற்றுமுள்ள முல்லை நிலத்தையுடைய தொண்டநாடு.

திருக்குறள்

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று. என்றும்,
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

மருதநிலம்.

பிங்கலம் கூறியபடிக்கு

நிலத்தூரின் பெயர்:—படப்பம் தண்ணடை மருதநிலத்தூர்
நிலப்பறையின் பேர்:—அரிகிணை முரசப்பணை மருதப்பறை
நிலமாக்களின் பேர்:—களமருழவர் கடைஞர் சிலதர்
பள்ளர் பேழியர் மருதமாக்கள்
நிலப்பெண்களின் பேர்:—உழத்தியர் கடைசியரந்நிலப் பெண்டிர்
நிலைத்தலை மகன் பேர்:—மகிழ்நனூரன் கிழவன் றலைமகன்
நிலக்கடவுள் பெயர்.—அந்நிலக்கடவுள் அமரர்பதியே

திவாகரம்

களமர் தொழுவர் மள்ளர் கம்பளர்
வினைஞருழவர் கடைஞர் கிளைஞரென்
றனையவை கழனிக் கடைத்தவர் பெயரே

மருதநிலமானது மற்ற நான்கு நிலங்களைவிட நீர்வளம் நிலவளம் குடிவளங்களில் சிறப்புடையது. பெரும்பாலும் நதிகளாற் சூழப்பட்டதும் ஏரி குளம் வாவிகளுமுள்ளதுமாகையால் இதில் கன்னல், செந்நெல், வெண்ணெல், கதலி, கமுகு, தெங்கு, முதலியனவ எக்காலமும் செழித்தோங்கி வருகின்றன. இந்நிலமாக்களாகிய மள்ளர் மழைபெய்யும் பருவகாலத்து சுபதினத்தில் ஏர் பூட்டுஞ் சடங்காகிய பொன்னேர் பூட்டி உழுவார்கள்.



ஏர் எழுபது

சீர்மங்கலம் பொழியுந் தெண்டிரைநீர் கடல்சூழ்ந்த
பார்மங்கலம் பொழியும் பல்லுயிருஞ் செழித்தோங்கும்
கார்மங்கலம் பொழியும் பருவத்தே காராளர்
ஏர்மங்கலம் பொழிய வினிதுழநாட் கொண்டிடினே.

இஃதன்றி நீர் நிறைந்த குளங்கள் நெருங்கின இந்நாடு (கோசலை நாடு) முழுவதும் நிறைவான பெரிய தவமுனிக்குக் கொடுத்துவிட்டாலும் உலகத்தையாள்வதான சம்பந்தத்தன்மை உனக்கில்லாமற் போனதன்று உன் பிதாவைப்போலவே ஒரு நாட்டையாளுகிற என் பிதாவின் காலம் முடிவுபெற்றால் வேளாளர் ஏர்களையோட்டுகிற ஓசை ஓயாதிருந்துள்ள கன்னோசி நாட்டை நீயல்லது பின்பு இனியார் ஆள்வார். ஐயோ பாவீணாக இக்காட்டில் அரவத்தா லிறந்த மகனே, யென்பதற்கு.

அரிச்சந்திர புராணம்

மயானகாண்டம்.

நீராளவாவி சேறி நாடனைத்து நிறைமாதவற் குதவியும்
பாராளு நீர்மை தொடர்பற்ற தன்று படியாளு மெந்தைமுடியில்
காராளரேர்கள் கடவோசை யோய்வில் கன்னோசிநாடதனைமேல்
ஆராள வல்லரவமே வனத்தி லரவா லிறந்த மகனே.

ஈதன்றி மருதமாக்களாகிய உழவர்கள் களையைக்களையும் பருவங்காட்ட, இளமைவாய்ந்த மயில்கள் வயலின் வளத்தைக்காண அடைந்தாற்போல மருதநிலப்பெண்களாகிய உழத்தியர் மனதில் மகிழ்ச்சிமிக வளமை மிக்க வயல்தோறும் வந்து சூழ்வார்கள், இதற்கு.

காஞ்சிபுராணம்.

களமர்கள் களைகளை பருவங் காட்டலு
மிளமயில் வயல் வளங்காண வெய்தியாங்
குளமகிழ் கூர்தர வுழத்திமா ரெலாம்
களமலி பணைதொறும் வந்து முற்றுவார்.

இந்நிலங்களில் நாற்று நடுகின்ற மள்ளப்பெண்களின் இனிமையான காயனதிகளின் பாடல் ஓசையும் சதாகாலமும் முழங்கிக் கொண்டிருக்குமாம், தவிர பூனைகள் தங்கள் குட்டிகளைத் தூக்கிக் கொண்டுபோய் மற்றோரிடத்தில் போடுவதுபோல் அந்நில உழத்தி

யர்கள் நாற்று முடிகளை வாரிக்கொண்டுபோய் மேன்மைபெற்றிருக்கும் வயல்கள்தோறும் போட்டு நடுவார்கள். மரகதம் துளிர்த்துத் தழைத்தாற்போல் வளரும் அப்பயிர்களை அன்னங்கள் பார்க்க வந்தாற்போல் அந்நில மங்கையர் வருவார்கள். இதற்கு

திருவிளையாடற் புராணம்.

களமர்கள் பொன்னேர் பூட்டித் தாயர்வாய் கனிந்தபாடற்
குளமகிழ் சிறாரினேறு மொருத்தலு முவகை தூங்க
வளமலி மருதம்பாடி மனவலி கடந்தோர் வென்ற
வளமரு பொறிபோலேவ லாற்றவான் வினையின் பூண்டார்.

மருதநிலம் ஏர்கம்பாடும் அள்ளிலப் பெண்களினது விசால மான், கண், கால், முகம், வாய்களையொத்த அல்லி தாமரைமலர்கள் களையாக இருக்கிறபடியால் மதுபானஞ்செய்யும் மருத நிலமாக்கள் களைகளையாமல் உலாவி நிற்பார் போலுமுள்ள பெண்கள்மீது ஆசை வைத்தவர் பிழைப்பாரோ வென்பதற்கு.

இராமாயணம் பாலகாண்டம்.

டண்கள் வாய்மிழற்று மின்சொற் கடைசியர் பாந்துநீண்ட
கண்கை கான்முகம் வாயொக்குங் களையலாற் களையிலாமை
உண்கன்வார் கடைவாய் மள்ளர்களை காலாதுலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்தநேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்.

இவ்விதம் செழிப்பம் பொருந்திய சுவையைத் திரட்டும் அலைகளையுடைய பாலிநதியின் சீதள ஜலமெல்லாம் தப்பிவிருதாவாய்ப் போகாமல் கால்வாய்களின் வழியாகச்சென்று வளமாக்க வயல்களை நிறைக்கும். இவ்விதம் நிறைந்த கழனிகளில் குலைகுலையாய் வணங்கியிருக்கும் நெற்பயிர்களும், மற்றோரிடத்தில் கதலிக்குலைகள் பழுத்து அதன் மதுரமாகிய தேன் ஒழுகி யாறுபோலப் பெருகும் மருதநிலத்தையுடைய தோண்டைநாடு.

பழமொழி வெண்பா

ஐயமெலாங் கழனியா வையகத்துச்—செய்யகமே
நாற்றிசையுட் டேயங்கள் செய்யகத்து—வான்கரும்பே
தொண்டவளநாடு வான்கரும்பின்—சாறேயக்
நாட்டின் றலையூர்கள் சாரட்ட—கட்டியே
கச்சிப்புறம்பெல்லாங் கட்டியுட்—டானேற்ற
மாண சருக்கரை மாமணியே யானேற்றான் கச்சியகம்.



திணைமயக்கம்.

மலைகளில் வசிக்கும் குறப்பெண்கள் தினைப்புனங்களில் கிளி முதலிய பறவைகளை ஓட்டும்படியான கவண்கொண்டெறியும் மாணிக்கக் கற்கள், மருதநிலத்தில் தெண்ணீர் அலைகளையுடைய தடாகங்களை நிறைத்து மேடாக்கக் கண்ட அந்நிலத்தில் வாசம் செய்யும் உழத்தியரின் சிறு பெண்பிள்ளைகள் ஆடும் பந்துகளையும் செவ்விளநீர்க் குரும்பைகளையும் தங்கட் கையாற்றிருகி எறிந்து குறிஞ்சி நிலத்திலுள்ள நீர்ச்சுனைகளை நிறைத்துவிடுவார்கள்.

அழகிய வண்டுகள் உண்ணுதபடி கழனிகளில் மலர்ந்திருக்கும் நெய்தற் பூவின்மேல் மலைகளிலுள்ள பவழங்கள் நெடிய கொடிகளாகிய கைகளை நீட்டி ஓங்கிய வேங்கை மரத்தின் உச்சியைத்தாவும், மலைகளில் அடர்ந்திருக்கும் மிளகுக் கொடிகள் கொன்றை மரத்தின் மேல் மரகதத் தோரணம் போல் தாவிப் படர்ந்து கிளிக்கூட்டங்களும் சேவல்களும் எதிர் நடக்கக் குறிஞ்சி நிலத்தலைவர்கள் கட்டி வைத்த நெடிய கயிற்றின் காட்சியைக்காட்டும்.

மலைச்சாரலில் வசிக்கும் பசுங் கிளிகளும் முல்லை நிலத்தில் வசிக்கும் குயில்களும் சேர்ந்து பசுவின் பாலைக் குடித்து பறவைகள் கூட்டங்களாயுலாவும், சிற்றிடைகளை யுடைய மல்லப்பெண் களைந்து எறிந்த தாமரை மலர்கள், நெய்தலின் பாலுள்ள பேரொலி செய்யும் சமுத்திரத்தில் பெருத்த அலைகளின்மேல் விளங்கிய மாத்திரத்தில் அந்நீரில் தாமரை பூத்தது போல் விளங்கும். மகேந்திரகிரி மேல் நின்று இலங்கை மேற்பாய்ந்த அனுமாரைப் போல் நீண்ட வால் களை யுடைய குரங்கினங்கள் மலை மேலிருந்து, 1000 வயதுடைய திமிங்கிலம் முதலாயுள்ள ஜெந்துக்கள் வசிக்கும் கடலிலோடிக் கொண்டிருக்கும் தோணிகள் மீது பாய்ந்து அதை யழித்து மீண்டு வரும்.

வயல்களில் மேயும் அன்னப்பட்சிகள் பாலை நிலமங் கையராகிய மறத்தியரிடம் நடைகற்றுக் கொள்ளப் போவதுபோல் விளங்குமாம். காட்டில் வாழுங் குயில்கள் போய் மருத நிலத்தில் பழுத்திருக்கும் கமுக மரங்களின் பழங்களைப் பார்த்து கோவைக்கனியெனத்தின்ன விரும்பும். இவ்வண்ணம் மகிமை பெற்ற ஐந்திணை வளப்ப முடைய தொண்ட நாடு. இதற்கு

திருவிளையாடற் புராணம்

முல்லை வண்டுபோய் முல்லையாழ் முளரிவாய் மருதம்
வல்லவண்டினைப் பயிற்றிப் பின்பயில் வனமருதங்
கொல்லையான் மடியெறிந்திளங் குழவி யென்றிரங்கி
பொல்லையூற்றுபால் வெள்ளத்துறுகள் வனவாளை

## சோலைவளம்.

நீடூழியாக நிலைத்திருக்கும் இத்தொண்டை நாட்டின்கண் விளங்கும் கமுகு தெங்கு பனை கூந்தற்பனை முதலிய சோலைகளும், கிச்சிலி கொய்யா மாதுளை பலா மா அனுசு சீத்தா பப்பளிசு பேரீச்சு நாவல் முதலிய மதுரமூட்டுங் கனிகளையுடைய பல ஜாதி விருக்ஷங்களுமுள்ள சோலைகளும், மல்லிகை முல்லை இருவாட்சி சண்பகம் ரோஜா செவ்வந்தி மனோரஞ்சிதம் மகிழம் பாதிரி குருக்கத்தி புன்னை மந்தாரை நீலோற்பலம் தாமரை சூரியகாந்தி மருது மருக்கொழுந்து பவழமல்லிகை முதலிய பல புஷ்ப ஜாதி செடிகொடி மரங்கள் பரவிய செழிப்பம் பொருந்திய உத்தியான வனங்களும், அந்நிலங்களிலுள்ள ஏரி குளம் தடாகம் ஓடை முதலிய நீர் நிற்கும் வாவி கூபங்களில் மச்சங்களும் 107 வயதையுடைய கூர்மங் (ஆமை) களும், வாசஞ்செய்ய அமைந்திருக்கின்றன. தாவிவரும் பேரலைகளையுடைய தடாகங்கள் சுற்றுப்பக்கமெல்லாம் சூழக்கொண்டிருக்கும் நகர்ப்புறங்களில் குளிர்ச்சி பொருந்திய பூஞ்சோலைகளும் நீரோடைகளும் வளமான சோலைகளின் விருக்ஷங்களினது கிளைகள் தோறும் இன்புற்று நீராடவரும் மாதர்கள் முற்காலில் சேகரித்து வைத்த பட்டுச் சேலைகளும் பொன்னாபரணங்களும் அழகிய நீற்றோன்றிய மாத்திரத்தில் அந்நீரில் நீந்தி விளையாடும் வாலிபர்கள் அவைகளை நீருறை மகளிரெனப் பந்து கைகுவிக்கவே அதைக் கண்டம் மாதர்கள் கரை மீதிருந்து சிரிக்கப்பார்த்து வெட்கமடைவார்கள்.

ஆறுகால்களையுடைய வண்டுகள் சங்கீத வித்வான்களாக ஒப்புயர்வற்ற ஏழிசையிலொன்றாகிய விளரியென்னும் இசையைப் பாடவும், குதூகலத்தையுடைய குயில்கள் சுதி கூட்டுவோர் போலச்சுதிகூட்டவும், பசுமைநிறம் பொருந்திய கலாபங்களையுடைய மயிலினங்கள், நாடகப் பெண்களைப் போத்து நிர்த்தனஞ் செய்யவும், நந்தன வனங்களை பரிசளிக்கும் பிரபுக்களைப் போல தேன் மிகுந்துள்ள கனிவர்க்கங்களையும் பரிமளத்தையும் நிழலையும் கொடுத்து



போலும் வளப்பம் பொருந்திய தடாகங்களின் சுற்றிலும் தாளைவஞ்சி அனுசு சரவணம் இஞ்சி மஞ்சள் விலாமிச்சை முதலியவை சூழ்ந்து செழிந்திருக்கவும் அல்லி அரக்காம்பல் வனசம் முதலிய புஷ்பங்கள் ஒளியைத் தருவனவாம்.

## தாமரையின் பிரபாவம்.

இஃதன்றியும் "சங்கு வெண்டாமரைக்குத் தந்தை தாயிரவி தண்ணீர்" என்பது போல இவ்வரிய தாமரைக்கு ஜலமும் சூரியனும் தாய் தந்தையர் போல் காப்பார் என்பதும், தாமரையாகிய பெண் நூறாயிரம் யோசனை தூரமுள்ள பரிதியைக் காணில் மலரும். இதற்கு,

விவேகசிந்தாமணி

மங்குலம் பதினாயிரம் யோசனை மயில்கண்டு நடமாடும்
தங்குபானு நூறாயிரம் யோசனை தாமரை முகம் விள்ளும்
திங்களாதவற் கிரட்டி யோசனை யுறச் சிறந்திடு மரக்காம்பல்
எங்கணுயகனன் பராயிருப்பவ ரிதயம் விட்டகலாரே.—

வீரசிங்காதனப் புராணம்

தாமரை வாவியி னன்னஞ் சங்கீன்ற
வெண்டாளந் தம்மைக் கண்ணுற்
றேமநிறச் சிறகாரம் மாற்றானீன்ற
முட்டையென வின்பங் கூர்ந்து
காமமுற வணைந்திருந்து சேவலன்னம்
முடனுரைத்துக் கந்தன்முற்ற
காமவிழி துயின்றிரவு வருமளவும்
விசையின்றி நயக்குமம்மா—

ஆளுடையவரசு சுவாமிகள்

பூவினுக் க[illegible] பொங்கு தாமரை
யாவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயமே—

தாமரைமலர் ஓர் சக்கரவர்த்திபோலும் ஏனைய மலர்களெல்லாம் சிற்றரசர்களாகவும் ஆன்றோருரைப்பதுபோல பகலில் மலருந் தாமரையுடன் அதனைச்சார்ந்த மலர்களுக்கு சூரியன் தலைவன் என்றும், இரவில் மலரும் அல்லிக்கு மதனைச்சார்ந்த மலர்களுக்கும்

சந்திரன் தலைவனென்றும் உவமை கூறலாம். இவ்விதமாகச் செழுமைபெற்ற மலர்கள் வாய்ந்த தடாகங்களமையப்பெற்ற அத்தொண்டநாடு.

கேளுங்கள் பிரிதிவீச்சுர வமிஸஸ்தவர்களே எக்கால... கல்வியறிவு ஒழுக்கங்கள் முதலியவை யழிவுபடாத தமிழ் ... புதத்துக்கே இனிமையெனப் பொருளளித்தலின் "தென்றுன்று நீர் தமிழ் நாடு" என்னும் இத்தகைய இனிமையுடைய நாட்டிலே எக்காலத்திலு மொழுங்கு குன்றுவாகலின் "என்றுங் கல்வியெழிலுணர் வாதிப பொன்றிடாத் தொண்ட மண்டலம்" என்றும் விளங்கக்கூடியதுமான இத்தகைய மகிமைபெற்ற தொண்டநாடானது தண்டகநாடென்றும் துண்டீர நாடென்றும் சொல்லக்கூடிய அந்நாட்டில் முப்பத்திரண்டு நகரங்களுண்டு, என்பதற்கு

## திருப்பதிக்கோவை

தண்ணார் தண்டலைப் பாதிரிப்புலியூர் மூண்டைச்
சாம்புரவார் பனங்காட்டூர் திருவாமாத்தூரே
பெண்ணாரண்மலையு நடுநாட்டி லிருபத்
திரண்டாகு மிப்பாலே கம்பமேற்றளியின்
கண்ணேயுங்கு மதிலோண காந்தன் றளியனேக
தங்காவதங் கச்சி நெறிக்காரைக்காடே
யுண்ணாடு குறங்கணி முட்டந்திரு மாகறலோத்
தூர்வன் பார்த்தான் பனங்காட்டூர் வல்லமாற் பேறே.

## இதுவுமது

மாறலிலம்பையங் கோட்டூர் வீற்கோல மாலங்கா
டெயர்பாசூர் வெண்பாக்கம் கள்ளில் காளத்தி
யாரிரு வொற்றியூர் வலிதாயம் பாலி
வடமுல்லைவாயல் ... ஞநாடு திருமயிலை
யீறிரு வான்மியூர் கச்சூராலக் கோயி
லிடைச்சுரங் கழுக்குன்ற மச்சிறுபாக்கமே
மாறிரு வக்கரையே யரசிலி தொல்விருப்பை
மாகாளந் தொண்டநாட் டென்னின் முப்பானிரண்டே.

## நகரச்சிறப்பு.

சமுத்திரத்தை யாடையா யுடுத்திருக்கும் பூமிதேவிக்கு செந்தமிழ் நாடு முகமும் போலும் அந்நாட்டிலும் புகழ்பெற்



றோங்குந் தண்டகநாடே தொண்டைக்கனிபோற் சிவந்திருக்கும் வாயாகவும் பல ஜாதிபேதங்களாய் விளங்கும் மனிதர்களுக்கெல்லாம் தங்கடங்கள் வருணாச்சிரம தர்மங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கத் தெரிவிப்பதனால் நாவு என்று சொல்லக்கூடியது திருக்காஞ்சிநகரமாம்.

இதற்குக் கச்சி க்ஷேத்திரமென்றும் காஞ்சி...றும் புவனசாரமென்றும் விண்டுபுரமென்றும் கவிசித்து என்றும் இனையசித்தென்றும் சகல சித்திபுரமென்றும் தபோமயபுரமென்றும் வரதராஜ புரமென்றும் சிவபுரமென்றும் வழங்கக்கூடிய திருக்காஞ்சிபுரமென்றொரு பெயருண்டு. இதற்கு;

## சிவஞான முனிவர்.

சலதியுடைச் சேயிழைக் குத்தமிழ் நாடேமதிமுக மாந்தமிழ் நாட்டின்னும்
அலர்புகழ்தண் டகநாடே கனிவாயா வதனுள்ளுஞ் ஜாதிபேதங்
குலவுமா ருயிர்க்கெல்லாந் தத்தமது மரபொழுக்கங் கூடங்கைதோ
மகலமெனத் தேற்றுதலி னாவெனலாங் காஞ்சிநகர் வண்மை சொல்வாம்.

கேளுங்களாசர்களே! அழகிய அடிமரத்தைக் காம்பாகவும் பல இலைகளைக் குடையாகவும் அமைத்து நிழல் தருவதான மாவடியிலிருந்துக்கொண்டு பஞ்சகிர்த்தியங்களையு மியற்றி உலகங்களெல்லாந் துதிக்கும்படி அரசு செலுத்துந் திருவேகம்பர் எழுந்தருளியிருக்குஞ் க்ஷேத்திரமாம் "பல நாடுகளைச் சுற்றுப்பக்கங்களிலுங் கொண்டிருக்குந் தொண்டமண்டலமானது பல சங்குகளின் நடுவில் வளரும் வலம்புரிச் சங்கமாம்; அவ்விடத்திலுள்ள பல நகரங்களையும் வலம்புரிச் சங்கமாகக் கொண்டிருக்கும் காஞ்சிநகரானது பல வலம்புரிச் சங்கங்களுக்கு நடுவில் விளங்கும் சஞ்சலம் என்னும் சங்கமாம்; இவ்வளவு மகிமையுற்ற கச்சிக்ஷேத்திரத்தின் பெருமையை ... முனிசிரேஷ்டர்கள் கூற... ...னார்கள்.

## காஞ்சி புராணம்.

பற்பல தேயமெல்லாம் பாங்குடைத் தொண்டநாடு
பற்பல சங்காப்பட்டடர் வலம்புரியா மங்கட்
பற்பல நகரமெல்லாம் வட்டமாய்ப் படைத்தகாஞ்சி
பற்பல வலம்புரிக்குட் சஞ்சலப் பனிலமாமால்

## நால்வகைச் சேனைகள்

1. மாணிக்கச் சோதியில் மறைந்து இழுத்துக்கொண்டு போகின்ற குதிரைகளைக் காணாது இரதங்களைமாத்திரம் கண்டு சூரியன் ஏறி நடாத்தும் அழகிய இந்திராசலத்தேரைநிகர்த்த வீதிகளில் செல்லும் ரதங்கள் எண்ணிறந்தன.

2. தாங்கள் வாசம் செய்யும் ஸ்தலத்தைப் பகைவர்களுக்குக் கொடுத்துவிட்டு அந்தப் பகைவர் வாசஞ் செய்யக்கூடிய இடங்களிற் சுற்றத்தாருடன் வாசஞ்செய்ய தும்பிக்கை நிறைய நீரைமொண்டு ஆகாயத்தில் வீசுங் குஞ்சரங்கள் செல்லும் வீதிகளில் உரல்போன்ற சுவடுகளை யுடைய யானைகளை யெல்லாங் கட்டிவைக்குங் கூடங்கள் எண்ணிறந்தன.

3. மலர்களையும், மயில்களையும், வானரங்களையும் சிறு முயல்களையும், போர் செய்யும் வர்ணங்களையும், மேலான நடைகளையும், பல இலக்கணங்களையும், உடைய மேகவர்ணத் துருப்புப்புரவிகள் கட்டிவைக்கும் கூடங்கள் எண்ணிறந்தன.

4. கொடிய பகைவர் எக்காலத்தில் வருவார் அவருடன் போர் செய்து தமது வெற்றிப்பிரதாபத்தை விளக்குவோ மென்றெண்ணிக் கொண்டு தமது யஜமானர்களாகிய மந்திரிமார், தந்திரிமார், அணித்தலைவர், யூகத்தலைவர், படைத்தலைவர், முதலானவர்களின் சொற்படி இனப்பிரதியும் தனுசாஸ்திரத்தைப் பழகிவரும் வீரர்கள் எண்ணிறந்த பகைவரை வெல்லக்கூடிய அறுஞ்சோ டிரண்டுவித ஆயுதங்களமைந்த சாலைகள் பலவாம். இவ்வித மகிமையுற்றது காஞ்சிநகராம் இந்நகரைப்பற்றி

### சிலை யெழுபது.

மெச்ச[illegible]ரங்கக் கடலுலகின் மிளிருந்தலங்கண் மிகவெனினு
மெச்சித்தவர்தவ [illegible]வெயின் முனிமம்போற் கடிதற்கியலாவே
பச்சைவண்ணத் திருமாலும் பலழல[illegible] [illegible]யம்வாழ்
கச்சித்தலத்தைப் புரையுமென்க் கழறத்தலங்கள் காணேமால்

## காஞ்சியின் அற்புதங்கள்

கேளுங்களரசர்களே பண்டைக் காலத்திலேயே சப்தபுரிகளி லொன்றாகிய காஞ்சிமாநகரத்திலுள்ள அற்புதங்களைக் கூறுவோ மென்றுரைக்கலாயினர்.



### அற்புதஸ்தானங்கள்—3

| | | | |
|---|---|---|---|
| பீடங்கள் | 3. | பொதுஸ்தானங்கள் | 7 |
| கழனிகள் | 3. | பூம்பொய்கைகள் | 8. |
| சிம்மாஸனங்கள் | 4. | கல்லுகள் | 9. |
| விருக்ஷங்கள் | 5. | பூஞ்சோலைகள் | 9. |
| தடாகங்கள் | 5. | சபைகள் | 10. |
| பக்ஷிகள் | 6. | கிணறுகள் | 11. |

இவைகளைக்கூறிய ரிஷிகளைப்பார்த்து வைடிங்கன் முதல் எண்மரும் சுவாமிகாள்? இதன் பிரபாவங்களை விரித்துரைக்க வேண்டுமென வேண்டிக்கொளலும் அதற்கவர்கள் கூறுவார்கள்.

### 3. அற்புதஸ்தானங்கள்.

1. பல பிறவிகளிலும் பெற்ற தகப்பன்மாரைக் காட்டும்
2. பல பிறவிகளிலும் பெற்றெடுத்ததாய்மாரைக் காட்டும்
3. பல பிறவிகளிலுள்ள பந்து ஜனங்களைக்காட்டும்.

### 3. அற்புத பீடங்கள்

1. தன்னை வந்தடுத்தவருக்கு ஜலமும் சாதமும் கொடுக்கும்
2. தன்னை வந்தடைந்தோர்க்கு வேண்டியபொருள்கொடுக்கும்
3. ஊமைபேசவும் பேசினவன் ஊமையாகவமையவும்செய்யும்.

### 3. அற்புதக் கழனிகள்

1. விளைந்த பயிர் அறுக்கறுக்க விளையும்
2. விதைத்தநாளே முளைத்துப் பயிராகிப் பலன்தரும்
3. ஏர்கட்டி உழாமலே விளையும்

### 4. அற்புத சிம்மாதனங்கள்

1. பிரமாவைக் காண்பிப்பது ஒன்று
2. விஷ்ணுவைக் காண்பிப்பது ஒன்று
3. உருத்திரனைக் காண்பிப்பது ஒன்று
4. சூரியபகவானைக் காண்பிப்பது ஒன்று

### 5. அற்புத விருக்ஷங்கள்

1. பொன்போல் மலரும் சூதவிருக்ஷம் ஒன்று
2. தன்னிழலைக் காட்டாத காஞ்சி விருக்ஷம் ஒன்று
3. பூக்காது பழந்தரும் உறங்காப்புளி விருக்ஷம் ஒன்று

4. பலவகைப் புஷ்பங்களைத் தரும் இருப்பை விருக்ஷம் ஒன்று
5. செம்பொன் மலர் மலரும் அத்தி விருக்ஷம் ஒன்று

5. அற்புதத் தடாகங்கள்

1. இரவில் தாமரையும் பகலில் அல்லியும் மலரும்
2. ஒரு தண்டிலே மூன்று மலரைத் தரும்
3. குளித்தவர்களைக் குரங்காக்கும்
4. குளித்தவரின் சத்துருவை நாசமடையச்செய்யும்
5. குளித்தவரின் பந்துக்களுக்கு நன்மை தரும்.

6. அற்புத பக்ஷிகள்

1. மழையைத் தருவிக்கும் மயூரப்பக்ஷி
2. வேதாகம சாஸ்திரம் சொல்லுங்கிளி
3. கணிதநூல் கூறும் ஆந்தை
4. சோதிடம் கூறும் கபோதகம் (புறு)
5. சங்கீதம்பாடும் நாகணவாய்ப்பக்ஷி
6. வேண்டியது கொடுக்கும் சக்கரவாக பக்ஷி

7 அற்புதப் பொது ஸ்தானங்கள்

1. தேவர்கள் பேசுவது மானிடர்க்குக் கேட்கும்
2. முயல் யானையைத் தூக்கும்
3. தேவலோகத்தாரைப் புலப்படுத்தும்
4. திசைமாறாட்டம் செய்யும்
5. நெய்யில்லாமல் விளக்கெரியும்
6. பாதலத்தார் பேசும் சொல் கேட்கும்
7. பஞ்சவாத்தியங்கள் சதா முழங்கும்

8. அற்புதப் பொய்கைகள்

1. குளித்தால் பொன்மேனியைக் கொடுக்கும்
2. மாணிக்கங்களைக் கொடுக்கும்
3. தேவேந்திர போகங்களைக் கொடுக்கும்
4. வேண்டிய பொருள் கொடுக்கும்
5. மனோரம்மியமான பொருள் கொடுக்கும்
6. மெய்ஞானம் கொடுக்கும்
7. சத்தியஞானம் கொடுக்கும்
8. கர்மவியாதிகளைக் கெடுக்கும்



9. அற்புதக் கல்லுகள்

1. தொட்டவரைத் தேவர்களாகச் செய்யும்
2. பாம்புக்கடி விஷம் தீர்க்கும்
3. அஷ்டமாசித்தி யளிக்கும்
4. நீங்கின உயிரை மீளக் கொடுக்கும்
5. சரியான ஞாயம் சொல்லும்
6. கொடிய வியாதிகளைத் தீர்க்கும்
7. அறுபட்ட உடலைச் சேர்க்கும்
8. பாபங்களைப் போக்கும்
9. பரஞானம் பாலிக்கும்

9. அற்புதப் பூஞ்சோலைகள்

1. பொன் மழை பொழியு மொன்று
2. வெள்ளிமழை பொழியு மொன்று
3. முத்துமழை பொழியு மொன்று
4. குருவிந்தமழை பொழியு மொன்று
5. வயிரமழை பொழியு மொன்று
6. வைடூரிய மழை பொழியுமொன்று
7. புஷ்பராகமழை பொழியுமொன்று
8. கருடப்பச்சை மழை பொழியுமொன்று
9. இந்திர நீல மழை பொழியுமொன்று

10. அற்புதச் சபைகள்

1. அங்குற்றவரை ஊமையாக்குமொன்று
2. திருடருக்கு திசை மாறச்செய்யும் ஒன்று
3. கல்வி விளக்குமொன்று
4. பலவித ரூபங்களைக் கொடுக்கும் ஒன்று
5. சாகாத் தன்மை கொடுக்குமொன்று
6. பாதாள வழி காட்டுமொன்று
7. திக்பிரமை யுண்டாக்குமொன்று
8. மாணிக்க மழை பொழியுமொன்று
9. பகலை இரவாக, இரவைப் பகலாகக் காட்டும் ஒன்று
10. பிறர் காணமலிருக்கச் செய்யும் ஒன்று

11. அற்புதக் கிணறுகள்

1. தயிர்க்கிணறு
2. நெய்க்கிணறு
3. கருப்பஞ்சார்க் கிணறு
4. நிழல்காட்டாக் கிணறு
5. சுவர்க்கநெறிக் கிணறு
6. பால் கிணறு
7. தேன் கிணறு
8. முத்தி நெறிக் கிணறு
9. உலகநடைக் கிணறு
10. வித்தில்லா விளைகிணறு

11. விடாரந்து வந்தவரை மீண்டு போகச் செய்கிணறு.

இதல்லாமல் இன்னம் அவரவர்கள் செய்யும் வினையை அவர்கள் அனுபவிக்கச் செய்யும் ஓர் கல்லும், ஓர் கற்பாவையுமுண்டு இவையாவும் கலியுகத்தில் காணா. மற்ற மூன்று யுகங்களிலும் புண்ணியஞ் செய்தோருக்கே தோன்றும். இந்நகரைப்பற்றி,

போஜராஜன் சரித்திரம்

சுலோகம்

புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு
நாரீஷு ரம்பா நகரீஷு காஞ்சி
நதியீஷு கங்கா நரபதீஷு ராமா
காவ்யேஷு மாகா கவி காளிதாஸா

எனக் கூறுவதாவது புஷ்பங்களில் சிறந்தது ஜாதிமல்லி, புருஷர்களில் சிறந்தவர் விஷ்ணு, ஸ்திரிகளில் சிறந்தவள் ரம்பை, நகரங்களில் சிறந்தது காஞ்சிபுரம், நதிகளில் சிறந்தது கங்கை, அரசர்களில் சிறந்தவர் இராமர், காவியங்களில் சிறந்தது மாகமே! எனக் கூறிய நகரம்.

நால்வகை வருணத்தார்.

இக்காஞ்சிமாநகரத்தில் அந்தணர் வேதசாஸ்திரங்களை வாசிப்பதிலும், அரசர்கள் வில்வித்தைகள் பயில்வதிலும், வணிகர் வாணிபம் செய்வதிலும், வேளாளர் உழவுதொழிலும் சிரத்தையுடையவர்கள். இதற்கு,

பிரபுலிங்கலீலை

சொற்போர்புரிவர் நான் மறையாறங்க முணர்ந்ததொழு குலத்தோர்
விற்போர்புரிவர் நெடிய சிலையிராமனனைய வில்வேந்தர்
பொற்போர் புரிவர் பிறர் பொருளுந் தம் போற் பேணிப்புரிவணிகர்
நெற்போர் புரிவரந்நகரில் வேளாண் குலத்தி னெறியினரே.



இதல்லாமல் இன்னம் பிரமனது முகத்திலும் தோளிலும், தொடையிலிலும், பாதத்திலும், முறையே அந்தணர், க்ஷத்திரியர், வைசியர், வேளாளர். உற்பவித்தார்கள். வேளாளர் தவிர மற்ற மூன்று குலத்தவரும் யாகங்கள் செய்ய வுரியவராவார்கள். இதற்கு,

கூர்மபுராணம்

வேதியர் முகத்தில் வேந்தர் விறல்கெழு திணைத்தோள் வெற்பின்
றீதறுவணிகர் செம்பொற் குறங்கினிற் சதுர்த்தர் செய்ய
பாதபங்கயத்திலீன்றான் பதுமன் முன்படைத்த மூவர்
ஓதிய மகங்களியாவு மாற்றுதற் குரியராவர்.

இன்னம் தனுசு, மீனம் இவ்விரண்டும் பிராமணனன்; மேஷம், சிம்மம் இவ்விரண்டும் க்ஷத்திரியன்; கடகம், விருச்சிகம் இவ்விரண்டும் வைசியன்; மிதுனம், துலாம், கும்பம் இம்மூன்றும் சூத்திரன்; ரிஷபம், கன்னி, மகரம் இம்மூன்றும் பஞ்சமன். இதற்கு,

சினேந்திரமாலை

வேந்தனரியாடாகும் வெஞ்சிலை மீன் வேதியனும்
வாய்ந்ததோர் ஞெண்டுடன் றேள்வாணிபனு—மேந்துந்
துலையாழ் குடமூன்றுஞ் சூத்திரன் கீழ்ஜாதி
கலையேறுடன் மகராங் காண்.

இன்னம் அந்தணர் வல்லூறு, அரசன் காகம், வணிகன் ஆந்தை, வேளாளன் கோழி, சண்டாளன் மயில். இதற்கு

பஞ்சபக்ஷி சாஸ்திரம்

வல்லூறு பார்ப்பான் வளராந்தை தான் வணிகன்
செல்லாருங் காகஞ் செகந்தரசன்—நல்லாய்கேள்
கோழியாம் வேளாளன் கூறுமயில் சண்டாளன்
ஆழியா னூலாய்ந்தறி.

இன்னம் அந்தணர்க்கு—விஷ்ணு பிரமன் சுப்பிரமண்யர் சிவன் இந்நால்வரும், அரசருக்கு—சூரியன் சந்திரன் இந்திரன் இம்மூவரும், வணிகருக்கு—குபேரன் தர்மராஜன் இவ்விருவரும், வேளாளருக்கு—வருணனும் அதிதேவதைகள்,

இலக்கணநூல் பாட்டியல் வருணப்பொருத்தம் 12 கவி

காலமன் சந்திரனிந்திரன் கண்டன் காவலற்கு
மாலயன் சேயரன் கண்டன மாமறை யோர்க்குநிதி
கால வனந்தகன் கண்டனவற்கு வணிகருக்கு
வேலயன் கண்டன வேளாளருக்கும் விளக்கிலையே

பிராமணர்க்கு வேதம், க்ஷத்ரியருக்கு வில், வைசியர்க்குதுலாக் கோல், சூத்திரர்க்கு கலப்பை, கவிஞர்க்கு கல்வி ஆயுதங்களாம்.

### ஸ்ரீ வன்னிகுலோத்கர்ஷதீபிகை

மன்னவர்க்கு வில்லை மறையோர்க்கு வேதத்தைப்.
பின்னவர்க் கேரைப் பெருவணிகர்க்—குன்னும்
துலாக்கோலைப் போற்றித் துதித்தல் கடனும்
கலாப் பண்டிதக் கவிஞர் கட்கு

### பிர்ம குலம்

ஐயர் வேதியர் இருபிறப்பாளர் மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர் அந்தணர் நூலோர் அறுதொழிலாளர் செந்தீவளர்ப்போர் உயர்ந்தோர் ஆய்ந்தோர் ஆதிவருணர் வேதபாரகர் விப்பிரர் தொழு குலத்தோர் வேள்வியாளர் முப்புரிநூலோர் முனிவர் என்றிவை தப்பில் பார்ப்பார் தம்பெயராகும். என திவாகரத்தில் கூறியபடி அந்தணர் பெயராம். இவர் தொழிலாகிய வேதமோதல் ஓதுவித்தல் வேள்விவேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் இவ்வாறும் பிராமணர் தொழிலாம், இதற்கு

### பிரகஸ்பதி ஸ்மிருதி

ஸ்வாத்யா யோத்யா பனம் சாபிய ஜநம்யாஜநம்ததா
தானம் பிரதிக்ர ஹச்சேதிஷட்கர்மாண்யக்ர ஜந்மன:

### பன்னிருபாட்டியல்

,, நறு மலர் திசைமுக னீசனரண
னறு முகன் படைத்தன வந்தணர்ஜாதி

அவை:—அகர முதற் பன்னீருயிரும்-க-ங-ச, ஞ, ட, ண, வும்,

,, திருமாலானே திசைமுகன் குமரன்
மாயிற் படைத்தன மறையவர்ஜாதி

### மறையோர் சிறப்பு

### அறப்பளீசுரர் சதகம்

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
யொன்று தப்பாது புரிவார்
உதயாதியிற் சென்று நீர்படிகுவார் கால
மொரு மூன்றினுக்கு மறவா



தாரமய்ந்து காயத்ரி யது செபிப்பார்நாளு
மதிதி பூசைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரகிரி யாலோப
மின்றியே செய்து வருவார்
பேராசை கொண்டிடார் வைதிக நன்மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர்
பெய்யெனப் பெய்யு முகி லவர் மகிமையெவர்களும்
பேசுதற் கரிதரிது காண்
ஆரூர் நெடுஞ்சடில வமலனே யெனையாளு
மண்ணலே யருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீச் சுரதேவனே

### வைசிய புராணம்

ஆதியில் பிராமணரையும் வேதங்களையும் பிரம்மா வுண்டாக்கினர். இதற்கு,

அங்கமாறுந் திகழ வம்புயத்தோ னன்முகத்தே
தங்கமேவும் மறையோர் தோன்றினர் தோன்றியபின்
வங்கமேவும் கடல்சூழ் மானிலமே லேழுவகை
தங்கிவாழ் சாதிச் சராசரங்களுந் தொகுத்தே

அந்தணர்கள் ஆகுதிபிடும்படியான யாகாக்கியில் நெய் சிதறி யுண்டாகும் திவலைகளும், சடசடவென்று ஒலிக்கும் நெருப்புப் பொறிகளுஞ் சேர்ந்து மேகமாய்ப்பரவிய புகையும், பிராமண மங்கையர் சமையல் வீட்டில் பதார்த்தங்களைத் தாளிப்பதனால் உண்டாகும் புகையும், தெய்வப்பெண்கள் போன்ற மாதர்கள் தங்கள் தங்கள் கூந்தலுக்கு ஊட்டும் அகிற்புகையும், யாகாக்னியிலுண்டாகும் புகையும் ஒன்றாய்ச்சேர்ந்து ஓங்கியெழும் படர்ந்து சூழ்ந்துகொண்டிருக்கும் பிராமண மொழுக்கமுள்ள பெரியோர்கள் வாழும் திருமாளிகைகள் அக்காஞ்சியில் பலவுள்ளன.

### ஜாதிபேத விளக்கம்

ஓதலே பிறர்க்குத்தாமே ஓதிவித்திடுதல் மிக்க
வேதவேள் விகளியற்றல் வேட்பித்தல் வேட்டபேர்க்கே
ஈதலீந் திடுவோர் தம்பாலேற்றிட லேற்பதாக
வாதி நான்மறையோர் செய்யுமறு தொழிலாகுமன்றே

## க்ஷத்திரியர்

புரவலன் கொற்றவன் பெருமான் காவலன் அரையன் ஏந்தல் கோவே குரிசில் தலைவன் மன்னவன் வேந்தன் முதல்வன் நிருபன் பூபாலன் நரபதி பார்த்திபன் இறைவன் அண்ணல் எனப் பதினெட்டும் அரசன் றன்பெயராகு மென்ப.

இவ்வரசர்களின் தொழில்களாவன வேள்விசெய்தல் வேத மோதல் ஈதல் உலகோம்புதல் படைக்கலம் பயிலுதல் யுத்தஞ் செய்தல் இவ்வாறும் க்ஷத்திரியர் தொழில்களாம். இதற்கு,

### பிரகஸ்பதி ஸ்மிருதி

இஜ்யாத்ய யனதானே கப்ர பரிபாலநம்
சஸ்ராஸ்ர தாரணம் சேதிகர் மாணி க்ஷத்ரியஸ்யது :

### பன்னிருபாட்டியல்

" இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
தன்னருஞ் சிறப்பின் மன்னவர் ஜாதி "

அவை:—த—ந—ப—ம—ப—ர—வும்,

" இந்திரனிரவி சோமனிம் மூவர்
தந்த வெழுத்தே யரசர் ஜாதி. "

### வைசிய புராணம்

துட்டரையு நீக்கிச் சுருதிநெறி நீங்காத
சிட்டரையும் வாழ்வு சிறக்கும்படி தெரிந்திட்
டிட்டமுடன் மண்ணாண் டினி திருக்குமா றிசைந்து
மட்டவிழ் தார் வேந்தை மருமத்தாலே விடுத்தான்.

வேதமோதல் தானங் கொடுத்தல் பிரஜைகளை நீதிப்படி குற்றத்துக்குத் தக்கவாறு சிக்ஷித்தல் ரக்ஷித்தல் முதலிய கன்மங்களுக்கு அரசர்கள் உரியராவார்கள். இதற்கு,

### வியாசபாரதம்

க்ஷத்ரஜம் ஸேவதே யஸ்துவெதாத்ய யனஸங்கத
தாநா தாநரதிர்யஸ்து டவை க்ஷத்ரிய உச்யதே :

### திருக்கைவளம்

" ஓதலுடன் வேட்ட லுலகோம்பல் படைபயிற்றல்
ஈதலுடன் போர்செய் திட்டுங்கை "



### அரசர் சிறப்பு

### அறப்பளீசர் சதகம்

மனுநீதி முறைமையும் பராபரர் கொண்டாட
வருமதிக ரணவீரமும்
வான்விஜய மொடுசரச சாதன விசேஷமும்
வாசி மதகரி யேற்றமும்
கனமாமமைச்சரும் பலமான துர்க்கமும்
கைகண்ட போர்ப்படைகளும்
கஜரத பதாதியுந் துரகப்ர வாகமும்
காலதேசங்க ளவையும்
இனிதாயறிந்ததா னுபதிக ளொடுசமர்க்
கிளையாத தளகர்த்தரும்
என்றும் வற்றாத தனதானிய சமுத்திரமு
மேற்றமுள குடிவர்க்கமும்
ஆளவோரு மெச்சவிங் கிவை யெலாமுடையபே
ரரசரா மருமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீச்சுர தேவனே.

நால்வகைச் சேனைகளும், அடங்கி நடக்கும் குடிகளும், நல்ல பயிர் வளப்பமும், தந்திரமறிந்த மந்திரிகளும், சாதுக்கள் நேசமும், கோட்டையும், இவ்வாறங்கமு முடைமையும், யுத்தத்திலஞ்சாமை, கொடை, அறிவு, உற்சாகம் இந்நான்கும் மிகுந்திருத்தல் அரசர்க் கியல்பாம். இதற்கு

### திருக்குறள்

" படைகுடி கூழமைச்சு நட்பரணா றும்
முடையானரசரு ளேறு ",
" அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு "

## வைசியர்.

வேதமோதல் வேள்விபுரிதல் ஈதல் பசுக்காத்தல் வட்டி விட்டல் உழவுத்தொழில் செய்தல் பண்டமாற்றுதலாகிய வியாபாரம் இவ்வேழும் வைசியர் தொழிலாம். இதற்கு,

## பிரகஸ்பதி ஸ்மிருதி

*ஸ்வாத்யாயோயஜநம தாநம் பசு நாம்பாலனம்ததா*
*குஸீதக்ருஷிவாணி ஜ்யம் வைச்ய கர்மாணிஸ் ப்தவை :*

பிங்கலத்தில் கூறியபடி வைசியர்களின்பெயர்களாவன:—தா[illegible]ளர் இப்பர் தருமக் கிழவர் வேளாளர் இளங்கோக்கள் வைசியர் எனப் பெயராம். கோவைசியரெனவும் தனவைசியரெனவும், [illegible] வைசியரெனவும் மூவகைப்படும்.

வைசியன் உபநயன முதலிய சமஸ்காரம் செய்து கொண்டு வேதமோதியபின், விவாகம் செய்துகொண்டு பசுவைக் காப்பாற்று வதிலும் பயிர் முதலிய ஜீவனவிர்த்தியிலும் முயற்சியாய் இருத்தல் வேண்டும். மனு ஸ்மிருதியில் வைசிய தர்மம் 9-வது அத்தியாயம் 326-வது சுலோகம் கூறுகின்றதாவது, ஒருவகையினரான வைசியர் தத்தமக்குள்ள தொழிலின் வேற்றுமையால் மூவகையாயினர். இன்னம்,

### சூடாமணி

*இளங்கோக்கள் மன்னர் பின்னரிப்பரெட்டியர் காராளர்*
*வளம்பெற வேளாளர் வைசியர்தம் பொதுப்பேராம்*
*கிளந்த கோக்காத்தன் மற்றுங்கிளர் பொருளீட்டலேரை*
*விளங்க வேயுழலான் மூன்றுகுலம்பெறும் வேறுசொல்வாய*

### வைசியர் புராணம்

*சீரார் புரிநூலுந் தண்டு கமண்டலமு*
*மோரார் சிகையு மிலங்கவேழில் வக்குவனும்*
*பேரானே யூருவினிற் பெற்றான் பிரமனுயர்*
*காரான ஞானேன் கமலன் பதத் துதித்தான்*

பசுக்களை ரக்ஷித்தல் பயிர்த்தொழில் செய்தல் வேதமோதுதல் வியாபாரத்தால் திரவியத்தை விர்த்திசெய்தல் முதலியன வைசியர் கன்மங்களாம். இதற்கு,

### வியாசபாரதம்

*வியத்யாக பசுபச்சக் ருஷ்யா தாந ரதிச்சுசி:*
*வேதாத்ய நஸம்பந்ந: ஸவைச்ய இதியம்க்ருத*

### பன்னிரு பாட்டியல்

*" இருமிதி திதிக்கோன் வருணன் படைத்தன*
*வணிமிரு சிறப்பின் வணிகர் ஜாதி "*

*அவை [illegible]*



*" வருண நிதிக்கோ னென்றிவர் படைத்தன*
*வசைதீர் சிறப்பின் வணிகர் ஜாதி "*

தாங்கள் கொண்ட சரக்குகளுக்கு அதிகலாபம்பெறு மாசை யொழித்து அன்னியர் கேட்ட பொருள் இல்லையென மொழியாது கொடுக்கும் மாடிக்கடைகளும், குறைபடி கொண்டளவாது சரிபடியால் அளக்கும் வாணிபர் கடைகளும், பல தேசத்திலிருந்து வருவிக்கும் சரக்குகளை நயவிலைக்கு விற்கும் வைசியரது பளிங்குக் கற்களால் செதுக்கிய தூண்களும், சலவைக்கற்களாலமைத்து தந்தங்களால் விசித்திரவேலைகள் செய்த நிலைகளும், சந்தனமரங்களாலமைந்த உத்தரங்களும், அகில்மரங்களாலமைந்த சட்டங்களும், சூரியகாந்தக் கற்களாலமைத்து தந்தங்களால் பூக்கொடி வேலைகள் செய்யப்பெற்ற சாளரங்களும், சித்திரங்களமைந்த சுவர்களுமுள்ள மாடமாளிகைகளில் வடதிசைத் தலைவனை நிகர்த்த அளவற்ற ஐசுவரியமுள்ள வணிகர்கள் பலர் வாசஞ்செய்யும் நகரமாம் காஞ்சியெனும் க்ஷேத்திரம்

### பனிரண்டாவது நிகண்டு.

*பெறுவது தெரிதலீட்டல் பேணிமற்றவை ப[illegible]*
*இருவதஞ் சாமையென்று மிடனறிந் தொழு[illegible]*
*உறுபெருந் தனிமையா தலுடன்முனி விலை[illegible]*
*வறுவறு பொழுதிற்கூடல் வசியர்தங் குணங்க[illegible]*

163055
[illegible] -600 005.

### சூத்திரர்

சுத்தமுடைமை அந்தணர் பணிவிரும்புதல் சத்தியம் சினமின்மை வேதவிதியில்லாத மந்திரம் அவ்வகை நமஸ்காரம் இவை சூத்திரர் தொழில்களாவன. இதற்கு

### பிரகஸபதி ஸ்மிருதி.

*சௌசம்ப்ராம் மணசுச்ரூஷாஸத்யமக் ரோதாவச*
*சூத்ரகர்ம ததாமந்த்ரோ நமஸ்காரோப்ய சோதித:*

பின்னவர் சதுர்த்தர் பெருக்காளர் வளமையர் மன்னுமுத் தொழிலர் மண்மக்கள் புதல்வர் உழவர் ஏரினர் வாணர் காராளர் வினைஞர் மேழியர் வேளாளர் எனப் பிங்கலத்தில் கூறியபடி சூத்திரர் பெயர்களாவன.

வினைஞர் சூத்திரர் பின்னவர் சதுத்தர் வளமையர் வேளாளர் மண்மக்கள் புதல்வர் வாத்தியத்தெழிலோர் வண்களமர் உழவர்

1/592
N1411

சீர்த்தவேரின் வாழ்நர் காராளர் என திவாகரத்தில் கூறியபடி சூத்திரர் பெயர்களாம்.

சூடாமணி.

மண்மக்கள் புதல்வர் வாய்ந்த வளமையார் களமரென்னும்
உண்மைசால் சதுர்த்தர் மாருஉழவர் மேழியர் வேளார்
திண்மைகொள் ஏரின்வாழ்நர் காராளர் வினைஞர்செம்மை
நண்ணுபின் னவர்பன்ளுென்றும் நவின்ற சூத்திரர்தம்பேரே

ஏரெழுபது.

தொழுங்குலத்தில் பிறந்தாலென் சுடர்முடி மன்னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென் னிவர்க்குப்பின் வணிகரொனுஞ்
செழுங்குலத்திற் பிறந்தாலென் சிறப்புடைய ராஜுலென்
உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே.

திருத்தொண்டர் புராணம்

காராளரணி வயலிலுழுது தங்கள்
கையார நட்ட முடிதிருந்தி விந்தப்
பாராளுந் திறளரசர் கவித்த வெற்றிப்
பசும்பொன்மணி முடிதிருந்துங் கலப்பைபூண்ட
வேரா லெண்டிசை வளர்க்கும்புகழ் வேளாள"
ரோடிக்குஞ் சிறுகோலாற் றாணியாளச்
சீராரு முடியரச ரிருந்து செங்கோல்
செலுத்துவர் வேளாளர் புகழ் செப்பலாமோ.

பன்னிருபாட்டியல்

"கூற்றுவன் படைத்தன கூற்றன் விரண்டு
மேத்திய மாபிற் சூத்திரர் ஜாதி"

அவை-ம்-ஞ்—ள.

"இயமன் படைத்த இருவகை யெழுத்திட்
டுகடீர் மாபிற் சூத்திரர் ஜாதி"

சிலப்பதிகாரம்.

" பரப்புநீர் காவிரிப் பாவைதன் புதல்வ
ரிரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு
முழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்
பொங்கழியாலைப் புகையொடு பரந்து
மங்குல் வானத்து மலையிற [illegible]
மூரிடை யிட்டநாடுடன் கண்டு. "

பாண்டியன்.

மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழிதரிதே அருளுங்கை—சூழ்வினையை



நீக்குங் கையென்று நிலைக்குங்கை நீடேழி
காக்குங்கை காராளர் கை.

வாசனை வீசும் வெண்டாமரை மலரில் வாசஞ்செய்வோனும் திருமாலின் மருகியின் மணவாளனுமான நாபிக்கமலத்தோனுடைய திருமுகத்திலுற்பவித்த பிராமணர்கள் தோளிலுற்பவித்த க்ஷத்திரியர்கள் தொடையில் உற்பவித்த வைசியர்கள் என்னும் மூன்று ஜாதியாரைத் தங்கள் மேழிச் செல்வத்தால் நிலைபெறத்தாங்கும் உரிமையுள்ள பாதத்திற்பிறந்த வேளாண்மையென்னும் புகழ் படைத்தோங்கும் பெயரைத் தாங்களுக்கே உரிமையாக்கொண்டிருக்கும் வேளாளர்கள் தம்முறைத் தொழிலாகிய விவசாய சாஸ்திரப் பயிற்சியுடையவராய் உழுதல்,விதைத்தல், ஏற்றம் இறைத்தல், முதலான தொழின்வழி. பிசகாது நடப்பார்கள் "மேழிச்செல்வம் கோழைபடாது" என்னும் வாக்கியம்போல் தம்தொழில் மாறாது நடப்பதுடன் தமக்கும் மேம்பட்ட மற்ற மூன்று வர்ணத்தார்களின் ஏவல் மீறாது நடந்துவரும் வேளாளர் தெருக்களையுடைய காஞ்சிமாநகரம், இதற்கு.

திருவிளையாடற் புராணம்.

வழுக்கறு வாய்மை மாண்புங் கங்கைதன் மரபின்வந்த
விழுக்குடி பிறப்பு மூவரேவிய வினைகேட்டாற்று
மொழுக்கமு மமைச்சாய் வேந்தற்குறுதி சூழ்வினையுங் குன்று
விழுக்கறு மேழிச்செல்வர் வளமறு மியம்பலுற்றும்,

கோக்களின் லட்சணம்.

இவ்விதமாய்க் கூறிய வேளாளர்களால் ஆதரித்து வரக்கூடிய (மேஷம்) ஆடு மாடு புரவி குஞ்சரம் முதலான மிருகங்களில் பெருமை பொருந்திய பசுவினது அங்கத்தில் அமைந்திருக்கும் தேவர்களை ஒருவாருரைப்போமென்று முனி புங்கவர் கூறலாயினர்.

வலது கொம்பில் கங்கை
மத்திய பாதத்தில் சரஸ்வதி
மத்தியத்தில் ருத்திரன்

இடது கொம்பில் யமுனை
முன்காலில் இரணிய கர்ப்பன்
பின்பக்கம் விஷ்ணு

வயிற்றின் முன்பக்கம் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்
இடப்பக்கம் முப்பத்து மூக்கோடி தேவர்கள்
கீழ்ப்பக்கம் சகல நதிகளும், தீர்த்தங்களும்
குளம்பில் வேதங்கள்
மடியில் சாகரங்கள்.

இதன்றி சகலவிதத்தாலுண்டான பாபங்களும் பிரஷ்டையும், தூல ஆத்ம சூக்ஷ்ம சுத்தியும் செய்யும்படியான ஐந்துவிதவஸ்துக்களையுடைய பசுக்களும் அதன் கன்றுகளும் புரவிகள் முதலாகக்கட்டும் பந்தி பந்தியாயுள்ள சாலைகள் பலவுள்ள காஞ்சிமாநகரம், இதற்கு.

கடம்பவன புராணம்.

தனினீள் வாலின் யோனியினிற்
றங்குங் கமலை ரோமமெலா
நனிசேர் தேவர் முனிவர்கணன்
னுங் கோமயமே முதலைந்தின்
பனிசேர் மலரோ ஞதி சதா
சிவமீனுறையும் பகர் பசுவின்
புனித மெவரே புகன்றிடுவார்
பொருள் சேர் வேதவடிவாகும்

## புரவிகளின் லட்சணம்.

பெருமை பெற்ற புரவிகளுக்கு பல பெயர்களுடையன. அவை யாதெனில்-புரவி, பரி, குரங்கு, கந்துகம், கனவட்டம், குதிரை, துரகம், கற்கி, பாடலம், அச்சுவம், துரங்கம், கொய்யுளை, கொக்கு, இவுளி, பாய்மா, கோரம், கன்னி, வன்னி, கோடகம், அயம், கோணம், குந்தம், அரி, கிள்ளி, தூகம், குரகதம், எனப்பல பெயர் பெற்று 60 வயதுடைய குதிரைகளில் வெள்ளிபோல் நிறமுடையது வெள்ளைக் குதிரை, மாதுளம் பூ நிறமுடையது சிவப்புக் குதிரை, மேகம்போல் நிறமுடையது கறுப்புக்குதிரை, கோரோசனை நிறமுடையது பொன்னிறக் குதிரை, இந் நான்கு வர்ணமுங் கலந்தது மிச்சிரம் எனவுங் கூறுவர்.

1. முகம் மார்பு உச்சி வால் கால்கள் நான்கு ஆக எட்டிடமும் வெண்மை கொண்டது அஷ்டமங்கலம்.
2. முகத்திலும் நாலு காலினும் ஆக ஐந்திடத்தில் வெள்ளை யிருந்தால் பஞ்சகல்யாணி.
3. கழுத்தில் வலஞ்சுழியிருந்தால் அது தெய்வமணி.
4. முகம் தலை நாசி மார்பு இந்நான்கிடத்திலும் இரண்டிரண்டு சுழிகளும், நெற்றி நடு பின்பக்கம் இரண்டிடத்திலும் ஒவ்வொரு சுழியுமுள்ளது லட்சணம்.



இவ்விதமாயுள்ள சுழிகளில்லாதது இலக்கணப்பழுதென்று நீக்கிவிட வேண்டியது.

6. மார்பிலே வெவ்வேறாக ஐந்து சுழியிருந்தால் அக்குதிரைக்கு ஸ்ரீவச்சம் எனப்பெயர்.
7. நெற்றியில் இரண்டு அல்லது மூன்று சுழியிருந்தால் அக்குதிரை நல்லதாம்.
8. இவ்விதமில்லாவிட்டாலும் நெருக்கமாக நான்கு சுழிவலம்புரியிருந்தாலுமது நல்லது.
10. கண்டத்தினடுவே இரட்டைச் சுழியுடைய குதிரையானது தலைவனுக்கு தரித்திரம் அல்லது துன்பம் அல்லது மரணம் அவைகளில் ஒன்றேனும் தவறாது செய்யும்.
9. இவ்விதமில்லாவிட்டாலும் இரண்டு சுழி முன்னங்கால்களிலும் மூலத்திலுமிருந்தால் நல்லது.
11. இந்த இரட்டைச் சுழி காலிலிருந்தால் தலைவனுக்கு பயம் துன்பம் விலங்கு முதலானவைகள் உண்டாகும்.
12. மேலுதடு முன்காலடி கபோலம் முழங்கால் இந்த நான்கிடங்களிலும் சுழிகள் இருந்தால் தலைவனைக்கொல்லும், இவைகளை லாயத்திலும் கட்டி வைக்கக்கூடாது.
13. எந்த நிறபேதங்களானாலும் வெள்ளை கலந்தது நல்லது.
14. கருத்த குதிரைக்கு வயிற்றிலும் மார்பாயினும் சிவந்த நிறமாயிருந்தால் ஜெயத்தைக் கொடுக்கும்.
15. அந்த மார்பும் வயிறும் வெள்ளையாயிருந்தால் அந்தக் குதிரையை வாரணம் என்பார்கள். அவைகள் பகைவர் போரிலே வெற்றியைக் கொடுக்கும்.
16. பிடரி வெளுத்திருந்தால் தலைவனுக்குப் புத்திர பாக்கியம்.
17. மார்பு வெளுத்திருந்தால் சந்தோஷத்தைத்தரும்.
18. மணிக்காலிலும் கண்டத்திலும் வெளுத்திருந்தால்வெற்றியைக் கொடுக்கும்.
19. பின்பக்கம் வெளுத்திருந்தால் சுகம் உண்டாகும்.

20. இடை வெளுத்திருந்தால் சந்தானம் பெருகும்.

21. வலப்புறத்திலே வெளுத்திருந்தால் தன தான்யம்பெருகும்.

22. முதுகு வால் முகம் இம்மூன்றும் வெளுத்த குதிரை ஜெயங் கொடுக்கும்.

23. உந்தி தொடங்கி முன்புற மெல்லாம் சூரியன் போல் சிவந்து, சந்திரன்போல் பின்புறமெல்லாம் வெளுத்து அழகுள்ள குதிரைக்குப் பகலில் ஜெயமுண்டாகும்.

22. சந்திரன் போலே முன்புறம் வெளுத்து, சூரியன்போல் பின் புறம் சிவந்த குதிரைக்கு இரவில் ஜெயமுண்டாகும்.

குதிரை காலூன்றினால் பந்துபோலவும், நின்றால் மலைபோலவும், அனுமானித்தால் யானைபோலவும், சிங்கம்போலவும், வேகத்தில் வாய்வு போலவும், ஆட்டத்தில் நடனமாதைப் போலவும், நடந்தால் யானைபோலவும், இருக்கும் உத்தம குதிரைக்கு உயர்வு நூறு விரல் அளவு; மத்திமக்குதிரையுயர்வு எண்பத்து நாலு விரலளவு; அதமக் குதிரை யுயர்வு அறுபத்தொரு விரலளவு உயரம், என்று நிலைபெற்ற நாகபந்தம் முதலிய நூல்கள் கூறுகின்றன. அசுவலட்சணத்தின் உண்மையான பொருளைத் தெரிந்தவர்களு முளர்.

## பட்டத்துக் குதிரைக்கு
## பனிரண்டாவது நிகண்டு

மாதர்மாமனத்தை யொத்த மனத்ததாய் வாழையுற்ற
கோதிலாமடலே போலக் கொழுந்தன செவியதாகிப்
பாதமுன் பின்னிருத்திப் பகர்முகம் பான்மத்தாகி
ஒது மெண்பத்திரண்டங் குலியுயர் பரி மன்னர்க்காம்.

## கஜங்களினியல்பு.

மதிமபக்கம் பொருந்திய யானைகள் நவமணிகளைத் திரட்டிக் கொண்டு பெருகும் குளிர்ச்சிபான அலைகளையுடைய அகழியின் நீரில் கவளத்தை வாங்கிக் கொள்ளும்போது அதன் காலில் கட்டியிருக்கும் சங்கிலிகளைப் பிடிப்பார்கள் கறைபேற இழுப்பார்கள், "தருகண்யானை தான் பெரிதாயினும் சிறுகண்மூங்கிற் கோற் கஞ்சும்மே" என்றுரைத்தபடி பாகர்களைக் கண்டஞ்சினவைகளாய் நடக்



கும். அண்டச் சுவர்வரையிலு முண்டாகிய பெரிய தடைபோல் மணம் வீசும் மலர்களையுடைய அகழியைச் சூழ்ந்திருக்கும் வளமான மதில் ஆகாயத்தை யளாவ வோங்கும். இத்தகைமையாய் அகழிகளையுடைய காஞ்சிமாநகரம்.

## பட்டத்து யானைக்குப் பனிரண்டாவது நிகண்டு

பெறுமுறை முன்புயர்ந்து பின் பணிந்தழகதாய
தறுகண்ணதாகிச் சூழி சார்ந்த மத்தகத்ததாகி
முறநிகர் கண்ணதான மூரிமால் யானைதானே
அறநெறிசெலுத்துஞ் செங்கோலரசுவா வாகுமென்ப.

இன்னம் அக்காஞ்சியின் கண்விளங்கும் ஆலயங்களிலுள்ள கோபுரங்களானவை அந்நகரில் வாசஞ் செய்கின்றவர்கள் ஆயுள் முடிவில் சிவலோகம் போக வைக்கப்பட்ட ஏணியை நிகர்க்கும். செம்பொன்னாலாகிய உப்பரிகைமேல் தெய்வப்பெண்கள் போலும் அழகுடைய மாதர்கள் ஒப்பில்லாத வீணையாற் பாடும் இசைக்கு விண்ணுலகத்திலிருந்து மகிழ்ந்து வெள்ளையானையை நிகர்த்து பாடகம் தண்டை சிலம்பொலி வீசும் நடைகளையுடைய மங்கையர் கேட்க வருவார்கள்.


அவ்விடத்திலுள்ள பல நகரங்களையும் வட்டமாகப் படைத்திருக்கும் திருக்காஞ்சிமா நகரத்தில் வரிசையாகக் கட்டியிருக்கும் அலங்கார மாளிகைகளை யுடைய காமகோட்டமானது பாஞ்சசன்னிய மென்னும சங்கில் தோன்றி விளங்கும் விலை மதிக்கப் படாத மேன்மையுள்ள முத்தாரம். நவமணிகளின் கிரணம் வீசிப் பாவியிருக்கும் இருளை அழிக்க வட்டமாய் விளங்கும் செம்பொன்மதிலால் சூழப்பட்ட விமானங்களையுடைய ஆலயங்களமைந்த நகரம்.

இன்னகரில் ஆயிரக்கால் மண்டபம், ஆடல் மண்டபம், கல்வி மண்டபம், கணக்கறிமண்டபம், கலைக்கூத்து மண்டபம், ஆஸ்தான மண்டபம், துலாபார மண்டபம், பாடல் மண்டபம், முதலானவைகளைக் காணின் அளகாபுரியு மீடல்லவெனத் தோனும்படியாயும், ஞானவான்கள் யோகாப்பியாசஞ் செய்யும்படியானதும், க்ஷீர புஷ்ப பாத [illegible] நதி அரித்திராவாரம் பம்பை கம்பை முதலான சப்த நதிகளும், பஞ்ச [illegible] காயாரோகண தீர்த்தம் சிவகங்கை மங்கல தீர்த்தம் இஷ்டசித்தி தீர்த்தம் ஸப்தவார தீர்த்தங்களும், ஹஸ்தகிரி

முதலிய பர்வதங்களும் காமகோட்டம் முப்புராரி கோட்டம் குமர கோட்டம் வரதராஜராலயம், ஏகாம்பராலயம் புண்ணியகோடி முதலான ஆலயங்களும், காமகோடி யம்பிகாதேவி யென்றும் சொல்லக் கூடிய காமாக்ஷிதேவி திருக்கம்பாநதி தீரத்தில் மாவடி விருக்ஷத்தின் கீழ் எழுந்த பிரானாகிய ஏகம்பரைப் பூசித்ததாகக் கூறுகின்றதாவது

கோயிற் புராணம்

ஒவிடலி லோசையொருபா லெழுந்திப்பான்
மாவடிவிடாத வொருதேவருளர் மாடே
கூவன் குழையால் வழிகுலாவி யொரு பச்சைப்
புரவையருபோதும் விரிபோது பயில்விக்கும்



காமாக்ஷிதேவி ஆவிர்ப்பவம்.

சுவேதவராக கல்பம், ஏழாவதாகிய உச்சியம் என்கிற மனவந்தரம், தாமஸகாலம், கிருதயுகம், அயக்ரீவர் அவதார காலம், ஸ்ரீமுக வருஷம், சூரியன் துலாத்திலிருக்குஞ் சமையம், கார்த்திகை மாதம், கிருஷ்ணபட்சம், தசமி திதி, சுக்கிரவார உதயம், பூர்வ பல்குனி நட்சத்திரம், மத்திய பாதம், சூரிய உதயகாலம் இந்த சுபதினத்தில் பராசத்தியினுடைய நெற்றிக் கண்ணினின்றும் ஜோ ஸ்வரூபிணியாய் கவுரி யெனும் அம்பிகை சோதி சொரூபமாய்ப் பிரசன்னமாயினள். அவ்வம்பிகையைப் பிரமன் கண்டு அதிசயித் துப் போற்றி வணங்கி அந்த க்ஷணத்திற்றானே முன் திரிபுராம்பிகை



ஆக்ஞை செய்த வண்ணம் சுவர்ணத்தினால் அந்த அம்பிகையைப் போலவே விக்கிரக நிர்மாணஞ் செய்தனன்.

சர்வலோக மாதாவென்பதற்கு திருவிளையாடற் புராணம்


பங்கயற் கண்ணரிய பரம்பரனுருவே
தனக்குரிய படிவமாகி
யிங்கயற் கணகனுலக மெண்ணிறந்த
சராசரங்களீன்றுந் தாழாக்
கொங்கையற் கண்மலர்க் கூந்தற்குமரி
பாண்டியன் மகள்போற் கோலங்கொண்ட
வங்கயற் கணம்மை யிருபாதப் போ
தெப்போது மகத்துள் வைப்பாம்.

திருஉருவம்.

அன்றலர்ந்த தாமரை மலர்போன்ற இரண்டு கண்களையுடைத்தாகியும், இரண்டு புஜங்களை யுடைத்தாகியும், அவற்றுள் வலது திருக்கரம் கிளியைத் தாங்கியிருப்பதாயும், உதரம் திரிபங்கியோடு கூடினதாயும், இப்பாரிசம் விற்போலும் சாயலையுடைத்தாகியும், இடை நுண்ணியதாயும், குஞ்சிதமாய் நிற்கும் வலப்பாதமும் ஏனை உறுப்புகளெல்லாம் தத்தமக்குரிய ஆபரண வகைகளால் பிரகாசிப்பதாய, பொன்போலு நிறமுடைய மஞ்சளாடை பீதாம்பரியாயும் விளங்கச் செய்தனன். இந்த லோகமாதாதான் திரிபுராம்பிகையின் நெற்றியிற் றோன்றிய அம்பிகையின் கோலமும் விளங்கிற்று. சத்தியுஞ் சிவமும் ஒன்றென்பதும் வேலவனு மைங்கரனு முதித்ததும், இதற்கு

சுப்பிரமணியர் ஞானம்

ஆதியிலே பராபரத்திற் பிறந்த சத்தம்
அருவுருவாய் நின்றபர சிவமுமாகி
சோதியென்ற சிவனிடமாய் சத்தியாகித்
தொல்லுலகி லெழுவகையாந் தோற்றமாகி
நீதியென்ற அறிவதனால் தானாய் நின்று
நிறைந்தபரி பூரணமாய் நிஷ்களமுமாகி
சாதியென்ற சத்திசிவ மருள் தன்னாலே
சண்முகனுங் கணபதியுந் தானுண்டானார்



திருக்கல்யாணம்.

பதுமநாபன் தனக்குக்காக்ஷிகொடுத்த அம்பிகையைப்போலவே சுவர்ணத்தினால் விக்கிரகஞ்செய்தமைத்தபின்னர் அவ்விரகமூர்த்தியை பிலத்துக்குத் தென்பக்கத்தில் த்ருவஸ்தானத்தில் ஆலாமாத்தில் பிரதிஷ்டை செய்து ஆறுமாதம் வரையில் விசேஷகியாய பூர்வக மாய் பகாபிஷேக நைவேத்திய பூஜோபசாரங்களை விசேடமாகச் செய்துவந்து மீனமாசத்தில் ஏகம்பநாதருக்கும் ஸ்ரீ காமாக்ஷிதேவிக் கும் சூதநாதர் ஆலயத்தில் வேதாகமமொத்த விதிமுறையாக திருக் கல்யாணம் நடத்திவிட்டு வருஷந்தோறும் நடக்கும் உச்சவாதி கைங் கரியங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டுத தமது சத்



தியலோகம் போனார். ஏகம்பநாதர் மாப்பிள்ளையாகவும் காமாக்ஷி தேவி மணப்பெண்ணாகவு மமைத்ததற்கு

ஞானக்கும்மி

ஏகப்பெருவெளி பட்டணமாம் அதி
லேதோ சித்தனொருவ னுண்டாம்
வாச நிலைபேச வாயுமில்லை அந்த
மாப்பிள்ளை யென்னென்று ஞானப்பெண்ணே.
சாட்சி யெனுமுயர் மாப்பிள்ளைக்கு மூல
சத்தி யென்றொரு பெண்ணாச்சு
சூட்சம காரண மிரண்டினுக்கு நிலை
தூலமா மென்கிறாள் ஞானப்பெண்ணே.

விடமணிந்த நீலகண்டத்துடனே ஒப்பற்ற மாவிருக்ஷத்தின் கீழ் வீற்றிருக்கும் சிவஜோதியையும் பொன்னம்பலத்திற் புரியும் ஆனந்த நடனத்தையும் சதா தரிசிக்கும் பித்துடையவரும், மலர்கள் தேனைச்சொரிகின்ற சோலைசூழ்ந்த காமகோட்டத்தில் வீற்றிருப்ப வருமாகிய உமாதேவி சிவபிரானது திருக்கோலத்தை சதாநோக்கிக் கொண்டிருப்பா ளென்பதற்கு

பிரபுலிங்கலீலை.

நகந்தருங் கொடி கண்களை நாணியே
முகந்திரும்பு முறையிற் றிரும்புமான்
மகிழ்ந்திடங் கதிர் வீரமழுவலர்
தருந் தருந்தரு மென்னத் தயங்குற.

இவையாவையும் முனி சிரேஷ்டர்கள் கூறிப் பின்னும் சொல் வார்கள். கேளுங்களரசர்களே! நீங்கள் எல்லாப் புண்ய க்ஷேத்திரங் களில் ஸ்நானம்செய்தும் சகல சித்திபெற்ற கிரிகளைப் பிரதக்ஷணம் செய்தும் மூர்த்திகளின் தரிசனம் பெற்றும் முடிவில் காஞ்சி க்ஷேத்திரத்திற்குச் சென்று அம்பாளை ஆகமவிதிப்படி பூஜித்து உங்க ளது இஷ்டகாமியங்களைத் தெரிவிக்கில் அம்பிகையால் உங்கள் குறை நிறைவேறு மென்றனர். அம்மனைப் பூசிக்கும் விதியாவது.

நந்தீஸ்வரர் பூஜாவிதி

தானான வெத்தினிட பூசை சொன்னேன்
தண்மையுள்ள சத்தியுடை பூசைகேளு
வானான இம்மென்றும் கும்பத்தில்
வட்டிடவளமாகவொரு மனதாய்நின்று

ஆனன கதம்ப கஸ்தூரி புஷ்பம்
அப்பனே பால்பழங்கள் வஸ்துவைத்து
மானன தேவியைத் தான் தோத்தரித்து
மைந்தனே சாஷ்டாங்க சரணம்பண்ணே

இவையாவுங் கேட்ட வைடங்கன் முதல் எண்மரும் முனிசிரேஷ்டர்களைப் பார்த்து சுவாமிகாள் நீங்கள் கூறியது யாவும் கர்ணாமிர்தமாகக் கேட்டு பரவசமடைந்து அம்பாள் அனுக்கிரகமும் புத்திர பாக்கியமு மடைந்தவர்களானே மென்று ரிஷிகளுடைய பாத சேவை செய்யவே அம்மகான்களும் ஆசீர்வதித்து இனி உங்களது நகரம் போய்ச்சேருங்களென்ன, யாவரும் ஒருங்குகூடி ஆதியில் விஷ்ணுக்ஷேத்திரமாக விருந்த தமது நகரமாகிய விசாலாவதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஓம்தத்சத்

## இரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஸ்ரீ காமாக்ஷியம்மன் துணை.

# மூன்றாவது அத்தியாயம்.

## தீர்த்த யாத்திரை பிரபாவம்.


### பூ பிரதக்ஷணம்.

கேளுங்கள் நாரதாதி முனிவர்காள்! வைடங்கன் முதல் எண்மரும் வனத்தில் ரிஷிபுங்கவரிடம் தங்கள் குறைகளைக் கூறியதும், அதற்கவர்கள் மறுமொழியுரைத்ததும், செப்பலாயினேம். இனி அவ்வரசர்கள் தீர்த்த யாத்திரை செய்து முடிவில் காஞ்சிநகர் போயடைந்ததுங் கூறுவோமென்று ஆரியமுனிவர் விளம்பலாயினர்.

இவ்விதமாக வைடங்கன் முதல் எண்மரும் முனிசிரேஷ்டர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தமது நகரமாகிய காசிக்கு வந்து தாங்கள் வனத்துக்குச் சென்றதும், அங்குற்ற தவயோகிகளைக் கண்டதுந், தாங்கள் அன்னவரிடம் குறை கூறியதும், அதற்கவர்கள் பூ பிரதக்ஷணமும், புண்ணிய தீர்த்தயாத்திரையுஞ்செய்து, காமகோட்டம்போயடைந்தால் அம்பிகையால் புத்திரபாக்கியங் கிடைக்குமென்று ஆசீர்வதித்ததுமியாவும் சவிஸ்தாரமாய்த் தங்கள் மைத்துனர்களுக்கும் மந்திரி முதலிய யாவருக்கு முரைத்தார்கள். காசியைப்பற்றிக் கூறுவதாவது,

கந்தபுராணம்.

பையரவின் மேற்கண்டுயிற் பண்ணவன் றனக்குத்
தையல்பாதிய னேபரம் பொருளெனுந் தன்மை
மையன் மானுடாறிந் திடமறை முனியெடுத்த
கையதே யுறநிற்றதோர் காசியைக் கண்டான்



## கணேசரைத் துதித்தல்

இவ்விதமாய்த் தங்கள் மைத்துனர்களுக் குரைத்து இனியாங்கள் யாத்திரை செய்து அம்பாள் அனுக்கிரகம் பெற்று வருமளவும் இத்தேசத்தை நீங்களிருவரும் அரசாட்சி செய்து வருவீர்களென்று மைத்துனர்களுக் காக்ஞாபித்து துவாதசியன்று கங்கையில் யாவரும் ஸ்நானம் செய்து துண்டிவிநாயகராலயஞ் சென்று நைவேத்திய முதலான பூஜைகளை முடித்துக்கொண்டு, கணநாதப் பிரபுவே உமது மகிமையறிந்தன்றோ ! மும்மூர்த்திகளும் பூசிக்கின்றார்கள். யாங்கள் புத்திரபாக்கியமில்லா மனச்சஞ்சலத்தாற் பூப்பிரதக்ஷணஞ் செய்யும் புண்ணிய தீர்த்தயாத்திரையின் நிமித்தஞ் செல்கிறபடியால், யாதொரு விக்கினமு மில்லாது பாதுகாத்தல் உமது கடமையென்று எண்மரும் அன்னவர்களின் பத்தினிகளும் தங்கைகளிருவரும் மைத்துனர்களும் ஸ்தோத்தியஞ் செய்தார்கள்.

B ஸ்ரீராகம்—ரூபகசாப்பு—தாளம்.

பல்லவி

சரணஞ்சரணம் ஸ்ரீகணேசா சரணம் வல்லபைநேசா
தருணமீதெனைத் தற்காத்தருளுந் தன்யமூலா தாரவாசா



சரணங்கள்

அங்குஸபாஸந் தரித்தகஜானனா வாகந்தரூப மெய்ப்பொருளே
துங்க—சுபாகரா தோஷநிவாரணா துணைவர் தெங்களுக்கருளே ()

சர்க்கரைப்பாயசம் பஞ்சகச்சாயமு முக்கனியும் படைத்
தோமே—அக்கரையாகவே அம்புயத்தாள்களில் அர்ச்
சித்துப் போற்றி செய்தோமே. ()

காரணகாரியங் கடந்தசோதியே கங்கை வேணியனற்
சுதனே—தாரணியிலெங்கள் யாத்திரைக்கு யாதுந் தடை
வாராது காத்தருளே. ()

## விஸ்வேசரைத் துதித்தல்

இவ்விதமாகக் கணேசரைத் துதித்துத் தண்டபாணி ஆலயஞ் சென்று அங்கு பூசித்து, பிறகு விஸ்வநாதராலயம் சென்று அங்கும் ஆகமவிதிப்படி பூஜைகள் செய்து ஜெகதீசனே ஆதியில் எங்களது பாட்டனாராகிய பிரிதிவீச்சுரர் உங்கள் அம்சத்தால் இரணியகர்ப்பன் யாகத்தில் உற்பத்தியானதும் பின் அவருக்கு வரங்கொடுத்தருளிய படி எங்களுக்குஞ் சந்ததியுண்டாக வரங்கொடுத்தருள வேண்டும் தயாநிதியே யென ஸ்தோத்தியஞ்செய்தார்கள்.

பொன்னுலவுஞ் சென்னிகுள மெனும்


B காவடிசிந்து மெட்டு வராளி—சாப்பு—தாளம்

ஆதிமத்தி யந்தமற்ற சோதிஞானச் சுடருற்ற
பாதிமதி கொன்றைகங்கை சூடியே—செம்பொற்
பாதமதைத் தேடிவந்தோம் நாடியே—அஷ்ட
சித்தியோடுவி முக்தியுந்தரும் நித்தனேபரி சுத்தனே
யுன் சித்தமுவந் தெங்குறைக ணீக்குவாய்—அருட்
சத்தியுமை பாகனேகண் ணோக்குவாய் ஓம் (ஆ)

சந்திர ஜடாதரா தயாகரா பிராஹாரநற்
சுந்திரா குணாதரா கங்காதரா—தூய
மந்திரா மனோஹரா சுபாகரா—நாளும்
சத்து சித்தும சத்திமாகிய வித்தகாபரி சுத்த
ஞானிய சாம்பவி சல் லாபவன்பர் தாயகா—தோளிற்
பாம்பணிந்த சம்புலிங்க நாயகா ஓம் (ஆ)

பஞ்சகிர்த்தியஞ் செய்கோனே அஞ்செழுத்து ரூபினனே
அஞ்சலென்றே நற் கருட்செய்சு பாகரா—கோரும்

அன்பருக்கி தஞ்செயுங் கங் காதரா—எங்கள்
பந்தபாஸங்க ளொந்து போம்படிச் சந்ததமுமுனேச்
சிந்தை செயும்படிச் சார்ந்தவர்க்குத் தொண்டு ஓம் (ஆ)
பூண வாக்குவாய் யார்க்கும் தண்டம்பு ரியக்கிருபை நோக்குவாய்



விஸ்வலிங்கம்

## விசாலாக்ஷியைத் துதித்தல்.

விஸ்வநாதரைப் பூசித்துப் பின் விசாலாக்ஷி சன்னிதியில் லட்சம் நெய்த்தீப மேற்றி அபிஷேகம் முதலானவைகள் செய்வித்தி யாவரும் தயாநிதியே யாங்கள் குழந்தையில்லாக் குறையால் மன நொந்து யோகிகள் கூறியவண்ணம் சகல புண்ணிய தீர்த்த ஸ்நானங் களுஞ் செய்துகொண்டு காஞ்சியா நகரமடைவோம். அங்கு தோன்றி எங்களது மனக்குறையைத் தீர்த்து இரட்சிக்கவேண்டிய கடமை தம்முடையதாகும். உம்மையல்லால் மற்றியாவர் செய்யப் போவார் என்று துதித்தார்கள்.

B தன்யாஸி ஏகதாளம்.

பல்லவி.

தஞ்சமுன்—பதங்கதியே—தெய்வநற் (த)
சம்பத்தை—யருள் தநியே—சுமதியே

சரணங்கள்

கஞ்சி காமாக்ஷி—மதுரை மீனாக்ஷி—காசி விசாலாக்ஷி ()
சஞ்சித வினையறுத்தாட் கொளுவாயிந் தத்தருணத்தி லருட் சாக்ஷி



ஞான வைராக்கியங்—தரும் பரமேஸ்வரீ—நளின சரணம் போற்றி
தானந் தவவிரதம் பூசனை முதலிய சாதனங்களை மாற்றி ()

அண்டர்கள் முனிவர்கள் தெண்டனிட் டேத்தும் அமல கமல வதனி
தொண்டுசெய் திடுமவர் துதிக்கருள் வாய்த்திட தூயஞான பதனி ()

B பக்தனுய்ப் பாடமாட்டே னென்னுந் தேவாரமெட்டு.

இப்புவி யுருக்களெல்லாம் ஈன்றதோ ரம்மாபோற்றி
முப்புரமன் றெரித்த முக்கணன் மகிழ்வே போற்றி
செப்பருஞ் சுடலை தன்னிற் சிறுநட நடித்தாய் போற்றி
வெப்புறுங் கவலை நீக்கி வேணதைத் தருவாயம்மா.

## கயாவில் கோலாகல கிரி பிரதக்ஷணம்.

கேளுங்கள் நாரதாதி முனிவர்களே? இவ்விவண்மரும் இவர் களின் பத்தினிமாரும் சுபலக்கினத்திற் நமது காசி நகரைவிட்டு மைத்துனர்களும் தங்கையரும் மந்திரி முதலானவர்கள் வழிவிட் டனுப்ப, (தம்பதிகளி யாவருங் குபேரதிசையை நாடி) விஷ்ணு பக்தனாகிய கயாசுரன் தவம்செய்த கோலாகலகிரி போயடைந்த, அங்குற்ற புண்ணிய தீர்த்த ஸ்நானங்கள் செய்தும், அக்கிரியைப் பிரதக்ஷணம் வந்தும், அவ்வசுரன் மார்பில் தேவர்கள் யாகஞ்செய்த ஸ்தலமாகிய கயாவில் * பிதுர் தர்ப்பணங்கள் முடித்துக்கொண்டும் அந்தக்ஷேத்திர மூர்த்தியாகிய பிரதி தாமகரீசர் சேவை செய்துக் கொண்டும், அவ்விடம் விட்டு கங்கை பச்சிமவாகினியாயும் யமுனை பூர்வவாகினியாயும், சரஸ்வதி அந்தரவாகினியாயும், ஓடி வந்து திரிவேணி சங்கமெனும் பிரயாகையில் சுக்கிலபட்ச சப்தமி யில் ஸ்நானம் செய்து கொண்டு யமுனையின் தென்கரையிலுள்ள சோமேசர் சேர்வை செய்தார்கள். பிரயாகைக்கு.

காசிகாண்டம்.

பெறலரிய தருமத்தின் பேறெல்லாம் விரித்தெண்ணிற் பிரயாகையாற்று
ளறவிலொரு நுண்மணற்கு நிகராகா கொடும்பாவ மனைத்து மன்ன—
துறுபெயர் கேட்பினி னடுங்கு மாதெருமாண்டு வதிந்துயிர் விட்டோரும்
குறைவில் பாகதியடைந்து வீற்றிருப்பரென மறைகள் கூறக்கேட்டான்.

* காசிகண்டம்—கயாபிண்டம்—பிரயாகைதண்டம், என சுருதிகளில் விளங்கும்போல் அனுபோகமுமாம்.

## ஸரயுநதி ஸ்நானம்.

அதைவிட்டு நீங்கி பாத்வாச ராச்சிரமத்தில் தங்கியிருந்து அங்குற்ற முனி சிரேஷ்டர்களின் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு, ஸ்ரீராமபிரான் அரசாக்ஷிசெய்த ஸ்தலமாகிய அயோத்தியை யடைந்து இட்சுவாகு வரசன் வேண்டுகோளால் வசிஷ்டபகவான் மானஸ வாவியினின்றும் கொண்டுவரப்பட்ட ஸரயுநதியில் சுக்கிலபட்சத்தில் சனிவாரத்தன்று ஸ்நானம் செய்தார்கள்; இத்தலத்வதைப்பற்றி.

நம்மாழ்வார்

கற்பாரி ராமபிரானை யல்லான் மற்றுங்கற்பரோ
பிற்பா முதலாப் புல்லெறும் பாதியில் ஒன்றின்றியே
முற்பால யோத்தியில் வாழுஞ்சராசர முற்றவும்
நற்பாலுக் குற்றன நான்முகனூர்பெற்ற நாட்டினுளே

## ஹரிதுவாரசேர்வை.

பின் அதைவிட்டு நீங்கி சப்தபுரிகளில் ஒன்றாகியும் பாதகண்டத்தின் வடகோடியெல்லையாகியும் இமய மலையின் தக்ஷிண சாரில் விளங்கானின்றதும், பூவுலகோர் பொன்னுலகம் போகும் ஏணியைப்போல் விளங்கக்கூடியதும் ஹரிதுவாரமென்றும், மாயாதுவாரமென்றும், கங்காதுவாரமென்றும் சொல்லக் கூடியதுமான புண்யக்ஷேத்திர மனுகி கிருஷ்ண பட்சம் சதுர்த்தசி யன்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களாடி, மூர்த்திகளின் ஆராதனையும் செய்துகொண்டு, பின் கணகலம் சென்று உருத்திர மூர்த்தியைச் சேவை செய்துகொண்டு பின்பு கோமுகி சென்று அங்கு சந்திரபாகை கமலை யெனும் நதிகளில் ஸ்தானம் செய்தார்கள். இத்தலத்தைப்பற்றி

காசிகாண்டம்

பொன்னகரி லுயர்மாயாதுவார மென்றும் பொருவிலரிதுவாரமென்றுந்—
தன்னுதடங் காரக்கங்கை சுழித்திடை மோதலிற் கங்காதுவாரமென்று
மின்னிலமும் பெயருடைத்தாய் வைகுந்தத்தினிதேறு மேனியாக
மன்னிய மாயாபுரியி லினிதிருந்தானருந்தவத்து மறைவல்லோனே

## கேதாரசேர்வை.

பின்பு அதைவிட்டு நீங்கி இமாசலத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களாடிக் கொண்டு உருத்திரமூர்த்திகளின் சேவை செய்து, அதன்



பின் பதரிகாச்சிரமத்தைச் சார்ந்து கேதாரத்தில் உள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து ஈசானர் சேவையும் செய்தார்கள். இத்தலத்திற்கு,

வீரசிங்காதன புராணம்

திருவிளங்குகே தாரமென்றொரு தலஞ் சிறக்கும்
பொருவிறந்ததிற் பணிநமைப் பூசனை புரிந்தே
கருது மாமல மொழித்துநங் கழற்றுணைப்பதத்தை
மருவு முத்தியு மடைந்துள வாழ்பதி காணீ.

## அவந்திகைசேர்வை.

பின் அதைவிட்டு மேற்குத்திசையை நாடி மூன்று பக்கமும் சாகரத்தால் சூழப்பெற்ற ஸ்ரீ துவாரகைக்குப் போய் அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பின் அவந்திகை யெனும் ஸ்தலமுனுகி ஸ்ரீ கண்ணபிரான் சாந்தீபரால் வேதாத்தியயனங் கேட்ட ஸ்தலத்திலுள்ள ஹிப்ராநதி தீரத்தில் அமாவாசையன்று ஸ்நானம் செய்தார்கள்.

## சிந்து நதி ஸ்நானம்.

அதன் பின் அதைவிட்டு நீங்கி பிருகு முனிவர் பூசித்த ஸ்தலமாகிய (ஜாலாந்தர பீடமென்னும்) ஜவ்வாலா முகிக்குச்சென்று அங்கு ஸ்நானம் செய்து மூர்த்திகளின் தரிசனஞ் செய்து கொண்டு பின் சிந்துநதி ஸ்நானம் செய்து காண்டவ பிரஸ்தம் வந்து அங்குள்ள புண்ணிய தீர்த்தமாடிக்கொண்டு மூர்த்திகளைப் பூசித்தார்கள்.

## மதுரா சேர்வை.

அதன்பின் யமுனையின் தென்கரையி லிரானின்றதும், ஸ்ரீ கண்ணபிரான் வசுதேவர்க்கும், தேவகியார்க்கும், ஆவணி மாதம் கிருஷ்ண பட்சம் அஷ்டமி திதி ரோகணி நட்சத்திரத்தன்று, நவக்கிரகங்கள் உத்தம ஸ்தானத்தில் வந்து நிற்க தாமரை யிதழ்போன்ற நயனங்களும் சதுர்ப் புஜங்களும் பஞ்சாயுதங்களுங் கவுஸ்து வாபரண

மும் * நீலமேகவண்ணராகி நவரத்ன கஜித கிரீட குண்டல கவச மோதிர கடக முத்துச்சரங்களுடன் அவதரித்த ஸ்தலமாகிய மதுராவைப் போயடைந்து, அங்குற்ற புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்து, ராதாருக்மணி சமேதரான வேணுகானனைச் சேவை செய்தார்கள். இந்த க்ஷேத்திரத்தைப்பற்றி.

பெரியாழ்வார்

செல்வமுயி ருடம்பு சேரவுரித்தாக்கி
வல்வினையி னீங்குமினோ மாந்தர்காள்—தொல்லை
வடமதுரை யான்கழலே வாய்த்ததஞ்ச மென்று
திடமதுரை செய்தான் றிரத்து

### யமுனாஸ்நானம்.

பின்னும். அவ்விடம் விட்டு நீங்கி ஸ்ரீ பலராமர் அவதாரம் செய்த ஸ்தலமாகியும் ஸ்ரீ கண்ணபிரான் நந்தகோபன் அசோதையிவர்களிடம் வளர்ந்த ஸ்தலமுமாகிய யமுனையின் வடகரையிலுள்ள திருஆயர்ப்பாடியிலுள்ள புண்ணிய தீர்த்தங்களிலும், யமுனையிலும், ஸ்நானம்செய்து, அங்குள்ள ராமகிருஷ்ணரைச் சேவை செய்தார்கள்.


### கோகுல பிருந்தாவன சேர்வை

பின்னும் அதைவிட்டு நீங்கி மூன்று பக்கமும் யமுனையாற்றின் ஜலத்தாற் சூழப்பெற்ற பிருந்தாவன க்ஷேத்திரம் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, ஆங்கு மேன்மைபெற்ற பளிங்குக் கற்களாற் சமைத்திருக்கும் நீரோடைகளின் மத்தியிலுள்ள மண்டபங்களில் சொர்ணத்தால் அமைக்க[illegible] விக்கிரக ஆராதனையுஞ் செய்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீ கண்[illegible]பிரான் கோபிகாஸ்திரீகளுடன் யமுனையில் ஜலக்கிரீடை செ[illegible]தும் பிருந்தாவனத்தின் வளப்பமும் கூறுவதாவது.

---

* நீல மழைமுகிலோ நீலமணிக்குன்றமோ, கோல நிறைந்த குறைகடலோ—சோலையினங், காயாவனமோ கமு நீரோ கண்ணமன்னை, மாயா உனது வடிவம், என நேரிசை வெண்பாவில் கூறியுள்ளன.





ஸ்ரீ கண்ணபிரான்

B.! இ-ம்-காம்போதி ஆதிதாளம்.

பல்லவி

ஆனந்த-நடனமாடினார்-பிருந்தாவனத்தி
லாயர்கள்-மாதருங்-கூடினார்.

அனுபல்லவி

வானந் தனிலுறையு மகத்துக்களுங் கொண்டாட
வானவர் களுமுரு மாறிய ருகிற்கூட
மதனகோ பாலனெழில் கானவனத்திற்றேடி
மான்விழி யார்களும் வண்ணப்பதங்கள் பாடி
மாங்கு யில்களிசை யானது கூவிட
வண்டுகள் வனிதையர் கொண்டையில் மேவிட
மயிலின மொளிதருந் தோகைவி ரித்திட
மண்டூ கங்கள்மத் தாளம்பொ றுத்திட
(மங்கைய ரங்கைக ளிங்கித மாகவே)
கோர்த்து கோவிந்த னெழில் பார்த்து இடைவிடாது
காத்து சுற்றிலும் நின்று கூத்து—தாளமிசைய
தாம் தணக்குதக தீம் ஜெணுத ஜெணு
தாம் தகுந்தரிதாம் தீம் திகுந்திரி தீம்
தாம் தகுந்தரி தீம் திகுந்திரி
தகுர்த திகுர்தக தளாங்கு தோமென (4

சரணம்

கருணாக யனன்வேணு கானம் செய்வதைக்கண்டு
ககனத்திற் சந்திரனு நின்றுக ளிப்புட்கொண்டு

அரனயன், முதலோரு மமரர்செ யலைவிண்டு
அற்புத மாகிய கானா சத்தை யுண்டு
ஆசை வலைதனை வீசிய விருடிகள்
கேஸ வனையடுத் தேசல் லாபமுடனே
(அழகுற்ற கைவளை கல கல கலவென்ன)
ஆட்டி கையோடு கைகள் நீட்டி
காலொடு கால்கள் கூட்டி நடனவிதங் காட்டி
நாதமத்தள பேரியார்த்திடவும் பிட்டில் தம்பூரு
நாகசுரமொடு கீதவாத்தியமும் ஒலித்தல் செய்ய
தாம் தாம் தாம் தகஜு ஜெகஜுத ஜெஜு
தீம் தீம் தீம் நாதிரிதீம் தில்லானா
ஓதாரி தாரி தகரி தரி தீம் தில்லானா
தின்னம் தகஜெம் தரிகிடதோம்
திருர்தித்தோம் தித்தித் தெய்யென் (ரு)

## நாதத்துவார சேர்வை.

அதன்பின் பிருந்தாவனத்தை விட்டு நீங்கி கௌமதி ஹல்த தேவ எனும் நதிகளில் ஸ்நானம் செய்துகொண்டு மகதேவ சன்னிதி யடைந்து அங்கு பூசித்து, வைகாநதி ஸ்நானம் செய்து கொண்டு, சகுந்தலா ஜனன ஸ்தலமாகிய கண்ணுவர் ஆச்சிரம மடைந்து, அங்குள்ள தடாகங்களில் ஸ்நானம் செய்துகொண்டு, பின்னும் சூரிய வம்ஸத்தில் 17 வது அரசனாகிய மாந்தாதா அரிய தவத்தால் சாக்ஷிபெற்ற அமரேஷம் சென்று ஓங்காரேஸ்வராலயம் சேவித்து அதன் பின் நாதத்துவாரம் சென்று அங்கு புண்ணிய தீர்த்தங்களாடி ஸ்ரீ கிருஷ்ணசேவை செய்தார்கள்.

## கோவர்த்தனகிரி பிரதக்ஷணம்

பின்பு அதைவிட்டு நீங்கி இந்திரனைவலால் சப்த மேகங்களும் ருங்கே கூடி கன்மாரி பொழியவே, ஆயரையும் ஆவினங்களையும் ரக்கவேண்டி, கண்ணபிரான் தனது சிறுவிரலாற் றூக்கிக் குடை யாகக் கொண்ட கோவர்த்தனகிரியைப் பிரதக்ஷணம் வந்து, அங் குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தார்கள். இக்கிரியைப் பற்றி,

### பாகவதம்

கோகுல மதனிலுள்ள கோபால சமூகமெல்லாம்
போகதே வேந்திரனுக்குப் பிரதியாய் வருஷந்தோறும்
வேகமாய் செயும் யாகத்தை வேண்டாமென் றேதடுத்து
ஏகமாய்க் கோவர்த்தநத் கியற்றென்று கண்ணன் சொன்னான்,



## துங்கபத்ரா ஸ்நானம்

பின் அதைவிட்டு நீங்கி இமயத்தின் தென்சாரலிலுள்ள ரிஷிகேஸம் சென்று அங்குள்ள தீர்த்தங்களாடி, பின் வால்மீகர் ஆச்சிரம மடைந்து, அன்னவர் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு, அதை விட்டு நீங்கி சித்திரகூடம் சென்று, அங்கு பிரதக்ஷணஞ் செய்துகொண்டு, பிருகுமகாரிஷியின் குலதிலகர்களான எண்பத் தெண்ணாயிரம் சௌனகாதி மகரிஷிகளுக்கு ராமபிரான் காக்ஷிதந்த நைமிசாரண்யம் சென்று அங்குள்ள தடாகங்களில் ஸ்நானம் செய்து பின் அதைவிட்டு நீங்கி துங்கபத்திரா நதியில் ஸ்நானம் செய்தார்கள்.

## வேணுகொண்டா ப்ரதக்ஷணம்.

அதைவிட்டு நீங்கி கங்காதீரத்தின் மத்தியிலிராநின்ற கோபிநாத் என்னும் க்ஷேத்திர தரிசனஞ் செய்து, சீதாபிராட்டியாரை அரக்கன் தூக்கிக்கொண்டு போனதாக முதலில் ராமபிரான் கேள்விப்பட்ட ஸ்தலமாகிய வேணுகொண்டாவிலுள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டு குருத்துவாரம் சென்று அங்குள்ள தீர்த்தங்களாடியபின் நரபலி பெற்றுவந்த ஜெயப்பூர்காளி சன்னிதியிலுள்ள தீர்த்தமாடி அம்பிகையைச் சேவித்தார்கள்.



வீரமாகாளி

## பத்ராஜல சேர்வை.

பின் அதைவிட்டு நீங்கி வானரவீரர்கள் ஆண்டுவந்த ஸ்தலமாகிய கிஷ்கிந்தைக்குப்போய் அங்குள்ள ராமபிரானைச் சேவை செய்து கொண்டு, பின்னும், பம்பா, சரூராவரம், என்னும் புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்து, கோடி லிங்க அம்பிகிருபிட்ச கிரி

குச் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, சிவலிங்க தரிசனையும் செய்தார்கள். பின் அதைவிட்டு நீங்கி யமுனாவுத்தரதீரத்திலுள்ள பரத்துவாஜ ராச்சிரமம் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பின் கோதாவரிக்கரையி லிராநின்ற பத்ராசலம் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து அங்கு எழுந்தருளி யிருக்கும் ராமலக்ஷ்மண சேவை செய்தார்கள். இத்தலத்தைப் பற்றி.

## ராமதாஸ் சரித்திரம்.

" இக்ஷுவாகு குலதிலக இகனைபலுகவே— ராமசந்திரா
நன்னு— இரக்ஷிஞ்சு மிக்கவோ ரவி குலதிலகா— ஸ்ரீ ராமசந்திரா ()
கௌசல்ய புத்ருடா தசரத தநயுடா— ராமச்சந்திரா
காவு— க்ஷகமுகா பத்திராத்திரிலோ நலகொன்ன ராமசந்ரா ()

## சாமந்த பஞ்சகஸ்நானம்.

பின் அதைவிட்டு ஒட்டியாமத்திய தேசத்திலிராநின்ற வியாச முனிவர் பூசித்த (ஒட்டி பாணபீடம்) ஸ்ரீ ஜெகன்னாதம் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, மூர்த்திகளின் தரிசனை பெற்ற பின் பத்திரிகாச்சிரமம் சென்று நாராயண மூர்த்தியின் சேவை செய்து கொண்டார்கள். அதன்பின் அதைவிட்டுச் சென்று சரஸ்வதியின் ஓர் பிரிவாகிய சந்திரனுக்கு பாபவிமோசனம் செய்த பிரபாசதீர்த்தமாடிய, தன் பின் திரிசத்வதிக்கும், ஸரஸ்வதிக்கும் மத்தியிலிராநின்ற ஸ்தலமாகிய (குருக்ஷேத்திரம்) * சாமந்தபஞ்

* சாமந்த பஞ்சகமானது ஆயிரங்கரங்களை யுடைய கார்த்தவீரியன் மக்கள் காமதேனு நிமித்தமாக ஜமதக்கினியைக் கொல்ல, தந்தையைக் கொன்ற பழிக்காக புத்திரனாகிய பரசுராமன் எழுதடவை யுத்தஞ்செய்து கார்த்தவீரியன் மக்கள் முதலாக க்ஷத்திரியரைக் கொன்று (சாமந்தபஞ்சகத்தில்) இறந்தவர்களின் உதிரங்களைக் கொண்டு பல தடாகங்களாக உண்டாக்கினது.

சாமந்தர் = அரசர். பஞ்சகம் = யுத்தகளம். ... பொருள். (ஜமதக்கினிக்கும் ரேணுகைக்கும் ஜனித்த பரசுராமன் க்ஷத்திரியரைத் திரேதாயுக முடிவிலும் துவாபரயுக முதலிலும் இந்தக்ஷேத்திரத்தில் யுத்தம்செய்து வெற்றி பெற்றது போலவே) பீமனுந் துரியோதனனும் துவாபரயுக அந்தியத்தில் இந்தக்ஷேத்திரத்தில் யுத்தம் செய்ததில் அவர்களில் அடிபட்டுக் கீழே விழுந்த அரவக்கொடியோன் கூறுவான்.

## வில்லிபுத்தூரார் பாரதம்.

நிறத்த நீலகிரி யொக்கவேயிரு நிலத்தின் வீழ்குருகுலத்திறே
னுறைத்துமீளவு முயிர்த்துமாயனே டுறுத்துவாசக முறச்சொல்வான்
குறிப்பினால் விசயனைக் கொடாருயிர் குதிக்குமாமதி கொளுத்திஞ்
யுறத்திறலுடன் மறத்தினீர்மையினை யற்பராயரறிகிற்பரோ



சகத்தில் உள்ள அளவற்ற தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து கொண்டு அங்குள்ள தவயோகிகளின் அனுக்கிரகமும் பெற்றார்கள்.

## பஞ்சவடி சேர்வை.

பின் அதைவிட்டு பீமா நதியில் ஸ்நானம் செய்து பண்டரிபுரமணுகி, அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பக்தவச்சலன் சேவைசெய்து, கோதாவரி நதியில் ஸ்நானம் செய்துகொண்டு பிறகு அந்நதி தீரத்திலுள்ள பஞ்பவடிக்குச்சென்று அங்குள்ள வாபி கூப தடாகங்களிலும் ஸ்நானம் செய்தார்கள். இத்தலத்தைப்பற்றி.

## கம்பராமாயணம்


அனையதோர் தன்மையாலவ் வருவிநீ ராற்றின் பாங்கர்
பனிதரு பனிவப்பஞ்ச வடியெனும் பருவச்சோலை
தனியிட மதனைநண்ணி தம்பியாற் சமைக்கப்பட்ட
இனியபூஞ் சாலையெய்தி யிருந்தன னிராமனிப்பால்.

## கோகர்ண சேர்வை.

பின்னும் இக்கோதாவரி நதியின் உற்பத்தி ஸ்தானமாகிய த்ரியம்பக மெனும் ஸ்தலத்தில் ஸ்நானம்செய்து இந்நதியின் வடகரையிலுள்ள ஐந்து ஆலவிருக்ஷங்களின் மத்தியிலிராநின்ற சுரங்கத்தினிடமாய் சீதா, லட்சுமண, பரத, சத்துருக்கன், அனும அங்கதனுடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமசேவை செய்துகொண்ட பின், அதைவிட்டு நீங்கி இந்நதியின் தென்கரையிலுள்ள சூர்ப்பநகை பங்கப்பட்ட ஸ்தலமாகிய நாசிகா க்ஷேத்திரத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, அதைவிட்டுச்சென்று ஆதியில் ராவணன் இலங்கை யழியாவண்ணம் பூசித்து வரம்பெற்றதும், பிர்மகுல பேதை புலை மகளாய் ஜனித்து சாப விமோசனம் பெற்றதுமாகிய தென்றுவத்திலுள்ள கோகர்ணம் சென்று அங்குள்ள தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தார்கள். இத்தலத்தைப்பற்றி

## வீரசிங்காதன புராணம்

திருந்து கோகரணப்பதி சேர் புலைச்சியையும்
பொருந்த வாண்டன மாதலாற் புண்ணியஞ் சிறிதாங்
இருந்தியற்றினு மலைநிகர் பவமலை யேனும்
கருந்திரளைக்கன வாயழிந் திடுமது காணே.



## ஸரவணப் பொய்கை ஸ்நானம்.

பின் அவ்விடம் விட்டு (தக்ஷிண கங்கை) யென்று சொல்லக் கூடிய (மூலைக்காவேரியில்) ஸ்நானம் செய்து, பின் ஸரவணம் (சுப்பிரமண்யம்) தருமஸ்தலம், உடுப்பி, ஸ்ரீங்கேரி, முதலான ஸ்தலங்களிலுள்ள புண்ணிய தீர்த்தங்களாடி, வேலவரைத் துதித்தார்கள். காவேரி நதியைப்பற்றி,

### மணிமேகலைப்பதிகம்.

செங்கதிர் செல்வன் றிருக்குலம் விளங்குங்
கஞ்சவேற் கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் றனது
காகங் கவிழ்த்தக் காவிரிப் பாவை
செங்குணக் கொழுகிய சம்பாபதியால்
பொங்குநீர் பரப்பொடு பொருந்தித்தோன்ற.

## சேது ஸ்நானம்.

பின் அதைவிட்டு அனந்த சயனம் ஜனார்த்தனம் வேலவன் ஸ்தலமாகிய வைக்கம் இத்யாதி ஸ்தலங்களில் ஸ்நானம் செய்து மூர்த்திகளைத் தெரிசித்து பின், அதைவிட்டு நீங்கி பாதயுண்டத்தின் தக்ஷண கோடியாகிய சேதுவில் நித்யம், நைமித்யம், காமியம்



எனும்படியான ஸ்நான விதிகளின்படி ஸ்நானம் செய்தார்கள். இதற்கு.

### வீரசிங்காதன புராணம்.

தென்னவர் புரந்திடு மதுரைப் பதியினி லிந்திரன் பழியைத் தீர்த்தலாதி
அன்று மறுபாறுன்கு லீலைபுரிந்தே சோமசுந்தரப்பேர்
மன்னியுகர் தேமி ராமேச்சுரந் தென்வாரிக்க ணிலங்கை
மன்னன் சென்னியொரு பத்தறுத்த பழியிராமன் றொலைத்த சேதுவாமால்.

## ஸ்நான விதி.

இவை யாவையுங்கேட்ட நாரதாதி முனிவர்கள் சுவாமிகாள்? அன்னவர்கள் விதிப்படி ஸ்நானம் செய்தார்களென்று கூறினீரே அவைபாவும் விரித்துரைக்க வேண்டுமென அதற்கு சூரிய முனிவர் கூறுவார்.

கேளுங்கள் ரிஷி புங்கவரே மகா தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யுங்காலங்களாகிய அயனம், அமாவாசை, பூரணை, மாதப்பிறப்பு, சங்கிராந்தி, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், அர்த்தோதயம். மகோதயம், முதலிய நாட்களில் ஸ்நானம் செய்வது உத்தமம் என கூர்ம புராணம் கூறுகின்றன.

இதல்லாமலும் தைமாதம் சங்கராந்தியில் கங்கா கட்டங்களிலும், மாசிமாதம் சுக்கில பட்ச சப்தமியில் பிரயாகையிலும், கார்த்திகை மாதத்தி பர்வத பிரதக்ஷணங்களும், அர்த்தோதய மகோதய காலங்களில் சேதுவிலும், குருக்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தங்களில் தினந்தோறும், ஸ்நானம் செய்யலாம். நைமிசாரண்யத்திலுள்ள தீர்த்தங்கள், புஷ்கர க்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தங்கள், இவ்விரண்டும் பாத்துவ விசேஷமெனப்படும். இன்னார்

கார்த்திகை மாத உதயம் அயோத்தியிலும், ஆனிமாதம் மதுராவிலும், ஆடிமாதம் யமுனையிலும், மாயா புரியில் வைகாசி உதயமும், கங்கா காஞ்சி இவைகளில் மாசி உதயமும், புரட்டாசி உதயமும் தவாரகையிலும் ஸ்நானங்களுக்கு விசேஷகாலமாம்.

இவ்விதமாய் ஸ்நானம் செய்யும்போது காலையில் கோமயமும், மத்தியானத்தில் மிருத்திகையும், சாயங்கால வேளையில் சாதாரண ஸ்நானங்களுஞ் செய்தல் வேண்டும். இவ்வித ஸ்நானம் செய்யும்போது பகோதி, திரிபதகை, நந்தினி, நளினி, தேவ

நதி, கங்கையெனும் நாமங்களை யுச்சரித்து ஸ்நானம் செய்தல் வேண்டும். கரையேறினவுடன் தெரிந்தாவது தெரியாமலாவது என்னால் செய்யப்பட்ட குற்றங்கள் முழுமையும் உலகமாதாவே நீ பொறுத்தருளல் வேண்டுமென்று அஞ்சலியுடன் நமஸ்கரிக்க வேண்டும்.

## சிரார்த்தவிதி.

பிதா முதற்கொண்டு முதாதையர்களாகிய பிதுர்க்களை நல்லுலகடையச் செய்யும் சிரத்தையுடைய புத்திரன் இருபத்தொரு தலைமுறையையும் நற்கதி யடையச்செய்கிறான். அவன் அப்பிதுர்க்குரிமையுடையவனாதல் “ தம்பொருளென்ப தம்மக்களவர் பொருடந்தம் வினையான் வரும் ” எனத்திருக்குறளினும், பகீரத சக்கரவர்த்தியின் சரித்திரத்தினுஞ் சொல்லியபடி இருபத்தொரு தலை முறையுமன்றி தந்தை, தாய், மனைவி, சகோதரி, புத்திரி, கணவன், பிதாவின் சகோதரி, மாதாவின் சகோதரி, என்னும் எழுவர் கோத்திரங்களும், இன்னவர்களில் இன்னவர் தந்தை வழியில் இருபது தலைமுறையும் தாய் வழியிலிருபது தலை முறையும், மனைவியின் வழியில் பதினொரு தலைமுறையும், சகோதரி வழியில் பன்னிரண்டு தலை முறையும், புத்திரியின் கணவன் வழியில் பதினொரு தலை முறையும், பிதாவின் சகோதரி வழியில் பத்துத்தலை முறையும், மாதாவின் சகோதரி வழியில் எட்டுத் தலை முறையும், ஆகிய நூற்றொரு தலைமுறையிலுள்ளவர்களும் நல்லுலகடைகின்றார்கள். என்று வாயு புராணங் கூறுகின்றது.

இவர்களிப்படி நற்கதி யடையவேண்டின் நற்குலத்திற் பிறந்த ஒருவன் தனது பிதாமுதலாக முன்னோர்கள் மரண மடைந்த ஒன்பதாம் நாட்செய்யும் நவசிரார்த்தமும், பதினோராம் நாள், பதினொரு நாள் அல்லது மூன்றும் நாட்களிற் செய்யும் சிரார்த்தங்களும், ஆறு மாதமுடிவினும், வருட முடிவினும் செய்யும் சிரார்த்தங்களும், மாதமுடிவிற்செய்யும் மாசிகங்களும், பிரதி தினமும் செய்யும் சோதகும்பங்களும் முறையே செய்து வருடாந்தத் தப்பாமற் சபிண்டிகரணஞ்செய்து வரவேண்டியது.

இவ்விதமாய் வருடாந்த மென்றும், திதியென்றும், சிரார்த்தம் என்றும், திவசமென்றும் சொல்லக்கூடிய பிண்டங் கொடுப்பவைகள்



சுத்தமான இல்லத்திற் காகம், பன்றி, நாய், பூனை, கோழி, பூப்புடையவள், அலிமகளிருக்கு மிடம், அன்னியர் வீடு, இவைகளல்லாது ஞானிருக்கு மிடம் செய்தல் வேண்டும். இவ்விதமாக வேதப்பிராமணனைக் கொண்டு நடத்துஞ் சிரார்த்தத்துக்கு

## சிரார்த்தத்துக்குடைய பதார்த்தங்கள்.

வாழைக்காய், பாவைக்காய், பூசணிக்காய், புடலங்காய், சுண்டைக்காய், முள்ளுக்கத்திரி, முன்னைக்கீரை, பிரண்டை, காரை, சேப்பங்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, கருணைக்கிழங்கு, நெல்லிக்காய், விளாங்காய், கொத்தவரைக்காய், கொத்தமல்லி, மிளகாய், வில்வக்காய், இலந்தைக்காய், மாங்காய், தும்பைக்கீரை, சேம்பு, கதலித்தண்டு * பேரீச்சம் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், மாதுளம்பழம், சமீந்தவ பழம், கொடிமுந்திரிப்பழம், நாரத்தம்பழம், சர்க்கரை, ஏலம், மிளகு, துவரை, உளுந்து, லவணம், பசுவின் பால், பசுவினெய், கடுகு, மிளகு, துவரை, உளுந்து, வெற்றிலைப் பாக்கு, எள்ளு கோதும்பைரவை, பாசிப்பயறு, சம்பாவரிசி, சூடம், சாம்பிராணி, தேங்காய், சந்தனம், புஷ்பம். இவை யாவும் சிரார்த்த வஸ்துக்களாம்.


## சிரார்த்தத்துக்கு நீக்கும் பதார்த்தங்கள்.

நிஷித வஸ்துக்களாவன—நீற்றுப் பூசணிக்காய், சுரைக்காய், முள்ளங்கி, உருளைக் முருங்கைக்காய், பீர்க்கங்காய், கத்தரிக்காய், கடைந்தமோர், பிண்ணாக்கு, கிழங்கு, வற்றல்கள், பெருங்காயம், வெள்ளுள்ளி, மொச்சைக்காய், சிவப்புக் கீரைத்தண்டு, உள்ளி, ஆட்டுப்பால், சிவப்பரிசி, யக் கொம்புப்பயிற்றங்காய், எருமைப்பால், இருட்டின தான்யங்களுஞ் சுத்துக் கருகமல்லாத வரகு முதலிய சோளமுமாகா. பிதுர்ப்பூஜைக்கு வில்வபத்திரம், எருக்கம் பூ, மந்தாரைப்பூ, அகரு தூபம், இவைகளை நீக்கவேண்டியது. மற்றையாவற்றையுஞ் சேர்த்துக்கொண்டு சிரார்த்தத்தன்று இருஷி வாணிபம் முதலியவைகளை நீக்கியும், நீசர்களுடன் சம்பாஷிக்காமலு மிருந்து சதியுடன் ஸ்நானஞ் செய்துகொண்டு வைதீகரால் பவுத்திர மணியப்பெற்று, சுத்தி யக்தியுடன் நடப்பிவித்து பஞ்சகௌவ்யம் அருந்தி அதனையிட்டு உபவாசம் முடிக்கவேண்டியது.

* வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், இவைகள் முக்கனிகளாம்,

## கந்தமாதனகிரிப் பிரதக்ஷணம்

இவ்விதமாய் சிரார்த்தம் முடிக்கவேண்டுமெனக் கூறி முனிவர் பின்னுங் கூறுவார். கேளும் நாரதமுனிவரே கன் முதல் எண்மரும் மேற் கூறியபடி சேதுவில் முடி கொண்டு பின் கந்தமாதனகிரி பிரதக்ஷணம் செய்து அங்குள்ள ணிய தீர்த்தங்களாகிய, தர்மதீர்த்தம், வீமதீர்த்தம், அர்ச்சுன தீர்த்தம், நகுலதீர்த்தம், சகாதேவதீர்த்தம், த்ரோபதா தீர்த்தம், தேவ தீர்த்தம், இலங்கைமாகாளி தீர்த்தம், சுக்ரிவதீர்த்தம், அங்கத தீர்த்தம், ஜாம்புவ தீர்த்தம், முதலானவைகளில் ஸ்நானம் செய்தார்கள்.



## இராமேச்சுரச் சேவை

இவ்விதமாகத் தீர்த்தங்களாடிய பின்பு வைரவதீர்த்தம், கபில தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், இராமதீர்த்தம் இலக்ஷ்மண தீர்த்தம், ஜடாயுதீர்த்தம், மஹாலக்ஷ்மி தீர்த்தம் இவைகளில் ஸ்நானஞ் செய்துகொண்டு அனுமார் சேவை செய்து, பிறகு அக்கினி தீர்த்தம், சக்கரதீர்த்தம் இவைகளிலும் சிவகங்கை, சங்கதீர்த்தம், யமுனை, கங்கா, கயா இத்தியாதி தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, பின்பு சர்வதீர்த்தம், மாதவதீர்த்தம், நளதீர்த்தம், நீலதீர்த்தம், கவாக்ஷதீர்த்தம், கவேதீர்த்தம், கந்தமாதன தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், விமோசன தீர்த்தம், சூர்ய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி, காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி, நாக தீர்த்தம் முதலியவைகளிலும் ஸ்நானம் செய்துகொண்டு முடிவில் தனுஸ்கோடி தீர்த்தமாடி ஸ்ரீராமர் இராக்ஷச சம்ஹாரஞ் செய்த கர்மபரித்தியாகஞ் செய்யவேண்டி



ஸ்ரீ சங்கர பகவானுக்கு அதன்பலனை அர்ப்பணஞ்செய்து பூசித்த ஸ்ரீ ராமலிங்கத்தை (சேதுமாதவரை) சேவை செய்தார்கள்.

## தர்ப்பசயனச் சேவை

நவபாஷாணமென்னும் (சக்கர) தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பெருமாள் சேர்வை செய்தும், வேதாள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துகொண்டு தில்லை நரசிம்மரைச் சேவித்து பின் அமிர்த வாவியில் மூழ்கி ஏகாந்த ராமர் சேர்வை செய்துப் பின் ஸ்ரீராமர் சேதுபந்தனஞ் செய்யும்பொருட்டு தர்ப்பையிற் பள்ளிகொண்டிருந்த ஸ்தானமாகிய தர்ப்பசயனத்தைச் சேவித்து பிறகு உத்தரகோசமங்கைக்குப் போய் ஆங்கு சிவதரிசனமுஞ் செய்தார்கள். இராமேச்சுரத்தைப்பற்றி.

### அருணாசல புராணம்

பருவரை யார்ப்பரிக்கும் வைகை நதிக்கரையின் மதுரை யறுபத்து நாலு
திருவிளையாட் டிறைவனியற்றிய தலமாமதனை பெருமை செப்பலாமோ
கருவிளையாட்டகற்றுமிராமேச்சுரந் தென்கடற்கரையிற் காணுமங்கே
செருவிளையாட் டிராகவனு ரிராவணனைத் தொலைத்த பழி தீர்த்திட்டாரே.

## பொதிகைமலைப் பிரதக்ஷணம்

பின் அதைவிட்டு நீங்கி குற்றாலக்கிரி பிரதக்ஷணம் செய்து அங்குள்ள அகஸ்தியம், சௌபத்திரம், பௌலோமம், கார்கம், பாரத்துவாஜம் என்னும் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும், அங்கிருக்கும யோகிகளைக்கண்டு தரிசித்தும், அவர்களாலாசி பெற்றுக்கொண்டும் அதைவிட்டு நீங்கினார்கள். அகஸ்தியனைப் பற்றிக் கூறியதாவது.

### காஞ்சி புராணம்

காசியினின் றும் போந்து கம்பர்த மருளைப் பெற்று
மாசிலாக் கச்சிமூதூர் மன்னிவீற்றிருந்து பூமே
லாசிலாத் தமிழ்பரப்பி யருந்தமிழ்க் குறவு பூண்ட
தேசிகன் மலயவெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி.


## பொற்றாமரைத் தீர்த்த ஸ்நானம்

அவ்விடம் விட்டு நீங்கி மலைநாடு சென்று அநந்த பத்மநாபம் சேவித்து, கன்னியாகுமரி, வேதஸ்ரேணி, சிவகாசி இத்யாதி க்ஷேத்திரங்களையும் சேவித்துக்கொண்டு நான்மாடக்கூடம் சென்று சமணர்களை வெல்லும்பொருட்டு திருஞானசம்பந்தர், நாலடியார் இவர்

களின் வட்டை நீரோட்டத்திற்கு எதிர் செலுத்திச் சிறப்புப் பெ
வைகையில் ஸ்நானம் செய்தும் அழகர் சன்னிதியில் சே
தும் அதன் பின் சங்கப் பலகையை உலகப் பிரசித்திபெறத் தா
யிருக்கும் பொற்றாமரையில் ஸ்நானம் செய்தும் சொக்கேசா
மீனாட்சியையும் சேவித்தார்கள். இக்ஷேத்திரத்தைப்பற்றி,

சொக்கநாதப்புலவர் அம்மானை

மட்டுற்ற சோலை மதுராபுரிச் சொக்கர்
பிட்டுக்கு மண்சுமந்த பித்தர்கா ணம்மானை
பிட்டுக்கு மண்சுமந்த பித்தரே யாமாயின்
ஒட்டத் தொழிலவருக் குள்ளதோ வம்மானை
உள்ளன்பில் லாதவர்க் கொட்டார்கா ணம்மானை.



ரங்கஸ்தல சேவை

அதைவிட்டுப் பின் பல சிவஸ்தலங்களிலும் தரிசனை செய்து கொண்டு தாயுமானவர் கிரி பிரதக்ஷணம் வந்தும், பின் காவேரியில் ஸ்நானம் செய்துகொண்டு திருவானைக்காவிலுள்ள தீர்த்தங் களில் ஸ்நானம் செய்துகொண்டு சிலந்தி முனிவரால் பூசிக்கப் பட்டவரும் தும்பிக்குக் கைலாய பதவி கொடுத்தவருமான ஜம்பு மரத்தினடியில் ஜலப்பிரவாகத்தில் எழுந்தருளியிருக்கும் ஜம்புலிங் கர் சேவை செய்துகொண்டு விபீஷணர் பூசித்துவந்த சேஷசயன ரங்கநாதர் சேவை செய்தார்கள், இத்தலத்தைப்பற்றிக் கூறியது.



குலசேகராழ்வார் திருமாலை.

இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கு நெற்றி
யினத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி யநந்த னென்னு
மணிவிளக்கு முயர்வெள்ளை யணையை மேவித்
திருவரங்கப் பெருநகருட் டெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப் பள்ளிகொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டென்
கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கும் நாளே.

B கண்ணிகள்—இம்—சங்கராபரணம்—ரூபகம்.

தலையே நீ வணங்காய் சதமாமகன் மாரி பெய்ய
மலையா னதையெடுத் தாவினங் காத்தோனை தலையே நீ—வ— ()
கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர் தூவிநின்று
கைகாலுந்திகண் கமலவதனன்றனைக்—கைகாள்கூ ()
கண்காள் காண்மின்களோ கருணாலயன் லீலைகளை
பண்ணால் வானவர் பாடும் பிரான்சேவை—கண்காள் ()
வாயே வாழ்த்து கண்டாய் மூலருந்தியினு லுலகை
தாயாயீன்ற சர்வேஸ்வரன் கீர்த்தியை—வாயே ()
நெஞ்சே நீ நினையாய் நெடுநாள் வருந்தும் பிணிக்கே
அஞ்சே லென்றபய ஹஸ்தந் தந்தானவோனை—நெஞ்சே ()
ஆக்கையாற் பயனென் ஹரி சன்னிதியை வலமாய்
பூக்கொய்து போற்றிப் புனிதர்க்கிதஞ் செய்யா—ஆ ()
கால்களாற் பயனென் ஜெகத்காரணனைச் சதமாய்
மால்கொள் சிந்தைய ராகி வலஞ்செய்யாக்—கால்களா ()
தேடிக் கண்டுகொண்டோம் தென்ன ரங்கன் பொன்னடிக்காளாய்
பாடிப்பரவியன்பர் பணிசெய்து வணங்கியே—தேடிக்கண்டு ()

திருக்குடந்தை தரிசனம்

அவ்விடம் விட்டுத் திருஞான சம்பர் அவதார ஸ்தலமா கிய சீர்காழி சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நா னஞ் செய்து அவ்விடத்துள்ள சிவபிரானையும் அமுதளித்த அம்பிகையையும் சேவித்துக்கொண்டு பிறகு புன்னிரண் டாண் டுக் கொருதடவை கும்பமாதத்தில் நவக்கிரகங்களில் ஒன்றாகிய குருவானவர் இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றாகிய மக நட்சத்திரம் அன்று சிம்மராசியிற் பிரவேசிக்கும் போது அதே

மாதத்தில் அதே ராசியில் சுக்கிலபட்சத்தில் சந்திரன் பிரவே சிக்கும்போதும் சிம்மராசிக்கு ஏழாமிராசி கும்பத்தில் சூரியனி ருக்கையில் மகாமக மெனும் காலமாம். இவ்வித வைபவத்தை யுடைய மாமாங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கும்பேஸ் சக்கரபாணி சாரங்கபாணி ஸ்ரீராமர் சந்நிதிகளிற்சென்று அம் மூர்த்திகளையுந் தரிசித்தார்கள். இத்தலத்தைப்பற்றிக் கூறுவதாவது.

வீரசிங்காதன புராணம்.

முருந்து முல்லை மின்னார் நகைமுத்தமே
முருகிளந் தென்றற் சாளர முத்தமே
பொருந்துவார் கொங்கையிற் சந்தனத்தையே
போக்குவா ரன்பர்பாற் சந்தனத்தையே
விருந்தருந்திடு மாமட வன்னமே
மேவும் வாவி தொறும் மட வன்னமே
திருந்து மாமகந்சேர் தென்குடந்தையே
சேர்வர் வாழ்வர்திரு நன்குடந்தையே.



தில்லைத்தரிசனம்.

பின்பு அதைவிட்டு சடாயு, வேதம், குமாரக்கடவுள் இவர்கள் பூசித்த [illegible] புள்ளிருக்கும் வேளூர்க்குச் சென்று அங்குள்ள புள்ளிய [illegible] பின் மாயூரஞ் சென்று அங்கிருக்கின்ற மாயூர [illegible] அபயாம்பாள் சேவை செய்துகொண்டு பின்பு



கொள்ளிட ஸ்நானம் செய்து புலையனுக்கு முத்திகொடுத்த ஸ்தல மாகிய சிதம்பரம் சென்று கனகசபை நடராஜர் சேவை செய்து கொண்டு மூலஸ்தானமாகிய சொர்ணமண்டபத்திலெழுந்தருளியிருக் கும் ஆகாயலிங்கரைச் சேவித்தார்கள். இத்தலத்தைப் பற்றிக் கூறுவதாவது,

திருத்தொண்டர் புரணம்.

தில்லைமாநகர் வாழ வாழதவச்சிந்தையந்தண ராலைஞ்னூற்
றல்லதும் பலமட பதித்தவ ராசரிக்கையி லுள்ளபே
ரெல்லையில்லவரி யாவருங்களி கொளவிளங்க சரீரிவாக்
கொல்லை வந்தெழ வனைவருங்கா முச்சிவைத்தன முருகினர் ()

திருச்செங்காட்டங்குடி தரிசனம்.

பின்பு திருவையாற்றில் பஞ்சன தீஸ்வரரைச் சேவை செய்து கொண்டு சேக்கிழார் வசித்த ஸ்தலமாகிய குன்றையூர்க்குச் சென்று அங்குள்ள சிவபெருமானைத்தரிசித்துக் கொண்டு, பஞ்சாக்கரதேசி கர் திருவவதார ஸ்தலமாகிய திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்று தரிசனஞ் செய்துகொண்டு பின்பு மாகத முனிவன் பெண் யானை யுருக்கொண்ட விபுதை யெனும் அசுரகுலப் பெண்ணை ஆண்யானை யுருக்கொண்டு புணர கயமுகாசுரன் பிறக்கவும் அவன் தேவர்களுக் கிடுக்கண் செய்து வரவே அவனைக் கொல்லவும் அவனது உதிரம் பாய்ந்த ஸ்தலமாகிய செங்காடு என்னும் க்ஷேத்திரத்தில் ஏகபுத் திரனைச் சமைத்துச் சங்கமருக்களித்து கீர்த்திபெற்ற சிறுத்தொண் டன் பூசித்து வந்த உத்ராபதி யீசர் சேவை செய்தார்கள். இதைப் பற்றிக் கூறுவது

காளமேகப்புலவர்

காலனையுங் காமனையுங் காட்டுசிறுத் தொண்டர்தரு
பாலனையுங் கொன்ற பழிபோமோ—சேலுடை
ஞட்டிலே வீற்றிருந்த நாதனே நீர் திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக்கால்.

திருக்கழுக்குன்ற ஸ்தலம்.

பின்னும் அதைவிட்டு நீங்கிப் பாதிரிவிருக்ஷத்தை யுடையதா யும், வியாக்கிரமபாத முனிவரால் வழிபட்டு விளங்குவதாயுமுள்ள திருப்பாதிரிப்புலியூர்க்குச் சென்று அங்குள்ள புன்னிய தீர்த்தங்க ளில் ஸ்நானம்செய்து சிவதரிசனமுஞ் செய்துகொண்டு, [illegible]

கண்டன் மார்க்கண்டேயருக்காக வுதைத்த ஸ்தலமாகிய திருக்கடையூர் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி அமிர்த லிங்கரை சேவித்தார்கள். பின்னும் பாடல்பெற்ற ஸ்தலமான திரு... னூர் முதலான திவ்ய க்ஷேத்திரங்களுக்குச் சென்று சிவதரிச னம் செய்துகொண்டு, பின் கரிய கடல்நீரைப் போன்று வி... நீர் நிறைந்துள்ளதாகியும் (கமலையென விளங்கும்) திருக்குளமமைந் ததுமான இலக்ஷ்மி பூசித்த ஸ்தலமாகிய திருவாரூருக்குச்சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களாடி சிவாலய தரிசனஞ் செய்தார் கள். அதன்பின் சம்பாதி ஜடாயுவென்னு மிரண்டு கழுக்கள் முத்தி பெற்ற ஸ்தலமாகிய திருக்கழுக்குன்றத்திலுள்ள தீர்த்தங்களில் ஸ்னா னம் செய்து சிவதரிசனமும் செய்தார்கள். இத்தலத்தைப்பற்றிக் கூறுவதாவது "இலங்குகின்ற நின் சேவடிகளிரண்டும் வைப்பிட மின்றியே—கலங்கினேன் கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன் றிலே" என்று மாணிக்கவாசக ஸ்வாமிகளும் கூறியுளார் இன்னும்.

நட்டி எழுபது

அம்பாலீன் மூழ்கியொரு கற்பமெல்லாங் கிடக்கினு மென்னழலினின்று—
வெம்பாமே வெளிக்காலுண்டேட் காலைவெளியில்விடா திருந்தா லென்னே—
வம்பாருமி தழியணி வேணியனார் வேதமலை வலம்வந் தீண்டுஞ்
சாம்பாதிக் கழுதளிக்கும் ஜயக்குன்றம் போல் விளைவத்தாராவன்றே ()

## காளத்தி தரிசனம்

அவ்விடம் விட்டு நீங்கிப் பொன்முகலியில் ஸ்நானஞ் செய்து கயாரண்ய மென்றும், வில்வாரண்ய மென்றும், தென் கைலாசமென் றும், விளங்கும் சீகாளத்தி ஸ்தலம் வசிஷ்டர், அகஸ்தியர், பிரம்ம தேவர், சிலந்தி, பாம்பு, யானை, கண்ணப்ப நாயனார், சிவகோசரி யார், நக்கீர தேவர், கன்னியர் முதலாக ஒவ்வொரு காரணத்தால் ஒவ்வொருவரும் முத்திபெற்ற ஸ்தலமாதலால் அங்குள்ள சிவபெரு மானைத் தரிசனம் செய்து கொண்டார்கள். இத்தலத்தைப் பற்றிக் கூறுவதாவது.

பட்டினத்தார் திருவிசைப்பா

பொய்யை யொழிபாய் புலாலை விடாய் காளத்தி
யையனே யென்னு யறஞ் செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு.



## விரிஞ்சிபுர தரிசனம்.

பின்னும் அவ்விடம் விட்டு நீங்கி க்ஷீரநதியில் ஸ்நானஞ் செய்து குருக்கள் குழந்தைக்குக் காட்சிதருமாறு அர்ச்சனை செய்யும்போது பூமாலை சூடவேண்டி சிரம் வளைத்துக் கொடுத்த ஸ்தலமாகிய விரிஞ்சிபுரம் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு அந்நதியின் தக்ஷணதீரத்திலுள்ள ஜலகண்டயீசர் சன்னதியடைந்து தெரிசனை செய்துகொண்டார்கள். இத்தலத்தைப்பற்றி

வீரசிங்காதன புராணம்.

கஞ்சநான் முகன்பூசை புரிந்திடக் களிப்பால்
வஞ்சியாதவன் வேண்டிய வரமெலா மளித்துத்
தஞ்ச மென்றொரு பாலகற்காய்முடி சாய்த்தே
மிஞ்சிசூழ்திரு விரிஞ்சியென் றதன்பெய ரிசைப்பார்.

## பாபநாச தீர்த்தஸ்நானம்.

பின்னும் அதைவிட்டு நீங்கி தமிழ்நாட்டுக் கெல்லையாகிய வடவேங்கட மென்னுஞ், சேஷாசல மென்றுஞ் சொல்லப் படுகிறதும், ஆழ்வாராதியர்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்றது மாகிய திருப்பதியைப் பிரதக்ஷணம் செய்தும் அங்குள்ள பாவ நாச தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தும், அங்கு வீற்றிருக்கும் ஸ்ரீநிவாசரைப் பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து சேவித்துத் துதித் தார்கள்.

B ஆசிரிய விருத்தம் (எண்சீரடி)

சீரான நவமணிக ளொளிர்கின்ற முடியினொடு
 திகழ்கமல வதன வழகும்
செம்பவழ வாயினொடு புருவவிணை கருணைபொழி
 செங்கமலக் கண்களழகும்
கோரான நாசிமே னீண்டநா மத்தினழகும்
 நிகரில் வாய் பற்க ளழகும்
நெடிய கண்டத்தினொடு காதுதடு கன்னங்கள்
 நெற்றி மோவாயி னழகும்
போரான கவுத்துவம் புஜகீர்த்தி மார்புந்தி
 திருமாது பீதாம் பரம்
பிரியமுடை பஞ்சாயுதங்கண்ணி சதுர்ப்புஜம்
 பேணுவை ஜயந்தி னாலும்
தாராருந் தாளழகும் பட்டிகையு மரைஞாணும்
 தாண்டையும் விருதாழியும்
சந்ததமுஞ் சேவிக்கு மன்பர்கனேசனே
 தஞ்சம் வேங்கடவாசனே.

## திருவண்ணாமலை தரிசனம்.

பின்பு அதை விட்டு நீங்கி சோணகிரி யென்றும் அருணாசல மென்றும், சக்கிரவாளகிரி யென்றும், சொல்லப்பட்ட அரிபிரம்மாதிகளாலேயும் அடிமுடி காணாததும், கிரேதாயுகங்கடோறும் அக்கினி மலையாகவும், திரேதாயுகங்கள்தோறும் சுவர்ணகிரியாகவும், துவாபர யுகங்கடோறும் வெள்ளிமலையாகவும், கலியுகங்கடோறும் கன்மலையாகவும்விளங்கக்கூடியதுமாகிய திருவண்ணாமலையைக்கண்டு அங்குள்ள புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம் செய்தும், அந்தகிரியைப் பிரதக்ஷணம் வந்தும், 108 திவ்ய தீர்த்தங்களாடிய பின் உண்ணாமலை யம்மையையும், அண்ணாமலையாரையும் சேவித்துக் கொண்டு வந்தார்கள். இம்மலையைப் பற்றிக் கூறுவதாவது,

சொக்கநாதப்புலவ ரம்மானை.

ஆரவயல் சூழருணை யண்ணா மலைநாதர்
பேருலகில் வண்ணாரப் பெண்கொண்டா ரம்மானை
பேருலகில் வண்ணாரப் பெண்கொண்டா ராமாயின்
சாரும் புடவையெல்லாம் தப்பினரோ வம்மானை
தப்பினர் தாருவனத் தார்புடவை யம்மானை ()

## திருவொற்றியூர் தரிசனம்.

பின்னும் அதை விட்டு நீங்கி தணிகாசல க்ஷேத்திரத்துக்குச் சென்று முருகக்கடவுளைப் பூசித்துக்கொண்டு, திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திருநீறு மலையைப் பிரதக்ஷணம் செய்தும், சுந்தரமூர்த்தி சுவாமிகள்பொருட்டு சிவபெருமான் அன்னம் இரந்துகொண்டுவந்து ஊட்டிய திருக்கச்சூர் ஸ்தலத்தையும் சேவித்துக்கொண்டு, பின்பு திருஞானசம்பந்த சுவாமிகளாற் பாடல்பெற்ற திருவட்டீச்சுரமும் சேவித்துக்கொண்டு, சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் பாடல்பெற்ற ஸ்தலமாகியதும் தொண்டமான் சக்கரவர்த்திக்குச் சிவபிரான் காக்ஷி தந்ததுமாகிய திருமுல்லைவாயில் அடைந்து அதைவிட்டு நீங்கி அப்பரால் பாடல் பெற்றதும் சுந்தரமூர்த்தி சங்கிலியாரை மணம் புரியும்பொருட்டு சிவபிரானிரவிற் றூது சென்ற ஸ்தலமுமான திருவொற்றியூர் என்னும் க்ஷேத்திரங்களிலுள்ள தீர்த்தங்களாடியும், மூர்த்திகளைத் தரிசித்தும் வந்தார்கள். இதனைப்பற்றி,



அப்பர் சுவாமி பாடியது

ஒற்றியூரு மொளிர்மதிப் பாம்பினை
யொற்றி யூருமப் பாம்பு மதனையே
யொற்றியூர வொருசடை வைத்தவ
னொற்றி யூர்தொழ நம்வினை யோயுமே.

## திருமயிலை க்ஷேத்திர தரிசனம்

பின்பு அதைவிட்டு நீங்கி திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடல் பெற்ற ஸ்தலமான திருப்பாச்சூர் அடைந்து அங்கு சேவித்துக் கொண்டு, பின்பு மாமதில்களையுடைய திருவல்லம் அடைந்து அங்குள்ள மூர்த்தி ஸ்தல தீர்த்தங்களைச் சேவித்துத் தங்கி மூழ்கியும், பின்பு திருஞானசம்பந்தசுவாமிகள் எலும்பைப் பெண்ணுருவாக, கபாலீசர் திருவருளாற்பாடி உயிர்ப்பிக்கச்செய்த திருமயிலைக்குச்சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துமூர்த்தியைச்சேவித்து நின்றார்கள். இத்தலத்தைப்பற்றிக் கூறுவதாவது.

திருஞான சம்பந்தர்.

கான மலர்ச்சோலை கபாலீச்சுர மமர்ந்தான்
தேனமர் பூம்பாவை பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தனலம் புகழ்ந்த பத்தும் வல்லார்
வானசம் பந்தத்தோடும் வாழ்வாரே.



ஸ்ரீ பார்த்தசாரதி.

## திருவல்லிக்கேணி தரிசனம்

பின்னும் அதைவிட்டு நீங்கி திருமங்கை யாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற திருவிடந்தை, திருவான்மியூர், திருக்கடன் மல்லை, பின்பு திருமழிசை யாழ்வாரால் மங்களாசாசனஞ் செய்யப்பெற்ற திருவல்லிக்கேணி முதலிய க்ஷேத்திரங்களிலுமுள்ள தீர்த்தங்களாடி மூர்த்திகளையும் தரிசித்துக்கொண்டு வந்து பார்த்த சாரதிப்பெருமாளையும் சேவித்தார்கள்.

இம்-இந்துஸ்தானி பியாகு சாப்பு.
ஆயோசையா என்னும் வர்னமெட்டு.

பல்லவி

சாமி நீயே சஞ்சலமொழிப்பாயே தஞ்சமென்றடைந்
தேன் சேயேன் ஆ ஆ ஆ (சாமி)

சரணங்கள்

பாவியி னிடுக்கண் டொலைப்பாயே—பக்தவத்சலா
சேயேன்—பந்த நோய் கொண்ட நாயேன்— ()
பட்சமுடன் இக்ஷணமே நச்சின னேரட்சணைசெய்

மோக்ஷம் போகாது கிருபை பாரும்—முமூக்ஷினைக்கண்
பாரும்—மொய்த்த வல்வினை கோறும்— ()
மூக்குணமில் நிர்க்குணனே சட்குணனே இச்கணமே

பார்த்த சாரதி ரமாயேசா—பரமபத
வாசா—பழவினைகள் நாசா— ()
பாவலனே நாவலனே காவலனே கோவலனே

இவ்விதமாக எண்மரும் வடகோடியாகிய இமய முதற்கொண்டு தென் கோடியாகிய சேதுவரையுமுள்ள மஹா புண்ய தீர்த்தங்களிலும், க்ஷேத்திரங்களிலும் சென்று ஸ்நானங்கள் செய்தும், க்ஷேத்ர மூர்த்திகளைச் சேவித்தும் வனத்தில் முனி சிரேஷ்டர்கள் கூறிய வண்ணம் அனுதிமல முக்த சித்சொரூபியாகிய அம்பிகை அடியார்களுக்கு அனுக்கிரகிக்கும் பொருட்டுக் காமாக்ஷியென்னும் திவ்ய திருநாமத்துடன் எழுந்தருளி யிருக்கப் பெற்றதும், மூர்த்தி, ஸ்தல, தீர்த்தமென்னும் மூவிதச்சிறப்புகள் பொருந்தப் பெற்றதுமாகிய திருக்காஞ்சிமாநகரம் வந்தடைந்தார்கள். என்று ஆரியமுனிவர் நாரதாதி முனி புங்கவர்களுக்குரைத்தார்.

சகல தீர்த்தங்களிலும் ஆடினர் என்பதற்கு



அருணாசல புராணம்.

கம்பநதி கும்பநதி காவேரி கோதாவரி கன்னிவேணிப்
பம்பைநதி வேகவதி வேதவதி சரயுநதி பரமாங்கங்கை
செம்புநதி பொன்முகிழல் யமுனைநதி நருமதைமேற் செப்புஞ் சோனை
அம்புவியின் மிகவுளவங்காடினார் தங்கள்வினை யகல மாதோ

## துண்டீர மண்டலமென்பது

கேட்பீர் நாரதமுனிவரே—இவ்விதமாக வைடங்கன் முதலெண்மரும், அவரது பத்தினிகளும் கூடிப்பூ பிரதக்ஷணஞ்செய்தபின், தாங்கள் நாடிவந்த தொண்டமண்டலத்தின் கிழக்கெல்லையாகியதும், சரஸ்வதிதேவி தன் பாவத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டி நதியுருவாய் வந்து சங்கமுமாகிய சமுத்திர ஸ்நானம் செய்தும், தெற்கெல்லையாகியதும், முன்னோர்காலத்து அசுரகுருவாகிய பிருகுரிஷி பூமியிற் பிநாகமெனும் தனுசை யெடுக்கவே அது நதியுருவாகிப் பெருகிவரலான (பினாகினி) என்னும் பெண்ணையாற்றில் ஸ்நானஞ் செய்தும், மேற்கெல்லையாகியும், முற்காலத்தி லனுமார் அமிர்தத்துக்குச் சமமாயுள்ள சஞ்சீவிகளைக்கொண்டுபோய், இளையபெருமாளிடங் கொடுக்க வேண்டி அலம்பிய (கல்லாறு) என்னும் * சிலா ஊருதத்தில் ஸ்நானம் செய்தும், வடக்கெல்லையாகியும், ஸ்ரீ மகா விஷ்ணுவானவர் ஸ்நானஞ் செய்ய நிமித்தந் தடாக முண்டாக்கி விரஜா நதியைப் பிரதிஷ்டை செய்ததுமான (சேஷா ஜலத்துக்குக்) கிழக்கிலுள்ள ஸ்வாமி புஷ்கரணியில் ஸ்நானம் செய்தார்கள்.

## தபோவன மென்பது.

மேற்கூறிய நான் கெல்லைகளுக் குட்பட்டதும், இரண்டாம் பிராகாரமாக விளங்கக்கூடியதும், முன் சொன்ன சமுத்திரத்துக்குப் பத்து மைல் மேற்கிலுள்ளதும், மஹாபலி சக்கரவர்த்தி அரசாட்சி செய்து சிரஞ்சீவிபதம் பெற்ற ஸ்தலமுமாகிய மகாபலிபுரம் கிழக்கெல்லையாகவும், இந்நகருக்கு ஐம்பதுமைல் தென்மேற்கிலுள்ளதும், உக்ரசேனனுண்ட விடமாகியதுமான தேவகிபுரம் தெற்கெல்லையாகவும், இந்நகருக்கு ஐம்பது மைல் வடமேற்காயுள்ளதும், தேவகணிகையர் தவங்கள் செய்த ஸ்தலமுமான விரிஞ்சிபுரம் மேற்கெல்லையாகவும், இந்நகருக்கு ஐம்பது மைல் வடகிழக்கிலுள்ள, நாகலாபுரம் வடக்கெல்லையாகவும், விளங்காநின்ற (இந்நகருக்குத்

* சிலையென்றால் கல், ஊருதமென்றால் மலை.

தென்மேற்கில், ஐம்பதுமைல் தூரத்திலுள்ளது முற்கூறிய மாவலி புரம்.) இத்யாதிஸ்தலங்களிலும் ஸ்நானங்கள் செய்தார்கள்.

## பிரம்மசாலை யென்பது.

மாவலி புரத்துக்கு முப்பது மைல் மேற்கில் (சிவரம்) என வழங்கும் சிவபுரத்திலுள்ள (திருமுக்கூடல்) திரிவேணி சங்கம நகரத்தைக் கிழக்கெல்லையாகவும், இந்நகருக்குப் பன்னிரண்டு மைல் தென்மேற்கிலுள்ள (திருப்புலிவனம்) வியாக்கிரபுரவனம் தெற்கெல்லையாகவும், இந்நகருக்குப் பன்னிரண்டு மைல் வடமேற்கிலுள்ள (திருப்பாற்கடல்) க்ஷீராப்தி நகரம் மேற்கெல்லையாகவும், இந்நகருக்குப் பன்னிரண்டு மைல் வடக்கிலுள்ள (தக்கோலம்) நந்தி கங்காபுரம் வடக்கெல்லையாகவும் விளங்காநின்ற (இந்நகருக்குப் பனிரண்டு மைல் தென்கிழக்கில் முன்சொன்ன திரிவேணி சங்கம நகரம்) இத்யாதிஸ்தலங்களில் ஸ்நானங்கள் செய்தார்கள்.

## க்ஷீரநதிப் பிரபாவம்.


ஸ்ரீ பரமேஸ்வரியினது கும்பத்தினின்றும் வெளிப்பட்டதும், தேகத்துக்கு வரும் நரை, திரை, மூப்புக்களைப் போக்கடிப்பதும், கிரேதாயுகங்கடோறும் அமிர்த சொரூபமாகவும், திரேதா யுகங்கடோறும் பாலினது ரூபமாகவும், துவாபர யுகங்கடோறும் நெய்யினது வடிவமாகவும், கலியுகங்கடோறும் ஜலரூபமாகவும், உள்ளதும் ஸ்நானஞ்செய்த க்ஷணமே சமஸ்த பாவங்களையும் போக்கி விதேகமுக்தி தருவதாயுள்ளதும், நந்திமலையில் உற்பத்தியானதுமான (பாலாறு) எனும் பெயரினைப்பெற்ற க்ஷீரநதியுடன் (வேகவதியெனவழங்கும் குண்டலநதியும், (சேயாறு) என வழங்கும் பாகுநதியுங் கலந்து வருவதால். (திரிஸ்தோ) எனப் பெயர் பெற்றுள்ள திருமுக்கூடலில் ஸ்நானம் செய்தார்கள்.

## காஞ்சிஸ்தலமென்பது

முன்சொன்ன திரிவேணி சங்கத்துக்குப் பத்துமைல் மேற்கில் (பாஞ்சாலிகை) துர்க்கையின் க்ஷேத்திரத்துக்குச்சென்று அங்கு தேவியைச் சேவித்துக்கொண்டும், அதற்கும் மேற்கிலாறுமைலிலுள்ள (கன்னிகேசர்) என்னும் சிவபிரானுடைய ஸ்தலத்துக்குச் சென்று அவரைப்பூசித்தும், அதற்கும் மூன்று மைலுக்கு வடக்கில் சூரிய புஷ்கரணியில் ஸ்நானஞ்செய்து வேதாக்கியரென்னும் விஷ்ணு



வைப் பூசித்தார்கள். இதற்கும் ஒருமைல் கிழக்கில் (வெள்ளைக்குளம்) சந்திர புஷ்கரணியில் ஸ்நானம் செய்து க்ஷேத்திராங்கியென்னும் துர்க்காதேவியைப் பூசித்தார்கள். (இதற்கும் மூன்று மைல் தூரத்தில் தென் கிழக்கிலுள்ளது முற்கூறிய பாஞ்சாலிகை யென்னுந் துர்க்கையின் க்ஷேத்திரமாம்.)



வரதராஜப்பெருமாள்.

## விஷ்ணுசாலைப் பிரபாவம்.

அதன்பின் காஞ்சி க்ஷேத்திரத்திலிராநின்ற ஆதிசேஷன் ஸ்நானஞ்செய்து பூமியைத்தாங்கும் வல்லமையைப் பெற்றதுமாகிய அநந்தஸரசில் சனிவாரத்தன்று ஸ்நானம் செய்தும், சர்வபாபங்களையும் ஹரிக்கும் பக்தோதயசரசு என்னும் தீர்த்தத்தில் ஏகாதசியன்று ஸ்நானம் செய்தும், இந்திரன் கௌதமரால் சபிக்கப்பெற்ற யோனிக்கண்களைச் சுத்தக் கண்களாக்கவேண்டி ஸ்நானஞ்செய்து புனிதனான இந்திர தீர்த்தத்தில் புதவாரமன்று ஸ்நானம் செய்தார்கள். விஷ்ணுவின் சக்கரத்தால் காளிகாதேவிக்காகக் கொண்டுவரப்பட்ட பாஞ்சாலிகை தீர்த்தத்தில் திருவோண நட்சத்திரத்தில் ஸ்நானம் செய்தார்கள். இத்தலத்தைப்பற்றி.

### திருமங்கையாழ்வார் அஷ்டபுஜம்.

மன்னவன் றொண்டையர் கோன்வணங்கும்
நீள்முடி மாலை வயிர மேகன்
றன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி
யட்டபுய கரத்தாதி தன்னை
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்
காமரு சீர்க்கலி கன்றிகுன்றா
வின்னிசையாற் சொன்ன செஞ்சொல் மாலை
யேத்தவல் லார்க்கிடம் வைகுந்தமே.

பிரமதேவருக்கு பிரஹ்ம தண்டங்கொடுத்தவரான ஆக்கினேய திக்கிலுள்ள வரதராஜப்பெருமாள் ஆலயம், பிரமனது யாகத்தை யழிக்கவந்த வேகவதியெனுஞ் சரஸ்வதியினது கர்வத்தையடக்கும்பொருட்டு எழுந்தருளின யதோத்காரிப் பெருமாளாலயம், குகநரசிம்மப் பெருமாளாலயம், மாயையெனுங் காளியோடு போர்செய்து சிரசின்மேல் வீற்றிருக்கும் அஷ்டபுஜங்க ராலயம், சரஸ்வதியாற் பூசிக்கப்பட்ட வித்யாதுண்டப் பெருமாளாலயம், கபாலியென்பவனைக் கொன்று அவனால் விடப்பட்ட அஸ்திரங்களை விழுங்கினவரான நரசிம்மராலயம், மாயாதலனை தீபம்போற் காத்திருங்கிய தீபப்பிரகாசப் பெருமாளாலயம், தொண்டமானுக்கு வைகுண்ட தரிசனங் காட்டினவரான வைகுண்டப் பெருமாளாலயம், அசுரர்களுடைய உதிரத்தைப் பானஞ்செய்தவரான பவளவண்ணப் பெருமாளாலயம், முதலிய விஷ்ணுக்ஷேத்திரங்களிலுள்ள மூர்த்திகளைச் சேவித்தார்கள். இந்த க்ஷேத்திரத்துக்கு,


### சென்னாப் புலவன்.

கனிகண்ணன் செல்கின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா — துணிவுடைய
சென்னாப் புலவனான் செல்கின்றேன் நீயுநின்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்

புண்ணியகோடீசராலயம், இந்திரன் பூசித்த மணிகண்டேசராலயம், கோரியவரமளிக்கும் சத்தியநாதீசுராலயம் முதலிய சிவஸ்தலங்களையும் சேவித்தார்கள்.

பாஞ்சாலிகையாலயம், குதிரைபலிகொண்ட (கோயிலாத்தாள்) என்னுஞ் சேத்திராங்கியாலயம், கம்புதாரணியாலயம், பானும்பிகையாலய முதலிய துர்க்காதேவிகளினது சேவையும் செய்தார்கள்.





ஏகாம்பரநாதர்.

### ருத்திரசாலைப் பிரபாவம்

சிவகங்கை தீர்த்தத்தில் சோமவாரத்தன்று மூழ்கியும், மங்கள தீர்த்தத்தில் மங்களவாரத்தில் ஸ்நானஞ்செய்தும், ஜனன துக்கத்தைப்போக்கும் ஜராஹர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தும், பின்பு பாண்டவ தீர்த்தத்தில் திருவாதிரை நட்சத்திரத் தன்று மூழ்கினார்கள். இத்தலத்தைப்பற்றி

### திருஞானசம்பந்தர் தேவாரம்.

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணொடாண் ணாகிய பெம்மானை
யிறையானை யேர்கொளுங் கச்சித்திரு வேகம்பத்
துறைவானை யல்லாதுள் ளாதென துள்ளமே.

வாயுதிக்கிலுள்ள ஏகாம்பரநாதராலயம், யயாதி மகாராஜனுக்குச் சரீரத்துடன் முத்தியருளிய காயாரோகணேசராலயம், தேவாதிகளுக்கு வந்த மரணஜ்வர ஜுரத்தைப் போக்கினவரான ஜுராஹரீச்சுராலயம், விருத்திராசுரனைக் கொல்ல வஜ்ராயுதங் கொடுத்தவரான அநேகபதீசராலயம், தொண்டமானுக்குக் கைலாயங் கொடுத்தவரான கைலாசநாதராலயம், வாலகில்லியருக்கு அபயாஸ்தந் தந் திரக்ஷித்தவரான பக்ஷீயஸ்வராலயம், கங்காநதியின் பாவத்தை சர்வதீர்த்தங்களாற் போக்கினவரான காசி விஸ்வேசராலயம், ஓணனென்பவனுக்கு வாளாயுதமும், காந்தனென்பவனுக்குச் சூலாயுதமுங் கொடுத்தவரான ஓணகாந்தேஸ்வராலயம்,

பண்டாசுரனை சம்மரித்தவரான கச்சிமயேசாலயம் முதலிய சிவ க்ஷேத்திரங்களில் ஸ்நானஞ் செய்தார்கள், இத்தலத்தைப்பற்றி,

பழைய காஞ்சிப் புராணம்

மங்கை நாயகிதன் வரிவளைத் தழும்பும்
வளரிள முலைசெய்த சுவடுங்
கொங்கை நாயகமுங் கண்டு கண்டுள்ளக்
குறிப்புட னல்குவாய் கோவே
சிங்கநாயக மாவிருந்த நாரணனைச்
சிம்புளா யடர்த்த சேவகனே
கங்கை நாயகனே கம்பனே கச்சிக்
கடவுளே காக்கு நாயகனே

பாண்டவப் பெருமாள் சந்நிதி, சுவேதப்பெருமாள் சந்நிதி, சந்திரகிரிப் பெருமாள் சந்நிதி, முதலிய விஷ்ணு க்ஷேத்திரங்களில் சேவை செய்தார்கள்.

கங்காநதிப் பெருக்கைத் தனது கபாலத்திலடக்கிய பிரளய பந்தினி ஆலயம். (அரசாத்தம்மை) என வழங்கும் சப்பத்கரேஸ்வரி யாலயம், சப்புகனென்னு மந்தகனுக்குக் கண்கள் வரங்கொடுத்த ரேணுகாப்புஜவல்லி யாலயம், வீரபத்திரமூர்த்தியினது கோபத்தைத் தணித்தவரான (வீரகாளியம்மை யென வழங்கும்) வீரவரேஸ்வரி யாலயம் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று சேவித்தார்கள்.

தீர்த்தங்களில் ஸ்நான காலத்தில் சொல்லவேண்டிய
தியான சுலோகம்.

ஸ்ரீசைவ ஸ்யாக்னி திக்பாகே யோஜனே சைக விம்சதே. காவேரி கிருஷ்ணயோர்மத்யே தத்ர கௌரீதபோவனே சம்பாயா தக்ஷிணேகூலே ருத்ர சாலா தராதலே. (1)


ஏகாம்பர நாயகச் சம்புஸ் ஸதா தத்ரைவ வர்த்ததே உமாலிங்கண ஸத்ராந்த குசகங்கண முத்ரித: (2)

லிங்க மேகாம்ப்ர நாதஸ்ய் ஸைகதம் ஸமுபாஸ்மஹே யோர்ச்சயோ ருத்ர சாலாயாம் லிங்கமேகம் பிரயத்னத: (3)

கோடி லிங்கார்ச் சனபலம் சிவலோகஞ்ச கச்சதி, யோவசே ருத்ரசாலா யாம் க்ஷணார்த்தம்வா ததர்த்தகம் (4)

முச்யதே சர்வபாபேப்யஸ் ஸாக்ஷாத் பர்க்கோ நராக்ருதி:, சிவபீஜ சமுத்பூதம் வேதசாசாபி ருஜ்வலம் (5)





ஸ்ரீ காமாக்ஷி

காமகோட்ட பிரபாவம்

ஸ்ரீகாஞ்சி க்ஷேத்திரத்து ளாக்கினேய திக்கிலுள்ள விஷ்ணு சாலைக்கும், வாயு திக்கிலுள்ள உருத்திரசாலைக்கும் மத்தியிலிருப்பதும், க்ஷேத்திராங்கி யாலயத்துக்கு மேற்கிலும், அஸ்திசிகமா வாலயத்துக்கு வடக்கிலும், காயாரோகண ராலயத்துக்குக் கிழக்கிலும், சுவேதப்பெருமா ளாலயத்துக்குத் தெற்கிலும், அமையப்பெற்று இவற்றை யெல்லைகளாகக்கொண்டு, இதன் மத்தியில் ஸ்ரீபுரமென்றும், பத்ம நாபகமெனறும், ஜீவன்முத்தி புரமென்றும், காமகோட்ட மென்றுஞ் சொல்லி வழங்கி வருகிறதும், யயாதி மஹாராஜா ஸ்நானஞ்செய்து காயத்துடன் சுவர்க்கமடைந்த காயாரோகண தீர்த்தத்திற் குருவாரத்தன்று ஸ்நானம் செய்தும், ஜனற்குமார முனிவர் ஸ்நானஞ்செய்து தாமடைந்திருந்த ஒட்டகையினது ரூபத்தைப் போக்கிக்கொண்ட இஷ்டசித்தி தீர்த்தத்தி லாதிவாரத்தன்று ஸ்நானஞ்செய்தும், பின்பு, கார்த்தவீரியன் ஸ்நானஞ்செய்து பசுசரீரம் போக்கிக்கொண்டு நிஜரூபமடைந்த சக்கர தீர்த்தத்தில் காமாக்ஷி தேவியினது ஜெனன நட்சத்திரத்தில் ஸ்நானமுஞ் செய்தார்கள்.

தேவ சிற்பியால் காஞ்சியைப் பிரதிஷ்டை செய்வித்த காலத்தில் வாஸ்து சாந்திசெய்து சங்குப் பிரதிஷ்டைக்குக் காரணமாக விருந்த

(சப்பாணிப்பிள்ளையா) ரெனவழங்கும் சங்கபாணி விநாயகரைச் சேவித்த பிறகு, பிரம்மனை தாரகமந்திர நிமித்தஞ் சிறைப்படுத்தித் தாமே சிருஷ்டிகர்த்தா வெனுங் கோலங்கொண்ட குமரகோட்டப் பெருமானைச் சேவித்தார்கள்.

மன்மதனைப் புத்திரனாக வடையவேண்டி இலக்குமி தேவி பூஜித்த (தூர்வாவர்ணப் பெருமாள்) பச்சைவண்ணப் பெருமாளாலயம், ஆதிசேஷனாற் பூசிக்கப்பட்ட (உலகளந்த பெருமா) ளென வழங்கும் திரிவிக்ரமப் பெருமாளாலயம், காஞ்சியிற் றேன்மழை பொழிவித்தவரான மதுப்பெருமா ளாலயம், சந்தான விர்த்தியளிக்கும் காளாங்கப்பெருமாளாலய முதலிய விஷ்ணு க்ஷேத்திரங்களை யடைந்து அங்குள்ள மூர்த்திகளைச் சேவித்தார்கள்.

முருகக்கடவுள் தனக்குப் பிள்ளையாக வரவேண்டு மென்று ஆதிசேஷன் பூசித்த மகாகாளேஸ ராலயம். ஜகதாத்மா வென்பவருக்கு கவித்துவத்தைத் தந்த பட்டாரகேஸ்வர ராலயம், சர்ப்பங்களுக்கு முத்தியைக் கொடுத்த பணாதரேஸ்வராலயம், சர்ப்ப ராஜாக்களுக்கு கருட பயந்தீர்த்த பணீசராலயம், பிரம்மன் பூசித்த சுவயம்புவாயுள்ள லிங்கமூர்த்தியாகிய கச்சபரேஸ்வராலய முதலியவைகளுக்குச் சென்று அங்குள்ள மூர்த்திகளைச் சேவித்தார்கள். (இவை சிவஸ்தலங்கள்.)

பின்னும் பிரம்மனாற் பூசிக்கப்பட்ட (கருக்கினிலமர்ந்தா ளென்னும்) உக்கிரவாசினியம்மை யாலயம், தேவர்களினது விக்கினங்களைப் போக்கினவளான ஹிதகாரணியெனும் பஞ்ச சந்திகை யம்மையினது ஆலயம், நீலையெனும் ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தைக் காக்கும்படி பூசித்த தீர்த்த மாலினியென்னு மம்மை யாலயம், கோரக்கச் சித்தரென்பவருக்குச் செல்வங்கொடுத்த (பொன்னேரி யம்மை) யெனும் ஹேமாசனி யம்மையி னாலயம், திரிசிரனைச் சம்மரித்துக் காமகோடி பீடத்தைக் காத்தவளான (காளியென வழங்கும்) பீட வர்த்தனி யம்மையி னாலயம், முதலிய துர்க்கைகளி னாலயங்களைச் சேவித்தார்கள்.

திருஞானசம்பந்தர் புராணம்

புறத்தணைந்த தொண்டருடன் போந்தமைந்த திருமடத்திற்
பெறற்கரும் பேறுலகுய்யப் பெற்றருளும் பிள்ளையார்
மறப்பரிய காதலுடன் வந்தெய்தி மகிழ்ந் துறைவார்
அறப்பெருஞ் செல்வக் காமகோட்ட மணைந்திறைஞ்சினார்.



பின்னுஞ் சதாசிவ மூர்த்தியினது பஞ்சமுகங்களிற் றோன்றிய மூன்றரைக்கோடி தீர்த்தங்களுக்குச் சமமாயுள்ள பஞ்ச தீர்த்தங்களில் சுக்கிரவாரமன்று ஸ்நானம் செய்து, பவதி பிக்ஷாந்தேகி யெனப் பூசிக்கக்கூடியதும், தருமத்துவார முடையதுமாகிய அன்னபூரணி யாலயம், தேவியினது திருமுலைப்பாலை யுண்ணப்பெற்ற சாஸ்தா ஆலயம், விஷ்ணு மூர்த்தியால் வந்த சாபத்தை யம்பிகையாற் றீர்க்கப்பெற்ற (சாந்த காமாக்ஷி) என வழங்கும் அஞ்சனக் காமாக்ஷி யாலயம், வைவஸ்வத மனு புத்திரப்பேற்றை விரும்பிப் பிரதிஷ்டைஞ்செய்த சந்தான ஸ்தம்பம் முதலியவைகளையும் சேவித்தார்கள்.

ஏகாம்பர நாதரை அம்பிகை சதா பூசித்துக் கொண்டிருப்பாளென்பதற்கு,

ஒப்பிலாமணிப் புலவர்.

கஞ்சி குடியாளே கம்பஞ்சோ றுண்ணாளே
வெஞ்சினங்க ளென்றும் விரும்பாளே—செஞ்சொல்
அஞ்சுதலை யாவாருக் காறுதலை யாவாளே
கஞ்ச முகக் காமாக்ஷி காண்

இவ்வித வைபவமுடைய விஷ்ணுக்ஷேத்திரங்களிலும் சிவக்ஷேத்திரங்களிலும் சென்று வைடங்கன் முதலெண்மரும் அங்குள்ள மூர்த்திகளைத் தரிசித்துப் பூசித்துவிட்டுப் பிறகு அம்பிகையாலயம் வந்தடைந்தார்கள். என்று ஆரியமுனிவர் நாரதாதி யோகியருக்குரைத்தார்.

ஓம் தத் சத்

மூன்றாவதத்தியாயம்

முற்றும்.

ஸ்ரீ காமாக்ஷியம்மன் துணை

# நான்காவது அத்தியாயம்

## மகா திரிபுரசுந்தரி வர்ணனை

கேளும் நாரதமுனிவரே வைடங்கன் முதல் எண்மரும் அன்னவர்களின் பத்தினிகளும் வனத்தில் முனிசிரேஷ்டர்கள் சொல்லியவண்ணம் பாதகண்டத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தும் க்ஷேத்திர மூர்த்திகளைத் தெரிசித்தும் முடிவில் காஞ்சிமா நகரத்தில் காமகோட்ட மென்கிற விடத்தில் காயத்திரி மண்டபத்தில் பிலாகாசமாகிய பீடத்தில் ஓங்காரகோணத்தில் பத்மாசனியாய், சதுர்ப்புஜங்களோடு முக்கண்ணுடையவளாய், மூலசக்தி, ஆதிசக்தி, ஆத்மசக்தி, என்னும் நாமங்களாற் றுதிக்கப்பட்டவளாய், தாமரை மலர் போன்ற காந்தியுடையவளாய், சந்திரசூடாமணியாகிய கிரீடந் தரித்துப் பாசம், அங்குசம், கோதண்டமிவைகளைத் தரித்திருக்கின்ற திருக்கரங்களை யுடையவளாய், இருசெவிகளிலுஞ் சோம சூரியர்கள் காதோலையாக நின்று ஒளிவீச, சிவந்த பட்டாடை புனைந்து திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, சகல சௌபாக்கியங்களையுந் தரவல்ல மாங்கல்யத்தைக் கண்டத்திற் றரித்தவளாய், தாமரை முதலிய மலர்மாலைகளசைந்தாட, சிவசங்கரருக்கு ஆத்மசொரூபிணியாய், சரண்புகுவோர்க்கு மனோபீஷ்டங்களை நிறைவேற்றும் பிரதானியாய், இலக்குமி, சரஸ்வதி, இருபக்கங்களிலும் வீசப்பட்ட சாமரங்களை யுடையவளாய், காமகோடியெனும் திவ்யமங்கள ரூபிணியாகிய திரிபுரசுந்தரி யென்றும், காமராஜபீடத்தி யென்றும், விளங்கக்கூடிய காமாக்ஷியம்மன் திருப்பாத சேவை செய்யச் சந்நிதியடைந்து அம்மனை ஸ்தோத்தியம் செய்வார்கள்.

### B அகவல்

திருவளர் காஞ்சியில் அருணல மோங்கத்
தெருளுடை முனிவர் தேவர்களு புகழ
அருளுடன்வாழும் அன்னையே போற்றி
மநுமலர் தூவிவாழ்த்தி வணங்கினேன்



முப்புர மெரித்த முக்கணன் றேவியே
பொற்பினிலுயர்ந்த வற்புத வணங்கே
ஆவலாயுன்னை நாவினாற் றுதிப்போர்
பாவங்கணீக்கும் பஞ்சாக்ஷரியே
ஞானவைராக்கியம் நல்குந் தயாபரீ
தானமுந் தவமும் மோனமும் பாகமும்
சத்திய வாக்கும் தருமத்தின் போக்கும்
சித்திகள் கொடுக்கும் தெய்வ நன்மணியே
பக்திசெய்தோமுன் பாதமே துணையாய்
நத்தினோமுன்னை நாராயணியே
அங்கயற்கண்ணும் செங்கையிற் கிளியும்
பங்கயப்பாதமும் பாதச்சிலம்பும்
கொண்டலை நிகரும் கூந்தலினழகும்
தண்டை சதங்கையும் தாழ்வடமிலங்க
இந்திரதனுவெனு மிரு புருவங்களும்
சுந்தரப்பட்டமும் துகிலொடு கச்சும்
மூருகொடு கொப்பும் மோகனமாலையும்
நரைமகள் கொன்றையு நற்றாரிலங்க
அரையிலொட்டியாணமும் அட்டிகை மின்ன
எட்பூமலரென விலங்கிய நாசியும்
கொப்புளுடனே கொவ்வைச் செவ்வாயும்
நத்து மூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும்
குந்தன வோலையும் சந்தன வாரமும்
கும்பஸ்தனமும் குங்குமப்பொட்டும்
அம்புலிகங்கை யணிந்திடு சடையும்
தூமாக்ஷியுடையோர் துதித்திடும் தேவியே
காமாக்ஷி யெம்மை காப்பதுகடனே
அடைக்கலமடைக்கலம் ஹரி ஓம் ஹரி ஓம்.

## கதிரவன் மறைந்தது.

இவ்விதமாய் வைடங்கன் முதலானோர் அன்றெல்லாம் மயேஸ்வரியைத் துதி செய்து, தாயே யாங்கள் புத்திராபேட்சையால் நெடுநாள் மனத்துயரடைந்து, ஆன்றோர்களின் அனுமதிப்படி பூப்பிரதக்ஷணமும் தீர்த்தயாத்திரையும், செய்து, அனந்த திவ்ய ஸ்தலங்களை நாடி சேவை செய்துகொண்டு கடைசியில் உமது திருப்பாத கமலத்தை வந்தடைந்தோம். உமது திருவருள் கடாக்ஷ எங்களுக்குப் புத்திரோற்பத்தியாகும் வாத்தை யருள்வீரென மிகவும்

துக்காக்கிராந்தர்களாய் தீர்க்கதெண்டன் சமர்ப்பித்து, அம்மன் பாதம் விட்டகலாதவர்களாய், அன்றெல்லா மன்னாகார மில்லாதவர்களாய், அக்காலகோடி பீடத்திலேயே தூக்கிதர்களாயிருப்பதைப் பார்த்து மனந்தளாதவர் போல் கதிரவன் தனது கிரணங்களை யொடுக்கி அஸ்தகிரியிற்போய் மறைந்துக்கொண்டது போல் அஸ்தமித்தானாம். இதற்கு

நைடதம்

மல்லிகையே வெண்சங்கா வண்டே வான் கருப்பு
வில்லிகணை தெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
வென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

## சந்திரனுதயமானது.

இவ்விதமாய்க் கதிரவன் மறைந்தபின் அஷ்டதிசைக்கும் ஓர் கோட்டையைப்போன்று சூழ்ந்து அசையுந்தன்மை யுடையதாய் புள்ளிகளையுடைத்தாகிய முகமுடைய யானைகள் நிலவுலகத்தில் நெருங்கித்திரியுந் தன்மையொத்து, இருளானது நட்சத்திரங்கள் பொருந்தலைக்கொண்டு எவ்விடத்தும் சூழ்ந்த இருளை நீக்க வெண்டாமரை மலரென்னும் இரதத்தின்மீது பதினாறு முழமுடையதெனக் கணக்கிடத்தக்க வெள்ளை வஸ்திரத்தைத் தனதிடையில் பொருந்தும்படி யுடுத்தித் தன்னுடைய வெண்ணிற வாபரணங்களும் பிரகாசிக்கும்படி வெண்ணிறத் திருமேனியுடைய * கலைமகளார் [illegible]யத்தில் வந்தது போலவும், அழகின் மேம்பட்ட மன்மதனுக்[illegible]

* கலைமகளார்க்கு வெண்டாமரை யாதனமும், வெள்ளுடையும், வெண்மைநிற வாபரணங்களும், வெண்டிருமேனியு முடைமையின் சந்திரமண்டலத்தையே இரதமாகவும், சோடசகலை களையே, வெண்சிலையாகவும், சந்திரிகையையே மேனியாகவும், கற்பித்து சந்திரனுக்குவமையாக்கினமையாதலின், பதினாறுமுழ ஆடையென்பதும், சந்திரனுக்குப் பதினாறு கலைகளுண்டென்றும், அக்கலைகளைச் சூரியனுக்குக் கொடுக்கவும் வாங்கவுமுள்ளவனென்றும், இச்சோமன் அத்திரி முனிவரது முகத்திலும், அக்கினியினிடத்திலுமுற்பவித்தவனென்றும் கூறப்பட்டது. இதற்கு

பாரதம் ஆதிபர்வம்

பத்திரட்டியி லீரிரண்டொழிந்த பல்கலையோன்
மித்திரர்க்கவை கொடுத்துப் பின் மீளவுங் கவர்வோன்
அத்திரிப்பெய ரந்தண னன்பகந் தனிலுஞ்
சித்திரக்கனன் முகத்தினும் பிறந்தொளி சிறந்தோன்.



இரதி தேவிக்கும், திருமணம் முடிக்கின்ற சிறப்பிலே அளவிறந்த விளக்குகளாகிய நட்சத்திரங்கள் தன்னைச் சூழ்ந்திருக்க ஒழுங்கமைந்த மத்தியிற் பிரகாசித்துக் கொண்டிருக்கிற குடவிளக்கை யொத்த சந்திரன் உதயமானான். இதற்கு

வீரநாராயணர் விஜயம்

எரின்மிகு வேட்கு மிரதிக்கு மணமாற்றுஞ்
சீரிலெணிற் றீப நடுவே திகழுதி குங்
தாரிலகு கும்பமெனத் தாரகைகள் சூழ
நேரி லமுதக்கதிர் நிசாகர னுதித்தான்.

## நித்திரை கொள்ளாதார்.

இவர்களி யாவரும் அன்றெல்லா மன்னபானாதிகளின்றி நிச்சலராயிருந்தபடியாலும், சங்கடத்திலாழ்ந்த இருதயங்களையுடையோரானதாலும் துயிலாது எப்படி யிருந்தார்களெனின், இறக்கும்படி யிருப்பவர்களும், கள்ளர்களும், காமுகர்களும், கொடிய நோயாளிகளும், பிரமைகொண்டவர்களும், சிறந்த விரதத்தை முட்டுப்பாடற முடிப்போர்களும், கொடிய ப[illegible]மையுடையவர்களும், பகை தேடிக்கொண்டவர்களும், அயலிடத்திற் காதுறைவோர்களும், விசேடித்த துயர்பெற்ற மனமுடையவர்களும், தூங்காதிருப்பதுபோல் நெடுநேரம் விழித்திருக்கவும் அம்மனனுக்கிரகத்தாற் சற்று அயர்ந்து தூங்கலாயினர்.

## அம்மனனுக்கிரகம் பெற்றது.

இவ்விதமாய் நித்திரை செய்துகொண் டிருக்குமவர்களில் முதல்வனாகிய வைடங்கனது சுவப்பனத்தில தேவி பிரசன்னமாகி கருணையோடு ஆஞ்யாபித்ததாவது; குழந்தாய் வைடங்கா நீங்கள் ஏன் என்மீது பழிசுமத்திக்கொண்டு அன்னாகாரமின்றி யெனது சன்னிதியில் தவஞ்செய்துகொண் டிருக்கிறீர்கள்? உங்களுக்கு சஞ்சித கன்மங்கணசித்துப் புத்திரோற்பத்தி யுண்டாக வேண்டிய காலம் சம்பவித்தது, யாதொன்றுக்கு மஞ்சன்மின், உங்களுக் கபயாஸ்தங் கொடுத்தேனாயினும் விபாண்டக புத்திர சிகாமணியாகிய அருணசிருங்க முனிவரால் புத்திரகாமேஷ்டியாகம் நடத்திவைத்து அதனாற் புத்திரோற்பத்தியாக வேண்டுமென்ன யோசித்திருக்கிறேன்; அவரோ இப்போது ரோமசர்ம அஷ்டகோண மகாமுனிவர்க[illegible]ன் கூடிச்சென்று மகாமேருவி னிடமாயிருக்கும் புசுண்ட யோகி

யிடம் ஞான விசாரணை செய்து கொண்டிருக்கிறார். அவரிடத்திற்கு உங்களில் யாதாமொருவர் போய்க்கண்டு எனது அபிப்பிராயத்தை விண்டு, உங்களது குறையைக்கூறி அழைத்தால் அவர் உடனே நம்மிடம் வருவார். அவர் வந்தவுடனே இவ்விடத்திலேயே யாககுண்டம் நியமித்து புத்திரகாமேஷ்டி யாகஞ் செய்யுந்தருணம் உமக்கு வேண்டிய தேவர்களை ஆராதனையோடு பூசித்து வருவிக்குங்கால் யாமும் எமது சுயரூபத்தோடெழுந்தருளி வேண்டிய வரமளித் திரட்சிக்கிறோ மென்றுரைத்து உடனே மறைந் தருளினார்.

## வைடங்கன் தம்பியர்க்குக் கட்டளையிட்டது.

உடனே வைடங்கராஜன் விழித்து பரவசங்கொண்டு தனது சகோதரர்க்குக் கூறி உடனே கலைக்கோட்டு முனிவரை யழைத்து வாவென்று தனது கனிஷ்ட சகோதரனாகிய இந்திரசேனனுக் காக்ஞாபித்து, அந்தரீக்ஷனென்னும் சகோதரனையும் நோக்கி நீ நமது விசாலாவதிக்குச் சென்று தமது சகோதரிகளையும் அவர்களது நாயகர்களையும் இன்னும் மற்றுமுண்டான பெரியோர்களையும் அழைத்துக்கொண்டு தீவிரமாய் வந்து சேருமென்று கட்டளை செய்தான். அவ்வண்ணமே அந்தரீக்ஷனனவன் விசாலாவதிக்குச் சென்று இவையாவற்றையு மவர்களுக்கு விளம்பி, தமது பிரதானிகளில் ஒருவரை அந்நகரத்தை யாளும்படி திட்டஞ் செய்துவிட்டு யாவரையு மழைத்துக்கொண்டு சதுரங்கதளத்துடன் திருக்காஞ்சிஸ்தலம் வந்து சேர்ந்தான்.

## புசுண்டயோகியினது ஆச்சிரமம்.

இப்பால், இந்திரசேனனனவன் தமயனதாக்ஞா பிரகாரம் உடனே புறப்பட்டு வடதிசையை நாடிச்சென்று இமயம, நிடதம், ஏமகூடம் என மூன்று கிரிகளாற் சூழப்பெற்ற மூன்று கண்டங்களையுங் கடந்து இளாவிரத கண்டத்திலிராநின்ற சகஸ்திராஷ்டக சுவர்ண சிகரங்களையுடைய மேருமலைக்கு மேலாகச் சென்று, தென்கீழ்த் திசையில் பர்ப்பராக வொளிவிளங்குஞ் சிகரத்தில் பிரம்மாண்டகாரமாய் விளங்குஞ் சிகரத்தில் படுமரத்தையடுத்து நோக்கி யதன் சாகைகளைக் காணுதவனாகி சித்தங்கலங்கிப் பின்னும் மேலோங்கி யெழுந்துபோய் பார்க்குமளவில் அஷ்டதிசைகளையு மளாவின பல சாகைகளிருக்கக் கண்டு ஒவ்வொரு சாகையா யாராய்ச்சி செய்துகொண்டு வருமள



உத்தர திசையில் இவ்வுலகத்தின் கண்ணுள்ள பிராணிகள் முழுதும் போயடையினு மிடந்தரத்தக்கதான விசாலமுள்ள ஓர் சாகையின் மீது மூன்று முனிவரும் ஒரு வாயச முனிவரும் சாஸ்திர சம்பாஷணை செய்துகொண் டிருப்பதைக் கண்டான்.

கேளும் ஆரிய முனிவரே யாவுமிப்படி யிருக்க, கலைக்கோட்டு முனிவரும், ரோமசர்மாவும், அஷ்டகோண மகாமுனிவரும் கூடி புசுண்டயோகியிடம் சாஸ்திரசம்பாஷணை செய்துகொண் டிருந்தார்களென விளம்பினீரே? அறியாது; விரித்துரைக்க வேண்டுமென; நாரதாதியர் வினயத்தோடு கேட்கவும், அதற்கு, ஆரியமுனிவர் கிருபையுடன் கூறுவார்.



ரிஷிகளின் கோஷ்டி

## ஞானமார்க்க சாஸ்திர சம்பாஷணை.

கேளுங்கள் முனிவர்களே? அன்னவர்கள் கோஷ்டியில் சித்தர்களா லியற்றப்பட்ட ஞானமார்க்கத்துக்குரிய சரியை கிரியை யோகம் ஞான மெனும் நான்கு படிகளின் கிரமமும், (புசுண்டயோகியானவர் மற்றைய மூவருக் குரைத்ததை இங்கு விளம்புவோமெனக் கூறுவார். நாம் அடைந்திருக்கு மிம்மலக் கூடாகிய சரீரமானது அநித்யமென்றுணர்ந்து முதற் சாதனமாகிய நித்யாநித்ய வஸ்து விவேகந்தெரிந்து, இரண்டாஞ் சாதனமாகிய இகலோக, சுவர்க்கலோகவிச்சையில் வைராக்கியம் பிறந்து, மூன்[illegible] சாதனமாகிய [illegible] [illegible], தமம், விடல், சகித்தல், சமாதானம், [illegible]

வந்தபின் நான்காவது சாதனமாகிய முமுக்ஷுத்வம் அல்லது அஷ்டாங்கயோகம் கைகூடினால் ஜெனனமரண துக்கமொழிந்து நிரதிசயாநந்தப் பிராப்திக்கு ஏதுவாம்.

இவ்வித சாதனங்கள் யாருக்குக் கைகூடுமெனில், புலால் புசித்தல், கொலைத்தொழில் புரிதல், பிறர் பொருளை யபகரித்தல், மதுவை யருந்துதல், பரஸ்திரீகமனஞ்செய்தல், பொய் சொல்லல், களவாடல் முதலிய துர்க்கிர்த்தியங்களை மனதினாலும் நினையாது விட்டு சன்மார்க்கத்திற் செல்லும் சத்தியவந்த னெவனோ அவனுக்குத்தான் சக்கியமாகும். அவன் ஏழு பிறப்பிலுஞ் செய்த பாவங்களை நீங்கிச் சிவசாரூப்பிய மடைவான். இதற்கு,

பரமாநந்த தீபம்

புலைகளொடு கொலைகளவு கட்காமத்தைப்
புந்திதனிற் கருதாமல் நிற்பாயாகில்
மலைமகளோர் பாகனுன் றன் வசமாய் நிற்பான்
மாதவம் நிலைக்குமிந்த வழி நில்லார்க்கு
அலைகடலிற் றுரும்பது போன் மனந்தள்ளாடு
மறிவு தனக்கானி வருமது வல்லாமல்
நிலைதவறு மெழுபிறப்பும் நீங்கா தென்றே
நீணிலத்தி லருமறைக ளோதும் வாறே.

என்றபடி சரியை, கிரியை, யோக, ஞான நெறிகளிற்றேரியதற்கனு குணமாக நற்குணங்களையே கைக்கொண்டு ஆசாரியனிடத்து சிவதீக்ஷைபெற்று புருஷாயுளை நான்குபடியாக்கி முதலிருபத்தைந்தையும சரியையிலும்,இரண்டாவதிருபத்தைந்தையும் குடும்பத்தைப் போஷிப்பதிலும் போக்கி — தேவயக்ஞம், பிதுர்யக்ஞம், பிரம்மயக்ஞம், பூதயக்ஞம், மனிதயக்ஞம் என்னும் ஐந்துவித யாகங்களைச் செய்வதனால் பஞ்சசூனை யென்னும் உலகபாவங்கள் நம்மை யறியாது சேருவதாலவற்றை நீக்குகிறது. பிறகு குருசிச்ருஷையால் சஞ்சிதகர்மங்கள் நசிக்கின்றன. அவரது உபதேசத்தால் ஆகாமியகருமங்கள் உதிக்கா தொடுங்கும்; எஞ்சிய பிராரத்வ கருமங்கள் உடலோடே அனுபவித்துக் கழிகின்றன. 50 வருஷங்களுக்குப்பின் யோகத்துக்கு வானப்பிரஸ்தாச் சிரமத்திற் சிறிது நாள் பழகினால் சதா ஈசுரத்தியானம் லப்தமாகிறது. அதன் நிஷ்காமியமாய்ப் புண்ணிய கருமங்களைச் செய்து பகவதர்ப்



செய்தபின் சன்னியாசியாச்சிரமத்துக் கருகனாகி முத்தியடைகிறான். இதற்கு,

வால்மீகர் ஞானம்.

அறிந்து கொள்ளும் * பூரகமே சரிதை மார்க்கம்
அடங்குகின்ற † கும்பகமே கிரியை மார்க்கம்
பிரிந்து வரும் ‡ ரேசகமே யோக மார்க்க
பிசகாம லின்றதுவே ஞான மார்க்கம்
மறிந்துவுடன் புகுகின்ற பிராண வாய்வு
மகத்தான சிவசத்தி அடங்கும் வீடு
சிறந்துமனந் தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்
சிவசிவா அவனவனென் றுரைக்க லாமே

இவ்விதமாக முத்தியடையவேண்டு மெனின், அகார வாச்சியனான பரமாத்மா — அதினுற்பவித்த உகார வாச்சிய மாகிய மாயை — அதனிடத்துதித்த மகார வாச்சியனான ஜீவன் இம்மூன்றும் சேர்ந்து உலகானதுபோலவே அகார உகார மகாரங்கள் சேர்ந்து ஓங்காரமாயிற்று. இந்தப் பிரணவாட்சரத்தை தேவதா மந்திரத்தோடும் சேர்த்து ஜெபித்தாற் பலனைத்தருகிறது. ஆதலின் ந—ம—சி—வ—ய என்னும்பஞ்சாக்ஷர மந்திரத்தோடுகூட்டி ஜெபித்தனலமாம். (சிவய=மங்களகர மானவனே—நம—நானுமக்கடிமை என்று மோக்ஷபஞ்சாக்ஷர லக்ஷணமாம்.)

இனி தூலபஞ்சாக்ஷரத்தைக் கூறுவோம்.

யகாரம், ஆகாயரூபமாதலின் அதிலிருந்து வாயுவி னமிசமாகிய வகாரம் பிறந்தது, அதிலிருந்து சிகார வடிவாகிய அக்கினி பிறந்தது, அதிலிருந்து மகாரவடிவாகிய அப்பு பிறந்தது, அதிலிருந்து நகார வடிவாகிய பிரிதிவி பிறந்தது. இப்படிப் பஞ்சபூதங்களில் தேகமாகித் தொண்ணூற்றாறு தத்வங்களுமுண்டாயின. (நகாரம் கால், மகாரம் வயிறு, சிகாரம் தோள், வகாரம் கண்டம், யகாரம் சிரசு இப்படி தேகரூபமுமாயின) இதற்கு,

---

* பூரகமாவது=சுவாசத்தை உள்ளிழுக்கிறது.
† கும்பகமென்பது=சுவாசத்தை அடக்குகிறது.
‡ ரேசகமாவது=உள்ளிழுத்த சுவாசத்தை வெளிவிடுகிறது.

## உடலறி விளக்கம்.

ஓங்கார முதலானை தனிற் பிறக்கு
மோங்கெழுத்தி லீரெழுத்து முதித்து நிற்கும்
பாங்கான வவ்வெழுத்தில் அவ்வுந் தோன்றும்
பகர்ந்த அவ்வில் யவ்வெழுத்தும் வவ்வுந்தோன்றும்
நீங்காத சிவ்வெழுத்தில் மவ்வுந் தோன்றும்
நின்ற மவ்வினவ் வெழுத்து நேராய்த்தோன்றுந்
தீங்கான தத்துவங்கள் தொண்ணூற் றாறும்
சிவாய நம வஞ்செழுத்திற் செனித்தவாறே.

ஈசுரனிடத்திலிருந்து மாயை ஜீவன் தோன்றி நிற்கும்.

இந்த விதமாக ஓம் சிவாயநம என்கிற ஆறெழுத்தை ஜெபித்துக்கொண்டு சதா நிஷ்டைகூடிய பரம அபிலர்களாகிய யோகியர் தேகமிருக்கையிலே மனது பிராணனுடன் வசப்பட்டு ஜிதேந்திரியராகியபின் அந்தியத்திலும் அந்த சிவபெருமானையே நினைப்பானாகில் அந்த சாரூப்பியத்தை யடைகிறான். இதற்கு

### பகவற்கீதை.

இந்த உடலம் விழும்பொழுதி லியாவன் யாதொன்றினை நினைந்தா
னந்தவதனை யந்தப்பா வனையாலடைவனாதலினால்
எந்த னியல்பை யெப்பொழுதன் னிதயத்திடைகொண் டென்பாலாஞ்
சிந்தையொடு வாளமர் தொடங்கி லதனை லெனையே சேருதியால்.

எந்த யோகியானவன் (தத்துவமசி வாக்கியத்தில் தற்பதார்த்த ரூபனான) என்னை எல்லாவுயிர்களிடையும், (பரமேசுரனான) என்னிடத்தே பொருந்தச் சருவ பூதங்களையும், அபேதமாகவே சமுசய விபரீதமில்லாமற் பார்க்கின்றானோ அந்த யோக புருஷனானவன் எவ்வகைப்பட்ட வியவகாரங்களைச் செய்யினும், (சர்வ பூதங்களிலுமுள்ள) தற்பதார்த்த ரூபனான நான் துவம்பதார்த்த ரூபனானவனாக ஆகின்றேன்.

(கருத்து) பரமேசுரனான என்னிடத்தில் சகல பிரபஞ்சங்களும், சகல ஜீவர்களும் பொருந்தியிருப்பதாகவும், அந்த ஜீவர்களிடத்திலும், தேகங்களிடத்திலும் நான் அந்தரியாமியாய் ஆகாயத்தைப்போல ஒட்டியுமொட்டா திருப்பதாகவும், எந்த யோகி பார்க்கிறானோ, அந்த ஞானி எதைச்செய்த போதிலும் என்னை முன்னி[illegible] செய்வானாகையாலும், எனது கைங்கர்யமென்றே புண்ணிய



கள், அல்லது தேக போஷணார்த்தம் தனக்குசிதமாகிய தொழிலைச் செய்து அதன்பலனை எனக்கே சமர்ப்பிப்பானாகையால் அந்தக்காரியம் செய்கிறவன் நானே யாகிறேன். ஏனென்றால் அவன் உடல் பொருளாவிகளை யெனக்கு ஒப்புவித்துவிட்டபடியால் ஜீவதத்வம் நசித்துவிட்டது. அதனால் அவன் செய்ததெல்லாம் நான் செய்ததே.

இம்மாநிலத்தில் பாமர ஜனங்கள் பலவகைப்பட்ட தேவதைகளை வெவ்வேறாகப் பாவித்துப் பூசித்தபோதிலும், தெய்வங்கள் பற்பலவிதமிருக்கின்றனவென்று நினைத்தாலும், அவ்விதம் பூசிக்கச் செய்வதும், நினைக்கச்செய்வதும், பூசனை யேற்றுக்கொள்வதும் பரமேசுரனொருவரேயாம். (இது அவரவருடைய வினைக்குத் தக்கபடி செய்வதெல்லாங்கூடி கடவுளுண்டென் றுணர்ந்து பயபக்தியோடு நடந்துகொள்ள வேண்டியே) இதற்கு.

### பகவற்கீதை.

தாங்கிய நீரையெல்லா மிரவியாய்த் தலத்து நின்று
வாங்குகின் றேனுமீள மழைகளாக் கொடுக்கின் றேனு
மீந்த மெய் யுணரில் யானே யாதலா லியாதொன் றேனு
மாங்கருச் சனைசெய்கின்றா ரென்னையே யருச்சிக்கின்றார்.

இவ்விதமாயுள்ள அநேகவித சாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்து கொண்டு இருக்கையில், இந்திரசேனனானவன் அந்நால்வர் பதங்களில் தீர்க்க தெண்டன் சமர்ப்பித்தெழுந்து நின்று பயபக்தி வினயத்தோடு கைகட்டி வாய்பொத்தி நிற்குமளவில் புண்டரீக யோகியவனை நோக்கி நீ யாவன்? யாது காரிய நிமித்த மிங்குற்றனை? அறியச் சொல்லென வினவவே, இந்திரசேனன் தனது வம்ச பரம்பரையைக் கூறி தமது சிந்தாகுலந்தீரத் தேவியை யடைந்ததும், தேவி கிருபைகூர்ந்தபடி கலைக்கோட்டு மகா முனிவரை யழைத்துப்போக வந்த காரணத்தையுங் கூறினன். இவைகளைச் செவிக்கேற்ற மகாயோகியானவர் மிக்க சந்தோஷிப்பால் ஓ விபாண்டகபுத்திர சிரோமணியே அதி சீக்கிரத்தில் இவ் விஷயத்தை முற்றுவிக்கவேண்டிப் போய்வாருமென்று ஆக்ஞாபிக்கவே, அவருடைய பாதத்தில் இருவரும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு ஆனந்தமனமாய் காஞ்சிமா நகர் வந்து சேர்ந்தார்கள். இதற்கு

## கலைக்கோட்டுமுனிவர் காஞ்சிக்கு வந்தது.

[illegible] —— A விருத்தம்

வந்தமுநி வனையரச னெதிர்கொண் டேத்தி
மணித்தவிசி லிருத்தியர்க்கிய பாத்தியமீந்து
எந்தனுள மயல்தீர்க்கு மமுதே தேவே
யென்றிறைஞ் சித்தமது குறை யியம்ப வோர்ந்து
சுந்தரிக்கன் பருமாகிக் கச்சியாளுஞ்
சுதரிருபத் தொருநால்வர் தோன்றுவாரென்
றந்தரங்கந் தேர்ந்தெதிர் காலங்கண்டம்மைக்
கன்பாளுன் தோத்திரஞ் செய் தின்பாளுனே.

அம்முனிவரைக் கண்டவுடன் வைடங்கனுந் தம்பியர்களும் புத்திரப்பேறடைந்தது போல ஆநந்த பரவசராய் அவர்களது திருத்தாட்களிற் சிரங்களைத் தாழ்த்தி அர்க்கியபாத்திய முதலிய சோடசோபசாரங்கள் புரிந்து, பக்தி வினயத்துடன் நிற்பதைக்கண் டம்முனிவர் மகிழ்ந்து ஆசி கூறினர். இப்பால் இறைவர்கள் தங்களது குறையை சவிஸ்தாரமாகக் கூறியதைக்கேட்ட முனிவர், வைடங்கனை நோக்கி, புத்ரகாமேஷ்டி யாகத்துக்கு வேண்டிய வஸ்துக்களைத் தமது திருவாக்கால் மொழிந்து - அவைகளை அதிவிரைவிற் சேகரிப்பா யென ஆக்ஞை புரிந்தார். அன்னவர்கள் முனிவர் வாக்கியப்படியே யாகத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சித்தஞ்செய்து, மன்னிலத்தை வேதாகம விதிப்படி யுழுது சீர்திருத்தி, ஓர் யாகசாலையும் அமைத்தார்கள்.

## பொன்னுலகோர் காஞ்சிக்கு வந்தது

கேட்டீரோ நாரதமுனிவரே! இவ்விதமாய் யாகசாலையையும், பாகசாலைகளையும், விடுதிசாலைகளையும், இன்ன மநந்தவிதமான சாலைகளையும் தனித்தனி நியமித்தது, இந்திரன் முதலிய சகல தேவர்களையும் பிராப்தமாக வேண்டுமெனப் பிரார்த்திக்க அன்னவரும் யாகசாலை வந்து சேர்ந்தார்கள். பின்னும் மற்றுமுண்டான அஷ்டவசுக்கள், கருடகாந்திருவர், கின்னரர், கிம்புருடர், சித்தவித்தியாதரர்கள் முதலிய பொன்னுலகோரும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் திருக்காஞ்சிமா நகரில் கலைக்கோட்டு முனிவரால்நடைபெறப் போகிற புத்திர காமேஷ்டி யாகத்திறகாக வந்து சேர்ந்தபின், அவரவர்களுக்குத் தனித்தனியே அமைக்கலான விடுதிகளில் வந்தமர்ந்தார்கள்.



பின்னும் இப் பூமண்டலத்திலுள்ள சிங்கள, வங்காள, சீன, ஒட்டிய, துளுவ, அவந்தி, கலிங்க, குடக சிந்து, மாளவ, மராட்ட, கொங்கண, குரு, கோசல, சூரசேன, மலையாள, அங்க, வங்க, மலாட, காஸ்மீர, கன்னட முதலான 55 தேச ராஜர்களும் தங்கடங்கள் மந்திரி பிரதானியர் ரதகஜதுரகபதாதி யென்னும் சதுரங்க தளத்துடன் சேனாதிபதிகள் சூழப் புறப்பட்டு வந்தது எப்படியிருந்ததெனின், அழகமைந்ததாய் கத்தரித்துள்ள மயிர்களையுடைய சிறந்த குதிரைக் கூட்டஞ் சேர்ந்து சங்குகளுற்பத்தியாகுஞ் சமுத்திரத்தில் வீசுகின்ற அலைகளைப் போன்று சங்கமெனுங் கணக்குடையவையாய்த் தாவிச்சென்றன. அவ்வரசர்களும் சிவந்த கரங்களிற் பலவிதமான ஆயுதங்களைப் பற்றிக்கொண்டு காஞ்சியில் வந்து அவரவர்களுக்கு ஏற்படுத்திய விடுதிகளில் போய்ச் சேர்ந்தனர்கள். இதற்கு,

### வீர நாராயணர் விஜயம்.

துங்கமுறுங் கொய்யுளைய துரகதமாப் படைகுழுமிச்
சங்கமுறுங் கடலலையிற் சங்கவெணிற் றுவுவன
சிங்களரொட் டியர் துளுவர் சீனரவந்தியர் கலிங்கர்
செங்கையிலா யுதராகித் திருக்கச்சி மிசைப்படர்ந்தார்

### கலைக்கோட்டாருக்கு ஸ்ரீ மகாவிஷ்ணு காட்சி யளித்தது.

நீலமயூரமீது லோலாசிங்காரனே—என்னும் மெட்டு
B இ—ம் வராளி தாளம் சாப்பு

பல்லவி

செங்கருடன் மீதுவந்தென் பங்கில் நின்று காருமே
சேயன்குறையைத் தீருமே—ஹரி நாரணா—சேய ()

அனுபல்லவி

சின்மயானந்தா தன்மமுகுந்தா கன்மனம் ஆமா
கதிர்குல சோமா ()

சரணங்கள்.

ஆதிமூல மென்றயானைக் கபயந்தந்து காத்தவா
அகலிகை சாபந்தீர்த்தவா—மாயவா—அகலிகை சாபந்தீர்த்தவா
அச்சுதானந்த—ஆதிவைகுந்தா ()
பட்சமவைத் தெக்தாய்—பாகிமுகுந்தா

கங்கைதங்கும் பாதனே கமழுந்துள பவாகனே
கருடாக்ஷல விவேகனே—வைபோகனே—கருடாக்ஷலா விவேகனே
காரணரங்கா—காநரசிங்கா
தாரணிமீது தவிக்கும்—போது
பொய்ம்மை தொலைத்து மென்றன் மெய்ம்மை துலக்குவாய்
புன்மைதனை விலக்குவாய்—கேசவா—புன்மைதனை விலக்குவாய்
புத்திரும் போதா—சத்தியவேதா
முத்தர்களுகா சித்தம்—வாராதா ()


இவ்விதமாகக் கலைக்கோட்டார் பிரார்த்திக்கவே ஸ்ரீமந்நாராயணர் கருடவாகனரூடராய் ரிஷியின் முன் சேவை சாதித்து கலைக்கோட்டாரை நோக்கி ஏ முனிவரே நீர் செய்யும் யாகத்திற்கு வியந்தனம். அதிலுற்பவிக்கும் பாலர்களுக்கு நமது அமிஸத்திற் பகுதி கொடுத்திருக்கிறோம். ஆகையால் நீர் செய்யும் யாகம் விக்கினமின்றி நிறைவேறக்கடதென்று ஆசிகூறி மறைந்தனர்.

## யாகசாலையின் பிரபாவம்.

அதன் பின் யாகசாலைக்கு வேண்டிய சாமக்கிரிகைகளும் கிரமப்படி சேகரித்து, யூபஸ்தம்பம், அத்வரியு, ஓதா, உத்காதா வென்னு மாசாரியர்களும், அரசர்களும் அவருடைய பத்தினிமார்களும் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து கங்கணங்கள் தரித்துக்கொண்டு பச்சை மரகத மாணிக்க நீல கோமேதக முதலிய நவரத்னமய சாலையில் குத்துவிளக்குகள் தூண்டாவிளக்குகளமைத்து வேதமந்திரங்களால் நெய்பெய்து அக்கினி வளர்த்து இயம நியமங்களோடு நடத்த வேண்டியிருக்கும் யாகசாலை யெவ்விதமிருந்த தெனின்—அமராபதி, சத்தியலோகம், வைகுந்தம், கைலாயமென்னும் நான்கு புண்ணிய வுலகங்களும் ஒன்றாக விளங்கினது போல் ஜொலித்துக்கொண் டிருந்ததாம். அங்கு வீற்றிருக்குந் தேவகணங்களுக்கும், இருடிகணங்களுக்கும் அமுதளிக்க அம்முனிவர்களைக்கொண்டு காமதேனுவையும் பிராமண க்ஷத்திரிய வைசிய ஸ்திரீகளை உபசரிக்க கந்தர்வ ஸ்திரீகளையும், மன்னர் முதலிய சேனைசைன்யங்களுக்கு வேண்டிய சாதனங்களை காலங்களிற் கொடுத்துபசரிக்க தேவகிங்கரர்களையும், அதிதி பரதேசிகளுக்கு தருமங்கொடுக்க வித்தியாதரர்களையும் ஏற்படுத்தியும் இருந்ததால் அவரவர்கள் தங்கள் காரியங்களில சிரத்தையோடு நடத்தி வந்தார்கள்.



இத்தகைய வைபவத்துடன் வைடங்கவாசன் முதலிய வெண்மரும், அவர்கள் மைத்துனர்களிருவரும், ஆகப்பதின்மரும் விதிப்படி தீக்ஷைவகித்து, கலைக்கோட்டாருடன் சத்தியாகிய காமாக்ஷியம்மனது சந்நிதியை வலம் வந்து தரிசித்துப் பலவாறு மகேஸ்வரியின் கீர்த்தியைக் கொண்டாடி—மயிர்க்கூச்செறிய புளகாங்கிதங்கொண்டு, ஆநந்த பாஷ்பங்கள் கண்களினின்று வடியவும் நாத்தழும்புற ஸ்துதி செய்தார்கள்.



கலைக்கோட்டார் அம்மனை சேவித்தல்.

இந்தச் சேதுவைக்கண்டால் என்னும் மெட்டு

B—இ-ம் சாவேரி தாளம் ஆதி

பல்லவி

சாம்பவி திரிபுர தகனியே நீயல்லாது
தயவுபுரிபவரேது—இப்போது (சா)

அனுபல்லவி

தேம்பூம் பொழில் சூழ்ந்திடும் திருக்காஞ்சீயில் வளரும்
சித்தசுத்தி யும்உதவும் அத்திமுக னைப்பயந்தாய்
சத்துசித்தா நந்தமெனுந் தத்துவங்க ளாயமைந்தாய் (சா)

சரணங்கள்.

அன்னை தந்தை குருவுந் தெய்வமா யெவருக்கும்
முன்னவநின் தெப்பொருளு மளிக்குஞ்செந் திருவுக்கும்

மண்ணுந் துணையாய் நின்று உயங்குந் தயாநிதியே
பொன்னங் கொம்பெனத் தோணும் பூதநாதன் சதியே
புத்தமுத மொத்தமொழி தத்தை கரத்திலங்கும்
உத்தமஞான பெலங்க ளும்மிடத்து விளங்கும் (௭௧)
மண்ணுலகத்துந் தூலம் வருத்தும் நோய்க்குச் சீமாறுய்
விண்ணுலகத்துந் துஷ்டர் வீரமடக்குங் கோனுய்
கண்ணுங்க ருத்தும்புள காங்கிதத் தோடுகந்து
கனகச வெப்பயிலும்பர் களிக்கநடம்புரிந்து
சாட்டியவானது பாரிநற் கதியே
கழலிணை பணியெமக் கருளுமித்ததியே. (௭௨)

A. விருத்தம்


கலைமுநியிறைஞ்சி வாழ்த்தக் காமாக்ஷியன்பு கூர்ந்து
நிலையுட னெதிர்காலந்தேர் நிமலயோகீஸ் வரன்முன்
சிலைநுதற் றெரிவைமாருந் தேவரு மிருபாற்சூழத்
தலைமையாந் தரிசனத்தைத் தந்திட்டாள் வந்திட்டாளே

## தேவி யாகசாலைக்கு வந்தது.

இவ்விதமாகத் தோத்திரஞ்செய்து நிற்கவே அம்மன் கருணைகூர்ந்து கோடி சூர்யப்பிரகாசமாய் விளங்குந் தனது சேவையைத் தந்தனள். அருணாஸ்ருங்கமுனிவர் ஓம் தேவி! பார்வதீ! மகேஸ்வரீ! மனோன்மணீ! காமகோட்டத்து வாலாம்பிகா! எளியேனது உள்ளத்தில் இருக்கமல பீடத்திற் சார்வதா வசிக்கும் பரமேஸ்வரீ! அடியேனையிங்கு அழைப்பித்தேவிய கருமமுடியுமாறு நீயேயாகசாலையின்கண் எழுந்தருளியிருந்து நடத்தவேண்டு மெனப்பலவாறு ஸ்துதிசெய்து நின்றூர். அப்போது தேவி ஓ விபாண்டக புத்திர சிரோமணியே! யாம் உனது கோரிக்கைப்படியே பிரசன்னமாகிறோம். நீ இப்பதின்மரின் குறைகளை நிவிர்த்திக்கும் பொருட்டு இவர்களுடன் யாகசாலைக்குச் செல்லெனவுரைத்து மறைந்து இவர்களுக்கு முன்னரே தேவகோஷ்டியுடன் யாகசாலைக்குப் போய்ச்சேர்ந்தனர். அநந்தரம் முனிவர் முதலிய யாவரும் அம்மனது சந்நிதானம்விட்டுப் புறப்பட்டு யாகசாலை வந்து சார்ந்து தேவர்களுக்கும் மற்றுமுண்டானவர்களுக்கும் வந்தனை வழிபாடுகள்செய்து அவரவர்களுக்குத் தக்க ஆசனங்கள் கொடுத்து வீற்றிருக்கச்செய்தார்கள். தவிர

மஹா தபோதனரும் சாபானுக்கிரக சாமர்த்தியருமாகிய கலைக்கோட்டு முனிவர் வசிஷ்டர் விசுவாமித்திரர் முதலிய சப்த





புத்திரகாமேஷ்டியாகம்.



ரிஷிகளும், பிரகஸ்பதி சங்கவர்ணர் முதலிய தேவ புரோகிதர்களும், இன்னம் பல முனிக்கூட்டங்களும் தம்மைச்சூழ்ந்திருக்க, கிருஷ்ணாசனங்களை விரித்தும் அதன்மேலுத்தரீயங்களை விரித்தும் வீற்றிருந்து வேதாகமவிதிப்படி வைடங்கன் முதலிய பதின்மரையும் அவர்களது மனைவியரையும் முன்னிலையில் வீற்றிருத்தி மந்திர பூர்வகமாய் பவித்திரமணிந்து அப்புத்திரகாமேஷ்டி யாகத்தை அம்பாளனுக்கிரகத்தாலும், தேவர்கள் முனிவர்களது ஆசீர்வாத பலத்தாலும், முடித்தருளினர். கேட்டீரோ முனிவரேயென்று பின் நடந்ததையும் ஆரிய முனிவர் சொல்லத்தொடங்கினர். இதற்கு.

A விருத்தம்.

கச்சியுமை யிணைமுநிவன் றுதித்திறைஞ்சக்
காவலரு மிகவணங்கிக் கருத்தைக்கூற

மெய்ச்சுமுநி வனைநோக்கி யாகமொன்று
  விதித்தியற்றிற் புத்ரருண்டா மெனக்கேட்டன்னேன்
உச்சிதவா னேரிருடி முநிவனோடு
  முயர்மகஞ் செய் தவிர்ப்பாக மெண்மருக்கும்
இச்சை மனைவியர்க்கவர் *புத்ரிகட்கு மீய
  வின்புற்றார் புதல்வரைப் பெற் றன்புற்றாரே.

இவ்விதமாகக் கலைக்கோட்டார் அந்த யாகத்தைப் பூர்த்திசெய்யுந் தருணத்தில் வேதாங்கமே ஓர் அவிர்ப்பாகமாகி ஓர் சுவர்ண பாத்திரத்தில் நிறைந்து யாகாக்கினியின் மத்தியில் கிளம்பி அந்தரத்தில் நிற்க, அதை ஓர் பூதந்தாங்கி யேந்திக்கொண்டு வந்து அக்கினி மத்தியில் விளங்கவும், அதை முனிவர் நமஸ்கரித்துத் தமது திருக்கரத்தால் வாங்கி பராசத்தியின் திருவாக்கின்படி வைடங்க வரசன் முதல் எண்மருக் குகந்த மனைவியர்க்கும், அவ்வரச சகோதரிகளிருவருக்கும் பகுந்து முறைப்படியளித்து, புத்திரப்பேறுண்டாக வேண்டுமென்று ஆசியளித்தருளினர். தேவர்களும் பூமாரிபொழிந்து ஆசிகூறி தம் தம் உலகங்களுக்கு கலைக்கோட்டு முனிவரிடமும், அரசரிடமும் விடைபெற்றுக்கொண்டு எழுந்தருளினார்கள். பிறகு பூவுலகத்தரசர்களும் மற்றுமுண்டான யாவரும் தங்கடங்கள் சைன்யங்களுடன் விடைபெற்றுக்கொண்டு தந்தம் தேசங்களுக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

## அம்பாள் கட்டளை

பின்பு ஸ்ரீ காமாக்ஷிதேவி வைடங்கனைநோக்கி குழந்தாப் புத்ர சிகாமணியே? இனிமே லிக் காஞ்சிநகரிலும், விசாலாவதியிலும், அரசுபுரிந்து வருவீர்களென்றும், பின்னு முங்கட்கு இடையூறு நேரு மெச்சமயத்திலும் எம்மை நினைக்கில் யாம் பிரசன்னமாகி இரட்சித்தருளுவோ மென்றும் உறுதி வாக்களித்து அந்தர்த்தானமானார்.

அனந்தரம் கலைக்கோட்டு முனிவர் வைடங்கனை நோக்கி உமது மங்கையர்கள் பிரசவித்த காலையில் எம்மையழைக்கில் யாம் வந்து வேண்டிய காரியங்களை முடித்துத்தருகிறோமென்று கூறலும், அரசர்கள் முனிவர்களை யுபசரித்து வணங்கச் சிரமேற் கரங்குவித்துத் தெண்டனிட்டு வழியனுப்ப அன்னவருக்கு நன்மையுண்டாகவென்று

* புத்திரிகட்கு மீய, என்பது தங்களது தந்தையாது புத்திரிகட்கு எனப்பொருள் படுவதுடன் தங்கையரெனவும் காண்க.



ஆசிகூறித் தங்கடங்கள் ஆச்சிரமங்களுக்குச்சென்று இனிது வாழ்ந்திருந்தனர்கள்.

## கர்ப்பந்தரித்தது.

இப்பால் இவ்வைடங்கன் முதலாகத் தம்பியர்கள் அம்மன் திருவாக்கியப்படிக்கு காஞ்சியில் ஓர் ராஜாங்கத்தை யேற்படுத்தி யிங்கும், விசாலாவதியிலும், அரசாட்சி செய்துவரும் நாளில் இப்பதின்மரின் பத்தினிகள் கர்ப்பவதிகளானார்கள். அவை யெவ்வாறெனில்,

ஓராந்திங்களில் உதிரந்திரண்டு
இரண்டாந்திங்களில் கொழுந்துவிடச்சயர்ந்து
மூன்றாந்திங்களில் மாங்கிஷந்திரண்டு
நான்காந்திங்களில் நரம்பு நாடிகளமைந்து
ஐந்தாந்திங்களில் பஞ்சவர்ணமாய்
ஆறாந்திங்களில் அறிவு புகுந்து ஆமையின் வடிவமுற்று கால்
  கைகள் வகுத்து நவத்துவாரங்களுமுண்டாகி
ஏழாந்திங்களில் கர்ப்பத்திலிருந்து முழக்கமுற்று * கர்ப்பத்
  தைச் சூழ்ந்து புரள
எட்டாந்திங்களில் நீட்டி முடக்கி தாயுண்ட அன்னசாரத்தை
  தொப்புளின் வழியாக உண்டு பிள்ளையினுடல் வளர்ந்து
  உயிருடனாகி
ஒன்பதாம் திங்களில் தலைகாலளவும் ரோமத்துவாரங்களுண்டாகி
  ரோமக்குருத்து அறிவுடனே உறங்கொன்றுமையில் விசனம் பொருக்கமாட்டாமல், ஈஸ்வரனை நோக்கித் தவஞ்
  செய்து
பத்தாம் திங்களில் நிறைந்த பிண்டமாய் மலைமேலிருந்து தலைகீழாய் விழுந்தவர்போலே அபானவாயுவால் கீழே
  தள்ளப்படும். கர்ப்பும் பத்துமாதம் என்பதற்கு,

### திருவள்ளுவர் ஞானம்.

அன்னையெனுங் கர்ப்பமதன் வந்ததனி லேயிருந்து
நன்னயமாய்ப் பத்துதிங்கள் ஈனகத்தி லேயிருந்தேன்
என்னென்ன விதிசயங்க ளிவ்வுலகி லேயமைந்த
வுன்னத மெல்லாமறைந்தே னுண்மையினைக் காண்கிலார்

* கர்ப்பத்தைச் சூழ்ந்து எழுபத்திரண்டாயிரம் நாடிநரம்புகளும் ஆதாரமும், ஐந்தெழுத்தும், ஐம்பத்தோரக்ஷரமும், பஞ்சபூத தேவதைகளும் நாலுக்குமத்தியிலே கொழுந்துவிடப் பேசையாம்.

## 24 அரன்மனையார் உற்பத்தி.

இவ்விதமாய் அபானவாயுவால் தள்ளப்பட்ட சிசுக்கள் முன்னுள்ள நினைவுகளை மறவாதிருக்கும். அதன் பின் மின்னல் தோன்றி மறைவதுபோல் மறைந்து போகுமாம், இவ்வண்ணமாய் வைடங்கன் முதல் எண்மர் மனைவியரும் கர்ப்பங்கள் தரித்து, ஒவ்வொருவருக்கு மிரண்டு புத்திரர்கள் வீதமும், சகோதரிகள் ஒவ்வொருத்திக்கு நன்னான்கு புத்திரருமாகக் கூடிய மொத்தம் இருபத்து நான்கு புதல்வர்கள் பூரணச் சந்திரன்போல் முகவிலாசத்துடனும், முழந்தாளைத் தாவுங் கைகளுடனுஞ் ஜனித்தார்கள்.

இது சங்கதி யறிந்த வைடங்கன் முதலாயுள்ளவர்கள் ஆனந்த சமுத்திரத்திலாழ்ந்தவர்களாய்க் கட்பாஸ்நானங்கள் செய்து வந்து புதல்வர்களைக் கண்டு களித்து (அம்பாளையும் அருணஸ்ரங்க முனிவரையும் துதித்து) தனது தம்பியரில் ஒருவனைக் கலைக்கோட்டாரை யழைத்து வரும்படி யனுப்பிவிடவும், அன்னவன் அதிவிரைவில் விபாண்டகவனம் சென்று முனிவரை நமஸ்கரித்து இதைத் தெரிவிக்க, அன்னவரும் இம்மங்களகரமாயுள்ள சங்கதி தெரிந்ததும் சந்தோஷத்துடன் தமது சிஷருடன் திருக்காஞ்சிக் கெழுந்தருளினர். முனிவர் வரவைக் கேள்வியுற்ற வைடங்கன் முதலாயுள்ளோர் தமது பரிவாரங்களுடன் எதிர்சென்றழைத்துவந்து அர்க்கிய பாத்திய ஆசனமாதி சோடசவுபசாரத்துடன் வலம் வந்து, பணிந்து தண்டனிட்டு, நவரத்தின கசிதமான பீடத்திலிருத்தி, ஸ்ரீ பாத தீர்த்தம் புரோட்சித்துக்கொண்டு தங்கள் சிசுக்களுடன் பத்தினிமாரை வரும்படிக் கட்டளையிட அன்னவர்களுமப்வாறே வந்து, முனிவர்பாதத்தில் நமஸ்கரித்து நிற்கக்கண்ட மகான் ஆசீர்வதித்து சுபலக்னத்தில் ஜாதக கர்மம் எழுதிமுடித்தனர்.

### நாமகரணம்,

கேட்பீர் நாரதாதி முனிவர்களே! அனந்தரம் வைடங்க மகாராஜன் நயந்து முனிவரை நமஸ்கரித்துத் தமது திருக்குமாரர்களுக்கும், தங்கையரின் குமாரர்களுக்கும், நாமகரணம் சாதித்தருள வேண்டுமென வேண்டிக்கொளலும், முனிவர் இருபத்துநால்வரையுங் கண்ணுற்று, மிகுந்த வாஞ்சல்யத்துடன் அன்பு கூர்ந்து, நாமகரணம் விதிக்கின்றனர்.

1. வைடங்கன் புத்திரருக்கு, பிரபோதயன், சுப்ரதீகரன், எனவும்
2. இந்திரசேனன், ஷை, ஜெயகர்ன், சாந்தவர்த்தனன் எனவும்
3. சுஹபிகன் ஷை, நந்தன், வைரி, எனவும்.
4. பூர்ணன், ஷை, நாபன், சுகுணன், எனவும்.
5. மணிக்ரீவன், ஷை, சுபசீலன், பந்துவன், எனவும்.
6. சோபிதன், ஷை, ஹைமடன், விக்ரமன், எனவும்.
7. சௌளஸ்யன், ஷை, கமலலோலன், வஜ்ஜிரஹாரன், எனவும்.
8 அந்தரீச்சன், ஷை; வராங்கன், கடிகன், எனவும்.

இவ்விதமாய் இவ்வெண்மருடைய சோடச புத்திரருக்கும்
திருநாமங் கூறிய பின்னும், தங்கைய ரிருவரில்.

9. சித்திரவல்லி புத்திரர்களுக்குப் போஜகன், வீரபாகன், பராக்கிரமன் வாமலோசனன் எனவும்.

10. சுந்தரவல்லி புத்திரருக்கு, ரத்னசேகரன், அதிகாந்தன், ஜெயசிம்மன், பிரதாபகரன், என திருநாமங்கள் சாதித்தருளினர்.

## தர்மம் முப்பத்திரண்டு.

கேட்பீர் நாரதாதி முனிவர்களே! இப்பதின்மருக்கும் வெகு காலமாகப் புத்திரருற்பத்தி யில்லாதிருந்து, வனத்தில் முனிச் சிரேஷ்டர்கள் கூறியப்படிக்கு புண்ணிய தீர்த்த யாத்திரை செய்து காமாக்ஷியம்மன் அனுக்கிரகத்தால் கலைக்கோட்டாரால் நடத்தி வைக்கலான புத்திரகாமேஷ்டி யாகத்தின் அவிர்ப்பாகத்தின் அம்லத்தால் ஜனித்த குழந்தைகளுக்கு அன்னவரால் ஜாதகர்மமும், நாமகரணமும், சாதித்த சந்தோஷ நிமித்தம், தமது ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் யாவரும் எது கேட்பினும் இல்லையென மொழியாது தர்மங் கொடுத்து (ஏழைகள் பூரி பூரி யெனும்படி முப்பத்திரண்டு தர்மங்களுங் கொடுத்து) யாவரையும் திருப்திகரமா யனுப்பினார்கள். தர்மத்தைப்பற்றி,

ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, பசுவார்த்தல், இறைச்சோறு, பிறருயிர் மீட்டல், பிறர்மகவளர்த்தல், அபயமீதல், தர்ம ஆறவைப் பிணஞ்சுடுதல், நோய்க்கு மருந்து கொடுத்தல், பஞ்சாங்க பேர்தல், தடாகம் வெட்டி வைத்தல், கூபங்கட்டி வைத்தல், மார்க்க மண்டபங் கட்டல், சுத்தம், சுகிர்தம், நித்யஜீவனம், கௌகாஸ்நானம், கோதானம், சொர்ண அன்னதானம், வஸ்திரதானம், பூதானம், அன்னசாலை வைத்தல், தானம், தேவாலயம், பிரமாலயங்கட்டல், கலமதாங்கி கட்டி வைத்தல், யாக தண்ணீர்ப்பந்தல் வைத்தல்,

யெக்யஞ்செய்தல், அடைக்கலங் காத்தல், பூஞ்சோலை வைத்தல், இவைகளைத் து நஸ்துசெய்தல், இவையாவும் அன்னவர்கள் செய்தார்களாம். இதற்கு

### இரத்தினச்சுருக்கம்.

கற்றவறு சமையத் தார்க்குணவு கருதும் விலை
யுற்றதளித் துயிர்மீட்டல சிறுருக்குதவ லற்பான்
மற்றமகப் பெறவித்தல் சிறரை வளர்த்த சனம்
பெற்ற விவற்றினை யெஞ்ஞான் கறமெனப் பேசுவரே.

### கோத்திரம் வைத்தல்.

இவ்வித வைபவத்துடன் தர்மங்கள் வழங்க திருக்குமாரர்கள் இருபத்து நால்வருக்கும் அருணஸ்ரங்க முனிவரால் ஜாதக நாமகரணம் கூறியருளியபின், தம்முடன்வந்த ரிஷிகளை நோக்கி இப்புத்திரர்களுக்குக் கோத்திரம் தந்தருளுமெனத் திருவாய்மலர்ந்தருள ரிஷி புங்கவர்களில் இருபத்து நால்வர் எழுந்து நின்று ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொருவராய் புஷ்பாக்ஷதைகளால் மந்திரபூர்வகமாய் ஆசிர்வதித்து அடியில் கண்டவாறு தம் திருநாம கோத்திரமருளிச் செய்தார்கள்.

1. முகுந்தரிஷி—பிரபோதயனுக்கு—மும்முடியவனென்றும்
2. மங்களரிஷி—சுப்ரதீகனுக்கு—மக்கடவனென்றும்
3. கௌசிகரிஷி—ஜெயகானுக்கு—கவலவனென்றும்
4. ஹரிகுலரிஷி—சாந்தவர்த்தனுக்கு—சென்னவனென்றும்
5. கௌண்டியரிஷி—நந்தனுக்கு—தவலைவனென்றும்
6. தொந்துவரிஷி—வைரியனுக்கு—தில்லைவனென்றும்
7. பில்வரிஷி—நாபனுக்கு—பில்லவங்காவனென்றும்
8. கணத்தரிஷி—சுகுணனுக்கு—கந்தவங்காவனென்றும்
9. மாண்டவ்யரிஷி—சுபசீலனுக்கு—மாரட்டியவனென்றும்
10. சாண்டின்யரிஷி—பத்திருவனுக்கு—கப்பவனென்றும்
11. கௌதமரிஷி—மைடனுக்கு—கொரகவனென்றும்
12. வாசவரிஷி—விக்கிரமனுக்கு—வரஜ்ஜவனென்றும்
13. அநுசூயரிஷி—கமலலோலனுக்கு—கெந்தியவனென்றும்
14. சோமகுலரிஷி—வஜ்ஜிரஹாரனுக்கு—சோப்பியவனென்றும்
15. சாநமாரிஷி—வராங்கனுக்கு—சுரிகியவனென்றும்
16. குடிகுலரிஷி—கடிகனுக்கு—கோலயவனென்றும்
17. குந்தலரிஷி—போஷகனுக்கு—மாதளைவனென்றும்



18. நகுலரிஷி—வீரபாகனுக்கு—வம்மையவனென்றும்
19. காளத்தரிஷி—பராக்ரமனுக்கு—கணித்தியவனென்றும்
20. தார்க்கியரிஷி—வாமலோசனுக்கு—தரிஷியவனென்றும்
21. ரோசனரிஷி—ரத்னசேகரனுக்கு—ராஜபைரவனென்றும்
22. சௌலஸ்யரிஷி—அதிகாந்தனுக்கு—பலிகிரியவனென்றும்
23. மதுசூதனரிஷி—ஜெயசிம்மனுக்கு—நலிகிரியவனென்றும்
24. பாரத்துவாசரிஷி—பிரதாபகரனுக்கு—பச்சையவனென்றும்



மக்கடவரசன் மும்முடியரசன் கலைக்கோட்டார்

### வித்தையாப்பியாசம்.

இவ்விதமாய்க் கோத்திரமருளிய பின் அன்னப்பிராசனம் சௌளோபநயனம் முதலான ஆறு சமஸ்காரங்களும் நடத்துவிக்கும்படிக்குச் சில [illegible]ளுக் காஞ்பாபித்துக் கலைக்கோட்டார் தமதாசிரமத்துக் கெழுந்தருளினர். அதன்மேல் இவ்விருபத்து நான்கு திருக்குமாரர்களும் பூர்வபட்சத்துச் சந்திரன் போல் தினேதினே சுந்திரமும், காந்தியும், வீரமும், சாந்தமும், அவர்களுடன் வளர்ந்துவந்தன. அப்பாலப்புத்திரர்களுக்குக் காலாகாலங்களில் நடத்தவேண்டிய சமஸ்காரங்களும் நடப்பிவித்தபின், நான்குவேதம் ஆறுசாஸ்திரம், பதினெண்புராணங்கள் அறுபத்துநாலு கலைக்யான முதலான சகல சாஸ்திர பாண்டியத்ய முடையவராய், சிறப்புடன் விளங்க, யானையேற்றம், குதிரை யேற்றம், முதலான வாகனாதிகளின் பயிற்சி யுர் [illegible] பயிற்சியுங் கற்று, அவ்வத்தருணங்களில் மேற்

கூறிய ரிஷிகள் ஆசாரியர்களாய் வந்தமைய, அப்புத்திரர்கள் வாலிப தசையை யடைந்து ராஜதந்திர வல்லவராய் விளங்கினார்கள்.

## நகரலங்காரம்

இவ்வித வைபவத்துடன் விளங்கும் புத்திரர்கள் யௌவன தசை யடைந்திருப்பதைத் தெரிந்த வைடங்கன் முதலிய வரசர்கள் தமது புதல்வருக்கு விவாகம் செய்ய விரும்பினவர்களாய் மந்திரிகளுட னாலோசித்து நகரலங்காரம் செய்யும்படியாய் பேரிகை முழக்கி வைத்து கருங்கடற்கலையுடுத்த காசினியை யாளுங் காவலர்க்கெல்லாம் கல்யாண ஓலையும் தூதும் ஒருமிக்கவிடுத்து, காஞ்சிநகர் முழுதும் பவழக்கால் நாட்டித் தவளவிட்டம் பூட்டி, மரகத ஓலைநீட்டி, வஜ்ஜிரப் பிரதிமை மாட்டி, மாணிக்கமலர் மாலைத்தூக்கி, முத்துக்கொத்து வடங்கள் வீக்கி, ஆணிப் பொன்ரேகையமைத்து, தொங்கொளிவட்டம், சுடர் ஒளி வட்டம், நிலவொளிவட்டம், நிழலொளி வட்டம், முதலிய தூங்காவிளக்குப் பாங்குறவமைத்து, வாழை, கமுகு, மாங்கனி, பலா, தாழை, இளநீர், சரக்கொன்றை, ஈந்து பாளை, கரும்பு, பற்பலமலர் மாலைகளும், இரசிதக்குண்டு, ஜாலர்கள், ஜடமாலைகள், தமனியப்படங்கள், நிலைக்கண்ணாடி, நிலைக்குங் கண்ணாடி, முத்தின் தூண்கள், ரத்தினப்பூண்கள், வேடிக்கை மான்கள், விநோத ஆண்கள், வாரணக்குதிரைகள், வஸ்திர சித்திரங்கள் முதலாகவும், இன்னம் மணப்பந்தலில், கும்பகலசங்கள், தூங்காவிளக்குகள், குட விளக்குகள், மணவரை மாவிலைத் தோரணங்கள். மணமேடை ஓமமேடை முதலாகச் சமைத்து, சகல மேளவாத்திய கோஷ்டியுடனும், பிராமண ஸ்திரீகளும், தேவகணிகையரும் கிரமமாய் மங்கலம் ஆலாத்தி முதலிவை யெடுக்கவும் சகல வைபவத்துடன் மங்களகரமாய் விளங்கிற்றும். இதற்கு.

சீராப்புராணம்.

சுதையொளி மேனிலை துலங்கித் தோன்றலாற்
புதுமலர் தெருத்தொறுஞ் சிந்திப் பொங்கலா
லெதிர்பணிந் திடுவிருந் தினிதி னல்கலால்
வதுவையின் மனையென விருந்த மாநகர்

## 24-ல்வருக்கும் திருக்கல்யாணம்.

இவ்வித வைபவத்துடன் நகரலங்காரஞ் செய்திருக்கையில் பல தேசத்தரசர்கள் தங்கடங்களது சதுரங்க தளத்துடனும் கப்பங் காணிக்கைகளுடனும் வந்து சேர்ந்து, தங்களுக்கென்று நியமித்த



விடுதிகளிலிருக்கவும், பூர்வம் கெந்தர்வ வம்ஸத்தில் அங்கார்காக்கியனது சந்ததியில் சந்திரவதனம் போன்ற அழகிய முகங்களமைந்த சுகுண சீலைகளாகிய

1. அமுர்த வல்லியை—பிரபோதயனுக்கும்
2. சுந்தரவல்லியை—சுப்ரதீகானுக்கும்
3. காந்திவல்லியை—ஜெயகானுக்கும்
4. கமலவல்லியை—சாந்தவர்த்தனுக்கும்
5. காமவல்லியை—நந்தனுக்கும்
6. சுந்தரலோசனியை—வைரவனுக்கும்
7. வனசலோசனியை—நாபகனுக்கும்
8. விடலோசனியை—சுகுணனுக்கும்
9. கோமளாங்கியை—சுபசீலனுக்கும்
10. மோகனாங்கியை—பந்துருவனுக்கும்
11. சுரத சுந்தரியை—மைடனுக்கும்
12. விரத சூலையை—விக்கிரமனுக்கும்
13. சந்திரவதனியை—கமலலோலனுக்கும்
14. வஜ்ரமாலினியை—வஜ்ர[illegible]ானுக்கும்
15. தீர்க்க சுந்தரியை—வராங்கனுக்கும்
16. சாந்த லோசனியை—கடிகனுக்கும்

முறையே விவாகஞ்செய்ய மங்கள ஸ்நானங்கள் செய்வித்தும், மைத்துனர் பிள்ளைகளுக்கும் அதே கந்தர்வ சம்பந்திவர்க்கத்திற் பிறந்த புண்ணிய சீலிகளாகிய

1. செண்பகவல்லியை—போஜகனுக்கும்
2. இந்திரசேனையை—வீரபாகனுக்கும்
3. பாலகுஞ்சரியை—பராக்கிரமனுக்கும்
4. இரத்னமாலிகையை—வாமலோசனுக்கும்
5. விசித்திர மோகினியை—இரத்ன சேகரனுக்கும்
6. இரத்னவல்லியை—அதிகாந்தனுக்கும்
7. மயூர நடனியை—ஜெயசிம்மனுக்கும்
8. மந்தாரவல்லியை—பிரதாபகானுக்கும்

முறையே மணஞ்செய்ய வேண்டித் தெய்வமாதர்கள் முத்தாலாத்தி யெடுக்க, தேவரிஷிகளும் மண்ணுலகத்தரசர்களும் கல்யாண மண்டபங்களில் மகா வைபவத்துடன வீற்றிருக்கவும் தேவதுந்துபி முழங்க, வேதகோஷ்டத்துடன் மங்கையர் குலவைகொடுத்து வந்து மணப்பந்தலில் நலங்கிட்டு, கீதம்பாட மங்கள ஸ்நானஞ்செய்வித்தார்கள்.

இவ்வம்ச ஆதி புருஷன் பிரிதிவீச்சுரன் முதல் 24 அரண்மனையார் வரையிலுள்ள

# வம்சாவளி.

‡ பொன்னுலை கெந்தர்வ மன்னை

7—¶ அங்கார காக்கியனென்னும் கெந்[illegible]னுடைய புத்திரிகள் நல்வர் — 4 — பேர் —

—† ஜடகனென்னும் கெந்தர்வத் தலைவனுடைய புத்திரிகள் எண்மர் —[illegible]— பேர் —

—§ கெந்தர்வத்தலைவனுடைய அங்காரகாக்கியன் புத்திரனுடைய வீரசேனனுடைய புதல்வர்கள் இருவர் — 2 — ஆண் —

—x அங்கார காக்கியனுடைய சந்ததியில் பிறந்த மாதர்கள் — 16 — பேர் —

—‡ பூர்வ அங்கார காக்கியனுடைய சம்பந்த வர்க்கத்தில் பிறந்த புதல்விகள் எண்மர் — 8 — பேர் —

பிரிதிவீச்சுரனுக்கும்
‡ சுஜபைக்கும்

விடங்கன் ¶ மாலினி
- வைடங்கன் † மஞ்சுவானி
- இந்திரசேனன் † சுனந்தா

சுஜபகன் ¶ சம்பூர்ண திலகி
- சுஜபிகன் † மாயாவதி
- பூரணன் † ஜெயகாமினி

மணிக்கிரீவன் ¶ சந்திரலேகை
- மணிக்கிரீவன் † சுவர்ணரேகை
- சோபிதன் † சந்திரவதனி

சனச்சேனன் ¶ விசித்ரலோசனை
- சானசியன் † சுந்திரசாபி
- அந்தரீஷன் † விசித்திரகாமினி

ஷ விடங்கன் ஷ மாலினி
- § சித்திரவல்லி சித்திரவாகனன்
- சந்திரவல்லி § சந்திராதேவன்

| | |
|---|---|
| பிரபோதயன் / X அமிர்தவல்லி | 1 மும்முடியவார் கோத்திரம் |
| சுப்பிரசீகரன் / X சுந்திரவல்லி | 2 மக்கடவார் கோத்திரம் |
| ஜெயகரன் / X காந்திவல்லி | 3 தவலவார் கோத்திரம் |
| சார்ந்தவர்த்தனன் / X கமலவல்லி | 4 சென்னவார் கோத்திரம் |
| நந்தன் / X சாமவல்லி | 5 தவலையவார் கோத்திரம் |
| வைரவன் / X சுந்தரலோசனை | 6 தில்லைவார் கோத்திரம் |
| நுபன் / X வி[illegible]சலோசனி | 7 பில்லவங்கரர் கோத்திரம் |
| சுகுணன் / X விடலோசனி | 8 கந்தவங்கரவார் கோத்திரம் |
| சுபசீலன் / X கோமளாங்கி | 9 மரட்டியவார் கோத்திரம் |
| பந்தருவன் / X மோகனாங்கி | 10 கப்பவார் கோத்திரம் |
| மைடனன் / X சாதகத்தரி | 11 கொரகவார் கோத்திரம் |
| விக்கிரமனன் / X விரதருயை | 12 வாஜவார் கோத்திரம் |
| கமலலோலன் / X சந்திரவதனி | 13 கெந்தியவார் கோத்திரம் |
| வஜ்ஜிரஹாரன் / X வஜ்ஜிரமாலினி | 14 கொப்பியவார் கோத்திரம் |
| வராங்கன் / X தீர்க்க க்கதரி | 15 சாயவார் கோத்திரம் |
| கடிகன் / X சாந்தலோசனி | 16 கோலயவார் கோத்திரம் |
| போஜகன் / ‡ செண்பகவல்லி | 17 மாதனவார் கோத்திரம் |
| வீரபாகன் / ‡ இந்திரசேனி | 18 தம்மயவார் கோத்திரம் |
| பராக்கிரமன் / ‡ பாலகுஞ்சரி | 19 கனித்தயவார் கோத்திரம் |
| [illegible]மலோசன் / ‡ இரத்தினமாலினி | 20 தரிஷியவார் கோத்திரம் |
| ரத்தினசேகரன் / ‡ விசித்ர மோகினி | 21 ராஜபைரவார் கோத்திரம் |
| அதிகாந்தன் / ‡ இரத்தினவல்லி | 22 பலிவிரிவார் கோத்திரம் |
| ஜெயசிம்மன் / ‡ மயூரகனினி | 23 கலிவிரிவார் கோத்திரம் |
| பிரதாபகரன் / ‡ மந்தாரவல்லி | 24 பச்சையவார் கோத்திரம் |

B நலங்கு சிங்காரம். இம்-கங்கராபரணம்.

அலங்காரக் கொடிகள் கட்டி—ஆணிப்பொன்னற் கால்கணட்டி
அழகுளதோ ரணங்கள் கட்டி—அரண்மனைக ளலங்கரித்தார் . ()
முத்தாலே கோலமிட்டு—முழுவயிரக் கால்நிறுத்தி
சித்திரப்போ திகையுடனே—சிவந்தபட்டால் ஜாலரிட்டார் ()
விண்ணவரும் முனிவர்களும்—மேதினியி னரசர்களும்
தன்னியர்கள் புடைசூழ சகலவரும் வந்திருந்தார் ()

பெண்ணை யலங்கரித்தல்.

சந்திரபிறை சூர்யபிறை தங்கக்குப்பி ராக்கிறையும்
சுந்திரஜடை யலங்காரம் தோகையர்க்கு மிகவணிந்தார் ()
கல்லிழைத்த காப்புகளும் கைவளையும் பாட்டிலா
கிளிகள் கொஞ்சும் மோதிரங்கள் கிளிமொழியார் தமக்கணிந்தார் ()
கண்டசரம் சரப்பணியும் கனமான அட்டிகையும்
கண்டந்தன்னில் பளபளென்ன காரிகையார் தமக்கணிந்தார் ()
பசும்பட்டால் ரவுக்கையிட்டு பஞ்சவர்னச் சேலைகட்டி
திசைமதிக்கும் நெளியுடனே இகழ்பாசி பந்து கட்டி ()
இடையிற்றங்க வொட்யாணம் இலங்கிடவே மாதர்கட்கு
அடியிற்றண்டை சதங்கைகளும் அழகுமெட்டு பீலியிட்டார் ()
மல்லிகையும் இருவாச்சி வாசமுள்ள செண்பகப்பூ
முல்லை மந்தாரையுஞ் சூடி மெல்லியர்க்கு தாமணிந்தார் ()
அத்தர் பச்சைக்கர்ப்பூரம் அதிசுகந்தப் பொடிவாடை
மெத்தப்பரிமளப் புனுகு வேல்விழியார் தமக்கணிந்தார் ()
மன்னவர்க்கும் மகுடமுடன் வண்ணப் பணிகளு மணிந்து
உன்னதமா மாசனங்களில் உவகையுடன் வந்தமர்ந்தார் ()
மத்தளமும் பேரிகையும் மங்கள வாத்தியம் முழங்க
பத்தினிமார் பாக்ய பாங்கியர்கள் புடைசூழ ()

ஸ்ரீராம ஜெயராமா சீதாமோ கனராமா
காருண்யகுண ராமா கல்யாண குணராமா ()

A விருத்தம்.

மழலைமொழிக் கின்பமுறு மன்னைபோலும்
வளமலிகன் றழைக்கவரு மாவைப் போலும்
குழலுடன்யா ழொலிகேட்ட விடங்கர் போலுங்
குமரர் முன்னன் னையெழுந்து குறைவை நீக்கும்
விழிகொடுபோர்த் தன்பருக்குள் முன்பரான
மேலாமும் முடிகோத்ரன் மங்கண கோத்ரன்
தொழிற்கச்சி விசாலையினை யாளக் கிரீடஞ்
சூடினள் திருவிளையாட் டாடினளே





ஸ்ரீ காமாக்ஷி, மும்முடியரசன்,

மகுடாபிஷேகம்.

இவ்வித வைபவத்துடன் கல்யாணம் நடந்தபின் சகல தேசத்தரசர்களை வழிகூட்டி யனுப்பிவிட்டுச் சிறிது நாட்சென்று, பிறகு புதல்வர்களுக்கு மகுடாபிஷேகம் செய்ய நினைந்து தமது திருக்குல தேவியாராகிய ஸ்ரீ காமாக்ஷியம்மனது திருவாக்குக் கட்டளைப்படிக்கு ரிஷீஸ்வரர்களும், பலதேயத்தரசர்களும், சூழுஞ் சபையில் இமைய நாட்டத்தவர்கள் பூமாரி பொழிய இக்காஞ்சியை அழகாபுரிபோல அலங்கிர்தஞ் செய்வித்தும், தேவாலயங்களில் நந்தா தீபங்களேற்றுவித்தும், பல புண்ணிய தீர்த்தங்களைக் கொணர்ந்து அபிஷேக நைவேத்தியாதி உபசாரங்கள் சகல தேவதாலயங்களிலும் நடப்பிவித்தும், வைடங்கராஜனது சிரேஷ்ட புத்திரனகிய பிரயோதயனுக்கு அம்பிகை தமது திருக்கரங்களால் மும்முடியைச் சூட்டியருளினர். பின்பு பூர்வஸ்தானமாகிய விசாலாவதியை மக்கடவசுப்ரதீகரனுக்கு இக்காஞ்சியிலேயே தபோதனர்களாகிய ரிஷிகளால் முடிசூடுவித்து, மற்றைய குலத்தவர்க ளனைவோரும் அம்மனை நமஸ்கரித்து, ஓ மகாதேவியே அசக்தர்களாகிய அடியேங்கள் இப்பெருத்த பூபாரத்தைத் தாங்க வல்லவரோவென்று அம்மனை வேண்டலும், அதுகேட்டு தேவியார் ஓய் பாலர்காள் நீவிர் மனக்கவலையுறுதீர்கள்; யாமே இவ்வரசாட்சியை நடப்பித்து வருவோம் (அஃதெவ்வாறெனில் எமதுரிமை உங்களுக்களித்து இவ்வரசாட்சியை நாமே

நடத்திவருவோம்) ஆதலின் அஞ்சன்மின் நீங்கள் சுகப்பட்டு முத்தி பெறுவீரென வரமளித்தனர். இவ்விதமே சகல முனிவர்களும் பிராமணர்களும் அக்ஷதைகளைத் தூவியும் தேவர் பூமாரி சொரிந்தும் ஆசிர்வதித்தார்கள். சமஸ்தமான பேரும் ஆசிர்வாதம் செய்து மங்கள வாழ்த்துகள் பாட கீதவாத்திய கோஷ்டத்துடன் தேவ துந்துபி முழங்க நிருத்தனம் காயனம் முதலிய சபைக்கிசைந்த சந்தோஷக் கச்சேரி நடக்க வியப்புற்றார்கள்.

## விருதுகள் பெற்றது.

கேட்டீரோ நாரதமுனிவரே? இவ்வித வைபவத்துடன் அம்மனால் முடிதரிக்கப்பெற்று, இவ்வரச சிகாமணிக்கு யாகக்ஷத்திரியரெனும் பெயருக்கேற்கச் சிங்கக்கொடியும், சூலாயுதமும் அம்மனாலளிக்கப்பெற்ற பின், ஸ்ரீ மஹாவிஷ்ணு சக்கரமும், துளவமாலையும், பிரம்மன் தண்டாயுதமும், உருத்திரமூர்த்தியானவர் தமதம்ஸ வம்மிஸஸ்தரென மகிழ்ந்து சூலாயுதமும் தந்தார்கள். சுப்பிரமணியர் வேலாயுதந் தந்தார். இந்திரன் வஜ்ராயுதம் குடை சாமரம் கத்தி கட்டாரியும் தந்தான். குபேரன் முத்துமாலையும், இன்னம் பலதேவர்கள் அஸ்திர சஸ்திரங்களுந் தந்தார்கள். இவைகளைச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து பெற்றுக்கொண்டு அவர்களுக்குத் தேவதா பூஜை விமரிசையாய்ச் செய்து துதித்தார்கள். சமஸ்த தேவர்களும் சந்தோஷித்து தந்தம் உலகங்களுக்குச் சென்றார்கள். அம்மனும் அந்தர்த்தானமாயினர். பின்பு அங்கிருக்கும் முனி புங்கவரை நோக்கி வைடங்கராஜன் முதலிய எண்மரும் வணங்கி, ஓ சுவாமிகாள் இதுவரையும் இந்த இராஜபாரத்தைத் தாங்கி சமஸ்தமான பிரஜைகளும் நன்னெறியிலொழுகும் வண்ணம் ஆண்டுவந்தனம். இனிமேல் விருத்தாப்பிய காலமாய்விட்டபடியால் எங்களது காரியங்களை நடத்த எமது புத்திரர்களுக்கு முடிசூடுவித்து முடித்தோம். இனி துறவு பூண்டு யோகாப்பியாஸம் செய்யும் வானப்பிரஸ்தாச்சிரம தருமத்திற்கு உரியவரானபடியால், இக்காரியம் சித்தித்து இறுதியில் பரமபதப்பிராப்திக்கு அருகராவதற்குத் தங்களனுக்கிரகம் வேண்டுகிறோம் என்று விநயத்துடன் வேண்டிக்கொள்ளலும், அவ்வாறே அவர்கள் இதற்கிசைந்து ஆசிர்வதித்தனுப்பவே, அன்னவர்கள் காட்டிற்குத் தம் சதிகளோடு சென்று, ஆச்சிரமவாசஞ்



செய்து, சர்வசங்கப் பரித்யாகஞ்செய்து, மைத்துனர் முதலிய பதின்மரும் பரமபதமடைந்தார்கள்.

## இராஜநீதி யுரைத்தது.

இவ்விதமாகப் பத்து இராஜாக்களும் தம்பதிகளோடு வனத்துக்குச் சென்றபின் அங்குற்ற முனிவர்கள் பிரபோதயன் முதலான இருபத்து நால்வரையும் ஒருங்கே உட்காரவைத்து, புத்திரசிகாமணிகளே இனி யாம் அடிக்கடி இங்கு வருவதாலெங்களது தவத்துக்கு விக்கினங்களுண்டாகும். ஆதலால் இனி உங்களுக்கு இராஜநீதியும் சதாசாரம் விரதமகத்துவங்கள் முதலிய சமஸ்தமானவற்றையும் சஞ்சேபமாயுரைக்கிறோம். நீவிர் அவைகளை யுணர்ந்துய்யுங்கள் என்று சொல்லத்தொடங்கினார்கள். க்ஷத்திரிய தருமத்தைப்பற்றி.

பகவற்கீதை

தலைமையுங் கொடையொடு தறுகணாண்மையு
நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமுங்
கொலையயில் போர்களிற் புறங்கொ டாமையுஞ்
சிலைமலி தோளினு யரசர் செய்கையே.

இதன்பொருள் ஈசுரபாவம்— அதாவது பிரஜைகளைப் பாலனஞ்செய்தற்பொருட்டுத் தனது சேவகர் முதலியோரின் சமீபத்திற்றனது பிரபு சக்தியைப் புலப்படுத்தல்; அல்லது, சாஸ்திர நிஷித்த மார்க்கத்திற் பிரவிர்த்தியா நிற்குந் துஷ்டப் பிராணிகளை நியமனஞ்செய்யா நிற்குஞ் சக்தி, சுவர்ணம், பசு, பூமி, அன்னம், முதலியவற்றைச் சாதுக்களாகிய பிராம்மணருக்குக் கொடுத்தல், அத்தியந்தம் பலமுடைய புருஷனையும் அடிப்பதிற் பிரவிர்த்தி ரூபமான விக்கிரமம், பெரிய விபத்தானது வந்தடையினும் தேகேந்திரியாதிரூப சங்கேதங்கள் வியாகுலமடையாத தன்மை, எதிரிகட்குத் தோற்றோடாத சாமர்த்தியம் ஆகிய இவைகள் இராஜாக்களது தருமமாம்.

இதனுடன் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்து நாலு கலைக் ஞானம், தொண்ணூற்றாறு தத்துவங்கள் முதலியவையுங் கற்றுவருவதில், முக்கியமானவைகள் சாஸ்திர வித்தை, அஸ்திர வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், சாமுத்திரிகா லக்ஷணம், ஜோதிட சாஸ்திரம், மநுதர்ம சாஸ்திரம், யோக சாஸ்திரம முதலியவைகளைக் கற்று அவற்றிற்றேரவேண்டும்.

## அரசருக்குரிய பத்து லக்ஷணங்களாவன.

தவிர குடை, கொடி, முரசு, படை, தனம், தான்யம், மலை, ஆறு, கோட்டை, அரண், இவை முதலியவை இருக்கவேண்டியவை இதற்கு.

பன்னிரண்டாவது நிகண்டு.

கர்ணத்திற் றிரள்கள் வாய்ந்த கடைகாப்போர் நகரிமாக்கள்
தருபடைத் தலைவர்மற்றுந் தன்கிளைச் சுற்றம் யானை
புரவியூர் வோரே யென்றும் போற்றுகா விதியரென்றும்
விரவிய வெண் பேராயும் வேந்தருக் கமைத்த வாறே.

இதுவுந்தவிர முக்கியமாயுள்ள சகாயிகள் புத்தி சாதூரியமுள்ள பிரதானிகளும், யோசனை தெரிந்த ஆலோசனைத் தலைவர்களும், அமர் முகத்திலெதிர்த்து நின்று ஜெயங்கொள்ளும் பராரஜ பயங்கராயிருக்குஞ் சேனாதிபதிகளும், உள்ளவனும், வியக்கத்தக்க உயிர்த் தோழர்களையுடையவனும்,பர்துஜனரக்ஷகனுகியும், தன்னுயிர்போல் மன்னுயிரைப் பாதுகாக்கும் தயாகுண சீலனும், ஆசாரமுடையவனுகவும் இருப்பானுயின், குலதருமம், புண்ணியம், சத்தியம், யாகம், வேதம், தவம், தானம், மழை, கோவில், குளம் இவையாவும் ஒத்திருந்து ஒழுங்கு தவிராது உலகு நடக்கும். இஃதன்றியும், பழைமையான மந்திரிகளை அலக்ஷியஞ்செய்யாது அவர்களது யோசனைகளை யங்கீகரித்தும், (சுபர்த்தி, சங்கரதானம், ருத்திரபவம், உமாபதி) என்னும் தண்டனை நூலிற் றென்மையாய்க் கூறியபடி தண்டனை விதிக்கும்போது பட்சபாதம் இல்லாமல் (தாட்சண்யமில்லாமலும்) காரியா காரியங்களைத் தக்கபடி விசாரித்துத் துஷ்டநிக்கிரகம், சிஷ்ட பரிபாலனஞ் செய்தல்வேண்டும். அன்றியும் முக்கியமாக அரசனுக்கு சாம, பேத, தான, தண்டமென்னும் நான்குவித உபாயங்களும் தெரிந்து சமயோசிதம்போல உலகையடக்கி யாள்வதும், எதிரிகளை யடக்கியாள்வதும் கடமை.

(அரசனுக்கு வித்வானுகவும், அநேக விஷயங்களில் தேர்ந்தவனும் உள்ள மந்திரியும் துணையாயிருந்து காரியங்களில் அஜாக்கிரதையாயிராது பாதுகாத்து தருமார்த்தங்களை மென்மேலும் விர்த்திக்குக் கொண்டுவர வேண்டும்.) இதற்கு,

மகாபாரதம் சாந்திபர்வம்

ராக்ஞா புரோஹித: கார்யோபவேத்வித்வாந் பஹுச்ருத:
உபௌஸமீக்ஷ்ய தர்மார்த்தா வப்ரமேயா வநந்தரம்,



இன்னமுங் கேளுங்க ளரசர்களே! தமதராசாக்ஷிக் குட்பட்ட நகரங்களிலுள்ள தேவாலயங்களிற் பூஜைகள் திரிகாலங்களிலுந் தவிராது நடப்பித்தல் வேண்டும். தவிர மனைவி செய்த பாவம் புருஷனையும், புதல்வன் செய்தபாவந் தந்தைதாயையும், சீடன் செய்த பாவம் குருவையும், பிரஜைகள் செய்த பாவம் அரசனையும், அரசன் செய்த பாவம் மந்திரியையும் சாருமாதலின் (இது தெரிந்து அரிச்சந்திரன் புதல்வன் லோகிதாசனும், சிறுத்தொண்டனது புதல்வன் தர்மாங்கதனும், தந்தையர்கள் வாக்கு பிசகாது தங்கள் தங்கள் சிரங்களையும், உயிர்களையுங் கொடுத்துத் தந்தையருக்குப் பழியும் பாவமும் வாராவண்ணங் கீர்த்தியைத் தேடி வைத்தார்கள்) இவற்றை யுணர்ந்து நடப்பதே மைந்தர்கள் கடமையாம். இது காறும் இராஜதருமங்களை யுரைத்தனம். இனி சதாசார தருமங்களை யுரைக்கிறோம். சாவதானமாகக் கேளுங்கள்.

### சதாசார தருமம்

புத்திசாலியானவன் பிரம்ம முகூர்த்தத்தி லெழுந்து பூமி தேவியை நமஸ்கரித்துப் பின் காலைக்கடனை முடிந்துக் கொண்டு சூரிய நமஸ்காரஞ் செய்து அங்கநியாஸ கரநியாசங்களால் தேகத்தை க்கவசஞ் செய்துகொண்டு ஜலத்தினுலும் எள்ளினுலும் பிதுர்தர்ப்பணம் ஆசாரிய தர்ப்பணம் தேவ தர்ப்பணங்களைச் செய்து சொஸ்திசாசனத்திலிருந்து மனதினுலே பரமேசுரனைக் குறித்துத் தியானஞ் செய்து முதலில் தனது குலதருமத்தையும், அதன் பின் அந்த தொழிலினுல் சம்பாதிக்கும் பொருளையும், அந்தப் பொருளைக் கொண்டு பகவதாராதனை செய்து பின்னதன் சேஷத்தைப் பிரசாதரூபமாகச் சாப்பிட்டுத் தேகத்துக்குச் சுகத்தைத் தேடவேண்டுமென்கிற எண்ணத்தையுடையவனுய்,ஈசுவரனிடத்திற் சகல சுதந்திரத்தையும் ஒப்புவித்து தான் அவருக்கு அடிமை யென்றும், அவர் ஆண்டானென்றும் தெளிந்த புத்தியினுல் இருதயத்திலவரே யிருந்து சகலமான பூர்வகர்ம வாசனைகளைப் போக்கி நல்ல வழிகாட்டி யருளவேண்டு மென்று சிரத்தா பக்தியுடன் ஸ்துதி பிரணாமம் மனனம் இவைகளால் பக்தி செலுத்தவேண்டியது.

தனது குலத்தொழிலாற் கிடைத்த பொருளானுலும் அந்தக் கருமத்தாற் சுவற்ப பாவ -நேரிடுவதாயிருந்தால் அந்த தொழிலைச் செய்யக்கூடாது. உலகவிரோதமா யிருக்குமாயின் அதனையும் விலக்க வேண்டியதே இப்படி சிந்தித் தெழுந்தபின் தாய் தந்தையரைப்

பூசித்து அவரது ஆசிர்வாதங்களை யடையவேண்டியது முக்கிய மான கடமையாம்.

ஜலபாதை மலபாதைகளுக்குச் செல்லவேண்டுமாயின் நிருதி மூலையில் அம்புபாயுமிடத்திற் கப்புறம் போயிருக்க வேண்டியது. அச்சமயம் தலையை வஸ்திரத்தால் மூடிக்கொண்டும பூணூலைக் காதில் மாட்டிக்கொண்டும் மனதிலொன்றையும் சிந்திக்காமலு மிருக்கவேண்டும்; வீட்டினிடத்திற் கால் கழுவுதல் முதலிய அசுத்தங்களைச் செய்யலாகாது. மரத்தினிழல், அக்கினி, காற்று, பசு முதலியவைகளுக்கும், சூரியன், பெரியவர்கள், முதலியவர்களுக்கும் எதிரிலிருந்து மலஜலங்களை விடக்கூடாது. உழுத நிலத்திலும், பயிர் நடுவிலும் பசுக்களிருக்கு மிடத்திலும், ஜனசமூகத்திலும் வழியிலும், ஆற்றங்கரையிலும், தண்ணீரிலும், மயானத்திலும் மலஜலம் கழிக்கலாகாவாம். பகலில் வடதிசையை நோக்கியும் இரவில் தென்றிசையை நோக்கியுமிருந்து பாதைகளைக் கழிக்கவேண்டும்.

புற்றுமண், பெருச்சாளி தோண்டியமண், தண்ணீருக்குள்ளிருக்கும் மண், சவுசஞ் செய்து மீந்த மண், அசுத்த பூமியிலிருக்கிற மண், மிகச்சிறிய பூச்சிகளோடு கூடிய மண், கலப்பையினாற் கிளப்பப்பட்ட மண், இவைகளை விட்டு நல்ல மண்ணைக் கொண்டு கை கால் குதம் முதலியவைகளைச் சுத்தஞ் செய்யவேண்டியது. முந்தி அசுத்தத்தின் பற்று அறும்படி சுத்திசெய்து பிறகு சுத்திக்காக லிங்கத்திலொருதரமும், அபானத்தில் மூன்று தரமும், இடக்கையில் பத்துத்தரமும், மறுபடி இரண்டு கைகளினாலும் மும்முறை சுத்த நீரினால் கழுவவேண்டியது. ஸ்நானஞ் செய்யும்போது கங்கையை நினைந்து முதலில் ஒரு செம்பு ஜலத்தை சிரசில் காசி காசியென்று வார்க்கவும். அனுஷ்டானங்கள் அவரவர்களது சமயாசாரப்படி செய்துகொண்டு சமஸ்த காரியங்களையும் கிருஷ்ணார்ப்பணஞ் செய்து விடவும்.

கேளுங்கள் இராஜபுத்திரர்களே அதிகாலையில் வண்டுகள்வந்து மலரில் வீழாமுன்னம் நறுமணங் கமழும் அழகிய மலர்களையுடைய நந்தவனத்திற்கு ஜலத்தில் ஸ்நானம்செய்து ஜெபதபங்களை முடித்துக்கொண்டு ஆகமவிதிப்படி கற்பம், அனுகற்பம், உபகற்பம், என மூவகையும் சுத்தியாற் புரியப்படுமாதலின் "வெந்தியங்காணீறு" எனப்பட்ட திருவெண்ணீற்றை பணிந்துக் கொள்ளல்வேண்டும் விபூதி முத்திரப்படுமென்பது,



உபதேச காண்டம்

கற்பமென்ற னுகற்ப மென்று மகற்பமென்றாய்
முற்பவந் துடைத் தருடரும் பூதி மூன்றாகு
மற்பு தத்தருட் சோமயந் தரைபடு வதன்முன்
விற்கலன்படுத் தைந்து வில்வத் தொடுவிளைத்தல்.

## திருநீற்றின் மகிமை.

உலகத்தில் வேதநிதிகள் தவிருமாயின் திருவெண்ணீற்றின் நெறி மாறுவதும், திருவெண்ணீற்றின் நெறிவிட்டவர்க்கு வேத விதி உடன்படாமையும் இயல்பாகலானும், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று இன்றியமையாச் சாதனங்களானதாலும், மறைகளும் வெண்ணீறுமென ஒருங்கு சேர்த்துப் பிரயோகித்தனர். இதற்கு.

வெண்பா.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுஞ் சுந்தரனுஞ்
சிற்கோத வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூ லெங்கே
எந்தைபிரா னைக்தெழுத் தெங்கே.

ஆளுடைய பிள்ளையார் தேவாரம். பண்காந்தாரம்.

மந்திர மாவதுநீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருவாலவாயான் றிருநீறே.

இவ்விதமாயுள்ள திருநீற்றினது மகத்துவத்தை யறியாமலும், அன்புடன் சிரத்தையுமில்லாது வெளிக்கு மாத்திரங்காட்டும் உருத்திராட்சப்பூனைக் கிணங்க திரேகமுழுதும் * நீறுபூசித் திரிவாரும்

* விபூதியியல்—பசுவின் சாணத்தை அக்கினியினாற் றகித்தலாலுண்டாகிய வெண்ணிற விபூதியே தரிக்கத்தகும். வடக்கு முகமாக வேனும், கிழக்கு முகமாகவேனு மிருந்துகொண்டு தரித்தல்வேண்டும். நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து சிவசிவ என்று சொல்லி வலக்கையி னடுவிரன் மூன்றினாலுந் தரித்தல்வேண்டும், ஒருவிரலாலேனும் ஒரு கையாலுந் தரிக்கக்கூடாவாம். ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்குக்கொண்ட விபூதியும், சிவதீக்ஷை செய்துக்கொள்ளார் தந்த விபூதியும் ஆகாவாம். நெற்றியிலிரண்டு கடைப்புருவ வெல்லையினீளமும் மார்பிலும், புயங்களிலும், அவ்வாறங்குல நீளமும், மற்றைய ஸ்தானங்களில் ஒவ்வோரங்குல நீளமும் பொருந்தத் தரித்தல்வேண்டும் (சிரம், நெற்றி, மார்பு, கொப்புள், முழங்கால்கள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடங்களாம். தீக்ஷையுடையவர் சந்தியாகால மூன்றினும் ஜலத்திற் குளித்துத்தரிக்கலாம்.

உண்டு. அலக்ஷியமாக வெளி வேஷம்போட்டுத் திரிவதாற்பயனில்லையென்றுணர்ந்து உண்மையான பக்தியைக் கைக்கொண்டொழுகுவதால் சிவசாரூப்பியத்தை யடையலாம். இதற்கு

### வால்மீகர் ஞானம்.

தானென்று வுலகத்திற் சிறிது பேர்கள்
சடைபுலித் தோற் காயாசந்தாழ் வடமும் பூண்டு

ஊனென்ற வுடம்பெல்லாஞ் சாம்பல்பூசி
உலகத்துள் யோகி யென்பர் ஞானி யென்பர்

தேனென்ற சிவபூஜை தீட்சை யென்பார்
சிவனைக் கண்ணாலே கண்டோமென்பர்

கானென்ற காட்டுக்குள்ளலைவார் கோடி
காரணத்தை யறியாமல் கதறுவாரே.

### அழுகணி சித்தர்பாடல்.

பற்றற்ற நீரதிலே பாசி படர்ந்ததுபோல்
உற்றுற்றுப் பார்த்தாலு முண்மயக்கந் தீரவில்லை
உற்றுற்றுப் பார்த்தன்றோ வுண்மயக்கந் தீர்ந்தாக்கால்
பற்றற்ற நீராகும் என் கண்ணம்மா பாசிபது வேராமே.

## புஷ்பங்களின் மகிமை.

பக்திவினயத்துடன் மேற் கூறியபடி திருநீறணிந்து கொண்டு க்ஷேமத்துடன் றேனொழும்படிக்கு இதழ்விண்டு நறுமணம் வீசி மரத்தினது கொம்புகளிலும், நிலத்திலும், நீரிலும், வசிக்கும் மலர்களைப் பறிக்கத் தொடங்கி அருமையான குடலையை ஒரு கரத்திலேந்திக்கொண்டு தெய்வ பக்தியுடன் வலது கரத்தாற் பறித்து குடலையிலிடல் வேண்டும். இதற்கு,

### புஷ்பவிதிச் செய்யுள்

சிறையளி புகுதாமுன்னஞ் சிறுகாலை யெழுந்திருந்து
பொறைமரம் வழுக்கா தேறப்புலி நகம் பெற்றுமந்த
நறைமலர் பழுதுபார்க்க நகந்தோறுங் கண்படைத்துங்
குறைவறப் புரிந்தான் பூசைக்குரிய வப்பதத்தினனே.

மலர்களாவன—கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப் பூ, நிலப் பூ, என நான்கு வகைப்படும் என்பதற்கு,



### அருண்மொழித் தேவர்

கோட்டுமலரு நிலமலருங் குளிர்நீர் மலருங்கொழுங் கொடியின்
றோட்டுமலரு மாமலருஞ் சுருதிமலருந் திருவாயிற்
காட்டுமுருவநில வலரக்கனகவரையிற் பன்னக நாண்
பூட்டுமொருவர் திருமுடிமேற் புனையலாகு மலர்தெரிந்து

### கோட்டுப்பூவுக்கு

வன்னிபலா வெலுமிச்சை நாரத்தை கோங்கு
மந்தாரை யூமத்தை மாவிலிங்க நொச்சி

பன்னியகிழ் சந்து மகிழ்மாதுளை மாவசோகு
பாதிரி வெள்ளெருக்கிலந்தை பலாசு நுணா நறவம்

புன்னைவிழா மருதுகொன்றை நெல்லிகுருச் செருந்தி
பொன்னினாவிரை கிளுவை குருந்து வில்வநாவல்

மன்னுதாளகிற் கிழஞ்சியலரிவெட்சி பவழ
மல்லிகை சண்பகஞாழல் கோட்டுப்பூ வகையே

### கொடிப்பூவுக்கு

மருவாருங் காந்தள் காட்டுமல்லிகை முல்லைமௌவல்
கருவார் வெற்றிலையே தாளி கருமுருக்கை கருக்காக்கொன்றை
முருகாரும் வெண்காக்கொன்றை குறுக்கத்தி முதலாவுள்ள
விருவாச்சி கொகுடுபிச்சி யிவையெலாங் கோடிப்பூவாமே.

### நீர்ப்பூவுக்கு

செய்யதாமரை சேர்ந்த பொற்றாமரை
தூய்யதாமரை சொல்லிரண் டுட்பல
மையசெம் மயவெண்மய மாகிய
நெய்தன் மற்றவை நீரின் மலர்களே.

### நிலப்பூவிற்கு

பட்டிணையுருவி பூழை பச்சை செவ்வந்திதும்பை
வெட்டிவேர் மருக்கொழுந்து காந்தியே விஷ்ணுகாந்தி
மட்டவிழ் துழாய் செங்கீரை மத்தை செம்பரத்தை வங்க
மிட்டகொக்கிற கணிச்சம் வலம்புரியிவை நிலப்பூ.

## குற்றமுள்ள புஷ்பங்கள்.

பறித்தபிறகு மலர்ந்தவை, நேற்று மலர்ந்ததை இன்றெடுத்தல், எருக்கிலையிலும் ஆமணக்கிலையிலும் வைத்தவை, வஸ்திரத்திலுங் கையிலும் வைத்திருந்தவை, அரைக்குக் கீழாகத் தொங்கவைத்திருந்தவை, புழுக்கடித்தவை, எச்சமிருந்தவை, சிலந்தியிருந்தவை

மயிரிருந்தவை, இரவிலெடுத்தவை, நீரிலூற வைத்தவை, எச்சிற் பட்டவை, சுடுகாட்டிலிருந்தவை, ஸ்நானஞ் செய்யாதெடுத்தவை இவையாவுங் குற்றமுள்ளதென்பதற்கு,

## புஷ்பவிதி திருவிருத்தம்.

எடுத்துவைத்தே யலர்ந்த மலர் பழம்பூக்கண்மற்ற
வெருக்கிலையா மணக்கிலையிற் பொதிந்த பூக்க
ளுடுத்த புடவையிற் காத்தினமைந்த நறும்பூக்க
ளுதிர்ந்திடுபூ வரையின் கீழுற்ற விரைப்பூக்க
ளடுத்த புழுக்கடி யெச்சஞ்சிலந்தி மயிருழுத்த
லங்கையில் வைத்தங் கைகுவித்திடுதல் கலங்குரணிலே
யெடுத்தமலர் நீரமிழ்தல் புறங்காட்டி லெப்தலெச்சில்
குழியா தெடுத்தலிழி யெனுமா கமமே.

## ருத்திராக்ஷப் பிரபாவம்.

இன்னுங் கேளுங்களரசர்களே! சிவபக்தர்கள் ருத்திராக்ஷ மணிகளணிய வேண்டுமென்று சிவாகமங்கள் கூறுவதால் சந்திரநேத்திரத்திலுதித்த நீரில் பதினாறுவித வெண்ணிறமுடைய உருத்திராக்க மரங்களும், சூரிய நேத்திரத்திலுத்த நீரில் பன்னிருவித செந்நிறமுடைய உருத்திராக்க மரங்களும், அக்கி நேத்திரத்திலுதித்த நீரில் பத்துவித கருநிற வுருத்திராக்ஷ மரங்களும் கூடி ௩௮ மரங்கள் தோன்றின. அவற்றிலுதித்த மணிகளின் உன்னதமுடைய பக்கமே முகமும், மற்றபக்கம் அடியுமாம். முகக்கணிதங்களை ரேகைகளைக்கொண்டே அறியவேண்டும். அவற்றின் மூலம் பிரம்மதேவரும், நாளம், விஷ்ணுவும் முகம், உருத்திர மூர்த்தியும், கேஸரங்கள் சகல மூர்த்திகளுமாம். அவை பதினாறு முகங்கள் வரைக்குமுண்டு. அவற்றுள்.

ஏகமுக மணிந்தால்—சிவபிரானுக்கும்
இரண்டுமுக மணிந்தால்—சிவசத்திக்கும்
மூன்றுமுக மணிந்தால்—மும்மூர்த்திகளுக்கும்
நான்குமுக மணிந்தால்—பிரம்மதேவருக்கும்
ஐந்துமுக மணிந்தால்—சதாசிவ மூர்த்திக்கும்
ஆறுமுகந் தரித்தால்—சுப்பிரம்மண்யருக்கும்
ஏழுமுகந் தரித்தால்—சப்த மாதர்களுக்கும்
எட்டுமுகந் தரித்தால்—அஷ்ட வசுக்களுக்கும்

ஒன்பதுமுகந் தரித்தால்—நவதீர்த்தங்கட்கும்
பத்துமுக மணி தரித்தால்—திக்கு பத்துக்கும்
பதினொருமுகந் தரித்தால்—ஏகாதச ருத்திரருக்கும்
பன்னிரண்டுமுக மணி தரித்தால்—12-ஆதித்தியருக்கும்
பதின்மூன்று மணிக்கு—சத ருத்திரர்களுக்கும்
பதினான்குமுகந் தரித்தால்—அசுவினி தேவதைகளுக்கும்
பதினைந்து முகத்துக்கு—சந்திரன் வருணாதியருக்கும்
பதினாறு முகத்துக்கு—முப்பத்து மூன்றுகோடி தேவர்களுக்
கும் உரியதாம்.

இவ்விதமாய் முகங்களின் அனுமானந் தெரிந்து அணிந்து கொண்டால் அந்தந்தத் தேவதைகளினது அனுக்கிரகம் பெறுவார்கள். இன்னும் இம்மணிகளை யணியும் விதங்களாவன.

சிகைக்கு—ஏகமுக மணியும்
சிரசுக்கு—இரண்டல்லது பதினாறு முகமும்
காதுகளுக்கு—ஐந்து, ஏழு, பத்து, முக மணிகளும்
கண்டத்துக்கு—எட்டுமுக மணிகளும்
உதரத்துக்கு—நான்குமுக மணிகளும்
வாகுகளுக்கு—பதின்மூன்றுமுக மணிகளும்
மணிக்கட்டுக்கு—ஒன்பதுமுக மணிகளும்
உபவீதத்துக்கு—பதினான்குமுக மணிகளும்
மார்புக்கு—எண்முக மணிகளும்
வலப்புறத்தில்—ஆறுமுக மணிகளும்

இடப்புறத்தில்—ஒன்பதுமுக மணிகளும் பகுக்கப்பட்டபடி தெரிந்தணிவது உத்தமம். முப்புரிநூலின்றி வேதமோதின் அவை பயன்படாததுபோல விபூதியோடு உருத்திராக்க வடமின்றிச்செய்யும் நீராடல் ஓதல் ஈதல் சிவனைப்பூசித்தல் முதலிய கருமங்கள் சிறிதும் பயன்படாவாம். ஒருவர் ஆயிரம் மணிகள் தரிக்கப்பெறின் சிவனெனவே தேவரும் வழிபடத்தகுந்தவராவர். இதற்கு

உருத்திராக்க விசிட்டம்

கண்டியணிந் தார் தம்மைக் கண்டவுடனே டணியார்
பண்டை நரகிற் படிந்தழிவர்—கண்டியினைப்
பூண்பாரைக் கைதொழுது பூசிப்பார் மேற்புரியிற்
காண்பார் கடவுளடிகள்.

இத்தகைய வைபவம் பொருந்திய மணிகளை சயனத்திலும், மலஜல மோசனத்திலும், புணர்ச்சியிலும், நோய்கொண்டபோதும், ஜனனசௌசம், மரண சௌசங்களிலும், தாரணங் கூடாவாம். நீக்கமில்லாதணிவதாவன. கண்டத்தி லேக மணியும், அல்லது முப்பத்திரண்டு மணியுள்ள கோர்வையையும் தரிக்கலாமென்பது விதி இவ்விதாசாரத்துடன் ருத்திராக்ஷ மணிகளைப் பூண்டு கொள்ளல் வேண்டும். இவ்விதம் பூண்டிருப்பவர்களை எதிர்நோக்கியவர்கள் சிவபிரானென மதித்துப் பூசிப்பார்களேயாயின் சிவனைப் பூசித்துக் காட்சி பெற்றதை யொக்கும்.

கேளுங்களரசர்களே உலகத்தில் மானுடராகப் பிறந்தவர்கள் முக்கியமாக அனுஷ்டிக்க வேண்டியது விரதமே. அவைகளிற் சிவராத்திரி மகாவிரதமும், வைகுண்ட ஏகாதசியெனும் விரதமும், சிலாக்கியமானவையென வழங்கிவருவதால் அவ்விரதங்களை யனுஷ்டிக்கு நெறியை விளம்புவோம் கேண்மினென்று சொல்லுவார்கள்.

## மஹா சிவராத்திரி விரதம்.

உமாதேவியார் சிவபிரானை வேதாகம விதிப்படி ஓரிரவு நான்கு யாமமும் அருச்சித்து அவ்விரவு புலர்ந்தபின் அப்பெருமானை யிறைஞ்சி, யான் வழிபட்ட இவ்விரவு சிவநசியென வழங்கவும், இந்நிசியிலே நான்கு ஜாமமும் பூஜை செய்தவர்கள் தமது பதவியடையவும் வேண்டுமென் றிரந்து வரம்பெற்ற விரதமாம்.

அவ்விரதமானது மாசிமீ அமரபக்ஷம், சதுர்த்தசியுடன் கூடின நடு ராத்திரியாம். அவ்விரத மனுஷ்டிக்கிறவர்கள் திரயோதசி யன்றுபவாச மிருந்து அன்றிரவிற் றுயின்று சதுர்த்தசியன் றதிகாலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து நித்தியானுஷ்டானம் முடித்துக் கொண்டு பஞ்சமர்களுடன் வசனியாமலும், வியாபார விவசாயம் இராஜ காரியங்களையும் ஒழித்து, அன்று அன்னபானாதிகளில்லாமலும், அன்றிரவு துயிலாமல் ஆகமங்களிற்கூறியபடி சிவபூஜைசெய்து கொண்டும் அமாவாசை கலவா முன்னம் பாரணை செய்ய வேண்டியதுந் தவிர அன்று பகற் பொழுது துயிலைநீத்தும், சாயரட்சை அன்னபானாதிகளருந்தாதும் இருந்து துயில்வேண்டும். இவ்விதமாகப் பக்தி சிரத்தையோடு விரத மனுஷ்டித்தவர்கள் சிவசாரூப்பியத்தைப் பெறுவார்கள்.



இவ்விரதத்தைப்பற்றிக் கூறிய நூல்கள் பல வற்றில் அர்த்தராத்திரிக்குப் பின்னும் முன்னும் சதுர்த்தசி எக்காலத்தில் ஆரம்பிக்கிறதோ அக்காலமே சிவராத்திரியென்றும், அக்காலத்தில் பூசை செய்து சிவனை யாராதிக்கவேண்டு மென்று, காமிகத்திலும், குமாரதந்திரத்திலும் கூறுகின்றன. திரயோதசியுடன் கூடினும், அமாவாசையோடு கூடினும், எவ்விரவில் அர்த்தராத்திரி வியாபகமாகச் சதுர்த்தசி யிருக்கின்றதோ அவ்விரவே சிவராத்திரியென சுவாயம்புவாகமத்திலும், கிரணாகமத்தும் கூறும். ஆனால் இவவிதமாக சதுர்த்தசியோடு அமாவாசை கூடினால் பிரம்மத்தியாதி தோஷங்கள் தீருமென்று சிந்திய முதலிய ஆகமங்கள் கூறுகின்றன. இரவில் இரண்டாவது மூன்றாவதா ஜாமங்களை மகாசிவராத்திரி யெனப்படுமென்று பாராசரஸ்மிருதியினும், சுவாயம்பு மனுவாகமத்தினும் கூறுகின்றன. இவ்வித மேறக்குறைய வித்தியாசங்களுடன் இவ்விரதத்தைப்பற்றிப் பல நூல்கள் கூறியிருப்பினும் அனுஷ்டிக்க வேண்டியதாவது யாதெனில்,

### மகா சிவராத்திரி கற்பகம்.

ஆகமத்து மாராய்ந் தமலசிவ * ராத்திரியின்
மாகத்திற் பூசனை சொல்வாம் 5

ஒன்றுடனு மொன்றுச் சதுர்த்தசியினர்ச்சிக்க
மற்றவது தான் மத்திமம் 11

திதித்திரையஞ் சேர்ந்த சிவராத்திரிதான்
மதிக்கிலிரு வர்க்கும் வரம் 16

பசிக்கழிந்தா னீரலது பால்பழந்தானற்பம்
புசிக்க முதல் யாமம் பூசித்து 29

அற்றை நிசியுறங்கா தர்ச்சித்துப் பாரணத்தை
மற்றைய நாட்செய்கை வரம் 30

ஆரணனை யருச்சித் தமுதருத்தி யன்பர்க்குப்
பாரணத்தை நீ பின்பு பண் 31

---

* சௌரமானப்படி கும்பத்திற் சூரியனணுகி பின் வரும் மாக மாத அமரபக்கச் சதுர்த்தசி உத்தமமும், சாந்திரமானப்படி வரும் மாகமாத அமரபக்கச் சதுர்த்தசி மத்திமமும், சாந்திரமானப்படி பால்குண மாத அமரபக்கச் சதுர்த்தசி அதமமுமாமென்று, காரணம், காமிக முதலிய ஆகமங்களுங் கூறுகின்றன.

பாரணஞ் செய்தான் பகலுறங்கி னூற்றுவரை
யாரணரைக் கொன்ற பழியாம் 32

நின்மலனை நூல்விதியினர்ச் சித்த நேசர்க்குப்
பன்னவல்லாராரே பலம் 38

கடனுறவிக் கற்பகத்தைக் கற்றவர் கேட்டாரு
மடைவரமலன் சிவ லோகம் 39

சிவராத்திரி புராணம் [ஸ்ரீ

பகர்தருபாரண முழுவாப் புணர்ந்திடுமுன்பலன் கொள்கைவர் பன்னணவே
முகநருமுப்புர மெரித்த பரமனுயர் கீர்த்திகளை யெடுத்து முன்னோர்
புகல் சரிதை பாராட்டிப் பிற்பொழுது போக்கியெழுபுரவித் தேரோ
னகல் பொழிதிற் கடன் கழித்துத் துயில்வரன்றையந்தியன்ன மருந்தலாக.

## திருமண்காப்பின் பிரபாவம்.

சத்சம்பிரதாய தர்சன நிர்வாக சதாசாரிய கடாக்ஷ விசேஷ பாத்திர பூதர்களாகிய பிரபன்னர்கள் சித்தோபாய நிஷ்டர்களால், ஸ்ரீ சைலேசதனியன் றொடங்கித் திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுதாம்பு, திருப்பாவை, பிரபன்ன காயத்திரியாகிய இராமாநுஜ நூற்றந்தாதி இத்யாதிகளைக் காலோசிதமாக முறைப்படி யநுசந்தித்துக்கொண்டு, திருமண்காப்புச் செய்துகொள்ளுந் தருணத்தில் தத்துவாரா அந்தப்பாகவதர்களுடைய இளங்கோயில் என்னுந் திருமேனியவயவங்களில், தயா சக்திகளோடுகூடின துவாதச மூர்த்திகளாய் நித்திய முக்தர்களோடுகூடிக் கிருபைபெருக விளையாடி மகிழ்ந்து போதுவர்கள்.

அஃதெவ்வாறெனின்—"ஓராறுபேத சமயங்களுக்கு முருவாகி நின்றவொருவன், ஈராறு நாமமுறைசெய்து மண்கொடுவார் மெய் காணுமிமையோர்" என்றபடி கீழ்ச்சொல்லிய பரமசாத்விகமூமுட்சுக்களுடைய திருமேனியில் லலாடப் பிரதேசத்தில் கேஸவன் என்கிற திருநாமத்தோடு இலக்ஷ்மிதேவி பிராட்டிசகிதராய் நான்கு சுதர்ஸனாழ்வார்களைத்தரித்தும், குட்சியில் நாராயணன் என்னுந் திருநாமத்தோடு அமிர்தோத்பவை யென்பவளோடும், வக்ஷஸ்தலத்தில் மாதவன் என்னுந் திருநாமத்தோடு கமலாவெனும் பிராட்டி சமேதராயும், கண்டத்தில் கோவிந்தன் என்கிற திருநாமத்தோடு சந்திர சோபினியோடும், வலப்புறவயிற்றில் விஷ்ணுவென்னுந் திருநாமத்தோடு விஷ்ணு பத்தினியென்பவளோடும், வலதுபுயத்தில் மதுசூதனன் என்னுந்திருநாமத்தோடும் வைஷ்ணவதேவியோடும் வலது தோளில் த்ரிவிக்கிரமன் என்னுந் திருநாமத்தோடு வாராரோகிணியென்பவளோடும், இடப்புறவயிற்றில் வாமனன் என்கிற திருநாமத்தோடு ஹரிப்பிரியை என்கிற தேவியோடும், இடப்புயத்தில் ஸ்ரீதரனென்கிற திருநாமத்தோடு சார்ங்கிணி தேவியோடும், இடது தோளில் ஹிரிஷிகேசன் என்னும் திருநாமத்தோடு தேவதேவியோடும், முதுகடியில் பத்மநாபனெனும் பெயரோடு மஹாலக்ஷ்மியோடுகூடியும், பிடரியில் தாமோதரனென்னுந் திருநாமத்தோடு சர்வலோக சுந்தரியோடும்கூடி யெழுந்தருளியிருந்தும் சேவை சாதித்துப் போதுவர்கள் (இவை வியூகமூர்த்திகளாம்)



முராஹா நகதாமுதந்த மாதவா என்னும் வர்ணமெட்டு.

துவாதச திருநாமகீர்த்தனை.

இம் ஆரபி ஆதிதாளம்.

B கண்ணிகள்

தேசின் மிகுந்தமேலா வாசுதேவ சுசீலா
கேஸவா ஓம்நமோ நாராயணா—பர
மேசுரனே வேத பாராயணா. ()

முற்சோ முகனைக்கொல்ல மெய்ச்சோர்வில் லாதவல்ல
மச்சாவ தாரங்கொண்ட நாராயணா—தெருண்
மாதவனே வேத பாராயணா. ()

சீர்மிகுந் தேவர்துக்க ஆர்வமுடன் றுதிக்கக்
கூர்மாவ தாரங்கொண்ட நாராயணா—திவ்ய
கோவிந்தனே வேத பாராயணா. ()

தராதலஞ் சிறக்க நராதிபர் புரக்க
வராகரூபங்கொண்ட நாராயணா—எங்கும்
வயங்கும் விண்டுவே வேத பாராயணா. ()

கருதும்பாலகன் வேண்ட கனகனுரத்தைக் கீண்ட
நரசிங்க ரூபங்கொண்ட நாராயணா—[illegible]
நன்மது சூதவேத பாராயணா. ()

வரிசைக்ரமங்களைய அரசர் [illegible]
பரசுராமனாய் நின்ற நாராயணா—திருப்
பாவை சமேதவேத பாராயணா. ()

மாவலிக்காக விந்த மூவுலகுமளந்த
வாமன ரூபங்கொண்ட நாராயணா—அருள்
மன்னு ஸ்ரீதரவேத பாராயணா. ()

தோரு நிலையினின்ற மூராவணனை வென்ற
ஸ்ரீராமனாக நின்ற நாராயணா—திரு
சோபித வாதிவேத பாராயணா. ()

வலராக்க தரையெல்லாம் சிலையான் மடிக்கவல்ல
பலராம நுபங்கொண்ட நாராயணா—பராத்
பாரிஷி கேஸவேத பாராயணா. ()

அரிஷ்ட வர்க்கங்கள் தூற பிரஷ்டரினத்தைக்கோற
கிருஷ்ணவ தாரங்கொண்ட நாராயணா—ஓங்கிய
பத்மநாப வேத பாராயணா ()

விற்கொண்ட துஷ்டர் கொட்டமடக்கும் வீரப்பிரதிஷ்ட
கற்கியுருவா நின்ற நாராயணா—நாளுங்
காளிந்தி தேவிகீத பாராயணா. ()




## ஏகாதசி விரதம்.

இன்னங் கேளுங்களரசர்களே! உலகத்தில் அநேககோடி விரதங்களிருப்பினும் அவையாவுந் திரண்டோருருவாயினும் ஏகாதசி விரதத்துக் கிணையாகாவாம். அதன் பிரபாவம் சுருக்கிச் சொல்கிறேனென்றுரைக்க வாரம்பித்தார்.

### ஏகாதசி விரத மகாத்மியம்.

நீதிவழுவாம னெறியோடு செங்கோல் செலுத்தி
மாதவத்தினுற் சிறந்த மன்னவரே கேட்டிடுவீர். 79

வேதனையுமீன்று விளங்குகின்ற மாதவனை
ஓதரிய தெய்வமதனிலுயர் தெய்வமில்லை. 80



ஸ்ரீதானர்பக்தி செலுத்துதற்கே காதசிபோல்
பூதலத்தில் வேறுபுகலும் விரதங்களில்லை. 81

மார்கழி மாதத்தில் வளர்பிறை யேகாதசியில்
ஓர்பொழுதா னாலுமன்ன முண்ணா திருந்தவர்கள். 87

செய்தபவ மெல்லாந் தினகரனைக் காணிமம்போல்
நையவகலு நமனுலகே ருராவுரே 88

இன்னமுங்கேள் வேந்தே இயல்விரத நற்பெருமை
நன்னல மாயுன்னி நரர்களதை நோக்கவெனில் 95

தசமிதனி லோர்பொழுது தாம்விரத மாகவுண்டு
வசையிலே காதசியில் வாகாயன மகற்றி 96

பசிதாணி னீக்குதற்குப் பால்கிழங்கு தாமருந்தி
நிசிமுப்பதின் கடிகை நித்திரைசெய் யாதிருந்து 97

நன்றிற் றுவாதசியி னன்கா மனமருந்தி
அன்றிரவு தன்னிலுமே அன்னமுண் ணாதகற்றி 98

விரதஞ் செலுத்தவல்ல மேதினிவாழ் மெய்யறிஞர்
ஹரிபதத்திற் சேர்வா ராசேசீ யின்னமுங்கேள் 99

ஏகாதசிவிரத மேற்றுவரு வோர் பிதுரர்
வாகாய் சுவர்க்க மிசை மன்னி மகிழ்வாயிருப்பர் 100

விரதம்புரி வோர்கள் விண்பெத மேவுவர்கள்
சரதமொடு வேதை யென்ற தன்மையைக் கேண்மன்னவனே 104

மங்கையர்களோடு மகிழும் போகந்தவிர்த்து
சங்கையுட னெண்ணெய் தலையினிற் றேயாதகற்றி 133

அம்மூன்று நாளும் அசத்தியம் பொய்சொல்லாது
செம்மையில்லா நீசரிடஞ் செய்தியொன்றும் பேசாமல். 134

தரணிதனில் வாணிபத்தின் றக்கதொழில் நாடாது
கிராமங்கிருஷித் தொழில்களுஞ்செய் யாதகற்றி. 135

வாது பகராமன் மற்போர் புரியாமல்
கோதில்லா தாம்பூலங் கொள்ளாம லேயகற்றி. 136

ஏகாதசிபோலு மினிய விரதமில்லை
வாகா யிவைகளெல்லாம் மன்னவனே நிச்சயங்கள். 40

## திருக்கோவிலில் செய்யாக்குற்றங்கள்.

கேளுங்களரசர்களே தேவாலயங்களில் இயற்றக்கூடாத நிஷேதங்களைச் செய்யாது சுத்தி பத்தியோடு செல்லவேண்டியது தவறி நடந்தால் நரகம் பிராப்தியாம். இதற்கு,

மகாசிவராத்திரி கற்பம்

திருக்கோயி றன்னின்மலம் ஜலம்விடுத லுமிழ்தல்
திருவிளக்குச் சாயையிலிங்கச்சாயைக் கடத்தல்
ஒருக்காலாய் வலம்வருத லோடி வலம்வருதல்
ஒண்டொடி வேசியர் புணர்த லுற்றவரை நினைத்தல்
மருக்கமழ் நின்மாலியத்தைச் சிவன்றனைக் கோமுகையை
வழிகடத்த லாடையின்றி மருவுதல்கான் றுமிழ்தல்
பெருக்க நீறணியாமை பெலிப்பற்று மிதித்தல்
பெலிபீடங் குறுக்கிடுதல் பெருமான் சந்நிதியில்

இதுவுமது

வறுடனே தூபிதுசத் தண்டு பலிபீடம்
இலிங்கமிவை சாயைமிதித் தேகுதல் பொய்ம் மொழிதல்
பேறிழவே யசுசிபிறர் தாரத்தை விரும்பல்
பெரும்புனலா விருபாதம் கழுவாமை சயனம்
தேறுபாக்கிலை தின்றுந் தம்பலமு முமிழ்தல்
திருக்கோயி னியமத்தைச் செய்தவத்தோர் தங்கட்
காரணியுஞ் சடைமுடியா ராகமத்திற் சொலுமிவ்
வாறைந்தோ டிரண்டுகுற்ற மாகா வன்றே

இவ்விதமாயுள்ள நீதிகளையும் தெய்வீக சம்பத்தும், அசுர சம்பத்தும் எடுத்துரைத்து சாதன சதுஷ்டயங்களையும் முத்திக் கேதுவாகும்படி போதித்து ஆசீர்வதித்தார்கள். இதனை பிரபோதயன் முதலான இருபத்து நால்வரும் கேட்டு அவ்விருடி கணங்களுக்கு சோடசோபசாரங்கள் செய்து வழியனுப்பவே, அன்னவர்கள் செலவு பெற்றுக்கொண்டு தங்கடங்க ளாச்சிரமங்களை நோக்கிச் சென்றார்கள். இந்தப்பிரகாரம் ஆரிய முனிவர் நாரதாதி யோகிகளுக் குரைத்தானந்த மடைந்தார். மற்றைய முனிவர்களுங்கேட்டு சந்தோஷப்பட்டார்கள்.

ஓம் தத் சத்

நான்காவதத்தியாயம்

முற்றும்.

ஸ்ரீ காமாக்ஷியம்மன் துணை.

# ஐந்தாம் அத்தியாயம்.

[illegible]— A. கட்டளைக் கலித்துறை.

பூரணயோகக் கலைக்கோட்டார் செய்தபுகழ் மாத்திற்
பூரணமாய்வந்த தேசாதிபர்கள் புலவர்பணி
பூரணியா ளருளாலே திருக்கச்சி பொன்னகரும்
பூரணமான விசாலாவதியும் புரந்தனரே.

## வாணிபஞ் செய்விக்க யோசித்தல்.

கேட்டீரோ நாரதமுனிவரே! உலகெலாம் மதிக்க அறிஞர்கள் துதிக்க இவ்விருநாட்டரசரும் பல்கா லொருங்குகூடி அளவளாவி மநுநீதியைக்குறித்து தீர்க்காலோசனை செய்து செங்கோல் வழுவாமல் நெடுங்காலம் அரசுபுரிந்துவந்து அவர்களுக்குப் பின் சந்ததியார்கள் முறையே அரசு செலுத்தி வருங்காலத்தில், அரசுதன்மை பூண்டவருக்கும், இராஜதானியில் வசிக்கும் பிரஜைகளுக்கும், மலைப்பிரதேசம் முதலிய நாட்டவருக்கும்; தீவு தீவாந்தரங்களிலுண்டாகும் அபூர்வ வஸ்துக்கள் எழுதிலடையக் கூடாமையைப்பற்றி அன்னோர்களவஸ்தைப்படுவதை கச்சியரசன் கேள்வியுற்று மக்கடவாஜ னுடன் கலந்து யோசித்து தன்னுயிர்போல் மன்னுயிரைக் காப்பாற்ற லன்றோ அரசர்க்கழகென மதித்து, யாம் அபூர்வவஸ்துக்களையடைந்து சுகித்திருக்கவும் ஏனையோர் அதனை அடையாதிருத்தல் தகுதியன்றெனமதித்து, இது நிமித்தம் தமதன்பனை பொன்னித்துறைவ னுடன் யோசித்து சிலரைவருவித்து இவ்விஷயத்தை யெடுத்தோதி வேண்டும் பொருளீந்து தீவு தீவாந்தரங்களிற்சென்று அங்குள்ள அபூர்வ வஸ்துக்களைச் சேகரித்துக் கொண்டுவந்து, இப்பிரதேசங்களிலுள்ள பிராஜைகளுக்கு நயவிலைக்கீந்து சுகப்படுத்துவீரென்று விடைகொடுத் தனுப்பினார்கள்.

[illegible]— A. விருத்தம்.

திருவளர் மும்முடியிறை பாலனஞ் செய்காலஞ்
ஜெயசோழன் கச்சியரிற் சிலபேர்தன்னை
வரவழைத்தா தனத்திருத்தி யின்சொற் கூறி
வளர் பிரிதிவீசன் வம்சத் தோரே நீங்கள்

பெருவணிக மியற்றிச் சாலுக்கு மூலைப்
பெற்றிசெய்வீ ரெனவேண்ட வியந்து தங்க
ளரசனுடன் கூறிவிடை கொண்டின்புற்றே
யார்த்திட்டார் சரக்குவகை சேர்த்திட்டாரே.

## வாணிகஞ் செய்வது.

கேளும் நாரத முனிவரே இவ்விதமாகக் கச்சியரசனும் உரையூர் பூபதியும் யோசித்து அந்நாட்டிலுள்ள வணிகர்களுக்கு தம் குலத்தாரிற் சிலரையும் சேனாபதிகளையும் அனுப்பிவைக்க அவர்கள் அவ்விதமே சென்று அங்குள்ள நவரத்தினங்களையும் இன்னம் அதிசயிக்கத்தக்க வஸ்துக்களையும் நயவிலைக்குக் கொண்டார்கள். இதற்கு,

### அறப்பளீசர் சதகம்.

நீள்கடல் கடந்திடுவர் மலையாளமும் போவர்
நெடிய தூரந் திரிந்து
நினைவுதடு மாறார்கள் சலியார்கள் பொருடேடி
நீணிலத் தரசுபுரியும்
வாணுழவரைத் தமது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வராத விடமும்
மனதையு மறிந்துதவி யொன்று நூறுயிட
வளர்ப்பவரு திலை துலைக்கும்
ஆள்விடுவர் மலிவுகுறைவது விசாரித்திடுவ
ரளவில் பற்பல சரக்கும்
அமையுறக் கொள்வர் விற்பார் கணக்கதிலணுவு
மறவிடார் செலவு வரிலோ
ஆளியொத் தேமலையி னளவுங் கொடுத்திடுவ
ரருள்வரிய ரூமை மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீச் சுரதேவனே. ()

## நவரத்தினங்கள் கொள்ளுதல்

பின்னும் சிலர் வேறு தீவாந்தரங்களுக்குச் சென்று யாசப் பசுவின் இரத்தம்—மாணிக்கங்களாகவும்.

பற்கள்—முத்துக்களாகவும், மயிர்கள்—வைடூரியங்களாகவும்
எலும்புகள்—வயிரங்களாகவும், பித்தம்—பச்சைகளாகவும்
நிணம்—கோமேதகங்களாகவும், தசை—பவழங்களாகவும்



கண்கள்—நீலங்களாகவும் கபம்—புஷ்பராகங்களாகவும்

உண்டான நவரத்தினங்களை ஆதிவாரத்தில் (பதுமராகமென்று சொல்லக்கூடிய) மாணிக்கங்களையும் கோமேதகங்களையும்,
சோமவாரத்தில்—முத்துக்களையும், வைடூரியங்களையும்
மங்களவாரத்தில்—பவழங்களையும்
புதவாரத்தில்—பச்சைகளையும்
குருவாரத்தில்—புஷ்பராகங்களையும்
சுக்கிரவாரத்தில்—வைடூரியங்களையும்
சனிவாரத்தில்—நீலங்களையும் விலைமதித்து

இவைகளுக்குண்டான குற்றங்களாகிய வேறுநிறச் சார்பு, புள்ளி, புள்ளடி, கீற்று, தாரசம், எனச் சொல்லும் ஐவகைக் குற்றங்களையு நீக்கி சுத்தமாயுள்ள இரத்தினங்களை விலைக்குக் கொண்டார்கள்.

வேறு சிலர் வலாசூரன் கபத்தாலுண்டான புஷ்பராகங்களையும், மயிராலுண்டான வைடூரியங்களையும் இளாவிரத கண்டத்தி லிராநின்றகோரக்கம், மகதம், சிங்களம், மலையம், பாரசீகம், திரிகூடமென்னும் தேசங்களில் பெற்றும், வேறு சிலர் அவ்வரக்கன் கண்களாலுண்டான நீலங்களில்,

வெள்ளை கலந்தது—பிராமண நீலமென்றும்
சிவப்புகலந்தது—க்ஷத்திரிய நீலமென்றும்
செம்பொன்னிறம் கலந்தது—வைசிய நீலமென்றும்
கறுப்பு கலந்தது—சூத்திர நீலமென்றும்

சொல்லக்கூடிய இரத்தினங்களைப் பெற்றார்கள். வேறு சிலர் ததீசி மகாமுனிவரது எலும்பாலுண்டான முதல் ஜாதி வைரங்களைக் கோசலை நாட்டில்

மேலே ஒளிவீசினால்—முதற்றரமென்றும்
வலப்புறமொளிவீசினால்—இரண்டாந்தரமென்றும்
இடப்புற மொளிவீசினால்—மூன்றாந்தரமென்றும்
கீழே ஒளிவீசினால்—நான்காந்தரமென்றும்

சொல்லக்கூடிய வைரங்களை நயவிலைக்குக் கொண்டார்கள். இவைகளைப்பற்றி

### பனிரண்டாவது நிகண்டு.

மாகத பவளநீலம் வச்சிரம் பதுமராகம்
விரவிய தரளமே கோமேதகம் புருடராகம்
உரவிய காந்திவிட்டே யுமிழும்வை டூரியந்தான்
பெருகிய நவமணிக்குப் பெயரிவை யாகுமென்ப

### முத்துக்கள் கொள்ளுதல்.

வேறுசிலர் பற்பல தீவாந்தரங்களுக்குச் சென்று
வெண்மைநிறமுடைய—யானையின் கொம்பினிலுண்டானதும்
இளஞ்சூரியனிறமுடைய—மேகத்தினிலுண்டானதும்
மழைத்துளிநிறமுடைய—மூங்கிலிலுண்டானதும்
இரத்தநிறமுடைய—பன்றிக்கொம்பினிலுண்டானதும்
நீலநிறமாயிருக்கிற—பாம்பின்சிரசிலுண்டானதும்
பச்சைநிறமுடைய—செந்நெல்லிலுண்டானதும்
பாதிரிப்பூநிறமுடைய—மீன்முத்துக்களும்
பொன்னிறமுடைய—கரும்பின் முத்துக்களும்
வெண்மைநிறமுடைய—சிப்பி, சங்கு—கொக்குத்தலை,
முதலை, வாழை,—பதிவிரதைகளின் கண்டம், இவைகளிலும் தாம
ரையிலுமுண்டான முத்துக்களையும் கொண்டனர்.
உடும்பு—சந்திரகிரணம் இவைகளிலுண்டானதையுங் கொண்டார்.

### இரத்தினச் சுருக்கம்.

தந்திவராக மருப்பிப்பிபூகந் தனிக்கதலி
நந்து சலஞ்சல மீன்தலைகொக்கு நளினமின்னார்
கந்தரஞ் செந்நெல் கழைகன்ன லாவின்பல் கட்செவிகா
ரிந்து உடும்பு கரா முத்தமீனு மிருதுபமே.

### பலதினுசு சரக்குகள் கொள்ளுதல்.

வேறு சிலர் பலதீவிலுஞ்சென்று பொன், வெள்ளி, தாம்பிரம், பித்தளை, வெண்கலம், முதலிய லோகங்களும், சூரியகாந்தக் கற்களும், சந்திரகாந்தக் கற்களும்; பளிங்குக்கற்களும், சாலக்கிராமங்களும், வலம்புரிச்சங்குகளும்: உருத்திராக்ஷங்களும், பீங்கான் சாமான்களும், பலவிதப்பதுமைகளும், கண்ணாடிச் சாமான்களும், மற்றுமுண்டான பிரதேச அபூர்வவஸ்துக்களையும் பலசாக்கு தினுசுகளையும் சரசவிலைக்குப் பெற்றார்கள்.



இன்னஞ் சிலர் பலதிசைகளிலுஞ்சென்று கஸ்தூரி, அரிதாரம், மனோசிலை, கடுகு, ரோகணி, சவ்வீரம், சித்தரத்தை, கர்ப்பூரம், துத்தம், பூப்பூரம், துருசு, நாவி, தேசாபரம், பத்திரி, காடிக்காரம், தாளிசப்பத்திரி, சீனிக்காரம், சித்தாமுட்டி, வாய்விளங்கம், சிங்கி, செந்தூரம், தேவதாரம், பரங்கி, பச்சைக்கர்ப்பூரம், தக்கோலம், செவ்வியம், அயப்பொடி, பாளம், சதகுப்பை, நீர்வாளம், அத்தர், பன்னீர், சுகந்தம், கெந்திப்பூ, அகிற்காரம், சிறுதேக்கு, அசமதம், கல்நாரு, வெங்கயம், கடுகு, சிறுநாகம், கார்போகம், வசம்பு, மிகு ஜாதிக்பிலே, வால்மிளகு, காமப்பூ, வித்தரிசி, அதிவிடயம், ஏலம், ஜாதிக்காய், வெட்டிவேர், கசகசா, கோட்டம், முக்காய், சித்திரமூலி, சித்திரநீலம், கெந்தகம், காந்தம், காயம், லிங்கம், சீரகம், திரிகடுகு, குங்குமம், இலவுங்கம், நவச்சாரம், கோரோசனை, அதிமதுரம், ஐவகை உப்பு, பழங்கூகை நீறு, குங்குமப்பூ, கருஞ்சீரகம், ஓமம், மல்லி, மிளகு, மஞ்சள், இஞ்சி, தேன் மெழுகு, முதலிய சரக்குகளும் கொண்டார்கள்.

[illegible] — A விருத்தம்.

இந்தவண்ணம் பலவகையாஞ் சரக்கும் பொன்னும்
இன்னு முளபல சாமானிறைவு செய்து
வந்தசில கோத்திரத்தா ராயிரம் பேர்
மகிழ்ந்து குலதேவதையாங் காமாக்ஷித்தாய்
சுந்தரியாள் பதமலரைத் துதித்துவாழ்த்தித்
துணைவாது விடைபெற்றுத் தேசந்தோறும்
வந்துவிற்கப் பொதிகடமைக் கப்பல்சேர்த்து
மகிழ்ந்திட்டா ருமைகாக்கப் புகழ்ந்திட்டாரே.

### சரக்குகளை விற்கிரயஞ் செய்வது.

இவ்விதமாக வணிகர் தேச தேசங்களிற்சென்று, தாங்கள் கொண்டு வந்த சரக்குகளை மரக்கலங்களிலேற்றிவந்து தமது நாட்டில் யாவருங்கூடி அவரவர்களின் சரக்குகளை எடுத்துக்கொண்டு பலதேசங்களுக்கும் கொண்டுபோய் விற்பனைசெய்தும், பல மலைப் பிரதேசங்களிலும், சிற்றூர்களிலும் போய் யாவருங்கண்டறியாத அபூர்வ வஸ்துக்களை விற்கிரயஞ் செய்துகொண்டே தெங்கன்ன டம், கொங்கு, சோணாடு, தமிழ்நாடு முதலான தேசங்களில் விற் பனை செய்துகொண்டு குடநாடு வழியாய்ச் சென்றார்கள்.

## சேரதேசவளம்

### தனிப்பாடற்றிரட்டு

வடக்குத்திசை பழனி வான் கீழ் தென்காசி
குடக்குத்திசைக் கோழி கூடாம்— கடற்கரையின்
ஓரமோ தெற்காகு முள்ளெண்பதின் காதம்
சேரநாட் டெல்லை யெனச் செப்பு

இந்நாட்டை, பண்டைக்காலந் தொட்டு ஆண்டுவந்தவர்களாகிய அக்கினியினிடமா யுற்பவித்த ஆங்கிரசினுடைய வம்மிசத்திற ரேன்றி னோனைவரும் அக்நிகுலத்தார்களே யாண்டு வந்தார்களாம். இவ் வம்ச ஆதிபுருஷனை ஆங்கீரசு அக்கினியி லுற்பவித்தவரென்பதற்கு,

### மகாபாரதம் அநுசாசநிக பர்வம்

ஜக்ரா ஆங்கிரஸம் தேவ: சிகீதஸ்மாத் ஹுதாசந:
தஸ்மா தாங்கிரஸா: க்ஞேயா: ஸர்வஏவ ததந்வயா:

அக்நிகுல மென்பது சேரனுக்குடைய தென்பதைப்பற்றி பல பிரமாணங்கள் கூறினும் துரோபதையை மாலையிட்ட சருக்கத்தில்

### வில்லிபுத்தூரார் பாரதம்

இவன் சல்லியனென் றுரை சான்ற விகல்வேன் மன்னற் கேறனையா
னிவன்றன் பகைவர் யாவரையு மிமையோராக்குமெழி னீல
னிவன் றண்டமிழ் தேரடல் வழுதியிவன் றேரிரவிகுலவளவ
னிவன் செந்தழலோன் மரபாகி யீரேழுலகும் புகழ் சேரன்.

இஃதன்றி அக்கினி குலமென்பதும் வன்னிகுல மென்பதும் ஒன்றேயாம். தவிர இவ்வம்மிஷத் தவர்களைப்பற்றி,

### நல்லாப்பிள்ளை பாரதம்

"கோல வன்னி கதையீதெனச் சில
குறித்து மீழ்வி து கூறினன்"—எனவும்

### செம்பொற்சிலை யெழுபது

"சிலையினிற் றிடங்கூர் வன்னியர் * சிலையன்றிச்
சிலை மற்றுண்டோ"—எனவும்.

* சிலையென்பது = இவ்வம்ஸஸ்தர்களுக்குரியது வில்லாம்.



### திருக்கை வளம்

"சீராரும் வன்னிகுலச் செல்வர் முடிதரித்துப்
† பாராளச் செங்கோலைப் பற்றுங்கை"— எனவும்

### சிலப்பதிகாரம்

"ஓரைவ ரீரைம்பதின்ம ருடனெழுந்த
போதிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த சேரன்"-எனவும்.

### கல்லாடம்

"தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கு
நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்"—எனவும்.

### ஔவை

"சிரம்பார் மணிமவுலிச் சேரமான் றன்னைப்
புரம்பாடி யான்கேட்கப் பொன்னு டொன்றீந்தான்"- எனவும்.

### கம்பர்

"கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான்
பொற்கையனுன கதை போதாதோ"—எனவும்

### வல்லாளராஜன் சருக்கம்

"புலத்தினை வென்ற மோனர் புகழு ‡ மூவகையுள் வன்னி
குலத்தினின் வருமன்னுநின் கோதிலா தருமங்கேட்டு"—எனவும்.

கூறியபடி இவ்வித சிறப்பெய்திய அக்நிகுலத் தரசர்களுக்கு இன்னம் "சேரலர்கோன் சேரன் செழும்பூத் திருக்கோவில்— வளரளந்தான் வருக"—எனவும், "கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்—வருணனே மாமலையன்" எனவும் கூறியபடியும், இன்னம்

### அருணாசலப்புராணம்

சத்திய மொழியா னற்குண முடையோன்
றன்னுயிர் மன்னுயிராகப்

† பாராள = என்பது இவ்வம்ஸஸ்தர்கள் பரம்பரை யரச சந்ததியாரென விளங்குகிறது (க்ஷத்திரியர்களேயாம்.)

‡ மூவகையென்பது = சேர, சோழ, பாண்டியர், இப்படியே. தவிர ரீவரண்டு உல்லியம் டெய்லர் எழுதிய பாண்டியன் சரித்திரம் இரண்டாவது வால்யூம், 55-வது பக்கத்தில் சேர, சோழ, பாண்டியர்கள் அக்நிகுலம், சூரிய குலம், சந்திரகுலத்தி லுற்பவித்தார்களென விருக்கிறது.

பத்தியாய் நாளும் பாதுகாத்திடு வோன்
பகருஞ் சேர நற்குலத்தோன்—எனவும்.

இன்னமும் இவ்வரசர்களுக்கு வஞ்சிவேந்தன், வன்னியராயன், மலையமான், சேரன், குடநாடன், வில்லியன், கொல்லிவேந்தன், எனப் பலபெயர்களமைந் தவர்களாய் பொருனையாறு, கொல்லி மலை, யானை, பாடலம் பரி, வில் கொடிவஞ்சிநாடு, முரசு, மோந்தின் மாலை, தேர் இவைகளை தசாங்கமாகக் கொண்டு அரசுபுரிந்து வந்தார்கள். அவைகளாவன,

"யாறு மலையும் யானையுங் குதிரையும், நாடு மூறும் கொடியும் முரசும்—தாருந் தேருந் தசாங்க மெனப்படும்." எனத் திவாகரத்தி லுங் கூறியுள்ளன.

போரூர்ப் புராணம்

பரிதியொடு வெண்மதி பரிக்க வொளிநல்கு
முருசெமு கனற்புதல்வ னுண்ட வொரு சீரா
லிருசுடருயிர்த்தவர்க ளாண்டவிரு நாட்டின்
குருவென விளங்கியது கொங்கு வளநாடு

எனக் கூறியபடி இவ்வம்ஸஸ்தர்கள் வெகு செருக்குடன் சேர னாட்டை யரசாட்சி செய்து வருங்காலத்தில் அந்நாட்டின் காவலர் கள் இவ்வணிகரைக் கண்டு நீங்கள் கொண்டுவந்த சரக்குகளுக்கெல் லாம் சுங்கங் கொடுத்தா லல்லது அப்புறம் போகவொண்ணா தென் றும், இவ்விடத்தில் நிற்கவொண்ணா தென்றும் மறுக்கவும், அதற் கவர்கள் பகருவதாவது கேளுங்கள் காவலர்களே! யாம் கச்சி யர சர்கள் ஏவலால் வந்த வணிகர்களாலும், சாமானிய வணிகரன்று; தவிர யாங்கள் அநந்தந் தேசங்களுக்குச் சென்று சரக்குகளை விற் பனை செய்துகொண்டு வந்தோம் உங்களை யல்லது மற்றெவரும் இறைவரி கேட்டதை யறிந்திலோம். அன்றியும் பல சரக்குகளை யுங் கொணர்ந்து பல தேயங்களிலும் வசிப்பவருக்குப் பரோபகார மாய் எங்களரசராஞ்ஞைப்படிக்கு நயவிலைக்கு விற்றுவருகிறோமே யொழிய ஆதாய மனுசரித்து வாணிகஞ் செய்ய வந்தவர்களன்று. ஆனதுபற்றி உங்களரசனுக்கு இறைவரி கொடோமென்று மறு மொழி கூறினார்கள்.





## வணிகருக்குங் காவலர்களுக்குந் தர்க்கம்.

B. இட்—பியாகு ஆதிதாளம்.

காவடிச்சிந்து மெட்டு.

(௧) வாணிகஞ் செய்யும் பெரியோரே—எங்கள்
மன்னவரிறைதருவீர் நேரே—இந்த
மாநில மெங்கணும் புகழ்—கோனவனாட்டினிற்றிகழ்
மான மொடுதாலுங்கள் கடமை—யாவும்
மாறினாற் சரக்கு மெங்களுடைமை ()

(௨) உடைமை யென்றுரைத்த சுங்கத்தாரே—நாங்கள்
உலக மெங்கணுந்திரி வோரே—இங்கு
ஒட்டியர செட்டிபல வேட்டியிறை வாங்குவது
உள்ளபடி யொவ்வாத பராதம்—வேதம்
ஓதிடும் நீதிக்குமே விரோதம் ()

(௩) நீதிமுறை கண்டசெல்வத் தோரே—நாங்கள்
நிச்சயித்த சுங்கந்தரு வீரே—வெகு
நேர்த்தியிது நேர்த்தியிர்த பார்த்திப னறிந்துவிட்டால்
நிமிஷத்தி லுங்கள்தலை சாயும்—வீண்
நிஷ்டுர வார்த்தைகளேன் ஆயும் ()

(௪) ஆயும் பொழுதுங்க ளடம்விடோ—செல்லு
மாகிலெங்க ளாட்சியற் பங்காடோ—இட
ராழியிற் றியங்குமவர் மீளுவதன்றோ வதுபோல்
ஆணவத்தைக் காட்டன் முறையாமோ—பெரு
மாணவர் பொல்லாங்கு நலமாமோ ()

(சு) நலமென்றும் பொலமென்றும் பேசி—யெங்கள்
நரபதியை யேசுகிறீர் சீச்சீ—யிங்கு
நட்டமுற வுங்கள்பொருள் கட்டிவைத்த பொதிகளை
நாசமாகச் சிறைவைப்போம் பாரீர்—வாது
பேசினுற் செல்லாது போம்போம் தேரீர் ()
(வ) தேறிய வல்லாள ரெங்கள் மன்னரே—மாறு
கூறினுற் கருவறுப்பார் பின்னரே—முனஞ்
சேணுலகத் தோரும்புகழ் பாணருந் துதிக்குந்திகழ்
தேவியைச் சரணடைந்த வீரரே—எங்கள்
தேசாதிபதிகள் சுங்கக்காரரே ()

## சுங்கர் தமதரசனுக்குத் தெரிவித்தல்,

கேளும் நாரதரே—சோனது காவலாகிய சுங்கக்காரர்கள் அவர்களாலியன்ற மட்டும் வணிகரிடம் வாதாடியும் இறைவரி வாராதெனத் தெரிந்தவர்களாய், தமதரசனுக்குத் தெரிவிப்பதற்காகச் சிலர் வில்லவனிடம் தெரிவிக்கவும் அவ்வேந்தன் கேட்டுச் சினமடைந்து யாவராயினுஞ் சரியே இறைவரிகவராது அப்புறம் விடாதீர்களென் றுஞ்ஞாபித்துச் சில காவலர்களையும் அனுப்பிவைத்தார். அன்னவர்கள் வந்து வணிகரைக்கண்டித்து வரிகேட்கவே அதையுணர்ந்தவர்கள் திகிலடைந்து தமதுட் சிலரைக் கச்சிக்கேகச்செய்து அரசனுக்கறிவிக்கவும், அதைக்கேட்ட மும்முடியரசனும் மற்றுமுண்டான மந்திரிகளும் சேனுதிபதிகளும் யோசித்து இது நன்றாயிருக்கிறது; நீதிமுறைப்படி நடத்தல் கடமையென மதித்து தமதரசக் கணக்கரை வரவழைத்து ஓர் நிருபம் சோ ராஜனுக் கெழுதலாயினர்.

## கச்சியர் திருமுக மெழுதுவது.

சுவஸ்த ஸ்ரீமான் ஜம்பு மகாரிஷியின் வேள்வியிலுற்பவித்த என தன்புக்கிசைந்த ஹக்நிகுலச் சீமானே கெடி வன்னிய மிண்டா, ரணவன்னிய பிரியா, கோஷ்டத்து வன்னிபராய கோலாகல சீமானே சிலையேந்துங் காத்தேரனே "ஆரங்கெடப்பா னன்பர் கொள்ளாரென்றவர்களுக்கே—வாரங்கெடக் குடப்பாம்பிற் கைவிட்டவன் மாற்றலரை—வீரங்கெடுத்த செங்கோற் கொல்லி காவலன் வில்லவர் கோன்—சேரன் குலசேகரன் வேந்தர் சிகாமணியே" என்று கூறியபடி இவ்வித பெருமைபெற்ற வம்ஸத்திலுதித்த பெருமானே ஸ்ரீமன் மலையரசே நினதன்பர்களாகிய மும்முடியரசர் வந்தனஞ்செய்தெழுதிய நிருபமாவது, அங்குற்ற வணிகர்கள் நமதேவலால் வந்த



வர்களேயன்றி வேறன்று. எமது நட்பு உமக்கு வேண்டுமாயின் அவர்களிடம் இறைவரி கவராது விட்டுவிடுவீ ரென்றெழுதி, பின்னும் அவ்வணிகர்கள் பல தேயங்களிலுமுண்டான அபூர்வ வஸ்துக்களை இத்தென்னுடுகளிற் பரவச்செய்யு நிமித்தமே அவர்கள் வாணிகம் செய்கிறார்களே யொழிய, ஆதாயத்தைக்குறித்து வாணிகஞ்செய்ய வந்தவர்களன்று ஆதலின் அன்னோரிடம் வரி கேட்காது விட்டுவிடவேண்டிய தென்றெழுதி இராஜமுத்திரையிட்டு தமது தூதரிடம் சேரதேசத்துக்குக் கொடுத்தனுப்பினார்கள். அந்நிருபத்தைப்பெற்ற தூதுவர்கள் அதிவேகமாகப் பொன்னிநாடுங் கன்னிநாடுங் கடந்து குடநாடு போய்ச்சேர்ந்து அரசிருக்கை மண்டபத்திருந்த வஞ்சி வேந்தனுக்கு நமஸ்கரித்துத் திருமுகத்தைக் கொடுத்தார்கள். அதைப் பெற்று வாசித்தறிந்த சேரதேசாதிபதியானவர் புன்சிரிப்புடன் தமது பிரதானிகட் காஞ்ஞாபித்துத் தமது கணக்கரைத் தருவித்து மறுமொழி எழுதலாயினர்.

## சேரதேசாதிபதி மறுமொழி நிருபம்.

ஸ்ரீ ராஜ மஹான்ய ராஜ ஸ்ரீ சாதுவம்ஸ குலதிலகாகிய மும்முடி யரசர் பெருமானே! தொண்டநாட்டை யரசுபுரியுந் நரைசிங்கமே நிர்மலதீபம்போன்ற வித்வசிகாமணியே உமக்கு அநேகவந்தனந் தந்தனன். நினது நிருபம் கிடைத்து சங்கதியறியலாயினன். வேற்றரசருக்குப் பயந்து அன்னவரது நட்பைக்கொண்டு நமதரசக்கு விக்கினமின்றி நடந்துகொள்வோமென் றெண்ணங்கொண்ட கச்சியரசனே நீயும் ஓரரசனென சிரசில் மும்முடி புனைந்திருப்பது உலகத்தாருக்கு பெருநகைப்பன்றோ? அன்றியும் உமது ஏவலாளர்களாகிய வணிகரை துஷ்டவர்களென்று முன்னறிந்தே சுங்கம் கேட்டனம். அஃது கொடாது கார்க சக்தியுடைத்தா யிருந்தாயானால் உம்மாலானதைச் செய்வீர். அல்லவெனில் இறைவரி கவராது விடுவதில்லை கண்டீர். தவிர உமது வணிகர்களையும் சாக்குகளையும் சிறைப்படுத்தினேம் என்று வரைந்து அரச முத்திரையிட்டுத் தூதர்வசங் கச்சிக்குக் கொடுத்தனுப்பிவிட்டு சாக்குகளையும் வணிகரையும் சிறைப்படுத்தினர்.

## கச்சியர் ஆலோசனை.

பின் நடந்ததைக் கேளுமென்று ஆரியமுனிவர் நாரத மஹரிஷிக்குக் கூறுவார். அவ்வரசனுல் கொடுக்கப்பட்ட நிருபத்தைப்

பெற்ற தூதர்கள் ஓடோடியும் வந்து கச்சி ஸ்தலத்தையடைந்து தமதரசனை வணங்கித் தாங்கள் கொண்டுவந்த நிருபத்தைக்கொடுத்து சிரந்தாழ்த்தி வணங்கிப்போயின பின், அந்த ஆஸ்தான மண்டபத்தில் யாவரும் அறியும்படி அந்நிருபத்தை வாசிக்கவே அங்குள்ள யாவருக்கும் கண்களில் நெருப்புப்பொறி பறக்க மீசைகள் படபடவென் துடிக்கக் கர்ச்சித்து அரசனைப்பார்த்து சில வசனங்கள் கூறுவர். முன்னமேயாம் நிருபம் வரையாது நம் தளத்துடன் அங்குசென்று அவ்வரசனுடன் போர்புரிந்து வென்று வாகைமாலை சூடியிருப்போமாயின் இவ்வித இகழ்ச்சியுடன் அன்னவன் நிருபம் எழுத இயலாதே; ஆதலின் இனி சும்மா இருப்பதில் எப்படியாகுமெனின்.

— A கண்ணிகள்

சிங்கமானது மங்கினால் யானை
பொங்கி மேல்விழுந் தடித்திடும்—பூனை
திகைத்துச் சோம்பினால் மிகுத்தெலிகள் போய்
நகைத்துத் தன்றலை கடிக்குமே
பொங்கி யவிடந் தங்கு நாகந்தான்
சிங்கினாற் பிள்ளைப் பூச்சியாம்—உக்ரப்
புலி யொடுங்கினால் மெலியும் புல்வாயினன்
வலியுளேன் புலிநீ தாழ்ச்சியாம் (1)

என்னுமே நமது முன்னுளோர் வீரஞ்
சொன்னாலே பசி போய்விடும்—பிரீதி
விஸ்வரன் வம்ச தாஷ்டிகஞ் சொன்னால்
வாஸ்தவங் கல்லும் வாய்விடும்
பன்னு மந்தகன் றன்னைக் கொன்றுலகர்
மன்னுந் துன்பத்தை நீக்கினான்—ஆதி
பரமனால்மிகு வரமுங் கொண்டுபல்
விருது களுமுண் டாக்கினன் (2)

அந்த வம்ஸத்தில் வந்ததும் அன்றி
சுந்தரி யினருள் பெற்றுந்தில்லை
ஆண்டநீர் கலைக்கோட்ட ரருளால்
காட்டும் பிரணவம் உற்றும்
இந்தப் பகைக்குச் சிந்திப்ப தென்ன
அந்தரீ அருள் நேரே—கொண்டு
எட்டிலாகிப் போய்வெட்டு வோமவனைக்
கட்டளை தருவீரே (3)



இவ்விதமாய் ஆக்ரோஷ முடையவர்களாய் நாம் எழுதிய இனியமொழி அவ்வரசனுக்கு மனதிற் படாது வீணாயிற்று என மந்திரிகளாலோசித்து மக்கட தேசாதிபதியை வரவழைத்து யுத்த சன்னத்தராயம்மனைத் தியானித்துத் துதித்தார்கள்.

B லாவணி-இம்-நாதநாமகிரியை-ஏகதாளம்.

எம்மைக் கை தூக்கியாளுந் திருவே—நாங்கள்
என்னேரமுமுனது பொன்னடி மறவேம்
திருவடி மறவேம்— (எ)

இன்னல் புரியுந் துஷ்டர்—இனத்தை யடக்குந்தேவி
பன்னு முபநிடதம் பரவு வெங்கோவி
பக்தர்க்கு மாவி— (எ)

பஞ்சக்கரத்தி நீயே—பாவை காமாக்ஷித்தாயே
அஞ்சக்கரங்கொண் டெம்மை யாதரிப்பாயே
அபயஸ்த மீயே— (எ)

உடல்பொரு ளாவிமுற்று—முமதடைக்கல மென்றே
ஒப்புவித்தோ மன்னையே வுவந்தருளின்றே
உயிர்ப்பகை வென்றே— (எ)

ஞானபலங்கள் தாரும்—நாராயணி விசாலி
தானந்தவ விரதம் தங்குந் திரிசூலி—
தாங்குங் கபாலி— (எ)

## கச்சியர் குடகுநாடு சேர்ந்தது,

இவ்விதமாக இருபத்து நான் கரண்மனையாரும் அம்பிகையினையஞ்சென்று வலம் வந்து துதிக்கவும், அம்பாள் அசரீரியாய் ஆகாயத்திலிருந்து மக்கண்மீர் நீங்கள் மலைநாடு சென்று வெற்றி பெற்று வருவீர்களென் றாசீர்வதித்தனள். அதைக்கேட்ட யாவரும் சந்தோஷங்கொண்டு உற்சாகத்துடன் வெளியில் வந்து நவரத்தின கசிதமய வாடை யாபரண லங்கிதராய் சதுரங்க தளத்துடன் சிங்கக்கொடி பறக்க செம்பொன்னாற் செய்து வெள்ளிச் சக்கரங்கள் பூட்டி மணிகளொலிக்கும் இரதங்களி லாரோகணித்து. பதினெண் வகை மேளவாத்தியங்கள் தாம்தாமென முழங்கச்சென்று சேர நாட்டை யணுகிக், கோட்டையை முற்றுகைபோட்டு அநந்தரம் யோசிக்கலாயினர். இவ்வரசனுக்கும் நமக்கும் திருமுகத்தின்படிக்கு வாசகமல்லது நேரிற் சந்தித்துப் பேசியதில்லையாயினும் அன்னோனைக்கண்டு பேசியபின் நடக்கவேண்டியதை யோசிக்கலாமென்று

அவ்விறைவன் சமுகம் நேரேசென்று வந்தனை வழிபாடுகள் செய்ய, பின்பவனால்விடப்பட்ட வாசனங்களிலிருந்து கொண்டு சில வார்த்தைகளாடினார்கள். அவையாவன.



மலையரசனுக்கும் மும்முடியரசனுக்குந் தர்க்கம்.

சோதிபதிநாடகத்திலுள்ள —A. கண்ணிகள்.

(பைரவி-இம்-அடாணா-ரூபகதாளம்)

(மும்) மன்னனான மலை மன்னனே நீரிந்த
வின்னஞ் செய்ய லாகுமோ—புதிதான
வழக்கஞ் செய்திட்டால் இழுக்கில்லாமலே
மொழுக்க எவரா லாகுமோ ()

(மலை) மன்ன வசனங்கள் பன்னவந்தீரதை
இன்னொரு தாஞ் சொல்லும்—நான்கேளாத
எங்குள்ள வார்த்தையை யிங்கு புகலவந்தீர்
அங்கு தானே நில்லும் ()

(மும்) நில்லுமென்றே வெறு வல்லமையாகவே
சொல்லுதல் கூடாது—வெகுவித
நிஷ்டூர வார்த்தைவாய் விட்டுச் சொன்னீர்நீதிச்
சட்டத்தை நாடாது ()

(மலை) நல்லது நீரிங்கு சொல்லவருகிற
புல்லறிவு மேது—அதுதனை



நானறியும் வகை யானபடியாய் நி
தானமதா யோது ()

(மும்) ஓதக்கேள் * கஞ்சுக்கும் மீதான † பிஞ்சுக்கும்
நீதியாய்ச் சுங்க முண்டோ—பலசரக்
குள்ளதற்கு தீர்வை கொள்வதலால் மீதி
விள்ளுவ தென்ன கண்டோ ()

(மலை) ஈதென்ன காரண மோதவந்தீரது
நீதியல்ல காணும்—என் தேசத்
திருக்கும் செயற்கைப் பெருக்க மறியா
துரைக்கில தென் தோணும் ()

(மும்) கொல்லத் தெருவிலும் நல்லூசி மாறல்போல்
வல்லமை செல்லாதே—எவருக்கும்
கூறுள வீரமுந் தீரமுந் தாரமும்.
ஓரிடம் நில்லாதே ()

(மலை) புத்தி சொலத்தரு வித்தேனோ நீரொரு
மித்துச் சண்டை தொடுப்பீர்—தொடுத்திப்போ
பொங்கார மாயுத்த மிங்கே செய்யாவிடில்
சுங்கந்தனைக் கொடுப்பீர் ()

(மும்) அம்மையருளினா லும்மை ஜெயித்து நாய்
செம்முடி சூட்டி வெல்வோம்—இன்றுமுதல்
ஐந்து நாளைக்குள்ளே உன்றன் சேனையெல்லாம்
சிந்தவடித்துக் கொல்வோம் ()

(மலை) உம்படையும் உம்மை நம்பிவந் தோரையும்
கும்பலோடே யடிப்பேன்—கணத்தினில்
சுழிக்காற்றிற் பஞ்சின் றூளியைப் போலிந்த
நாளதிலே மடிப்பேன் ()

இவ்விதமாய் ஒருவர்க்கொருவர் தர்க்கம் பேசிக்கொண்டு இறைவரிகவராது வணிகரைவிடேனென்று சேரன் சொல்லவும், கொடாது செல்வோமென்று மும்முடியனுரைக்கவும் தர்க்கங்கள் முற்றி முடிவில் யுத்தஞ்செய்தலே தகுதியென்று இருதிறத்தாருந் தீர்மானித்துக் கொண்டு ஓர் நாளைக்குறித்து நிச்சயத்துக்கொண்டார்கள்.

* கஞ்சுக்கு மென்பது—வெண்கல முதலிய லோகங்கள்.

† பிச்சுக்கு மென்பது—நவரத்தினங்கள் முதலியவைகள்.

## சிரோமணியினது சாமுத்திரிகா லக்ஷணம்.

இக்கச்சியர் நகரத்துக்கு வெளியே கூடாரமிட்டு வசித்திருக்குங்கால் அந்த சேரவரசனது மகளாகிய மங்கையர்க்கரசி மனோன்மணியெனுஞ் சிரோமணியானவள்,

செம்பஞ்சுபோற் சிவந்து மெல்லிய ... பாதவரிசையும்
முத்துக்கள் பதித்த பவளக்கரணைபோன்ற ... விரல்களும்
வச்சிரம் பதித்ததுபோல் ... ... நகங்களும்
பந்துபோற் றிரண்டிருக்குங் ... ... குதிகால்களும்
புத்தகம் போன்ற ... ... புறவடிகளும்
தாளம்போன்ற ... ... ... கணுக்கால்களும்
அலவன்களைப் போன்ற ... ... முழங்கால்களும்
யானையின் றுதிக்கையைப் போலும் } ...
இளவாழைத்தண்டைப் போலும் } ... துடைகளும்
உடுக்கையைப்போல ... ... இடையும்
நீர்ச்சுழியைப் போன்ற ... ... தொப்புளும்
பாம்பின் படம் போன்ற ... ... அல்குலும்
விஸ்தாரமா யொளிவுற்ற பத்தரை
மாற்றுத் தங்கக் கலசங்கள் போலும்
செவ்விளநீர்க் குரும்பையைப் போலும் } ... கொங்கைகளும்
மூங்கிற் குருத்துப் போன்ற ... ... தோள்களும்
காந்தள் மலர் போன்ற ... .... கரங்களும்
மிருதுவாகக் குறுகிப் பரந்த ... ... அகங்கைகளும்
சுத்தமான ... ... ... இரேகைகளும்
அன்று பாளைகழிந்த கமுகைப் போலும்
வலம்புரிச் சங்கைப் போலுமுள்ள } ... கழுத்தும்
செந்தாமரை யிதழ்கள் போலும்
மகாமச்சப்பார்வையினை யுடைய } இருவிழிகளும்
சிங்காணி விற்களைப் போன்ற ... ... இருபுருவங்களும்
வள்ளைத்தண்டு போன்ற ... ... காதுகளும்
மூன்றாம்பிறை போன்ற ... ... நெற்றியும்
குமிழம் பூவைப்போல ... ... நாசியும்
கோவைப்பழம்போல ... ... அதரமும்
ஆணி முத்துகள் போலும்
முல்லையரும்புகள் போலும் } ... பல்வரிசைகளும்



கண்ணாடிபோன்ற ... ... ... கபோலங்களும்
கார்மேகம் போன்றதும்
கருத்து நீண்டதுமான } ... ... அளகபாரமும்
பூரணச்சந்திரன்போன்ற ... ... திருமுகமண்டலமும்
அபரஞ்சிப் பொன்னைப்போன்ற ... திருமேனியும்
அம்மேனிக்குத்தக்க ... ... இந்திரவர்ணத் துகிலும்
நவரத்ன மிழைத்த ... ... சரிகைக்கச்சும்

பொலிவுற சூர்யபிறை, சந்திரபிறை, ராக்கிடை, ஜடைபலங்காரம், மூக்குத்தி, நத்து, புலாக்கு வயிரக்கம்மல் ஜிமிக்கி, அஸ்தகடகம், முத்தாரம், மோகனமாலை, நெற்றிச்சுட்டி, கொப்பு, முருகு, மயிர்மாட்டி, மாணிக்கப்பதக்கம், சரப்பளி, சூடகம், நாகவடம், வங்கி, பாசிபந்து, கைவளை, பாட்டிலா, மணிலா கொலுசு, ஒட்டியாணம், மேகலை, காலாழி பீலி, தண்டை கொலுசு சதங்கை இத்தியாதி ஆபரணாலங்கிர்தளாகி கண்களுக்கு மையிட்டு நெற்றியிற் கஸ்தூரித் திலதமிட்டு பின்னற் சடையுடை மின்னற்கொடிபோல் அன்ன நடையுடை வண்ணவுடையுடை குயின்மொழியாள் தனது மனதில் இடையறாது காமாக்ஷியம்மனை சதா தியானிக்கும் பக்தியுடைத்தாய் அம்பிகையின் கிருபைபெற்று கடைத்தேற வெண்ணும் விசாரமுடையவளாய், அன்பர்களாகிய கச்சியரசரிருக்குமிடம் தமது சேடியர்கள் புடைசூழ நடந்து அன்னோர்களது கூடாரங்களிற்போய்ச் சேர்ந்தனள்.

[illegible]—A விருத்தம்

மாது சிரோமணி யிவ்வகை தனக்குட் டோற்றும்
வகைகளெலாந் தன்னுளத்தி லுன்னிப்பன்னித்
தீதகலுங் கச்சியருக்குமை வந்தன்பாற்
சிறந்தவரங் கொடுத்தா ணந்தியா ளாமேனும்
எதிதனையவரிடஞ் சென்றறிவோ மென்றாங்
கியலுறு சேடியருடன் வந்திட வின்னோர் நன்
கோதி மகிழ்ந் துபசரித்துன் மைகளைக் கூறி
யொப்புவா ரவடனக்குச் செப்புவாரே.

கச்சியரின் பக்திக்குகந்து அவாது கட்பால் அம்பிகையின் அருள் பெற்றுய்ய வெண்ணிய மாது சிரோமணியானவள் அவரைக் கண்டு நமஸ்கரித்து தந்தையின் இராஜசபையில் தங்களுக்கும் தந்

தைக்கும் நடந்த சம்பாஷணையை உரைக்கவேண்டுமென வேண்டிக் கொள்ளலும், அன்னோர்கள் யாவற்றையும் சவிஸ்தாரமாய் விளம்பி ஓ அம்மணி நீயோ பருவகால மங்கையாயிருக்கின்றனை, நினது தந்தைக்கும் எமக்கும் ஏற்பட்டிருக்கும் விரோதத்தால் நீ இவ்விடமிருந்தால் உலகம் பழிக்குமன்றோ! தவிர உனது தந்தையும் உன்னை வெறுப்பார். ஆதலின் இங்கு நில்லாது உனது அந்தப்புரம் செல்வது நலமென்று கூறின கச்சியரைப் பார்த்து சிரோமணி சில வசனங்கள் கூறுவாள்.



சிரோமணிக்கும் கச்சியருக்கும் தர்க்கம்

A. கண்ணிகள் மோகனம் ஆதிதாளம்

(சிரோ) உங்களைத்தான் நம்பி வந்தனள்—சிலசந்தேகம்
உண்டது கேட்க இயைந்தனள்
எங்குஞ் சத்தியிருக்க இக்குலங் குற்றமேது
அங்கத்தாற் பெண்ணுமற்—றெங்கான் யாவுக்கேது
பங்கிய வுலகியல் தங்கிய பொய்க்கட்டு
அங்கனமெனினமக் கெங்ஙனம் வருஞ் சொட்டு
பார்க்கில் நாமவுரு ஜாதிகள் பொய்யே
தீர்க்க பூரணசி தானந்தம் மெய்யே (2)

என் அண்ணமாரே இம்மானிட ஜென்மம் எடுப்பதேபரிது. அதிலும் பூர்வ கர்மவினைப்பயனால் எடுத்த ஜெனனங்களிலும் கூன்



குருடு செவிடு ஊமை பேடு முதலான அங்கவீனமின்றிப் பிறத்தலரிது. அவ்விதம் ஜனித்தாலும் ஞானமும் கல்வியு நயத்தலரிது. நயத்த காலையில் தானமுந் தவமுந் தான் செயலரிது. செய்திடினும் அதின்படி நிற்றலரிது. நின்றிடினுந் * தன்னைத் தானாகக் காண்பதரிது. அறிந்திடினும் இதயத்தின்பமெய்தலரிது. எனக் கூறி அநித்தியமாகிய இந்த வாழ்நாளானது நீரோட்டத்துக்கும் கால சக்கிரத்துக்கும் சமானமாயுள்ளதும், தாய் தந்தையர் பெண்டுபிள்ளை சுற்றத்தார் யாவரும் சந்தையின் கூட்டத்துக்குச் சமானம் ஆதலின் இதைக்குறித்து உலகப்பழிப்பு வருமெனப் புகன்றீர். சத்தியாகிய உமையவளிருக்கவும் நமக்கு யாது குறையெனக் கூறினள். [ஆண் பெண்உரு உடற்கேயாம் உயிருக்கிவை கிடையாது.]

(கச்சி) நல்லது சத்தியின் பேரு—கண்டவள்போலே
சொல்ல வந்தா யதைக்கூறு
வல்லவ ளிருப்பிடமும் நல்ல பீஜாக்ஷரமும்
சொல்லுமதன் சக்கரமும் செல்லுங் கர்த்தர் திறமும்
மற்றவள் செயலினி லுற்றது மிவளருள்
பெற்றவ ருயர்பதி பெற்றது மிவைபொருள்
மறைகளோதிய துறைப்படி நாட்டு
அறிவினுளநின் னனுபவங்காட்டு. ()

கேளுஞ் சிரோமணியே நீயோ சிறுவயதுடையளாயினும் அன்பு ஆசாரம் கல்வி அடக்கம் பொறுமை முதலிய நற்குண நற்செய்கைகளிற் சிறந்தவளாயிருக்கின்றனை யென்பதை யறிந்தோம் சத்தியெனப் புகன்றனையே அதுவிஷயம் யாவருமறிய அதைச்சுருங்க சம்மதப்படி விவரித்துரைக்க வேண்டுமெனக் கேட்டார்கள். இதற்கு அவளுரைப்பது—

## பராசத்தியென்பது

### வீரநாராயணர் விஜயம்

பெத்தநிசை யுற்றுழலெம் போற்சிறியர்க் கிரங்கிமலம் பிரித்தங்கேந்திப்
புத்தமுதங் கொடுத்து முத்திசாதன மாநடை பயிற்றிப் புலன்வேறுக்கிச்
சித்தமுதிர் சிவமாக்கிச் சிவனருணடகங்காணுஞ் செயன் மேற்கொண்டு
தத்தமது மனவெளியூ டிருக்குமருட்டா யுபய சரணந் தாழ்வாம்.

* தத்பதார்த்தமாகிய பரமாத்மா வென்னும் மூன்றுவது வஸ்துவும் இருதயத்திலுள்ள அந்தராத்மாவும் ஒன்றென அறிந்து எங்குமவரே யெனமதித்து யாவற்றையும் நமஸ்கரித்தலே ஞானம்.

பாசத்தி லழுந்தி யுழலுகின்ற அடியேனை யொத்த அறிவீனர்களுக்குத் திருவுளமிரங்கி, ஆன்மாவைப் பந்தித்துள்ள ஆணவ மலத்தைப் பிரித்தெடுத்து, தியானமென்னும் புதிய அமுதத்தை யளித்து, மோக்ஷசாதனத்துக்குரிய நடைகளைப் பயிற்சிசெய்வித்து பசுகரணங்களைப் பதிகரணங்களாக்கிச் சித்தத்தினிடத்தில் பெருமை யமைந்த சிவமயமோங்கச்செய்து, சதா அச்சிவத்தி னருணடனந் தரிசிக்கும் கிர்த்தியத்தைப்பூண்டு, அவ்வவ் வான்மாக்களினது மனமென்னும் வெளியிடத்தில் வீற்றிருக்கும் 'அருண்மாதாவாகிய' பராசத்தியாருடைய இரண்டு திருவடிகளைப் பணிவாம் என்றபடி ஞானத்தை விளக்குவது நீளாதேவியி னம்சமாகிய உமையவளாதலின்—பார்வதிதேவியே சிற்சத்தியாம். திரிகரண சுத்தியுடன் யாதாமொருவன் பக்தியுடன் பணிகின்றானோ அன்னவனுக்கு எக்காலத்திலும் இடையூறுகள் வராதென்பதாம். இதற்கு

சாந்தலிங்க சுவாமிகள்

இணையின் ஞானபூரணன் முழுதுணர்ந் தமைத்திட்டவாறல திங்கே
யணையுருதொரு தீதெமக்க வன்றரினர் தடுப்பவர் நெஞ்சே
பணைகொடா வரமான மின்மையி னுருப்பற்றி நின்றில கொல்லோ
உணையுரு துடற்காவல் கைவிடுதி யூழுள்ளவா விடாதென்றே.

பின்னும் உலகத்திலுள்ள எவ்வஸ்துக்களிலும் பெரியது மலை. அம்மலையைத் தமது சிறுவிரலாற்றூக்கிய மணிவண்ணனுடைய தங்கையும், மலைகளுக்கெல்லாம் பெரிய மேருவை வில்லாகக் காத்திலேந்தியவருடைய வாமபாகத்திலிரோநின்ற மகிடாசூரமர்த்தனியுமாகிய பராசத்தியாம். அகில லோகங்களிலுமுள்ள அனேகத்திலு மறச்சிறியது அணு. அவ்வணுவினுள் மறைந்துலாவும் சத்தியெனவுங் கூறினள், "எனவே மகத்தினுமகத்தும் அணுவினுமணுவாயுள்ளவ ளென்றபடி" எனவும் "அணுவினுக்கணுவா யப்பாலுக்கப்பாலுக் கப்பாலா" யென ஔவையார் அமுதவாக்காலும் "சத்தியாகிச் சிவமாகி" யெனு மான்றோர் வாக்காலுமறிக. இதற்கு

சிவபுராணம்.

ஆதிசக்தி மயம்பீஜம் பீஜசக்தி மயம்சிவ:
சிவசக்திமயம் விஷ்ணு சர்வம் விஷ்ணுமயம்ஜகத்

கேட்டீரோ அண்ணன்மாரே சிவபெருமானது நெற்றிக் கண்ணிற் றோன்றிய தீப்பொறிகளைக் கண்டஞ்சியகன்ற அம்பிகையாரது



திருவடிகளிலணிந்துள்ள பாதச்சிலம்பின் நவமணிகள் சிதறி அம்மணிகளும் நவசத்திகளாயின வென்பதற்கு

கந்தபுராணம்.

எண்ணிலா நவ மணிகளினுமையுரு வெனைத்துங்
கண்ணினுற் றெரிந்தருளினல் வம்பெனக் கழற
வண்ணவோர் வகை மணிக்கொரு சத்திகளாக
நண்ணினர் நவ சத்திகளமரர் நற்றவத்தால்

இவ்விதமாய்த் தோன்றிய சத்திகளும் தானேயாகிய பராசத்தியை யெவ்வாறு துதிக்கவேண்டுமெனின், அதிகாலையில் ஸ்நானஞ் செய்து ஆகமவிதி தவறாத விதியின்றிலதமிட்டு ஒருமனதாய் "எண்சாணுடம்பிற்கும் சிரசே பிரதானம்" என்றபடி சிரந்தாழ்த்தி துதித்திறைஞ்சி எங்களது குற்றங்களைப் பொறுத்து, குணங்களைக் கொண்டு போக மோக்ஷங்களை யருளவேண்டுமெனத் தியானிக்க வேண்டியது.

தவிர அம்மனைப் பூசிக்கும்போது மனமொன்றெண்ணவும் கையொன்று செய்யவும், கண்ணொன்று காணவும், செய்யும் பூசையேற்காதென்றும், அவ்வித மில்லாது பஞ்சேந்திரியங்களையும் மனதையும் கூட்டி ஒரு நிலையில் நிறுத்தி கேசாதிபாதம் பாதாதிகேசமெனு மிருவிதத்தாலும் பூசிக்கவேண்டுமென்னும் சுருதி. இதற்கு

வெண்காட்டடிகள்

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேசப் புலால்கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே.

என்றபடியே சிவபெருமானையும் உமாதேவியாரையுங் கூட்டித் துதித்தலே தகுதியாம். தனித்துப்பூசித்த லுசிதமன்று.

இவையாவையுங் கேட்ட அக்கச்சியாசர்கள் அம்மணீ நீயோ சகலகலா வல்லவளாயிருக்கின்றனை, ஆதலின் நான்குவேத முதற் கொண்டு சகல கலை ஞானங்களின் திறத்தையும் உரைத்தருள்வாயென நயந்துகேட்க அவர்களுக்கம்மாது சிரோமணி கூறுவாள்.

கேளுங்கள் அண்ணன்மாரே அடியாளையும் பொருட்டாவெண்ணிக்கேட்ட விஷயங்களைத் தொகுத்துரையாமிடி லெனக்குச் சனா

சாபல்யமாகிச் சிவசாரூப்பியத்தை யடைய ஏதுவில்லை. எனது சிற்றறிவுக் கெட்டியவரைக்கும் சிவனடியாராதலின் உங்களுக்குச் சகல பூஜைகளையும் செய்தால் அம்பிகைக்கு மனமுவக்கும். ஆதலின் அடியாள் சர்வபிரகாரத்தாலும் உங்களுக்கு உபசரித்து தெரிந்த விஷயங்களை ஓதுவேன் கேட்டருள வேண்டுமென்று பகாலுற்றாள்.

## ஒன்றென்பது

பரமேசுரனே உலகாகவும், உயிராகவும், அவ்வுயிர்க்குள் ளுயிராகவும் தோன்றி நடிக்கிறார்.

## இரண்டென்பவை

நல்வினை—தீவினை,
இரவு—பகல்,
சுக்கிலபக்ஷம்—அமரபக்ஷம்,
இம்மை—மறுமை,
சம்யமம்—உபவாசம்,
தருமம்—அதர்மம்,
பேரின்பம்—சிற்றின்பம்,
ஆரோகணம்—அவரோகணம்,
மோக்ஷம்—பந்தம்,
ஞானம்—அஞ்ஞானம்,
சற்சங்கம்—துற்சங்கம்,
கர்மயோகம்—ஞானயோகம்
உத்தராயணம்—தக்ஷிணாயனம்
புண்ணியம்—பாவம்
வலம்புரி—இடம்புரி
யோக்யம்—அயோக்யம்
சுரர்—அசுரர்
பிரவிர்த்தி—நிவிர்த்தி
ஊர்த்துவகதி—அதோகதி
சத்தியம்—அசத்தியம்
ஒளி—இருள்
செல்வர்—தரித்திரர் இதற்கு

குகநமசிவாயர்

அச்செல்லா மொன்று யதிலே யிருவகையாய்
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே—இச்சையிலே
வாழ்ந்து சிலபேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்து சில பேரிருக்கத் தான்.

## மூன்றென்பவை

மூர்த்திகள்=பிரம்மா, விஷ்ணு, ருத்திரன்
சத்திகள்=சரஸ்வதி, இலக்ஷுமி, பார்வதி
முத்தொழில்=சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம்
அக்னிகள்=காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினியம்
யோகங்கள்=இராஜயோகம், அடயோகம், லயயோகம்
மேற்படி வேறு=அமிர்தயோகம், சித்தயோகம், மரணயோகம்



காலங்கள்=காலை, மத்தியானம், பிற்பகல்.
மேற்படி வேறு=இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.
இதிஹாசங்கள்=சிவரகஸ்யம், இராமாயணம், பாரதம்.
சேனையின் பிரிவு=அதிரதர், மகாரதர், சமரதர்.
பேரிகைகள்=வெற்றிமுரசு, வீரமுரசு, தியாகமுரசு.
குணங்கள்=சாத்வீகம், இராஜசம், தாமசம்.
கரணங்கள்=மனம், வாக்கு, காயம்.
அவஸ்தைகள்=சகலாவத்தை, சுத்தாவத்தை, கேவலாவத்தை
மலங்கள்=ஆணவம், மாயை, காமியம்.
ஈஷணைகள்=அர்த்தேஷணை, புத்ரேஷணை, லோகேஷணை.
நாடிகள்=வாதம், பித்தம், சிலேத்துமம்.
முக்குற்றங்கள்=காமம், வெகுளி, மயக்கம்.
சரீரங்கள்=தூலம், சூக்குமம், காரணம்.
இடங்கள்=பூமி, அந்தரம், சுவர்க்கம்.
நாட்கள்=காலற்றநாள், தலையற்றநாள், உடலற்றநாள்.
காலற்றவை=கார்த்திகை, உத்திரம், உத்திராடம்.
உடலற்றவை=மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்.
தலையற்றவை=புனர்பூசம், விசாகம், பூரட்டாதி.
திருவெண்ணீறு=கற்பம், உபகற்பம், அநுகற்பம்.
சந்நியாசிகள்=துரியன், அவதூதன், பரமஹம்சன்.
விவிதீக்ஷா சந்யாசிகள்=குடீசகன், வஹூதகன்—அம்சன்.
ஸ்நானங்கள்=நித்திய, நைமித்திய, சார்த்தாங்கம்.
மூர்த்திகள்=குரு, லிங்கம், சங்கமம்.
முத்தமிழ்=இயல், இசை, நாடகம்.
சோதிகள்=சோமன், சூரியன், அக்கினி. இதற்கு,

பனிரண்டாவது நிகண்டு.

மூன்றிடமென்பதன்மை முன்னிலை படர்க்கையாகும்
ஆன்றமூன்னிலைங்கள் பூமியந்தரம் சுவர்க்கமென்ப
மூன்று குற்றங்கள் காமமுதிர்சின மயக்கந்தானே
மூன்று சேர்ந்தடரோ திங்கள் முன்னந்தெழு பரிதியங்கி,

## நான்கென்பவை

வேதங்கள் = இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம்.
உபவேதங்கள் = ஆயுள், அர்த்தம், தனுர், காந்தர்வம்.
வேதப்பகுதிகள் = விதிவாதம், அர்த்த, மந்திர, நியாயதேயம்.
வேதாங்கம் = ஸ்மிருதி, புராணம், நியாயம், மீமாம்சை.
பாதங்கள் = சரியை, கிரியை, யோகம், ஞானம்.
கவிகள் = ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்.
உபாயங்கள் = சாமம், பேதம், தானம், தண்டம்.
கற்பு நிலைமை = * நாணம், மடம், அச்சம், பயிற்பு.
தண்டனை நால் = சபர்த்தி, சங்காதாணு, ருத்ரபவம், உமாபதி.
யுகங்கள் = கிரேதா, திரேதா, துவாபரா, கலியுகா.
ஜாதிகள் = பிரம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்திர.
திக்குகள் = கிழக்கு, தெற்கு மேற்கு, வடக்கு.
அந்தக் கரணம் = மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
தேவகணிகையர் = ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோர்த்தமை
ஆச்சிரமங்கள் = பிரமச்சர்யம், கூடஸ்தம், வானப்பிரஸ்தம், சந்யாஸம்.
குலம் நான்கு = சிவகுலம், சிகாகுலம், சோதிகுலம், சாவித்ரி குலம்.
பெண்கள் = பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி.
பூவகை = கோட்டுப்பூ † கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, இதற்கு.

அருண்மொழித் தேவர்.

கோட்டுமலருநிலமலருங்குளிர் நீர்மலருங்கொழுங்கொடியின்
மேட்டுமலருமாமலருஞ் சுருதிமலருந்திருவாயிற்
காட்டுமுருவநிலமலாக்கனகவரையிற் பன்னகநாண்
பூட்டுமொருவர் திருமுடிமேற் புனையலாகுமலர் தெரிந்து.

---

* நாணமென்பது = "நாணமே மடமே யச்ச நாட்டிய பயிற்பினென்கும் மானில மடநல்லார்க்கு வைத்தநற் குணங்களாகும்.

† பூவகை = "மரக்கோடு கொடி நில நீர்மலரும் பூக்கள்" என மரத்திலும் செடியிலும், கொடியிலும், நீரிலும் மலரும்.



## ஐந்தென்பவை

பஞ்சபூதங்கள் = ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, பிரிதிவி. [ராணம்
ஞானேந்திரியங்கள் = சுரோத்ரம், தொக்கு, சக்கு சிங்குவை, ஆக்
கன்மேந்திரியங்கள் = வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம்.
வருஷபேதங்கள் = சம்வச்சரம், அறிவச்சரம், இடாவச்சரம் அனுவச்சரம், இகவச்சரம்.
வாயுக்கள் = பிராணன், வியானன், உதானன், சமானன், அபானன்.
விஷயங்கள் = சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம்.
குற்றெழுத்துக்கள் = அ-இ-உ, எ-ஒ.
மூலவஸ்துக்கள் = அ-உ-ம்-, நாதம்-விந்து-(காலம்) [தீதம்.
அவஸ்தைகள் = சாக்கிரம், சொப்பனம், சுழுப்தி, துரியம், துரியா
* பஞ்சலிங்கங்கள் = பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.
இல்லற ரிஷிகள் = வசிஷ்டர், அகஸ்தியர், அயன், புயங்கரன், சம்பு.
தந்திரம் = மித்ரபேதம், சுகிர்லாபம், சந்திவிக்ரகம், அர்த்தநாசம், அசம்பிரேசம்.
பஞ்சாக்கினிகள் = காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷணாக்கினியம் சோமாக்கினி = சூரியாக்கினி.
யாகங்கள் = பிரம்மயாகம், தெய்வயாகம், பூதம், பிதுர், மானுடம்.
கவ்வியம் = பால், தயிர், நெய், கோமயம், கோசலம்.
தொழில் = சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம்.
சத்திகள் = பராசத்தி, சிற்சத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி
சயனங்கள் = அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, [மயிர்.
குழல்கள் = முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள்.
தருக்கள் = அரிச்சந்தனம், தேவதாரு, மந்தாரம், பாரிசாதம், கற்பகம்
கருவிகள் = தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக் கருவி, கஞ்சக்கருவி.

---

* பஞ்சலிங்கமென்பது, பிரிதிவிலிங்கம் காஞ்சியில், அப்புலிங்கம் திருவானைக்காவல், தேயுலிங்கம் திருவண்ணாமலை, வாயுலிங்கம் காளத்திரி, ஆகாயலிங்கம் சிதம்பரம்.

குதிரை நடை=மல்லகதி, மயூரகதி, இடபகதி, வியாக்ரகதி, வானரகதி.

அட்சரம்=* ந—ம—சி—வ—ய.

இலக்கணம்=எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

கோசங்கள்=அன்னமயம், பிராணமயம், மனோமயம், ஞானமயம், ஆநந்தமயம், இதற்கு.

### தத்துவ தீபிகை.

தூலமா மன்னகோசம் தூலத்திற் பிராணனுற்றல்
வாலிய பிராணகோசம் மன்னுமிம் மனோ மயத்தால்
சாலவே புத்தியுற்றல் தருமவ் விஞ்ஞானகோசம்
ஏலவே விடய முன்போ லியற்றலா நந்தமாமே.

## ஆறென்பவை

சாஸ்திரங்கள்=வேதாந்தம், வைசேடிகம், பாட்டாசாரியம், பிரபாகரம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை.

வேதாங்கம்=சந்தசு, கர்ப்பம், வியாகரணம், சிக்ஷை, சோதிடம் நிருத்தம்.

துற்குணங்கள்=காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மச்சரம்.

கோசங்கள்=சி, நரப்பு, தோல், இரத்தம், மாம்ஸம், அஸ்தி.

சுவைகள்=தித்திப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு துவர்ப்பு, கார்ப்பு.

ஆதாரங்கள்=மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை.

காணங்கள்=நாசி, நா, கண், மெய், செவி, மனம்.

## ஏழென்பவை

தாதுக்கள்=ரசம், உதிரம், மாம்ஸம், மேதை, அத்தி, மச்சை; சுக்கிலம்.

சாகரங்கள்=உவர் நீர்க்கடல், தேன்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், நெய்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், சுத்த நீர்க்கடல்.

* பஞ்சாக்ஷர மென்பவை=தூலபஞ்சாக்ஷரம், மோக்ஷ பஞ்சாக்ஷரமென இருவகைப்படும் "அன்பதெழுத்தே யமர்ந்த குறி வேதங்கள் - அன்பதெழுத்தே யாகமாதிகள் - அன்பதெழுத்தே யஞ்செழுத்தாமே" என ஆக்நேய புராணத்திற் கூறியுள்ளன.



இலிங்கவகை=பார்த்த, சுயம்பு, காண, தைவி, ஆரிட, மானுட, க்ஷணிக.

தீவுகள்=ஜம்பு, பிலச்சம், சான்மலி, குசம், புஷ்கரம், சாகம், கிரௌஞ்சம். [சிருங்கி.

பருவதங்கள்=மேரு, வியாசம், ஏமகூடம், நிடதம், நீலம், சுவேதம்,

சிரஞ்சீவிகள்=அசுவத்தாமா, பாவலி, பரசுராமர், மார்க்கண்டேயர், வேதவியாசர், விபீஷணர், அனுமார்.

சமபலஸ்தர்=பீமன், இடும்பன், கீசகன், பகாசூரன், ஜராசந்தன், துரியோதனன், மணிமாலன்.

பருவங்கள்=பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.

இசைகள்=தாரம், துத்தம், கைக்கிளை, விளரி, இளி, குரல் உழை.

தோற்றம்=தேவர் *மானிடர், மிருகம், பறவை, புழு, பச்சம், புற்பூண்டு.

ஞானபூமிகள்=சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அகஞ்சத்தி, பதார்த்தபாவனை, துரியம்.

### கைவல்ய நவநீதம்

புலவர் புகழ் முதற்பூமி சுபேச்சை விசாரணை யிரண்டாம் பூமி
நலந்தனுமானசி மூன்றாம் பூமி சத்துவாபத்தி நாலாம் பூமியாகும்
கொலமகஞ் சத்தி பேரும் பதார்த்த பாவனை பேரும் துரியப்பேரும்
மலினமறு மகனே யிந்தப் பூமிகளேழ்விதமாக வகுத்தார் மேலோர்.

## எட்டென்பவை

அஷ்டாங்கம்=இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி.

* ஊர்வன பதினொன்றாகும் ஒன்பான் மானிடர்தம் பேதம்
நீரினில் விலங்கு புள்ளு பத்தாகும் நெடியதேவர்
சாருமீ ரேழ்நாலைந்தே தாவர யோனிபேதம்
ஆருமெண்பா நான்கோடே அமைத்த நூறாயிரங்கள்.

இப்படி தேவர்—மனிதர்—மிருகம், பக்ஷி, பூச்சி, மச்சம், புல் முதலிய எழுவகையாக பிரம்ம சிருஷ்டியி லுற்பவித்தனவாம். இவைகளில்—புழுப்பூச்சி பதினொரு லக்ஷம், மானிடரொன்பது லக்ஷம், மச்சம் பத்துலக்ஷம், மிருகம் பத்துலக்ஷம், பக்ஷிகள் பத்துலக்ஷம், தேவர்கள் பதினான்கு லக்ஷம், புற்பூண்டு இருபது லக்ஷம் ஆக 84 லக்ஷம் அச்சுபேதம் மந்திரசம், சராயுசம், அண்டசம் சுவேதசம், உத்பீசம் ஆக யோனிபேதம் ஐந்து.

இராகங்கள் = காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், டம்பம், அகங்காரம்.

துற்குணங்கள் = ஆசை, கோபம், ஒழித்தல், பைத்யம், கர்வம், மகிழ்தல், இகழ்தல், ஆணவம்.

வசுக்கள் = அநலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்யூசன், பிரபாசன்.

திக்குப்பாலகர் = இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

பட்டணங்கள் = அமராவதி, தேஜோவதி, சமனுவதி, இரஜாவதி, சுத்தாவதி, அத்தாவதி, அழகாபுரி, வெள்ளிகிரி.

திக்குகள் = கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு.

தேவியர்கள் = இந்திராணி, சுவாகாதேவி, சாயளை, துர்க்கை காளிகை, அஞ்சனதேவி, சித்திரரேகை, பார்வதி.

வாகனங்கள் = ஐராவதம், ஆட்டுக்கடா, எருமைக்கடா பூதம், முதலை கிளைமான், குதிரை, ரிஷபம்

நாகங்கள = வாசுகி, அநந்தன், தக்கன், சங்கு பாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன்.

கிரிகள் = கைலை, இமயம், வடவிந்தம், நிடதம், ஏமகூடம், கந்தமாதனம், நீலகிரி, மந்திரகிரி.

கஜங்கள் = ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம்.

போகங்கள் = பெண், ஆடை, அணிகலம், போஜனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவணி.

ருத்திர சித்திகள் = ‡ அணிமா, மகிமா, இலகிமா, கிரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்வம்.

---

‡ அணிமா, மகிமா, இலகிமா, இம்மூன்றும் தேகத்தின் சித்திகள், மற்றை யைந்தும் ஞான சாதனமானவை. எவ்விதமெனின் பூத, பௌதிய; வர்த்தமானங்களை யறிகை, சிநேகாஷ்ணங்களைச் சகிக்கை, பிறத்யாருடைய இர்தயங்களை யறிகிறது, அக்கினி, ஜலம், விருக்ஷம் இவைகளை ஸ்தம்பிக்கப் பண்ணுகை, ஓரிடத்திலு மபஜயப்படாதிருக்கை; இவைகள் ருத்திர சித்திகளாம்.



## ஒன்பதென்பவை

நவப்பிரஜாபதிகள் = பிருகு, புலஸ்தியர், கிரது, ஆங்கீரசு, பரீஷி, அத்திரி, தக்ஷன், வசிட்டர், நாரதர்.

கண்டங்கள் = இந்திரதினம், கசேரு, தாமிரபாணம், கமஸ்திமான், நாகதீபம், சௌமத்யதீபம், காந்தர்வம், வாரண, பாரதம்.

உபாகமங்கள் = பாதப்பாரகம், பரம், சிவம், சத்தி, கலை, பிரகாசம், பாரதந்திரம், சிவைக்கியம், செர்ப்பிரகாசம்.

துவாரங்கள் = செவிகள், கண்கள், நாசிகள், வாய், யோனி, குதத்துவாரம்.

நிதிகள் = கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, நந்தநிதி, நீலநிதி, பதுமநிதி, மகாநிதி, மகாபதுமநிதி, முகூர்த்தநிதி.

நவரசங்கள் = காயம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம்.

கிரகங்கள் = புதன், குரு, சுக்கிரன், சனி, சூரியன், சந்திரன் செவ்வாய், இராகு, கேது.

நவநதிகள் = கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, சிந்து, சரஸ்வதி காவேரி, துங்கபத்திரை, தாமிரபரணி.

## பத்தென்பவை

நாடிகள் = இடநலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்திரி, உசா அலம்புடை, புருடன், குரு, சிங்கணி.

வாயுக்கள் = பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன்.

பொறிகள் = சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆநந்தம்.

புலன்கள் = செவி, உடல், கண், நா, மூக்கு, ஆகாசம், கால் கை, முகம், குய்யம்

ஞானக்காரணம் = சாஸ்திரம், தீர்த்தம், ஜென்மம், பிரதேசம், காலம், கர்மம், தீக்ஷை, தியானம், மந்திரம், ஞானம்

அவதாரங்கள் = மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம் வாமனம், பரசுராமன், ஸ்ரீராமன், பலராமன், கிருஷ்ணன், கற்கி.

### பன்னிரண்டு முதற் பதினாறு வரைக்கும்

சூரியன் பேர் 12 - வை கர்த்தனர், விவஸ்வதமூர்த்தி, மார்த்தாண்ட மூர்த்தி, பாஸ்கர மூர்த்தி, இரவி மூர்த்தி, லோகப்பிரகாசி, லோகசாக்ஷி, திரிவிக்ரமர், ஆதித்தியர், சூரியன், அம்ஸமாலி, திவாகரன்.

திதிகள் 15—பிரதமை, துதியை, திரிதிகை, சதுர்த்தி, பஞ்சமி சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசி.

உபசாரம் 16—ஆவாகனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புஷ்பதாரணை, தூபம், தீபம், நைவேத்யம், பாணீயம், ஆராத்திகை, ஜெப சமர்ப்பணை.

### பதினெட்டு முதலிருபத்துநான்கு வரைக்கும்.

புராணங்கள் 18 காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வாாகம், பைசியம், மார்க்கண்டேயம், பிரம்மாண்டம், சைவம், இவைபத்தும் சைவ புராணங்கள். நாரதீயம், பாகவதம், காருடம், விஷ்ணு புராணம், இவை நான்கும் விஷ்ணு புராணங்கள். பிரம்மம், பதுமம் இவ்விரண்டும் பிரம்ம புராணங்கள். பிரம்மகை வர்த்தம், ஆக்கினேயம் இவ்விரண்டும் அக்கினி புராணங்கள்.

ஸ்மிருதிகள் 19 மநு, அத்திரி, ஹாரிதர், விஷ்ணு, யாக்ஞவல்கியர், உசனர், ஆங்கிரசர், யமர், ஆபஸ்தம்பர், சம்வர்த்தர், காத்தியாயனர், பிரகஸ்பதி, பராசரர், வியாசர், சங்கலிதர், தக்ஷர், கௌதமர், சாதாதபர், வசிஷ்டர்.

தத்துவங்கள் 24 தொக்கு, சட்சு, சுரோத்திரம், நாவு, நாசி, வாக்கு பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம், பிராண, உதான, அபான, வியான, சமான, சத்த, பரிச, ரூப, ரச, கந்த, மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

### நட்சத்திரங்களின் ஜாதிப் பிரிவு.

1 அசுபதி = கம்மாளன்
2 பரணி = செக்கான்
3 கார்த்திகை = குரும்பன்
4 ரோகணி = வேடன்
5 மிருக சிரீடம் = சக்கிலி
6 ஆதிரை = கைக்கோளன்
7 புனர்பூசம் = வெள்ளாளன்
8 பூசம் = நாவிதன்



9 ஆயிலியம் = வண்ணான்
10 மகம் = உரைக்காரன்
11 பூரம் = அரசுமகன்
12 உத்திரம் = குசவன்
13 அஸ்தம் = செட்டி
14 சித்திரை = தெலுங்கன்
15 சோதி = வாணியன்
16 விசாகம் = வடுகன்
17 அனுஷம் = பார்ப்பான்
18 கேட்டை = சிப்பிலியன்
19 மூலம் = சேடன்
20 பூராடம் = நடான்
21 உத்திராடம் = இருளன்
22 திருவோணம் - பூலுவன்
23 அவிட்டம் = பாம்பன்
24 சதபம் = சாதிமான்
25 பூரட்டாதி = கன்னான்
26 உத்திரட்டாதி - துலுக்கன்

27 ரேவதி = பறையன் எனக்கொள்க

### ஆகமங்கள் இருபத்தெட்டாவன

காமிகம், யோகசம், சந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிசுவாசம், சுவயம்புவம், அனலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விபம், புரோற்கீதம், இலலிதம், சித்தம், சந்தான சர்வோத்மம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம்,

### உபநிஷத்துக்கள் 32.

சிருத்திரம், பிரகதாரண்யம், சுவேதாசுவதரம், கைவல்யம், காலாக்நி, கடம், வில்வி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிஸம், பரமாங்கிஸம், பாஸ்கரம், பிர்மபிந்து, ஆருணி, அமிர்தபிந்து சாசபிந்து, வாசநேயம், போதாநீயம், ஆசுவலாய நீயம், சாங்கியாயநீயம், வாசியாய நீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பாக்கிரமம், புரோசீயம், முத்கலம், முண்டகம்; மைத்திராய நீயம்.

### கலைஞானம் 64.

அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாஸ்திரம், சோதிடசாஸ்திரம், தருமசாஸ்திரம், சகுனசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், உருவசாஸ்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், அஸ்நிருத்தம், சத்தபிர்மம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அஸ்திரபரீட்சை, கனகபரீட்சை, இரதபரீட்சை, கஜபரீட்சை, அசுவபரீட்சை, இரத்ந பரீட்சை, பூமி பரீட்சை, சங்கிராம விலக்கணம், மல்யுத்தம், ஆகர்ஷணம், உச்சாடனம், வித்து வேஷணம், மதன சாஸ்

திரம், மோகனம், வசீகாணம், இரசவாதம், காந்தர்வவாதம், பைபில வாதம், கவுத்துகாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாய பிரவேசட, பாகாய பிரவேசம், அதிரசம், இந்திரஜாலம், மகேந்திரஜாலம், அக்கினித்தம்பம், ஜலஸ்தம்டம், வாயுஸ்தம்பம், திஷ்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கில ஸ்தம்பம், கர்னத்தம்பம், கட்கஸ்தம்பும், அவத்தைப்பிரயோகம், என அறுபத்து நாலு கலை ஞானமாம்.

இவையாவும்அறியவேண்டுமாயின் சரஸ்வதி தேவியைப்பூசித்தல் உத்தமமாம். இதற்கு "கலைவாணி நீயுலகி லிருப்பதுவுங் கல்வி யுணர்கவி வல்லோரா—நிலையாகப் புரப்பதுவு மவர் நாவில் வாழ்வதுவு நிசமேயன்றோ" என எழுப்பெழுபதிலுங் கூறியபடி வாணியைத் தியானிப்போமேயானல் நம்முள்ளிற் குடிகொண்டு நமக்கு இடர் வாராது நற்கதிக்கு வழிகாட்டும் உண்மை ஞானத்தைப்பாலித்துக் காப்பாற்றுவாள். இதற்கு,

சரஸ்வதி யந்தாதி.

ஆயகலைகளறுபத்து நான்கி னையு
மேய உணர்விக்கு மென்னம்மை— தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

## தத்துவம் 96.

வாசல்கள் 9 பொறிகள் 10, புலன்கள் 10, ஆதாரம் 6, மண்டலங்கள் 3, நாடிகள் 10, வாயு 10, தாதுக்கள் 7, இராகம் 8, கோசங்கள் 5, குணங்கள் 3, மலம் 3, வியாதி 3, ஆக தொண்ணூற்றாறு தத்துவங்களும் மானிடர் தேகத்துக் குரியனவாம்.

## உடற் கூறு.

கேளுங்க ளண்ணன்மாரே கர்மானுசாரமாய் எடுக்கப்பட்ட சரீரத்தில் புசித்த அன்னபானதிகள் முப்பது நாழிகைக்குள் மலஜலரத்தமென முக்கூறாகும், இதில் அறுபது நாழிகைக்குள் மலஜலமெனு மிரண்டு பங்கும் இழிந்துபோம். மற்றொரு கூறாகிய இரத்தமானதில் ஏழிலொரு பங்கு இந்திரியமாம், மற்றைய ஆறுபங்கும், தோல், உரோமம், சதை, சர்மம், மேதை, அஸ்தி, இடும்பி, மூளை, சுக்கிலம், தியம்பு, குடல், நரம்பு முதலிய இடங்களுக்கு முறையே ஏழரை நாழிகை வீதம் பரவி நிற்கும்.



இப்படி நிற்குஞ் சரீரத்தில் இருவினைக் கதவுங் கூட்டி (மூலத்தண்டாகிய) நெடுமெலும்மை முகட்டு வளையாகவும் சேர்த்து; பழுவெலும்பாகிய வரிசையிட்டு, நரம்பாகிய யாக்கைபாலே கட்டி, உதிரமாகிய ஜலத்தாலே மண்கூட்டிச் சுவரிட்டு, உரோமமெனும் கணம் புல்லால் வேய்ந்து, உண்டாக்கட்பட்ட வீட்டிற்கு நவத்துவாரமெனும் வாசல்களமைத்து அச்சமாகிய கதவுகளிட்டு, பற்களாகிய தாள்கள் பூட்டி, நாவாகிய ஓங்காரம் பாச்சி, பண்டங்களாகிய பஞ்சேந்திரியங்கூடங்கிய சரீரத்தில் பதினாறு கதவு பூட்டிய வீணாத்தண்டும் மொளியெனு முச்சாணெலும்பும், முச்சாண் சதையும், அஞ்சுருவமும், ஆறு தெருவுகளும், ஏழு கடல்களும், எட்டுத்தூண்களும், நாலு ஜாண் பருமனும், எண்ஜாணீளமும், முப்பத்திரண்டு முழக் குடலுமுள்ள சரீரத்தில்.

மூலாதாரத்தைத் தொட்டு ஆஞ்ஞையளவும் பெருநரம்புகள் பதினோராயிரம், சிறு நரம்புகள் பதினெட்டாயிரம், கைகளிலும் கால்களிலும் பெருநரம்புகள் ஏழாயிரம், சிறு நரம்புகள் பன்னிரண்டாயிரம், நாபிஸ்தானத்தில் பெருநரம்பாயிரம், சிறு நரம்புகளிரண்டாயிரம், நவத்துவாரங்களுக்குப் பெருநரம்புகளாயிரத்தைஞ்ஞூறு, சிறுநரம்புகள் மூவாயிரத்தைஞ்ஞூறு, சிரசிற் பெருநரம்புகள் மூவாயிரம், சிறு நரம்புகளாயிரம், எலும்பிலும், குடலிலும் நரம்புகள் ஏழாயிரம். இவ்விதமாய் எழுபத்திரண்டாயிரம் நரம்புகளை யுடையது. கைகளிலுங் கால்களிலும் சந்துப் பொருத்துகள் நூற்றறுபத்தெட்டு, கழுத்துக்குங் கீழ் சந்துப் பொருத்துகள் எண்பத்து மூன்று, ஆக முந்நூற்று முப்பத்தேழு சந்துப் பொருத்துகள் உண்டு. நாடியில் ஜலபலம் 21, எலும்பில் ஜலபலம் 7, மாமிசத்தில் ஜலபலம் 21, ஆக ஜலம் பலம் 69 ஆகும்.

காலிலும் கையிலும் எலும்புகள் 160, மூலாதாரத்தைத்தொட்டு ஆஞ்ஞையளவும் மொளி யெலும்புகள் 30, கழுத்துக்கு மேற்பொடியெலும்புகள் 300, இருபக்கத்திலும் எலும்புகள் 20, ஆக 510 எலும்புகளும், மூன்றரைக்கோடி உரோமத்துவாரங்களும், நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசமும் 96 தத்துவங்களும், 360 பலம் மாம்ஸமும், உழக்கு பித்தமும், ஆழாக்கு சிலேஷ்மமும், கூடி பிராணவாயுவால் சத்த தாதுக்களையும் வளர்ச்செய்யும் சரீரமாம். இதற்கு.

உரோமரிஷி ஞானம்.

ஓமென்று கேட்டபுத்தி மாணுக்காகே
　　ளுலகத்தில் மானிடர்க்கு ஆண்டுநூறு
ஆமென்று இருபத்தோ ராயிரத்து
　　அறுநூறு சுவாசமல்லோ ஒருநாளைக்குப்
போவென்று போனதினல் நாள்குறைந்து
　　போச்சுது போகாவிட்டாற் போவதில்லை
தாமொன்று நினைக்கையிலே தெய்வ மொன்று
　　தானினைந்த தன்மையல்லோ விதிகள் தாமே.

மானிடர் வயது.

இவ்விதமாயெடுத்த நரஜென்மத்துக்குப் பத்துவயதளவும் இளமை, இருபது வயதளவும் வாலிபம், அதற்குமேல் முப்பது வரை யௌவனம், அதற்குமேல் கௌமாரதிசை யடைந்து ஒளி மழுங்க லுற்று பிரிதிவி ஐம்பதுக்குமேல் அப்புவை நெருக்கும், அறுபதுக்குமேல் அப்பு தேயுவை நெருக்கும், எழுபதுக்குமேல் தேயு வாயுவை நெருக்கும், எண்பதுக்குமேல் வாயு ஆகாயத்தை நெருக்கும், தொண்ணூறுவதில் ஆகாசம் ஜீவாத்மாவை நெருக்கும். இதனல் மலஜலம் இடைவிடாமல் ஒக்குநிற்கும். நூறுவது வயதில் ஆத்மா வந்த வழியை நோக்கும். இதற்கு—,

கபிலர் அகவல்.

உலகத்தீரே உலகத்தீரே
நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து
சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்
மனிதர் வயதுதான் நூறல்ல தில்லை
ஐம்பதிரவில் அகலுந் துயிலினல்
ஒட்டிய இளமையி லோரைந்து நீங்கும்
நெட்டிய முதுமையி லம்மூன்று நீங்கும்
எழுபதுபோக இருப்பன முப்பதே.

இவ்வித அற்ப ஆயுளையுடைய மானிடர் தங்கண் மரணகால மறியாது சற்கருமங்களைப் புரிந்து பகவத்தர்ப்பணம் செய்வதை விடுத்தும், வாணளை வீணாகக் கழித்தும், நீர் மேற்குமிழி நிலையற்ற காயம் என்பதை யுணராது சாஸ்வத தேகமென வுன்னி உடம்பை வளர்ப்பதிலும், நாக்கு, வயிறு, உபஸ்தம் இவைகளுக்குத் திருப்தி



செய்விக்கும் அடிமைகளாகி முக்குறும்பொழித்து மோக்ஷமடைய சன்மார்க்கங்களை யாசாரியர்களை யடுத்துத் தெரிந்தொழுகாது அநித்ய வாழ்வை நித்தியமென்றும் அநித்யலோக போகங்களை நித்தியமாகிய பரமகதியென்றும் மௌடீகமாய் சிந்தித்துக்கொண்டு சங்கற்பமென்னும் அனேகஞ் சங்கிலிகளாற் கட்டுப்பட்டு அந்த கர்ம பந்தத்துக்கேற்ப சிரேஷ்ட கனிஷ்ட ஜனனங்களை யெடுத்தெடுத்து அலுத்து விஷய வாஸனைகள் தூண்ட அறிவுமாய்ந்து மயங்கிக் கொக்கின் கழுத்தும் படிகண்ணியும் போன்று கெடுகிறார்களன்றோ இவர்கள் தருமராஜனுடைய கிங்கரர் பாஸக்கயிறு கட்டி இழுத்துச்சென்று வதைக்கும்போது என்ன கஷ்டப்படுவார்களோவென் றேங்கினேன். இதற்கு,

ஔவையா ரகவல்

எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னுன் நல்குர வறியான்.

பின்னும் சொல்வாள், மண்ணுலகில் மானிடராய்ப் பிறந்தவர்கள் இறந்துதானே ஆகவேண்டும். இறவாமலிருக்க முடியாது. இதற்கு,

பட்டணத்தார்

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லது பொன்னினம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே நினைப்பா ரில்லையே.

என்றுரைத்தபடி காலன் கொண்டுபோகையில் முற்காலத்திற் றங்கள் செய்த கர்மங்கள், பைசாசங்களாகவும் காடி புலி செந்நாய் முதலிய கொடிய மிருகங்களாகவும் வருத்தும்போது யாதனு சரீரத்தாற் பலகோடி வாதனைகளையும் துக்கங்களையு மனுபவிப்பதல்லாது அந்தச்சமயத்தில் காப்பாற்றுவாரொருவருமின்றி, சகல பந்துக்களையும் வெறுத்துப் பரமேசுரனைக் கிரியாவுஎண்ணித் துதிப்பார்கள், அப்போதென்ன புத்திதான் சொல்லினும் பெரியோர்

சத்போதனைகளை உல்லங்கனஞ்செய்து அவமாக் காலங்கழித்து இப்போது நரகவாதனைகளை யனுபவிக்கவாயிற்றே ஓ ஓ காலகெதியே யென்று வருந்தி வாடுவார்கள்..

தவிர புண்ணியஞ் செய்தவர்களை அவர்கள் இயற்றிய நிஷ்காமிய புண்ணிய கருமங்கள்) அல்லது பகவத்தர்ப்பணமாகச்செய்த சற்கருமங்கள் தேவரூபங்களெடுத்து வழியில் யாதோரிடையூறு மின்றிக் கூட்டிக்கொண்டு சுவர்க்கத்திற் சேர்க்கவும் அவர்களங்கு கற்பகாலம் வரை தேவபோகங்களை அனுபவித்து சுகித்திருப்பார்கள். காமியமாச் செய்தவர்களுக்கு சுவற்பகாலமட்டும் சுகங்கிட்டும்.

பராபரக்கண்ணி

எத்தனை நான் ஜென்மமெடுத் தெத்தனை நான் பட்டதுயர்
அத்தனையு நீ யறிந்த தன்றோ பராபரமே. ()
இந்த நாட் சற்று மிரங்கிலையேற் காலன்வரும்
அந்த நாட் காக்க வல்லா ரார்காண் பராபரமே. ()

இந்த வுலகில் ஐயறிவுடைய * மிருகங்களும் † நாலறிவுடைய பக்ஷிகளும் பாவம் புண்ணியமென்று தெரிந்து நடந்துகொள்கிறதென்றால் ஆறறிவுடைய மனிதர் புத்திசாலிகளாய் நன்மார்க்க மறிந்தொழுகுவது கடமையென்பதைச் செவ்வையா யுணரவேண்டும்.

கேளுங்க ளண்ணன்மாரே! இப்படியிருக்க எனது தந்தை தங்களை அம்மனுடைய அடியார்களென்றுணராது செய்த அபசாரத்தைப் பொறுத்து இரட்சிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கும்போது,

சோராஜன் தனது ஒற்றர்களால் தம்புத்திரி கச்சியருடன் நேசித்து வார்த்தையாடிக்கொண் டிருப்பதாகக் கேள்வியுற்று அதிக கோபங்கொண்டு அந்த மாதைத் தன்னிடம் அழைத்துவரும்படி சேவகருக்குக் கட்டளையிடவே அன்னோர் அதிசீக்கிரமாகச் சென்று பெண்ணணங்கைக் கண்டு, வியந்து நயந்து தனது தந்தை யழைத்த செய்தியைத் தெரிவிக்கவும், இச்சங்கதி கேட்டுக் கச்சியரிடம் விடைபெற்று சிரோமணியானவள் சோராஜ மண்டபம் வந்துசேர்ந்து தந்தையை நமஸ்கரித்து நின்றனள்.

---

* மிருகங்களைப்பற்றி—கபிலை கதையால் விளங்கும்.

† பக்ஷிகளைப்பற்றி—பஞ்சதந்திரக் கதையால் விளங்கும்.





மலையரசனுக்கும் சிரோமணிக்குந் தர்க்கம்.

[illegible]—A கண்ணிகள்

(மலை) அதிகத்தவத்தா லுன்னை புதல்வியாகப் பெற்று
அருமையாக வளர்த்தே னென்மக ளே—எனக்
காகாத வரைக்கூடி யாகாதவனைத் துதித்
தடிமைப் பட்டிட லாமோ என்மகளே

(சிரோ) நினக்கான வாசையா லெனைப்பெற்ற நாள்முதலாய்
நிரந்தரி யெனைக்காத்தாள் தந்தையரே—அந்த
நேயர்குணவம் நீரறியாது சொல்லும்
நிர்மூட மாகாதையா தந்தையரே

மலை) மூடனென் றென்குலத்தைக் கோடாலியாக வெட்ட
மூதேவி நீ பிறந்தா யென் மகளே—கெட்ட
மோசக்காரியும் தந்திர வாசகரையும் யென்றன்
முன்னே நல்லவரென்று யென்மகளே

(சிரோ) மோசக்காரி துஷ்டர்க்கு நேசக்காரியிஷ்டர்க்கு
மூக்கண்ணியான வென்றாய் தந்தையரே—நல்ல
முத்தி சித்திகளெல்லாம் சுத்த வடியாருக்கு
முதன்மையா யீகுவாளே தந்தையரே

(மலை) முத்தி யருளு வாளென் றெத்தியே சொல்ல வந்தாய்
முக்கண்ணன் றன்னை வேண்டி என்மகளே—அவள்
முத்தியாம் வாமபாகம் பெற்ற சரித்திரத்தை
யறிமூவ்ல காதோ யென்மகளே

(சிரோ) உலகமறிந்திருக்கும் சத்தீசிவமோன் றென்று
உமக்குத்தான் தெரியாது தந்தையரே—அந்த
உமையி னடியர்மேல் சுமையஞ் ஞாயஞ்சொல்வது
யோக்கிய மல்லவையா தந்தையரே ()

(மலை) அநியாயக்காரன் நானென் றினிய ரவர்களென்றும்
ஆதாரணை சொல்ல வந்தா யென்மகளே—இப்போ
அவர்களையு முன்னையுந் தவறா நிமிஷத்துக்குள்
அதல விதலஞ் சேர்ப்பே னென்மகளே ()

(சிரோ) அவர்க்கி னிமையீதல்ல யெவர்க்கு நீதி யீதென்று
யான் சொல்ல வந்தேனையா தந்தையரே—சொன்னால்
ஆரவாரமாயுன்றன் றீரமே சொல்ல வந்தாய்
அதுகூடாத காரியம் தந்தையரே ()

## சேரன் புதல்விக்கு புத்தி கூறல்.

இவ்விதமாய் சிரோமணியானவள் தந்தைக்கு அநேக நீதிக ளெடுத்துரைத்தும் கேளாதவனாய்என் கண்மணியே என்னம்மணி யுன்னை நான் எத்தனையோ அருமையாக வளர்த்து நான்குவேத முதற்கொண்டு தொண்ணூற்றாறு தத்வம்வரைக்குங்கல்வி கற்பித்துங் கண்டோ ரதிசயிக்க வுன்னைப் பெண்ணென நினையாது பெருமையாக எனதக்கிருலந் தழைக்க வுன்னாற் புகழ்பெறலா மென் றுவலாயிருந் தேனே அதற்காகவோ யிப்போது எனது சத்துருக்களுடன் நேசமா யிருந்து உன்னை வெறுத்து வார்த்தையாடுகிறாய் அதெவ்வா றெனின்.

### கோவிந்த சதகம்.

பீடர்குலத்தி லாகாதபிள்ளை தற் பெற்றெடுத்தோர்
வாடாது வாடக் குலநாசமாக்கிடு மற்றது தான்
தாடாண்மை யாளர் கைக்குள்ளாய்த் தருக்குலஞ் சாயவெட்டுங்
கோடாலிக் காம்பல்லவோ வச்சுதா னந்த கோவிந்தனே.

என ஆன்றோர் வாக்கிடம் போன்று நீயும் செய்கின்றனை. நீ யெனது கட்டளையைக் கடவாது அன்னவர்களன்பும் அம்பிகையின் பூசையும் ஒழித்து விடுவாயேயாயின் நான் குழந்தையென நினது பிழையை மன்னிப்பேன் நீயுமுயிருடன் வாழ்வாய் அல்லவெனில் என் கைவாளுக் கிரையாய் விடுவாயெனவே அதற்கு சிரோமணி கூறுவதாவது.



## சிரோமணி தந்தைக்கு இதமுரைத்தல்.

கேளும் எனது அருமைத் தந்தையரே "ஊருஞ்சதமல்ல உற் றார் சதமல்ல உற்றுப்பெற்ற—பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்" என்றபடியே ஆன்றோர் [illegible] யுணராது என் னோடு இதுவரையும் சொல்லாது வழக்குனரத்து வாதாடினீர். தவிர தனது மக்களென்றும் தனது தாரையென்றும் நினைப்பதெல்லாம் பிரபஞ்சபாவனையே யன்றோ தெய்வ சிந்தனையில்லாததாய், சான்றோரை மனம் நோவச் செய்யாதிருத்தலும் பெருந்தருமம், அதை விடுத்து "மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங்— கேடுண்டெனும்படிக் கேட்டுவிட்டோ மினிக் கேண்மனமே—" என்பதை நீருணர்ந்தும் மறந்தீர்போலும். அவ்விதம் மறந்திருந் தாலும் "நானெத்தனை புத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்ச மே—எனிப்படிக்கெட் டுழலுகிறா யினி யேதுமிலா" என ஆன்றோ ருரைத்தபடி நீர் அகமமதைகொண்டு அன்பருக் கிதமருளுபவளும், அடியார்க் கெளியவளாயுமுள்ள ஸ்ரீ காமாக்ஷியாளையும், அவளன்ப ராகிய சாதுக்களையும் தூஷித்தனை. அதெங்ஙனமெனின் "கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே—வாழ்வுவரும் பின்னே மதி கூடிவரும் முன்னே" என்பதையாவது உணர்ந்திலைபோலும்.

இன்னும் கேளும் எனது தந்தையரே நீ ரிவ்விதமாய் வார்த்தை யாடுவது சரியன்று. யாவராயினும் சத்தியத்தைக் கைக்கொண் டொழுகுபவரே ஜெயமடைவார்கள். அசத்தியம் அபஜயத்தையும் தந்து அருநரகிற் றள்ளுமென்று யோசியாது புகலுகிறீர். ஆனது பற்றி ஆக்கச்சியரிடம் இறைவரி கவராது அன்றோரையும் சாக்கு களையும் விடுத்து அவர்து நட்பைப்பாராட்டு வீராகில் அம்பாளது அனுக்கிரகம் பெற்று இகபரசுகமடைவீர் அதைவிடுத்து நானென் னும் பெருமைபாராட்டுவது அழகன்று, எப்படியெனின்,

ஆதியிற் றிரிபுராதியர், இரணியாக்கன், ஹிரண்யகசிபு, இரா வண கும்பகர்ணன், சிங்கமுகாசுரன், யானைமுகாசுரன், யாளிமுகாசுரன், மைராவணன், அந்தகாசுரன், மைசாசுரன், நரகாசுரன் முத லிய இராக்ஷசாளும், ஜராசந்தன், சிசுபாலன், தந்தவக்கிரன், கம்சன், கீசகன், அரவகேதனன் முதலிய அரசர்களும் அகங்காரங்கொண்டு "தன்னிலுந்தான் கோரத்தை யனுசரித்தா லன்றோ அழிந்தார்கள். "[illegible] காக்கிற் [illegible]ங்காக்க—[illegible]வாக்கால் தன்னையே கொல்லுஞ் [illegible]

என்றுணர்ந்து சாந்தமாயிருத்தலே மேலான குணம். இதற்கு.,

ஆத்திசூடி வெண்பா.

ஆதியினிற் சிவிகைக் காளாய் ஜடபாதர்
தீது பொறுத்துச் சிறப்புற்றார்—சோதிப்
புயமா வளர்கின்ற புன்னைவன நாதா
ஜெய மாறுவது சினம்.

## சிரோமணிக்குத் தண்டனை விதிப்பது.

இவை யாவற்றையுங் கேட்ட மலையரசன் சிரோமணியின்மீது வெறுப்புற்றுத் தனது கொலைஞர்களை வரவழைத்து இந்த துஷ்டியைக் கானலிற் கொண்டுபோய் வெட்டி விட்டு வருவீரென் றாக்ஞாபிக்கவே, அம்மாதைக் கொலையாளிகள் அழைத்துக்கொண்டு ஊருக்குப் புறம்பே போவதைப்பார்த் தவ்வூரார் யாவரும் ஒருங்கேகூடி அந்தோ இஃதென்ன வனீதம், நமதரசன் பெண்பழியென யோசியாது கொலைசெய்ய விதித்தாரே! முன்னாள் எவ்வளவோ பிரயாசைப்பட்டுத் தவஞ்செய்து பெற்ற தவப்புத்திரியாயிற்றே! இந்நாளன்னவள் செய்த குறையென்னவோ தெரிகிலேம். இவளது குணம், நற்குணம், செய்கை, நற்செய்கை, பாஷைமிர்து வசனம் ஆயிற்றே. இப்படியு மிவள் விதியிருந்ததோ. ஏகாம்பரியைப் பூசித்துவந்தாளே. அம்பிகையு மரசன் பக்கலிலிருந்து அன்னவளைக் கைநழுவி விட்டனளோ தெரியேம், இம்மான் விழியா ளிறந்து விட்டால் மறுபடியும் பார்க்கப்போகிறோமா வென்று விசனமுற்று அலறுஞ் சகல ஜனங்களுக்கும் அம்மாது கரங்களைக் கூப்பி தெண்டனிட்டு அவர்களுக்குச் சில வசனங்கள் கூறுவாள்.

கேளுங்கள் எனது தாய் தந்தையருக்குப் பிரதியாக நட்பு பாராட்டுங் கனதனவான்களே! எனது தந்தை அம்பிகையையும் அம்பாளடியார்களையும் தூஷித்ததைக் கேட்டுச் சகியாது யான் அநந்தம் நீதிகளைச் சொல்லியுங் கேளாது எனது சிரசைக் கண்டிக்கும்படி விதித்திருக்கிறார். இது பெருவியப்பே. ஆனதுபற்றி நீங்கள் யாதொன்றுக்கும் விசனப்படவேண்டிய காரணமில்லை. எனது வினைக்கீடாக அனுபவித்தே கழிக்கவேண்டிய தல்லது மறுக்க முடியுமோ இது சகஜந்தானே யென்றனள்.

இவ்விதமாய்த் தேறுதல் சொல்லியுங் கேளாது பின் பற்றிச் செல்லுஞ் ஜனங்களுக்கு சிரோமணி கூறுவாள், கேளுங்கள்



எனது தாய்மார்களே! உலகில் யாம் கண்ட சுகம் எல்லாம் உண்பதும் உறங்குவதுமே யாம். மற்றொன்றுங் காண்கிலேம் இதற்கு "உறங்குவதுபோலுஞ் சாக்காடு—உறங்கி—விழிப்பது போலும் பிறப்பு." எனக் கூறியபடியு மின்னம் "அவரவர் வினைவழி யடைய நின்றனரே" எனப்பிரபந்தத்திலும் அருளிய சுருதிப்படி எனது வினைப்படிப் பலனை நானே யனுபவிக்கவேண்டியதால் என்பின் நீங்கள் தொடர்ந்து வாரீர்களென்று அவர்களுக்கு நமஸ்கரித்து கொலைஞருடன் பின்சென்றாள்.

## ஆயுதங்களால் வதைத்தல்

[illegible]— A விருத்தம்

வல்லகொலைக் காரர்களூர் புலம்ப மன்னன்
மகடனைக் கொல்லுங் களத்தில் வைத்தே மிக்க
அல்லலுறக் கட்டியுருட் டிப்புரட்டி
அவர் கையி லுள்ளவா யுதங்களான
வல்லயம் வேல் மழுவாழி வாள் கோடாரி
மருவு பிண்டி பால மிவை தன்னைக்கொண்டு
இல்லுற வெட்டிட வுமையை யுள்ளத்துள்ளே
தேடுவா ளவளருளை நாடுவாளே.

இவ்விதமாய் வந்து கொலைக்களத்தில் நிற்கும் சிரோமணியை கொலையாளர் தயவு தாட்சண்யம்,பாராட்டாது தமதரச னாக்ஞைக்குப் பயந்து தங்கடங்க ளாயுதங்களினால் புடைத்தும் வெட்டியும் இம்சை செயயும்போது அம்மாது அம்பாளுக்குச் சரணாகதியடைந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்வாள்.

இராமபஜன சோரியா என்கிற இந்துஸ்தானி மெட்டு

இ-ம் பியாகு ஆதிதாளம்.

B பல்லவி.

ஆதரிப்பாய் நீ கதியே— அடியாளை நன்
காதரிப்பாய் நீ கதியே
அன்புடனே செம்பொனடி நம்பின வென்றனை யதித்

அநுபல்லவி

தீதுபுரியரக்கர் செருக்கை யடக்குந் தாயே
திரிபுரத்தை யெரித்த சிவனிடப் பாகத் தாயே
வாதனையை யொழித்து மாதைக்காத் தருணியே
மங்களேஸ் வரிபிரான மகதேவி யம்மையே.

சரணம்.

துஷ்டர் சம்மட்டிகொண்டு புடைக்க லாச்சுதே விதி
இஷ்டர் தெய்வமே யென்மே லிரங்கியருள்வா யித்தருதி
கஷ்டம் விலக்கிக்காரும் காமாக்ஷியே சுமதி
கருணைபயோ நிதியே கடைக்கணித்தாள் நீ கதி ()

அக்கொலைஞர்கள் தங்களா லியன்றமட்டுஞ் செய்யுங் கொடுமைக ளியாவும் அம்மனது அனுக்கிரகத்தால் தனது சேடிக ளுபசரித்து புஷ்ப ஆரங்களைப் பூண்பதுபோலும் விளையாட்டுக் கருவிகளிலொன் றாகிய புஷ்பச்செண்டுகளா லடிபட்டதுபோலு மிருந்தாம். இவ்விதம் அம்மாது சுகமாயிருப்பதையும் ஆயுதங்கள் மழுங்கிப் போனதையும் பார்த்த கொலைஞர்கள் கைசோர்ந்து மெய்சோர்ந்து மூர்ச்சித்து தாங்கள் பலவாறு இம்சித்தும் பயன்படாது போகவே இனி தம்மாலாகாதென்று அரசனிடம்போ யாவரும் உரைத்தனர். அதைக் கேட்டவ்வரசன் ஆச்சர்யமடைந்து எனது புத்திரி இன்னும் உயிருட னிருப்பதால், இன்னும் என் மனம் புண்ணாகுதன்றோ வென்று சினந்து கழுவிற்போட்டு வதைத்து விடுங்களென்று ஆக்ஞா பித்தான்.

## கழுவிலேற்றுதல்.

A. விருத்தம்.

புதல்வி துதித்திட மலரா யுதங்களாகப்
புண்கண்ண ரோடிஇறைக் கோதக்கேட்டு
விதிவழியே மதிகெட்டு வருவாரரோ
வேந்தனுயர்க் கழுமாட்டி வீட்டுமென்னக்
கதமுடைய கொலைஞர்களவ் வாறே செய்யக்
கருணைமொழி மனோன் மணியைக் கருத்துட்கொண்டு
மதிதவ ராத்தியானு மிர்தத்தை யுண்டு
மதித்திட்டா ளன்புடனே துதித்திட்டாளே.

அதன்பினரசன் கட்டளையை மீறாதவர்களாய் அன்னவளை யழைத்துக் கொண்டுபோய்க் கழுமரத்தில் மாட்டிச்சொல்வார்கள். கேளும் சிரோமணியெனும் மந்திரங்கற்ற பெண்மணியே நீ முன னங்கற்றிருந்த மாயாவித்தைகளாலன்றோ யாங்கள் கற்ற அஸ்திர சஸ்திர வித்தையினால் பிரயோகித்த ஆயுதங்கள் உன்னைச்சிறிதும் இம்சியாமல் நிஷ்பிரயோஜனமாய் விட்டன.



இதோ இக்கழுவில் மாட்டியிருக்கிறோம். இனி உனது மாயா சத்தியைக் காட்டி தருமனுலகத்துக்கு வழிபார்த்துக் கொள் ளென்று பரியாசஞ் செய்தார்கள். இம்மாது அம்மனைவேண்டல்.

இந்திரசபா மெட்டு.

B. கண்ணிகள்.

ஆரணியே வுன்னைநம்பி யவல மாவேனோ
தாரணியில் கழுவிலேறித் தமியாள் சாவேனோ. ()

பொன்னடியை நம்பியானும் புகலைப்பூண்பேனோ
இன்னலுற்று மசடாலே யிழிவைப்பூண்பேனோ. ()

ஆதிபராசத்தியானும் அண்டினேனனும்
நீதியுடையுனது நாமம் நினைத்தேனே நானும். ()

அஞ்சலென்றே யென்றனுக்கு அபயஸ்தந்தாரும்
பஞ்சைமுறைக் கிரங்கியின்று பரிவுடன் வாரும். ()

இவ்விதமாக கழுவிலிருந்துகொண்டு அம்மனை ஸ்துதிக்கவும் அக்கழுமரமானது அவளுக்கு எப்படி யிருந்ததென்றால் உத்தியான வனத்தில் அசோகம் சண்பகம் மாங் குரா குருக்கத்தி பாதிரி சந் தானம் பாரிசாதம் மருது பலா முதலிய விருக்ஷங்களின் மீது குயில் கள் கூவவும், கதலி கொய்யாசீத்தா அனாசு பப்பளிசு பேரீச்சு இச் சிலி முதலிய மதுரமாகிய கனிகளைத் தின்று குரங்கினங்கள் கொம் புக்குக் கொம்புதாவியோடி யூசலாடவும் மல்லிகைமுல்லை இருவாச்சி பிச்சி விரிச்சி செவ்வந்திரோஜா கொன்றை மந்தாரை புன்னை முத லிய மலர்களி னழகும் வாசனையும் பரிமளிக்கவும் மயில்களாடவும் கிளிகள் கூவும் புறாக்கள் அன்னங்கள் நடிக்கவும், தென்றல் வீசவும் சேடியருடன்கூடி உலாவி நீரோடைகள் நெருங்கிய பூஞ்சோலையில் மகா சந்தோஷகரமாக மண்டபத்தில் சிங்காரமாக ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருத்தல்போ லிருந்தது. இதைக் கண்ணுற்ற கொலைஞர் பயந்து நடுங்கி தேகங்கள் சிலிர்த்து நாக்குளறி வாய்வரண்டு ஐயோ ஈதென்ன ஆச்சர்யம் நமக்கென்ன தீங்குவருமோ வென்று ஓடோடி யுஞ்சென்று அரசனிடந் தெரிவிக்கவும் அரசனுக்குக் கோபமுண் டாகி, கெடுவான்கேடு நினைப்பான் என்றபடி பின்வரும் பலனை யோசி யாது அம்மாதை வாட்குண்டிலிட்டு உருட்டக் கட்டளையிட்டான்.

## வாட்கூண்டி லுருட்டல்

A விருத்தம்

ஊசலினுந் தென்ற லுற்ற மலர்க்கானத்தி
　　லுலவுதல மொப்பவரு ளமுத முண்டு
நாசமிலாச் சிரோமணியைக் கண்டு துட்டர்
　　நடுநடுங்கிப் பிதுர் கலங்கி ராஜன் முன்போய்
ஓசையுடன் சொலக்கட்டி வாட்கூண்டிட்டே
　　யுருட்டு மெனக் கேட்டவுடன் கொலைஞராங்கு
பூசலுடன் விட்டுருட்ட கௌரிபாதம்
　　பூசிப்பா ளிதயத்து ணேசிப்பாளே.

அரசன் ஆக்ஞைப்படிக்கு கொலைஞர் சிரோமணியைக்கொண்டு வந்து அரசாங்க தெண்டனையில் மிகக்கொடிய தெண்டனையாகிய சிசுஹத்தி, கோஹத்தி, ஸ்திரீஹத்தி, பிராமண ஹத்தி, பரஸ்திரீ, பரபுருஷகமனம் செய்தோருக்கு இடும்படியான வாட்கூண்டி லுருட்டும் தண்டனையைச் செய்ய இப்புண்ணியவதியைக் கூண்டிலிட்டு உருட்டிக்கொண்டு வரவே இக்கொடுமைக் காற்றுதவளாய் அம்மனை சிந்திப்பாள்.

## அம்மனைத் துதித்தல்

B இ-ம் கண்டா சாப்பு தாளம்.

பல்லவி

ஐயோ நானிந்த விதிக் காளாகி னேனே
அடியாளுந் தானே—ஐயோ　　　()

அனுபல்லவி

தானே தானே தானே தானே அடியாளுந் தானே　　　()

சரணங்கள்.

செய்யா வாதுகள் செய்து சீரழித்தானே
தீங்கினர்போ லென்னை சேதிக்கவீரனேன் சிறியாளும் வீணே
வீணே வீணே வீணே வீணே சிறியாளும் வீணே　　　()

வாதனைகள் தொடுத்தார் வாட்கூண்டினில் விடுத்தார் பேதை
நீதி போதிக்கப் பிழையென்று முன்னி பெருமையுங் குண்ணி
பேணும், பேணும், பேணும், பேணும், பிள்ளையாண்காணும்　　　()

நாதியொன்று மில்லாது கஷ்டியாச்சு திப்போது
பாதகர் வருந்துதல் பார்த்திருந்தாயே பார்வதிநீயே
பாரும், பாரும், பாரும், பாரும், பழியினைத்தீரும்



இவ்விதமாக அம்மனைச் சதா சிந்தித்துக்கொண் டிருக்கவே அவ்வாட்கூண்டு எப்படி யிருந்ததென்றால் அம்ஸதூளிகா மஞ்சத்தின்மேல் சாம்பரிந்த மல்லிகை இருவாட்சி முதலிய புஷ்பங்களைப் பரப்பு அதன்மேற் பன்னீர்தெளித்து அதன்மீது மெல்லிய சல்லாவை விரித்து சயனித்திருந்தால் எவ்வித மிருதுவாயிருக்கிறதோ அவ்விதமாக அவளுக்கிருந்ததாம். இதனைப்பார்த்துக் கொலைஞர்கள் அதிசயித்து இப்மாது காயசித்தி மாயாசித்தியெனும் சித்திகளைப்பெற்றிருக்கின்றனளென் றுன்னி அரசனிடம் தெரிவித்தாவது:—சுவாமி! உங்களுக்கு அவ்வம்மணியைக் கொல்லும்படியாய்ச் சட்டனையிடாமல் இருக்கும்படி சிரங்களைத் தாழ்த்திக் கேட்டுக்கொள்ளுகிறோமென்று வேண்டினார்கள். இச்செய்திகேட்ட வரசன் துக்காக்கிராந்தனாய்த் தம் மந்திரிகளுக்குக்கூறி அம்மாதைக் கொல்லும்படியான யோசனை புகல்வீர்களென்று கேட்டான்.



சேரமான் மந்திரிகளை யோசனை கேட்டது.

இ-ம் உசேனி அடதாளம்.

A. பல்லவி.

மந்திரிமாரே இதற்கொரு தந்திரஞ் சொல்வீரே

அனுபல்லவிகள்.

எந்தவிதத்தினி லிந்தப்பெண்ணைக் கொல்லும்
மந்திரமேதுநச் சிந்தையி லாராய்ந்து

எந்தமக்குச் சிக்கனம் இந்தவிதமென்று
மூட்டுங்கள்—நின்று—பாராட்டுங்கள்—இவளுயிர்
வாட்டுங்கள்—என்புகழ்—நாட்டுங்கள்—சொன்னேன். ()

இத்தனை காலமாய் எத்தனை பேர்களைச்
சற்றுமெண்ணமலே வெற்றி கொண்டிருந்தும்
பெற்றபிள்ளையினாலே மெத்த இழிவடைந்தேன்
எண்ணுங்கள்—யூகம்—பண்ணுங்கள்—புண்ணி
நண்ணுங்கள்—இவளுயிர்—உண்ணுங்கள்—கற்ற

இங்கிவர் வெட்டியும் வெங்கழு மாட்டியும்
தங்குங்கத்திக் கூண்டில் பங்கமா வுருட்டியும்
அங்கம் பழுதில்லாமல் மங்கை யிருக்கிறதை
அறியுங்கள்—என்னவேர்—குறியுங்கள்—இவளை
எறியுங்கள்—என்னை—டரையுங்கள்—என்றன் (ம)

## மந்திரிகள் வாக்கை சேரன்மறுப்பது.

இவ்விதமாக அரசன் துக்கமுடன் தனது மந்திரிமாருடன் புகலவும், அதற்கவர்கள் மகாராசே நம் புத்திரி சிறுவயதாயினும் வேதாகமங்கள் முதலிய சகல கலைகளையும் கற்றவளும், ஏகாம் பரியினருள் கிடைக்கப் பெற்றவளுமாதலால் யாம் எவ்விதத்தண்டனை செய்தும் அவளை ... ற்று. ஆனதுபற்றி நமது புதல்வியின் மனம்போலவே கச்சி ... இல்லால் ... வணிகரிடம் இறைவசிக்கவாராது அன்னை ரையும் ... களையும் ... அவ்வரசனது ... பட்டு வோடிரியின் ... ழிகாலமாய் நமது அரசுக்குப்புகழ் கிடைக்கும்.

நல்வழி.

ஒன்றை நினைக்கி லது வொழிந்திட் டொன்றாகும்
அன்றியது வரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாது முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்.

ஆனையால் நாம் ஒன்று நினைத்தால் தெய்வமொன்று நினைக்கும் என்பதுபோல பின்வரும் செயல் யாவுமுரைத்தோம். இனி உமது சித்தமென்று கூறவும், அதற்கிறைவன் சம்மதியாது மறுத்தனன். இதை யுணர்ந்த மந்திரிகள் ஓர் யோசனைசெய்து எந்தலே உமது புத்திரிக்கு யாம் புத்திகூறி உமது சொல்லுக்கடங்கும்படி நியமித்து வருகிறோமென்று சிரோமணியிடம் சென்று அவளை ஆசீர்வதித்துக் கூறுவார்.



## மந்திரிகளுக்கும் சிரோமணிக்குந் தர்க்கம்.

காவடிச்சிந்து மெட்டு

B இ-ம் குறிஞ்சி-சாப்புதாளம்

(ம) பெண்ணரசே யுன்னுடைய அன்னை தந்தையை மறந்த
லொண்ணுமோ நல்லறிவுடை யூகியே—இந்த
மண்ணுளோர் ரேசிடும்படி யோகியே—சிறு
பேடை யன்ன நடை கூடும் மின்னலிடை
சேடியர்கள் புடை சூழு நலமுடை
பேதையே யேதிலார் மீது நேசமா—யார்க்கும்
இஷ்டமன்றோ தாயுந் தந்தை தோஷமா ( 1)

(சி) தோஷமான வர்க்கிதம்பட விசேஷ தர்ம முணர்ந்திருப்பவர்
வசுவா ரல்லதாவதொன் றில்லையே—வசை
பேசியுஞ் செய்வா ரனேகந் தொல்லையே—அற்பர்
தொந்த மெதுவுண்டு மந்த மதிகண்டு
பந்தமதை விண்டு பதத்தைப் பெறல்கொண்டு
தேறி நீர் தெளிந்து பார்க்கிற் காணுமே—நன்றுந்
தீதுணர்ந்த பேர்க்கிதமுந் தோணுமே. (தோ)

(ம) தோன்றுவதெல்லாம் விநோதச் சூத்திரப்பாவைகள் போலாம்
ஆன்றவிரு வினைக்காளா யாடுவார்—அன்பர்
ஊன்றிய பக்தியாற் சுகந் தேடுவார்—இங்கு
ஆமைபோலங் கையு மடக்கிட
ஊமைபோன் மனத்தை முடக்கிட
ஆசைகோப லோபம் மூன்றுஞ் சாகுமே—நி
ராசையுள் ளோர்க்கன்றோ வினை போகுமே (தோ)

(சி) போகமும் புகழும்பலத் தியாகமும் உடையர் பக்கல்
மோகமுங் கோபமும் எட்டிப் பார்க்குமோ—என்சொல்
புருஷ சிங்கமான தந்தைக் கேர்க்குமோ—தூய
சித்த சுத்தர்கள் நித்த முத்தர்கள்
சுற்ற நற்றவர் வெற்றி பெற்றவர்
சேவையே சகலமான பூஷணம்—யார்க்கும்
தெய்வமன்றோ துணை செய்வி சேஷணம் (பெ)

## மந்திரிகள் சிரோமணிக்கு மதியுரைத்தல்.

கேளும் மாது சிரோரத்னமே இப்புவியில் மாந்தர் மங்களைப் பெறுவதால் தந்தமது மாபினர்களுடைய முன்னோர்செய்த பாவங்கள் தீர்க்கப்படுகிறதென்று, அவர்களுக்கு (புத் இரர்) பாவுங்

களைப் போக்குகிறவர் என்றர்த்தங் கொள்ளும்படியான திருப்பெயர் வழங்கிவருவது உலகப்பிரசித்தியா யிருக்க, நீ இந்த சிறப்பு வாய்ந்த இராஜ வம்சத்திற் பிறந்திருக்கிறாய், உன்... லவோ உனது தந்தையின் மாபினர்கள் கடைத்தேறவேண்டியவர்களா யிருக்கின்றனர். இத்தனை பாரம் உனது தலைமேலிருக்க அதை மறந்து அவருக்கு மாறாக எதிரிகளின் விஷயத்தில் சிலாகித்துப் பேசுவதன்றி அவர்கள் சிநேகமும் கொள்ள நினைக்கிறாய். உனது தந்தை மதியையும் கேளாது நிந்திக்கிறாய். தவிர நமது அரசர் மக்கட்பேறின்றி வெகுநாள் விரதம், தேவதாபூஜை, தவம், மந்திர ஜெபம், வேதமோதல், தானம், வளங்கள், முதலிய பாவங்களைப் போக்குமுபாயங்களை இயற்றி, உன்னை மகளாக வடைந்து, உனக்கு வித்தியாப்பியாஸம் செய்வித்து, அருமையாய் வளர்த்து, சீராட்டி-வந்திருக்க, நீ யவைகளை மறந்து நன்றிகெட்ட மூடமதியர்போல எதிர்த்துத்தரங்கூறி, அவரை விரோதிக்கிறாய்; இதுதானோ மக்களுடைய தர்மம் இதற்கு,

நீதிநூல்.

சின்னவோர் பொருடந்தோரைச் சீவனுள்ளளவுமுள்ளத்
தின்னவே வேண்டுமென்ன வுரைத்தனர் பெரியோர் தேகந்
தன்னையா ருயிரைச்சீரார் தரணியின் வாழ்வைத் தந்த
அன்னை தந்தையர்க்குச் செய்யுமருங்கைம்மாறுளதோவம்மா.

இன்னமுங் கேளு மம்மணி உலகத்தில் மக்களாய்ப் பிறந்தவர்கள் தமது தந்தையரின் வாக்கை மறுக்கக்கூடாதென்றும், மாதாவை யிகழக்கூடாதென்றும், ஆசாரியன் ஆணைபின்படி நடக்கவேண்டுமென்றும், ஒவ்வொருவரும் தமது சமயா சாரங்களை வழுவாது நடக்கவேண்டுமென்றும், (நிக்கிரகிக்கலாகாதென்றும்) நீ கற்றிருந்தும் மறந்து வார்த்தையாடுகிறாய், தவிர- நீ வித்தையாரம்ப காலத்தில் "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" எனவும், தந்தை சொல்மிக்க மந்திரமில்லை யெனவுங்கற்றதை நினைந்திலை போலும்.

விவேக சிந்தாமணி.

தந்தையுரை தட்டினவன் றாயுரையிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்த மாணையை மறந்தோன்
சந்ததமும் வேதநெறி மாறின வனல்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வது மெய்யென்பர்



...ணக்கூறியபடி உய்த்துணராது சிறு பெண் தன்மைபோல ஆராய்ந்து பாராது ஆசாரியராகிய எங்கள் ஆஞ்ஞையையும் தடுத்துரை... ஆரம்பித்துவிட்டாய்; உடல், பொருளாவி, மூன்றையும் குருவுக்கு ஒப்புவித்தவர்க் கன்றோ முத்திலபிக்கும்.



சிரோமணி மந்திரிகளுக்கு மறுமொழி கூறல்.

ஆனாற் கேளுங்கள் தந்திரமறிந்த மந்திரிமார்களே தாங்கள் பகன்றவையாவும் உண்மையே. ஆயினும் அடியாள் புகலுவதைச் சற்று கவனியுங்கள். என்னெனில், மநுஸ்மிருதிப்படி அரசர்குடிகளிடத்தில் ஆறிலொரு கடமை வாங்கி உலகத்துக்கு உபகாரார்த்த மாப்ப் பாடுபட்டும், தேவதாயங்களுங்களை வழுவறச்செய்வித்தும், பிரஜைகளுக்குக் கல்வியை அபிவிர்த்தி யாக்குவித்தும், நிஷ்காமிய பக்தி செலுத்தியுங் கடைத்தேறுவார்கள். எனது தந்தையானவர் அவைகளை நன்றாயறிந்தவராயிருந்தும் அம்...னைத் தூஷித்தும், அடியார்களை அவமதித்தும், எனது பக்தியைக் கெடுக்கவும் நினைத்த விஷயம் எனது மனதுக்கு அருவருப்புண்டாக்கி விட்டது. இப்பாவம் கொடிதினுங் கொடியதென்று அவருள்ளத்திற் படாதது என்ன துர்க்காலமோ தெரிகிலேன். தவிர ஒவ்வொரு ஜீவன் முத்தருக்கும் முன் ஜென்மத்திற் செய்த பாவங்களை கொடிய ஆயுதங்களாயும் நோய்களாயும் ஏற்பட்டு வருத்த அனுபவித்துவிட்டு நிஷ்

காமிய புண்ணியங்களாற் பகவானுக்குப் பிரீதி செய்து மைந்துக் கடைதேறுவார்கள்.

தத்துவராய சுவாமிகள்.

மிகமேவிய புண்ணிய பாவமெனும்
வினையின்பயன் மேலொரு கீலமுறு
திகமேவரு மென்பதனாலுள நோயெல்லா
மிவனைச்சேர வெப்தினவே.

எனக்கூறியபடி மானுடர்கள் தாரித்திர திசையடைந் திருக்குங்காலத்தில் தெய்வத்தை ‡ பூஜித்தாவது, அல்லது * தூஷித்தாவது சிந்திப்பதுண்டு. செல்வர்களாக வாழ்வார்களே யானால் தெய்வமென்னும் நாமகரணத்தையுங்கூட நினையார்களாம் "செல்வம் வந்துற்றபோது தெய்வமுஞ் சிறிதுபேணார்" எனக்கூறியபடி எனது தந்தைக்கு இப்போது தவிர்காலமாயிருக்கவேண்டும். ஆகையாற்றான் றெய்வநிந்தனைக் குட்பட்டதுந் தவிர நேசர்களும் சிவனடியார்களுமான மற்றவரின் பகையையும் மேற்கொண்டார். யானும் இதை யுணர்ந்தே விகர்ணன் அரவக்கொடியோனுக்கு நீதியுரைத்து அவமானப்பட்டது போலும், பிரகலாதனன் தந்தையாகிய இரணியனுக்கு இதமுரைத்ததுபோலும், மழைபால் வருந்தும் குரங்கினுக்கு தூக்கணங்குருவி புத்தியுரைத்து தங்கள் கூண்டுகளை இழந்தது போலுமாயிற்று. இதற்கு.

விவேக சிந்தாமணி.

"வானர மழைதனி லனையத் தூக்கணந்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்"

என்றும் கூறியபடி நீங்கள்! சகல சாஸ்திரம் ஓதியுணர்ந்த பாண்டித்யமுடையவர்களாகையால் அரசர் நெறிதப்பி நடக்காவண்ணம் பின்வருங் காரியங்களை முன்தெரிந்து "மந்திரிக் கழகு வரும் பொருளுரைத்தல்" என்றபடி சொல்லி நடத்தவேண்டியது! அவசியமன்றோ, அப்படி நடத்தாவிடில் அதனால் வருந்தோஷம் தங்களையும் சாரும், ஸ்திரீகள் செய்தபாவம் புருஷரைச் சேரும், பிரஜைகள் செய்தபாவம் மன்னனைச்சாரும் இது தெரிந்த விஷயமே

‡ பூசித்துப் புகழ்பெற்றான் (சிரஞ்சீவி) மார்க்கண்டன்.
* தூஷித்து முத்திபெற்றான் சிசுபாலன்.



"மண்டலத்தோர்கள் செய்த பாவம் மன்னவரைச் சேரும் திண்டிறன் மன்னவன் செய்த தீங்கு மந்திரியைச் சேரும்" எனக்கூறி யிருப்பதை அறிந்து நடக்கை உத்தம மந்திரிகள் கடமையாம். இது விஷயம் தங்களுக்குத் தெரிந்த விஷயமே. தாய் தந்தையர் சுற்றம் [illegible] சம்பந்தமற்றவர்களே. அதாவது,

வாலைக்கும்மி.

பெண்டாட்டியாவது பொய்யல்லவோ—பெற்ற
பிள்ளைகளாவதும் பொய்யலவோ
கொண்டாட்டமான தகப்பன் பொய்யே—முலை
கொடுத்த தாயும் நிசமாமோ.

எனக்கூறியபடி. தாய் தந்தையரும் பந்துக்களும் தாம் பெற்ற புதல்வர் பெண்டு முதற்கொண்டு மாயாபாசமே தவிர ஒருவர்க்கொரு சம்பந்தமில்லையென்றும் துணைவரல்லரென்றும், தம்மைக் கைவிடாது காக்கக்கருணையுடையவர் கடவுளே யென்றும் ஆன்றோர் வற்புறுத்திக் கூறி யிருக்கின்றனர்.

நெஞ்சறி விளக்கம்.

தந்தைதாய் நிசமுமல்ல ஜனங்களும் நிசமுமல்ல
மைந்தரு நிசமுமல்ல மனைவரு நிசமுமல்ல
இந்தமெய் நிசமுமல்ல வில்லற நிசமுமல்ல
சுந்தரநாகை நாதர் துணையடி நிசம்பார் நெஞ்சே.

இன்னங்கேளுங்கள் மந்திரிமாரே உங்கட்குத் தெரியாத காரியமுளதோ, நமது ராஜாங்கத்தில் இதுகாறும். இப்படிப்பட்ட வஸ்துக்களுக்கு இறைவரி பெற்றதேயில்லை கண்டீர். அதுவுந் தவிர பலகாலமும் ஸ்ரீகாமாக்ஷியம்மனை நிந்தனை செய்தும் தர்க்கிக்கிறார். ஆகையால் நான் எடுத்த இந்த ஜென்மத்துக்கு இவர் தந்தையேயல்லாமல் எல்லா ஜென்மங்களுக்கும் இவரே தந்தையாக மாட்டார். இதற்குமுன் இவரைப்போல எத்தனையோ தந்தைமார் இருந்திருக்கக்கூடும், இனிமேலும் எத்தனை தந்தைமாரை யடையப்போகிறேனோ அறியேன்—எப்படியெனில்,

பட்டணத்தடிகள்

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்பனெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ

முன்னை யெத்தனை யெத்தனை ஜன்மமோ
மூடனுமடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை ஜன்மமோ
யென்செய்வேன் கச்சி யேகம்ப நாதனே.

இவ்வித முரைத்ததைக்கேட்ட மந்திரிமார்கள் சந்தோஷ மடைந்தவர்களாய் அம்மணீ நீ யுரைப்பது யாவும் சரியே; தாய் தந்தையர் மனமேற்கச் செய்யும் புதல்வர்கள் புல்லர்களென்று அனந் தம் நீதிகள் கூறுகின்றன. தவிர நீயோ பெண்ணானால் இவ்வித மாகக்கூறினை "எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பின்புத்தி தான்" எனும் ஆன்றோர் வாக்கியம்போல் நீ எவ்வ ளவு கற்றிருந்தும் யாது பிரயோஜனம் எனக்கூறவே. சிரோமணி கூறுவாள். கேளுங்கள் மந்திரிகளே விதியில்லா வினையில்லை யென் பது உங்கட்குத் தெரியாதுபோலும் வாதாடுகிறீர்கள். பெண்ணில் லாமல் ஆணில்லை யென்பதையுங் கூடமறந்து பேசுகிறீர்கள். பெண் பாலரைப் பலருங்கொண்டாடவன்றோ திருமால் மார்பிலும், சங்கரர் ஜடாபாரத்திலும், பிரம்மா நாவிலும் அமரச் செய்திருக்கின்றனர் கள் என்றால் மானிட மங்கையர்களும் மாநிலத்தில மாசற்றவர் களே யாவர்கள்.

நெஞ்சறி விளக்கம்.

சத்தியுஞ் சிவமுமாகித் தாண்டவ மாடும்வாசி
கத்தியமூல நாடிச் சுழுமுனைக் கம்பந்தன்னே
புத்தியைச் செலுத்தி மேலாம் பொருடனை யெடுக்கவல்லார்
பத்திசெய் நாகை நாதர் பதிதனைப் பார்ப்பாய் நெஞ்சே.

என்றுரைத்தபடி பெண்ணுமாணு மென்றே சுருதிகளுங் கூறி யிருக்கின்றன. அப்படி ஒவ்வொரு ஆத்மாவும் பலகோடி யோனி பேதங்களிலும் மாறி மாறி "உலகப்பொய் வாழ்வை யுடலையோம் பற்க—பிறந்தன விறக்கும் இறந்தன பிறக்கும்" என்பதை யோசித் துப்பாராமல் வார்த்தைபாடினீர்கள். எவ்வாறெனின்,

சிவானந்த போதம்.

மனவாக்குக் காயத்தான் மருவுஞ் செய்கை
மலர்மணம்போ லுறுஞ்சென்ம மயக்கத்தாலே
இனமாக்கும் பிறவியினி லிழுத்துக் கொண்டே
பெத்தனையோ ஜென்மத்தி லிறக்கச் செய்யும்



காய் பிரம்மாவுஞ் சிருஷ்டி செய்யத்
நான்றானே வளர்ந்திந்தத் தரணிமீதே
மாக்கு மெமபாசந் தன்னிற்சிக்கி
இறந்தார்கள் பிறந்தார்களின்னம் நெஞ்சே.

இவையாவும் சிரோமணியால் கேள்விப்பட்ட மந்திரிகள் இவ ளுக்கு யாம் யாது செப்பினும் நமதரசனுக் கடங்காளென மதித்து அரசனிடம் சென்று தங்கள் சிரோமணிக்கு நியாயம்போதித்ததும் அதற்கவள் மறுத்துரைத்ததும் விளம்பிப் பின்னும் சொல்வார்கள்,

சேரனுக்கு மந்திரிகள் யோசனை கூறியது.

கேளும் எமதரசே நாங்கள் சிரோமணிக்கு எவ்வளவோ எங் களா லியன்றமட்டும் நீதியுரைத்தும் அன்னவள் நம்மனம்போல் இசையவில்லை. அதுவுமன்றி நாம் செய்யவேண்டிய தொன்றிருக்க, செய்யக்கூடாத காரியம்செய்து அபகீர்த்தியடைவதுந் தவிர பெண் பழியும் தேடிக்கொள்ள எத்தனித்தோம். நமது மகளைக்கொன்றால் மாற்றலர்கள் அஞ்சுவார்களோ? அன்னவர்களைக்கொன்று வெற்றி பெறுவதே நலமென்று கூறினார்கள்.

[illegible]—A விருத்தம்.

மந்திரிக ளோர்ந்து மன்னு மகளைக்கொன்றால்
மாற்றலரஞ் சிடுவாரோ வஞ்சாரிங்கே
வந்தவரோ டெதிர்த்து வென்று வாகைசூடி
மற்றுளகா ரியஞ்செயலா மென்னக் கேட்டோன்
மூந்து சது ரங்கமுடன் களத்துக்குற்று
முனிவுடனென் னார்க்கறிவித் தணிபிரித்தான்
அந்தரியி னடியருஞ்சேனைகளோ டாங்கே
யடுத்திட்டார் சண்டைசெய்யத் தொடுத்திட்டாரே.

இவ்விதமாய் மந்திரிகள் கூறியவுடனே மலையாசன் றனது ரத கஜ துரகபதாதிகளெனும் சதுரங்கசேனையும் படைத்தலைவர் அணித் தலைவர் முதலான சேனாதிபதிகளும் மந்திரி பிரதானிகளும் சூழ சகலவித வாத்தியகோஷமுடன், தமது புலிக்கொடியுள் சாமரங் கள், மயிற்பீலிகள், ஆலவட்டம் முதலிய விருதுகளுடனும் இரத மேறிக்கொண்டு, வாள் வேல் வில்லு குந்தம் ஈட்டி எறியீட்டி வளைதடி தெண்டு கண்டகோடாரி சக்காம் முதலிய பதினெண்ணு யுதங்க ளுடன் ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்டு யுத்தகளம் போய்ச் சேர்ந் தார்.

இச்செய்தியை யறிந்த கச்சிபரும் அம்மனைத் [illegible] தமது ரதங்கள் பேரிலாரோகணித்து சிங்கக்கொடி [illegible] டால் கருடடால் முதலிய டால்கள் பிரகாசிக்கவும், [illegible] விருதுகள் சிறக்கவும். தேர்களிற்கட்டி யிருக்கும் மணிகளின் [illegible] யும், யானைகளின் முழக்கமும், குதிரைகள் அனுமாணிப்பும், [illegible] கள் ஆர்ப்பரிப்பும் வாத்திய கோஷமும் முழங்க யுத்தகளம் வந்து சேர்ந்தார்கள்.

## சேரவரசனுடன் யுத்தம்.

இருதிறப்படைகளும் சமுத்திரம் போற்கூடி பெருங்கோஷத்துடன் எதிர்த்து காலாளுடன் காலாட்களும், குதிரை வீரருடன் குதிரை வீரரும், யானைவீரருடன் யானைவீரரும், வில்வீரருடன் வில்வீரரும் போர்புரியும்போது, ஒருவர்விட்ட அம்புக்கு மற்றவர் தப்பித்துக்கொண்டு அமோகமாக பாணப்பிரயோகஞ்செய்து பகைவரைக்கொல்வார்கள். பின்னும் அளவிறந்த நாராச பாணங்களை அம்பிற்றொடுத்து குணத்தொனி செய்து அனுசந்தித்து மந்திர பூர்வகமாய் நமஸ்கரித்தேவிய அஸ்திரங்கள் நாணிலிருந்து விடுபட்டு அக்கினிப்பொறிகளைக் குபீல்குபீலென்று கக்கிக்கொண்டு வீரர் தேர் வீரர் யானை வீரர் குதிரை வீரர், காலாட்கள் முதலியவர் பேரிற்பட்டு பஸ்மீகரப்படுத்தியன.

இவ்விதமா யுத்தம் நடக்கையில் தமது சேனைகள் அனேகமாய் மடிந்துபோனதைக் கண்ட மலையமான் யுகாந்த கால ருத்திரனைப்போல் கோபாவேசங்கொண்டு தனது ரதத்தை மும்முடியரசனுக் கெதிரிற் செலுத்தி சிங்கநாதஞ்செய்து வருணாஸ்திரத்தை யேவினான்; அதைக்கண்ட மன்னன் அக்கினியாஸ்திரத்தை விட்டான்; இதைக்கண்ட மலையரசன் வருணாஸ்திரத்தை விட்டான்; அதற்கவன் வாயுவாஸ்திரத்தை விட்டான்; அதைக்கண்டவன் பருவதாஸ்திரத்தை விட்டான். அதற்கவன வஜ்ஜிராஸ்திரத்தை யேவினான்; இதைக் கண்ட பன்னர்பெருமான் சந்திராஸ்திரத்தை யேவினான். அதற்கு மும்முடியன் சூரியாஸ்திரத்தை யேவினான்; அதற்கவன் அதே சூரியாஸ்திரத்தைவிட்டுத் தடுத்தான். பிறகு மும்முடியரசன் யானைமுகக்கணை சிங்கமுகாஸ்திரம் யாழிமுகாஸ்திரம் முதலிய கொடிய கணைகளை அனேகமா யேவவும், அதற்கு சேரமான் மறுகணைகள் தொடுத்து தடுத்துப் பின்னும் இரண்டு அர்த்த சந்திராஸ்திரங்களைவிட்டு



[illegible]டைய தேர்ப்பாகனையும் தேரையுந் தொலைத்தான். [illegible] மறுதேரேறி வந்த கச்சியன் ஐந்து அர்த்த சந்திராஸ் [illegible] விட்டு சேரனுடைய சிரசைக்கண்டித்தது மன்றி சாரதியின் [illegible] குதிரைகள்மீதும் காலாட்கள்மீதும் அநேக பாணங்களை விட்டுக்கொன்றான். இதைக்கண்ட மற்ற போர்வீரர்கள் மும்முடியனைச் சூழ்ந்துகொண்டு அம்புகளை யேவி சண்டைசெய்தார்கள். இவருக்குத் துணையாய் அதிரதர் சமரதர் அர்த்தரதர் முதலிய வில்லாளிகளும் வந்துசேர்ந்தார்கள். இதனைக்கண்ட கச்சியர்க்குத் துணைப்பலமாய் அதிரதர் சமரதர் அர்த்தரதர் மகா ரதக்காரரும் வந்து தொந்த யுத்தம் செய்தார்கள் இந்த யுத்தத்திற் அனேகம் தேர்வீரர் மடிந்தனர், அனேகம் யானைவீரர் மடிந்தார், அனேகம் குதிரை வீரரும் படைகளும் மடிந்து காலற்றவரும், தலையற்றவரும், கையற்றவரும், தோளொடிந்தவரும்; ஆகவே சிலர் தோற்றோடி மறைந்தார்கள். கச்சிபாசன் வெற்றி சங்கம் பூரித்தான். ஓடிப்போன சேனைகளை மும்முடியரசன் சேனைகள் திடஞ்சொல்லி யழைத்துவந்து வாகைமாலை தமதரசனுக்குச் சூட்டி ஜெயபேரிகை முழங்க வெற்றிச்சங்கம் பூரித்தார்கள்.

இதைக்கேட்ட அந்நகரத்திலுள்ள குடிகள் இரணகளத்தை வந்து பார்த்து அரசனுடன் தமது பந்துக்களும் மடிந்து கிடப்பதைக்கண்டு ஓவென்றழுது புலம்பினார்கள். அரசனுடைய மனைவியும் தம்பதிமீது விழுந்து புரண்டழுதாள். சிரோமணியும் தந்தை மடிந்ததைப்பற்றி அழுதுகொண் டிருக்கவே இதைக்கண்ட மற்றவர்கள் அவர்களுக்கு தேறுதல்சொல்லி தமதகங்களுக் கழைத்துப் [illegible]ாய் சரமகிரியைகளைச்செய்து முடித்தார்கள்.

இவ்விதமாக இருதிறப்படைகளும் மடிந்து கிடந்த யுத்தகளமானது எப்படியிருந்ததெனில், களத்தில் இரத்தப்பிரவாகத்தில் [illegible]ந்தோடும் அழிந்த தேர்களைத் தெப்பங்களாகக்கொண்டு பைசாசங்களின் குட்டிகள் விளையாடும்; நாய்கள், நரிகள், பருந்துகள், காகங்கள், கழுகுகள் கும்பலாக் கூடிக்கொண்டு மடிந்து கிடக்கும் பிணங்களின் குடல்களையும், மூளைகளையும், தசைகளையும். கொழுப்புகளையும் பிடுங்கியும் கொத்தியும் விலாப்புடைக்கத் தின்றும் களவியும் ஒன்றோடொன்று கூட்டமிட்டு நெருங்கி வளையிட்டுக் குலைத்துக்கத்தி ஆர்ப்பரிப்பதும் கொக்கரிப்பதும், வீரமாகாளியி

163055
600 008.

னது பூத... ளும் கூடி கூத்தா டும். தவிர ஆணும் பெண்ணுங் கூடிக் கொண்டு நன்றாகக் கொழுத்த தசைகளையும், கொழுப்புகளையும் வேறு வேறாக வைத்துக் கொண்டு மண்டையோடுகளாகிய கலங்களின் மேல் பகுந்திட்டு



தின்று குடித்து ஏப்பமிட்டுக் கூத்தாடி கொக்கரித்தும் எப்படியிருந்ததெனில், வீரலக்ஷ்மி விளையாடுந்தன்மைபோலிருந்தனவாம். அனேகங்கவந்தங்கள் எழுந்து கூத்தாடியன. இவ்விதமாக துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனமுடைய சாதுவம்ஸஸ்தர்களுக்கு இங்கு ஜெயமுண்டாயிற்று. விஜயலக்ஷ்மி பிரகாசித்தாள்.

## சிரோமணிக்கு முடிசூட்டல்.

இவ்விதமாக யுத்தம் முடிந்தபின் யாவரும் ஒருங்குகூடி அரண்மனை போய்ச்சேர்ந்து சகலருக்கும் சிரோமணிக்கு முடிசூட்டுஞ் செய்தியைத் தெரிவித்து தமது சிங்கக்கொடியை நாட்டி சுபமுகூர்த்தம் நிச்சயித்து அந்நகரை (திருக்கோட்டையை) யலங்கரித்து பதினெண் பாஷைத் தலைவரையும் வரவழைத்து பூரணகும்பங்கணிரைத்து சகல புண்ணிய தீர்த்தங்களையும் தருவித்து சகலமான வாத்திய கோஷத்துடன் தேவர் அந்தரத்தில் நின்று புஷ்பமாரி பொழியவும், மறையோர் முதலிய பெரியவுர்கள் ஆசிர்வதிக்கவும் ஸ்ரீதேவியைத் தியானித்துக்கொண்டு மும்முடிவேந்தன் தனது திருக்கரங்களால் முடியையெடுத்து சிரோமணியின் சிரசிற்றரித்தான். அது சாதுக்களுடைய மனதுக்கு ஆநந்தத்தையுண்டாக்கியது. பிறகு அங்குற்ற சகல ராஜாக்களுக்கும் சந்தோஷமுண்டாக்கவேண்டி பரத நாட்டிய கச்சேரியும் நாடகக் கச்சேரியும் நடப்பிவித்து, சகலருக்கும் விருந்திட்டுபசரித்து வெகுமதிகளுங்கொடுத்து அனுப்பிவிட்டுத் தாங்கள் அவ்வரசை தமது வசமாக்கிக்கொண்டு சிலநாட் சென்றபின் கச்சிநகர் வந்து சேர்ந்து இனிது வாழ்ந்திருந்தனர்கள்.

ஓம்தத்சத்

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகோடியாகச் சுவாக:

Y592
N14.